காளிங்கராயன் கொடை

(சிறுகதைத் தொகுதி)

தங்கச் சங்கிலி

(சிறுகதைத் தொகுதி)

பெ. தூரன்

★

அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்

தேனும்பேட்டை :: சென்னை-18

அமுதம்—114
உரிமை பதிவு
முதற் பதிப்பு—ஜூலை, 1956

விலை ரூ. 1—4—0

நேஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை-18

பதிப்புரை

நன்கு அமைந்த எளிய தமிழ் நடையில் சிறு கதைகளைச் சுவைபடச் சொல்வதில் ஸ்ரீ தூரன் நிபுணர். கதை இன்பத்துக் காகவே அவைகளைப் படிக்கலாம்.

அத்துடன் சிந்தனையிலும் மனத்தத்து வங்களிலும் தோய்ந்த அவர் மனம் பல பிரஸ்னைகளைக் கிளப்புகிறது; உயரிய பல கருத்துக்களை நூல் நெடுகிலும் தெளித்து விடுகிறது.

"சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும் கந்தம் குறைபடாது" என்ற உண்மையை உணர்ச்சி தோன்ற வெளிப் படுத்தும் "காளிங்கராயன் கொடை" இத் தொகுதிக்கு ஒரு சிகரம்போல் அமைந்து, அதன் தலைப்பாகவும் திகழ்கிறது.

இச் சிறுகதைத் தொகுப்பை மகிழ்ச்சி யோடு வாசகர்களுக்கு அளிக்கிறோம்.

அமுத நிலையத்தார்

பொருளடக்கம்

		பக்கம்
1.	அன்னை தந்த ஒளி	1
2.	விதியின் பிழை	16
3.	நவரத்ன மாலை	27
4.	பூசாரி வாக்கு	40
5.	பாறுங்கல்	52
6.	பேய்த் தேர்	58
7.	பிரசாதம்	69
8.	பால் பொங்கிற்று?	77
9.	காளிங்கராயன் கொடை	87

காளிங்கராயன் கொடை

அன்னை தந்த ஒளி

"சொங்கப்பா, ஒரு நல்ல அழகான பெண்ணிருக்கிறு, கலியாணம் பண்ணிக்கிறுயா?" என்று அவனைக் கேட்காதவர்கள் காட்டுப் பாளையத்தில் இருக்கமாட்டார்கள். ஆண்கள் மட்டுமல்ல; பெண்களுந்தான் கேட்பார்கள். சிறுவர் சிறுமிகளுக்கும் இந்தக் கேள்வியைக் கேட்டு அவனிடம் விடை பெறுவதில் ஒரு மகிழ்ச்சி இருந்தது.

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லச் சொங்கப்பனுக்குக் கொஞ்ச நேரம் ஆகும். இரண்டு மூன்று தடவை வற்புறுத்திய பிறகுதான், "எனக்குச் சோறு போடப் பெரிய பண்ணைக்காரர் இருக்கிறுங்கோ. எனக்கு எதுக்குக் கலியாணம்?" என்று ஆழ்ந்து யோசனை செய்து முடிவு கட்டியவன்போலப் பதில் சொல்லுவான். இதே பதிலைத்தான் அவன் ஒவ்வொரு தடவையும் சொல்லுவானென்றாலும் அது பழக்கத்தில்கூடச் சிக்கிரமாக வந்துவிடாது. ஆழ்ந்த சிந்தனையின் முடிவு வெளியாவதுபோல வெகுநேரம் கழித்துத்தான் அது சொங்கப்பன் வாயை விட்டுக் கிளம்பும்.

சொங்கப்பன் பதில் சொல்லும்போது அவன் முகம் ஒரு தனிக் காட்சியாக இருக்கும். அகத்தின் அழகு முகத்தில் தெரியுமல்லவா? அப்படி அவன் முகத்தில் ஒன்றுமே தெரியாது. அவன் முகம் எப்பொழுதும் ஒரே மாதிரி குப்பையண்டின இருட்டறையைப்போல் இருக்கும். மனத்தில் உள்ள உணர்ச்சிகளையெல்லாம் கண்களாகிய சாள

புதரில் பிறந்தேன்" என்பான். காட்டுப்பாளையத்து மக்களுக்கு இந்தப் பதிலும் மாறுத சிரிப்பைக் கொடுக்கும்.

சொங்கப்பன் பார்ப்பதற்கு மனித வடிவத்திலே இருந்தாலும் எருமை மூளை படைத்தவன் என்பது காட்டுப்பாளையத்திலே பொதுவான அபிப்பிராயம்.

ஆனல் இப்பொழுது அது மாறிவிட்டது. சொங்கப்பனிடத்திலே எல்லோரும் மரியாதை காட்டத் தொடங்கி விட்டார்கள். யாரும் அவனை இப்பொழுது கேலி செய்வ தில்லை.

இந்தவிதமான மாறுதல் ஏற்பட்டதற்கு ஒரு காரணம் உண்டு.

ஆப்பக்காரி ராமாத்தாள் என்றால் அந்த வட்டாரத் தில் எல்லோருக்கும் தெரியும். அவள் தயாரிக்கிற ஆப்பம் அத்தனை பெருமை வாய்ந்தது. அதை ஒரு தடவை வாங்கி உண்டவன் அவளை மறப்பதில்லை.

ராமாத்தாள் அரைத்த அரிசி மாவைக்கொண்ட சட்டியும் கூடையுமாகக் காலை ஏழு மணிக்கெல்லாம் சந்தைப் பேட்டை முக்கிற்குப் புறப்பட்டு விடுவாள். காட்டுப்பாளையத்திலிருந்து அந்த இடம் சுமார் அரை மைல் இருக்கும். அங்குதான் அவள் வியாபாரமெல்லாம். சுமார் பத்து மணி வரையிலும் அந்த வழியிலே வருகிறவர்களில் பலர் அவள் உட்கார்ந்திருக்கிற வேப்ப மரத்தடியில் ஆப்பம் வாங்கிச் சாப்பிடுவதற்காகத் தங்குவார்கள். சுறுசுறுப்பாக வியாபாரம் நடக்கும்.

ராமாத்தாளுக்குப் பகலெல்லாம் வேலையிருக்கும். பத்து மணிக்கு ஆப்பக் கடையை முடித்துவிட்டு வீட்டுக்கு வந்ததும் சமையல் செய்யத் தொடங்குவாள். சமைத்துச் சாப்பிட்டதும் வெற்றிலை போட்டுக் கொண்டு கொஞ்ச நேரம் உட்கார்ந்திருப்பாள். பிறகு அடுத்த நாள் வியாபா

ரத்துக்காக மாவரைக்கத் தொடங்கி விடுவாள். வீட்டிலே அவளுக்கு உதவி செய்ய யாரும் கிடையாது. கலியாணம் ஆகி இரண்டு வருஷங்களுக்குள்ளே அவள் விதவை யானாள். குழந்தைகளும் இல்லை. அவளைக் கவனிப்பதற்கு வேறு சுற்றத்தாரும் இல்லை.

இப்படி நாள் முழுதும் வேலை செய்தாலும் அவளுக் குச் சலிப்புக் கிடையாது. அவளுடைய இருண்ட வாழ்வை மறக்க வேலைதான் ஒரே வழியாக இருந்தது.

வருஷக் கணக்காக அவள் இப்படி வாழ்க்கை நடத்தி வந்தாள். தள்ளாத வயது வந்த காலத்திலும் அவள் ஆப் பக் கடையை நிறுத்தவில்லை. ஆனால் காட்டுப்பாளையத்தி லிருந்து சந்தைப்பேட்டைக்கு அரிசி மாச் சட்டி, அடுப்பு முதலிய சாமான்களை எடுத்துக்கொண்டு போவதுதான் பெரிய பிரச்னையாகிவிட்டது.

ஒரு நாள் காலையில் ராமாத்தாள் சட்டியிலுள்ள அரிசி மாவைக் கூடையில் வைத்துத் தூக்கிக்கொண்டு தடுமாறித் தடுமாறிச் சந்தைப்பேட்டைக்குப் போவதைச் சொங்கப் பன் தற்செயலாகப் பார்த்துவிட்டான். அவள் கொஞ்ச தூரம் சென்று பாதை வளைவிலே மறையும் வரையில் அவ ளைப் பார்த்துக்கொண்டு அவன் மௌனமாக நின்றுகொண் டிருந்தான். அவன் மனத்திலே என்ன சிந்தனை உதய மாயிற்றோ தெரியாது. திடீரென்று அவளை நோக்கி வேக மாக நடக்கலானான்.

"சொங்கப்பா, ஆப்ப ருசி இழுக்குதா?" என்று யாரோ கேட்டார்கள். அது அவன் காதில் விழவில்லை. ஆனால் ஆப்ப ருசி அவனை இழுக்கவில்லை என்பது மட்டும் நிச்சயம். ஏனென்றால் அவன் அந்த ஆப்பத்தை ஒருநாள் கூடத் தின்றதில்லை.

ஒன்றிரண்டு நாட்களில் இது ஏற்படவில்லை. இரண்டு வருஷங்களாக நாள் தவறினாலும் சொங்கப்பன் தவறாது செய்து வந்த காரியம் அந்த உணர்ச்சியை உறக்கத்தினின்றும் தட்டி யெழுப்பியது.

ராமாத்தாள் சொங்கப்பனை ஆப்பந் தின்னும்படி கூப்பிடுவதைக்கூட மறந்து விட்டாள். அப்படி அழைப்பது வீண் என்றும் அவளுக்குத் தெரிந்துவிட்டது. ஆனால் அவன் அவளுடைய உள்ளத்திலே ஓட்டிக்கொண்டு விட்டான். சங்கம் புதரிலே பிறந்தவன் என்று அவனை யாராவது கேலியாகப் பேசுவதைக் கேட்டால் அவள் நெஞ்சம் சங்கம்புதர் முள்ளாகக் குத்தத் தொடங்கியது.

"நாய்க் குட்டியைச் சங்கம்புதரிலே போடுகிறவன் மனிதனா? அவன் மிருகத்துக்கும் கீழானவன்" என்று அவள் அடிக்கடி முணுமுணுப்பாள். அதைக் கேட்டவர்கள் அவள் ஏன் இப்படிப் பிதற்றுகிறாள் என்று ஆச்சரியப்படுவார்கள்.

முன்பெல்லாம் ராமாத்தாள் யந்திரம்போலக் காரியம் செய்து வந்தாள். ஆப்பம் சுடுவதையும் வேறு வேலை செய்வதையும் அவளால் நிறுத்த முடியாது. நிறுத்தினால் உயிர் பாரமாக இருந்தது. ஆனால் இந்தப் புதிய உணர்ச்சி எழுந்த பிறகு அவளுடைய வேலைகளுக்கு ஒரு புதிய பொருளும், அவசியமும் ஏற்பட்டுவிட்டன; அதனால் அவள் வாழ்க்கையிலே இன்பம் காணத் தொடங்கினாள்.

ஆனால் அந்த இன்பம் வெகுநாள் நீடிக்கவில்லை. ராமாத்தாள் திடீரென்று ஒரு நாளிரவு காய்ச்சல் போட்டுப் படுத்துவிட்டாள். மறுநாட் காலையில் வழக்கம்போலச் சொங்கப்பன் வாசலில் வந்து வெகு நேரம் காத்திருந்தான். அவன் வீட்டுக்குள் போகிற பழக்கம் இல்லை.

"வீட்டுக்குள்ளே வா" என்று ராமாத்தாள் பலமுறை அழைத்ததுண்டு.

"இங்கேயே நிக்கிறேன். வீட்டுக்குள்ளே இருட்டா இருக்கு" என்பான்.

இருண்ட அறையைக் கண்டால் அவனுக்குப் பயம். ஊர் பேர் அறியாத ஒரு கருப்பைக்குள்ளே அவன் பட்ட துன்பத்தின் விளைவோ என்னவோ இந்தப் பயம் அவனுக்கு எப்பொழுதும் உண்டு.

சொங்கப்பன் காத்திருந்தான். கிழவி கட்டிலைவிட்டு எழுந்திருக்கவேயில்லை. அவன் போய்விட்டான்.

நான்கு நாட்கள் ராமாத்தாள் எழுந்திருக்கவில்லை. படுத்த படுக்கையாகக் கிடந்தாள். பக்கத்து வீட்டுப் பெண்ணெருத்தி கஞ்சி வைத்துக் கொடுத்தாள். அதைக் கூட அவள் சாப்பிடவில்லை.

நான்கு நாட்களும் காலையிலே சொங்கப்பன் அவள் வீட்டுத் திண்ணைக்கு வருவதிலே தவறவில்லை. நான்காவது நாள்தான் அவளுக்கு உடம்பு சரியில்லை என்று அவனுக்குப் பட்டிருக்கிறது.

ஐந்தாம் நாட் காலையிலே ராமாத்தாள் அடிக்கடி, "சொங்கப்பா, சொங்கப்பா" என்று கூப்பிட்டுக்கொண்டிருந்தாள். அவன் திண்ணைக்கு வந்ததை அறிந்ததும், மெதுவாகக் கட்டிலைவிட்டு இறங்கி வெளியே வந்தாள். கஞ்சி கூடக் குடிக்காமல் கிடந்ததால் கால்கள் தள்ளாடின; தலை சுற்றியது. அவள் அப்படியே மயக்கம் போட்டுக் கதவின் மேல் சாய்ந்தாள்.

சொங்கப்பன் அவளைத் தூக்கிக்கொண்டுபோய்க் கட்டிலில் படுக்க வைத்தான். கொதிக்கும் அவளுடைய உடம்பின் பரிசம் அவனுக்குச் சொல்ல முடியாத ஏதோ ஓர் உணர்ச்சியைக் கொடுத்தது. தான் அவளைத் தூக்கிச் செல்வதாக அவன் உணரவில்லை; எட்டு மாதக் குழந்தை

"அம்மா, எனக்கு என்னத்துக்கு இப்போ ஆப்பம் சுட்டுப் போட்டாய்?" என்று சொங்கப்பன் குழந்தையைப் போலக் கேட்டான்.

"என் கையாலே உனக்கு ஒருநாள்கூட சாப்பாடு போடாது போலுல் எனக்கு மோட்சங் கிடைக்குமா? நீதானே எனக்கு மோட்சங் கொடுக்க வந்திருக்கிறாய்?" என்று அவள் பூரிப்போடு கூறினாள். அவள் முகத்திலே என்றுமில்லாத ஆனந்தம் தாண்டவமாடியது. சொங்கப்பன் அவள் முகத்தை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டே இருந்தான். ராமாத்தாள் அப்படியே உறங்கிவிட்டாள். நிறைவும் அமைதியும் அவள் முகத்தில் தோன்றின.

அவள் மறுபடியும் எழுந்திருக்கவே இல்லை. சொங்கப்பன் அன்றுதான் துக்கம் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டான். சங்கம் புதரிலே கிடக்கும் தந்தை தாயற்ற பூனைக்குட்டியைப்போல அம்மா, அம்மா என்று அலறினான்.

ராமாத்தாள் விரும்பியவாறு சொங்கப்பன் அந்த வீட்டிலேயே ரொம்ப நாள் வசிக்கவில்லை. அவள் இறந்த ஒரு வாரம் வரையிலும்தான் அவன் அங்கிருந்தான். அதற்குள் ராமாத்தாள் அவனுக்கு நிறையப் பணம் சேர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறாள் என்கிற விஷயம் ஊரெல்லாம் எப்படியோ பரவிவிட்டது.

அந்த விஷயம் வெளியானதற்குச் சொங்கப்பனே தான் காரணம். அவன் தனக்கு ஆறுதல் கூற வந்தவர்களில் ஒன்றிரண்டு பேரிடம் அந்தப் பணத்தைக் கொண்டு ராமாத்தாளுக்கு மோட்சம் கிடைப்பதற்கு என்ன செய்யலாம் என்று கேட்டுக்கொண்டிருந்தான். அதிலிருந்து விஷயம் வெளியாகிவிட்டது.

அவனிடம் இப்பொழுது பணம் நிறைய இருப்பதாக எங்கும் பேச்சு. சில பேர் உண்மையாகவே பெண் கொடுக்

கவும் இப்பொழுது முன் வந்தார்கள். "சொங்கப்பா, என் பெண்ணைக் கட்டிக்கொள். நீ தனியாக இருந்தால் உனக்கு யார் சமையல் செய்து போடுவார்கள்?" என்றார்கள்.

சொங்கப்பனுக்குத் தன்னைப் பற்றிய நினைப்பே இல்லை. கிராமத்திலே யாராவது இறந்துபோனால் அந்த வீட்டில் பல நாட்களுக்குச் சமையல் நடக்காது. அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் அந்த வீட்டாருக்கு உணவு தயாரித்துக்கொண்டு வந்து கொடுப்பார்கள். அந்த மாதிரி யாராவது கொண்டுவரும் உணவை ஒரு வேளை உண்டும் உண்ணாமலும் சொங்கப்பன் ஆழ்ந்த யோசனையிலிருந்தான். ராமாத்தாளுக்குப் புண்ணியம் சம்பாதிக்க வேண்டும் என்ற ஒரே ஆசை அவனைப் பிடித்துக்கொண்டது.

மோட்சம் எப்படிக் கிடைக்கும் என்று பல பேரிடம் கேட்டுப் பார்த்தான். ஒருவருக்கும் அதற்குப் பதில்கூறத் தெரியவில்லை. யாரோ ஒருவர், "மோட்சம் எப்படிக் கிடைக்கும்? சாமி கொடுத்துத்தான் கிடைக்கும். சாமி மனசு வெச்சா நடக்கும்" என்று சொன்னார். அவரிடம் திருப்பித் திருப்பி அவன் என்ன என்னவோ கேட்டான். அதற்கு மேலே சொல்ல அவருக்குத் தெரியவில்லை.

ஆனால் சொங்கப்பனுக்கு அதுவரையில் தோன்றாத ஓர் உபாயம் கிடைத்தது. ராமாத்தாள் இறந்த ஏழாவது நாள் அவன் சந்தைப்பேட்டைக்குச் சற்றுத் தள்ளியிருந்த கோயிலுக்குப் போனான்.

கோயில் அர்ச்சகரிடம், "பணங் கொடுத்தா சாமி மோட்சங் கொடுப்பாரா?" என்று கேட்டான்.

"கோயிலுக்குத் தர்மம் பண்ணினால் புண்ணியம் உண்டு" என்றார் அர்ச்சகர்.

"மோட்சம் கிடைக்குமா சொல்லுங்கோ?" என்று அந்தக் கேள்வியையே திருப்பிக் கேட்டான்.

விதியின் பிழை

முத்துசாமி மறுபடியும் கைதியாகச் சிறைக்குள்ளே புகுந்தபோது அங்கிருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியத்தில் முழுகிவிட்டார்கள். அவன் விடுதலையாகி ஒரு மாதந்தானாயிற்று. அதற்குள்ளே எதற்காக அவன் மீண்டும் சிறைக்குள்ளே வரவேண்டும்? அவன் திருடனல்ல; குடிகாரனல்ல. உண்மையில் அவனைப்போல நல்ல நடத்தையுடையவர்கள் அந்த ஜெயிலுக்குள்ளே யாரும் இருந்ததில்லை. அவன் தோற்றத்திலே கண்ணியமிருந்தது. அப்படியிருக்க அவன் எதனால் மறுபடியும் சிறை புக நேர்ந்தது? இந்தக் கேள்வி எல்லோருடைய உள்ளத்திலும் அவனைப் பார்த்தவுடன் எழுந்தது. ஆனால் அவனிடம் இதைக் கேட்க ஒருவருக்காவது துணிச்சல் வரவில்லை.

முத்துசாமி ஒரு மாதத்திற்கு முன்புவரை அந்தச் சிறைக்குள்ளே இருந்தபோது யாரிடமும் அதிகமாகப் பேசமாட்டான். தனக்கு விதிக்கப்பட்டிருந்த வேலை எவ்வளவு கடினமானதாக இருந்தாலும் அதைப்பற்றி முணுமுணுக்காமல் மௌனமாகச் செய்துகொண்டிருப்பான். இரவு பகல் எந்த நேரமானாலும் அவன் வேலை செய்வதற்குப் பின் வாங்குவதில்லை. "இந்த வேலைகளை யெல்லாம் இன்றைக்கே முடித்தாக வேண்டும்" என்று ஜெயில் வார்டனோ மற்ற அதிகாரிகளோ அவனிடம் சொல்லவேண்டியதுதான் தாமதம், அவன் உடனே செய்யத் தொடங்கிவிடுவான். மின்சார யந்திரம் உயிரற்றதுபோலக் கிடக்கிறது; ஆனால் ஒரு பித்தானை அழுத்தியதும் அது மடமடவென்று சுழலத் தொடங்கிவிடுகிறது. மறுபடியும் பித்தானை மேலே தட்டும்

வரையில் அது ஓய்வதில்லை. அந்த யந்திரத்திற்கும் முத்துசாமிக்கும் அதிக வித்தியாசம் இருக்காது; அப்படி யந்திரம் போல அவன் வேலை செய்வான்.

பல ஆண்டுகளுக்கு முன்னால் அவன் மேல் குற்றம் சாட்டப்பட்டு விசாரணை நடந்துகொண்டிருந்த நாட்களில் அவன் பதற்றமும் ஆத்திரமும் கொண்டிருந்தது மெய்தான். ஆனால் அவன் குற்றவாளிதான் என்று தீர்மானிக்கப்பட்டுத் தண்டனையடைந்ததும் அவனுடைய போக்கே முற்றிலும் மாறுதலடையலாயிற்று. அவன் உள்ளம் முறிந்து போய், சோர்வும் நம்பிக்கையற்ற நிலையும் சூழ்ந்தவன்போல் காணப்பட்டான். அந்த நிலையிலே அவன் ஜெயில் அதிகாரிகளின் ஏவலின்படி யந்திரம்போல நாட்களைக் கழிக்கப் பழகிக்கொண்டதில் வியப்பில்லை. வாழ்க்கை என்னும் பாரத்தை உணராமல் பொழுதைக் கழிப்பதற்கு அவ்வாறு வேலை செய்யச் சொல்லும் தூண்டுகோல் ஒன்று அவசியமாயிற்று.

முத்துசாமி முன்னால் சிறைப்பட்டது ஒரு கொலை சம்பந்தமாக. கொலை செய்தவன் அவனே என்று விசாரணையில் ஊர்ஜிதமாகி அவனுக்கு ஆயுள் தண்டனை கிடைத்தது. அப்பொழுது அவனுக்கு வயது இருபதுதானையால் அவனிடம் பரிவு காட்டிய நீதிபதிகள் அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கவில்லை.

சிறைச்சாலையில் அவன் நடந்துகொண்ட விதத்தைக் கவனித்தவர்கள் அவன் கொலை செய்திருக்க முடியுமா என்று சந்தேகப்பட்டார்கள். அவனிடத்திலே கோபம் முதலிய வெறிக் கிளர்ச்சிகள் கட்டுக்கு மீறி எழுந்ததை யாருமே கண்டதில்லை. ஈ, எறும்புகளுக்குக்கூட அவன் ஹிம்சை செய்யக்கூடியவனைத் தோன்றவில்லை. அதனால் அவன் கொலைக்குற்றத்திற்காகத் தண்டனையடைந்தது அனைவருக்கும் ஒரு புதிராகவே இருந்தது. எந்தப் புற்றிலே

வாழ்க்கையிலே கசப்பேறிய மாரியப்பனையும் இந்தப் பதில் தூக்கிவாரிப் போட்டது. முத்துசாமி இவ்வாறு கூறுவானென்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

சற்று நேரம் அவன் ஒன்றும் பேசத் தோன்றாமல் நின்றுகொண்டிருந்தான். "எல்லோரும் நினைக்கிறமாதிரி முத்துசாமி யோக்கியனல்லவோ? இவனும் கடைந்தெடுத்த பேர்வழிதானே?" என்ற சந்தேகங்கள் அவன் மனத்தில் அலைமோதின.

இந்தச் சந்தேகங்கள் தோன்றியதும் மாரியப்பன் பேச்சை அதோடு நிறுத்தியிருப்பான். ஆனால் அன்று வழக்கத்திற்கு மாறாக முத்துசாமி தனது உள்ளத்தைத் திறந்துகாட்டத் தயாராக இருப்பதுபோல் தோன்றியது. தனது நிலைமையை யாரிடமாவது அப்பொழுது கூறிவிட்டால் அவனுக்கு மன அமைதியுண்டாகாது போல அவன் காணப்பட்டான். அதனால் அவனே தொடர்ந்து பேசலானான்.

"ஏன் மாரியப்பா, நான் நினைக்கிறது சரியென்று உனக்குப் படவில்லையா? ஏன் இப்படி மௌனமாக நிற்கிறாய்?"

"ஆமாம். ஒரு மாசத்துக்குளளே அப்படி என்ன குற்றம் செய்துவிட்டாய்?"

"குற்றம் செய்ய ஒரு மாசம் வேணுமா? ஒரு நாளிலே எத்தனை குற்றம் செய்ய முடியாது? கொலைகூடச் செய்துவிடலாம்."

"முத்துசாமீ, அது எனக்குத் தெரியாதா என்ன? ஆனால் நீ அப்படிச் செய்வாயா என்பதுதான் கேள்வி."

"நான் இந்தத் தடவை ஒரு பெரிய குற்றம் செய்துவிட்டுத்தான் வந்திருக்கிறேன்" என்று கூறிப் பெருமூச்செறிந்தான் முத்துசாமி.

"நிஜமாகவா? எத்தனை பேரைக் கொலை செய்தாய்?" என்று மேலும் சந்தேகத்தோடு மாரியப்பன் கேட்டான்.

கொலை என்ற வார்த்தை காதில் விழுந்ததும் முத்து சாமி நடுங்கினான். பிறகு சமாளித்துக்கொண்டு மெதுவாகப் பேசலானான்.

"பத்து வயசுப் பையன் ஒருவனைக் கொலை செய்யப் போனேன். ஆனால் அதற்குள் எல்லோரும் வந்து குழந்தையைக் காப்பாற்றிவிட்டார்கள்."

"குழந்தையையா? அதுவும் நீயா குழந்தையைக் கொல்லப் போனாய்?" வாழ்க்கையிலே எந்தக் கொடுஞ்செயலும் நடக்கும் என்ற ஒரே நிச்சயத்திலிருந்த மாரியப்பன்கூட இதை நம்பத் தயங்கினான். முத்துசாமியின் தோற்றமும் நடத்தையுமே இதற்குக் காரணமாக இருந்தன.

"ஆமாம், பத்து வயசுக் குழந்தை தான். அது என் குழந்தையாகக் கூட இருந்திருக்கலாம் - அதைத்தான் கொல்லப் போனேன்" என்று கூறிவிட்டு முத்துசாமி ஆழ்ந்த சிந்தனையில் முழுகினான்.

"அது யார் குழந்தை?" என்று கேட்டு மாரியப்பன் அவன் சிந்தனையைக் குலைத்தான்.

"என் சிற்றப்பனுக்கு ஒரு மகன் உண்டு. ராமசாமி என்று பெயர். அவனுக்கு என் வயதே இருக்கும். அவனுடைய குழந்தை அது."

"தாயாதிக் காய்ச்சலா? அப்படிச் சொல்லு. அவன் உன் பூமியையெல்லாம் அபகரிக்கப் பார்த்தானே என்ன?" மாரியப்பனுக்கு இப்பொழுது விஷயம் கொஞ்சம் விளங்கியது போலிருந்தது.

"ராமசாமி அந்தச் சூழ்ச்சியிலே சேர்ந்திருந்தானோ என்னவோ தெரியாது. என் சிற்றப்பன்தான் அப்படிச் சூழ்ச்சி செய்தவர்."

பார்த்துக்கொண்டிருக்க நேரும் என்று நான் நினைத்த தில்லை. இந்த நிலையிலே எனக்கு எங்கள் ஊரில் இருக்க எப்படிப் பிடிக்கும்?"

"அதற்காக ஜெயிலுக்கு வரவேணுமா?"

"இன்னொரு முக்கியமான விஷயம் ஊருக்குப் போன பிறகுதான் எனக்கு தெரிந்தது. பதினைந்து வருஷங்களாகப் பிறர் ஏவலின்படி யந்திரம்போல வேலை செய்த எனக்கு அங்கே சொந்தமாக எந்தக் காரியமும் செய்ய முடியவில்லை. பண்ணைக் காரியங்களைக் கவனிக்கும்படி தூண்டுகின்ற மேலதிகாரியும் இல்லை; உள்ளுக்குள்ளே தூண்டுதலும் இல்லை. யாருக்காகவாவது வாழ்ந்தாலாவது அந்தத் தூண்டு தல் வரும். அதுவும் இல்லாது போயிற்று. அதனல் பிறர் ஏவலின்படி வேலைசெய்து காலத்தை நிம்மதியாகக் கழிப் பதற்கு எனக்கு ஜெயில்தான் சரியான இடம் என்று வந்துவிட்டேன்."

"சரி, சரி. புரிஞ்சுது; அந்தக் குட்டி பக்கத்து வீட்டிலே இருக்கும்போது உனக்கு அங்கே வாழப் பிடிக்கவில்லை. ஆனல் ஒரு விஷயந்தான் எனக்கு விளங்கமாட்டேனென் கிறது. உன் சொத்தை அந்தப் பயலுக்கு எதுக்கு எழுதி வைக்கவேணும்?"

"விதியின் விளையாட்டைப் பூர்த்தி செய்ய வேணு மென்பது எண்ணுடைய ஆசை. முதல் தடவை கொலைக் குற்றத்தை என்மேல் சுமத்தியும் என் சிற்றப்பனுக்கு என் சொத்துக் கிடைக்கவில்லை. அதை அவருக்குச் சேரும்படி இப்போ நானே செய்துவிட்டேன்."

"என்ன? அப்போ முதல் தடவை நீ கொலை செய்ய வில்லையா?" என்று மாரியப்பன் திடுக்கிட்டுக் கேட்டான்.

"நான் அந்தமாதிரி ஒரு குற்றத்தைக் கனவில்கூட நினைக்கமாட்டேன். யாரோ செய்த கொலையை என்மேல்

சுமத்தினர்கள். என் தாய் தந்தையர் முன்னமேயே இறந்து போய் விட்டார்கள். நான் ஒண்டியாக இருந்தேன். சிற்றப்பனுக்கு என் சொத்தை அபகரிக்கவும், அத்தை மகளைத் தன் மகனுக்குக் கலியாணம் செய்யவும் இது நல்ல உபாயமாகப்பட்டது. பணத்தை வாரி இறைத்துச் சாட்சிகளையெல்லாம் நன்றாகத் தயார்செய்து நீதிமன்றத்தை அவர் ஏமாற்றிவிட்டார்.''

"இதுதானப்பா உலகம். இப்போ தெரிஞ்சுதா?''

"இது உலகமில்லை, மாரியப்பா. உலகம் இப்படியிருந்தால் முன்னமே அழிந்துபோயிருக்கும்.''

"அட போப்பா. நீ பிழைக்கத் தெரியாத மனுஷன்... அது இருக்கட்டும், ஜெயிலுக்கு மறுபடியும் வரத்தான் தீர்மானம் செய்தாயே, உன் சிற்றப்பனையாவது மிரட்டி அடித்துவிட்டு வரப்படாதா?''

"மாரியப்பா, யாருக்கும் துன்பமுண்டாக்க வேண்டும் என்று எனக்கு இப்போ ஆசையில்லை. என் சிற்றப்பன்மேல்கூட எனக்கு இப்போ கோபம் கிடையாது. ராமசாமிக்குக் கலியாணம் ஆகி என் அத்தை மகள் வீட்டிற்கு வந்ததும் என் சிற்றப்பனோடு ஒரே குடும்பமாக இருக்க மறுத்துவிட்டாளாம். அவர் தனியாக வாழ்ந்து சிரமப்பட்டாராம். அவருக்கு வீட்டிலேயே தண்டனை கிடைத்துவிட்டது. அதைக்கூட நான் விரும்பவில்லை. என் அத்தை மகள் எனக்காகப் பரிவு காட்டித்தானே அப்படி அவரை ஒதுக்கி வைத்திருக்கிறாள்? நான் அவள் குழந்தையையே கொல்ல முயன்றதாக அவளை நம்பும்படி செய்துவிட்டால் பிறகு என்னை அவள் வெறுக்கத் தொடங்குவாள். அவள் குடும்பம் ஒற்றுமையாக வாழும். அதைத்தான் நான் விரும்பினேன்.''

இதைக் கேட்கக் கேட்க மாரியப்பன் கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக வழியத் தொடங்கியது. கசப்

இருவருக்கும் பரீட்சை முடிந்துவிட்டது. கோடை விடுமுறையும் தொடங்கியது. சிலநாட்களிலே கலியாணமும் நடக்கப்போகிறது. எல்லாம் அவர்கள் திட்டப்படியே நடந்துகொண்டிருந்தன.

ஆனால் கலியாணம் ஆகும் வரையில் காதலர்கள் ஒரு வரையொருவர் சந்திக்காமலிருக்க முடியுமா? அதுவும் சுந்தரவல்லியின் பிறந்த நாளன்று அவளைப் பார்க்காமலிருக்க முடியுமா? கனகராஜன் சுந்தரவல்லியை அவள் வீட்டிற்குச் சென்று காண்பதற்காக அன்று மாலை நேரத்திலே புறப்பட்டான். புறப்படும்போது அவளுக்குத் தன் மனமுவந்த பரிசாகக் கொடுப்பதற்கு அந்த நவரத்னமாலையையும் கையிலே எடுத்துக்கொண்டான். அது அவன் தந்தை அருமையாகப் பாதுகாத்து வைத்திருந்து கொடுத்தது. தம் மகனுடைய மனைவிக்குக் கொடுக்க வேண்டுமென்றே அவர் அதைக் கனகராஜன் பிறந்தது முதல் பத்திரமாக வைத்திருந்தார். கனகராஜனின் தாய் அதை அணிந்திருந்தாளோ என்னவோ அது அவனுக்குத் தெரியாது. ஏனென்றால் அவன் குழந்தையாக இருந்தபோதே அவள் இறந்துவிட்டாள்.

சுந்தரவல்லியின் கழுத்திலே அந்த மாலையை அணிந்த கனகராஜனுக்குத்தான் எத்தனை குதூகலம்! எத்தனை பெருமை! சுந்தரவல்லிக்கு உண்டான மகிழ்ச்சியையும் சொல்லிமுடியாது. மாலையைப் போட்டுக் கொண்டதும் முகமலர்ச்சியோடு கனகராஜனை ஒருமுறை பார்த்தாள். அவளுடைய காதலும் களிப்பும் கலந்து கண்களிலே ஓடி வீசின. அடுத்த நிமிஷம் அவள் தன்னுடைய அழகு நிலைக்கண்ணாடியிலே ஒருமுறை பார்த்துக் கொண்டாள். பார்த்ததுதான் தாமதம், தாயிடம் அந்த மாலையைக் காட்டிப்பிக்க ஒரே ஓட்டமாக வீட்டின் உள்கட்டுக்கு 'அம்மா' என்று கூவிக்கொண்டே ஓடினாள்.

சற்று நேரத்தில் தாயும் மகளும் கலகலவென்று சிரித்
பேசிக்கொண்டு தன்னை நோக்கி வருவார்கள் என்று
நராஜன் எதிர்பார்த்திருந்தான். அவன் உள்ளம்
றுமில்லாதபடி துடித்துக் கொண்டிருந்தது. ஆனால்
ன் எதிர்பார்த்தபடி தாயும் மகளும் வரவில்லை. சுந்தர
யி மட்டும் கவலை ததும்பிய முகத்தோடு மெதுவாக வந்
ர். நவரத்னமாலை இப்பொழுது அவள் கழுத்திலே
ல்; கையிலே இருந்தது.

அவள் முகத்தைக் கண்டதும் கனகராஜன் திடுக்கிட்
ன். "சுந்தரி, ஏன், என்ன நேர்ந்தது?" என்று உள்
திலே கலவரத்தோடு கேட்டான். அவள் உடனே
ல் பேசவில்லை. அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்
ய விஷயத்தை ஒருவாறு கூறலானாள்.

இந்த மாலையைக் கண்டதும் அம்மாளுக்கு என் கழுத்
ல் நாகசர்ப்பம் சுற்றி வளைந்து கிடப்பதுபோலத்
ன்றியதோ என்னவோ அப்படியே அயர்ந்துபோய்விட்
ள். காரணம் என்ன வென்று என்னால் கண்டுகொள்ள
யவில்லை.

"அம்மாள் ஒன்றும் கூறவில்லையா?" என்று ஆவ
ாடு கேட்டான் கனகராஜன்.

"அதைப்பற்றி எதுவுமே பேச மறுத்துவிட்டாள்.
ந்த மாலையை மட்டும் உங்களிடம் திருப்பிக் கொடுத்து
ம்படி சொன்னாள்" என்று ஏமாற்றத்தோடு மெது
தக் கூறினாள் சுந்தரவல்லி. கூறிக்கொண்டே மாலையை
வனிடம் நீட்டினாள்.

"வா, நானே அம்மாவிடம் விஷயத்தைக் கேட்கி
ன்" என்று கூறிக்கொண்டே கனகராஜன் உள்ளே
ன்றான். சுந்தரவல்லி அவனைப் பின்தொடர்ந்து பிரமை
த்தவள்போல் நடந்தாள்.

சற்று நேரத்தில் தாயும் மகளும் கலகலவென்று சிரித்துப் பேசிக்கொண்டு தன்னை நோக்கி வருவார்கள் என்று கனகராஜன் எதிர்பார்த்திருந்தான். அவன் உள்ளம் ஒன்றுமில்லாதபடி துடித்துக் கொண்டிருந்தது. ஆனால் அவன் எதிர்பார்த்தபடி தாயும் மகளும் வரவில்லை. சுந்தரவல்லி மட்டும் கவலை ததும்பிய முகத்தோடு மெதுவாக வந்தாள். நவரத்னமாலை இப்பொழுது அவள் கழுத்திலே இல்லை; கையிலே இருந்தது.

அவள் முகத்தைக் கண்டதும் கனகராஜன் திடுக்கிட்டான். "சுந்தரி, ஏன், என்ன நேர்ந்தது?" என்று உள்ளத்திலே கலவரத்தோடு கேட்டான். அவள் உடனே பதில் பேசவில்லை. அவன் மீண்டும் மீண்டும் வற்புறுத்தவே விஷயத்தை ஒருவாறு கூறலானாள்.

இந்த மாலையைக் கண்டதும் அம்மாளுக்கு என் கழுத்திலே நாகசர்ப்பம் சுற்றி வளைந்து கிடப்பதுபோலத் தோன்றியதோ என்னவோ அப்படியே அயர்ந்துபோய்விட்டாள். காரணம் என்ன வென்று என்னால் கண்டுகொள்ள முடியவில்லை.'

"அம்மாள் ஒன்றும் கூறவில்லையா?" என்று ஆவலோடு கேட்டான் கனகராஜன்.

"அதைப்பற்றி எதுவுமே பேச மறுத்துவிட்டாள். இந்த மாலையை மட்டும் உங்களிடம் திருப்பிக் கொடுத்துவிடும்படி சொன்னாள்" என்று ஏமாற்றத்தோடு மெதுவாகக் கூறினாள் சுந்தரவல்லி. கூறிக்கொண்டே மாலையை அவனிடம் நீட்டினாள்.

"வா, நானே அம்மாவிடம் விஷயத்தைக் கேட்கிறேன்" என்று கூறிக்கொண்டே கனகராஜன் உள்ளே சென்றான். சுந்தரவல்லி அவனைப் பின்தொடர்ந்து பிரமை பிடித்தவள்போல் நடந்தாள்.

"கனகா, மாலையைச் சுந்தரவல்லிக்குக் கொடுக்க வில்லையா?" என்று அவசரமாக மாணிக்கம் கேட்டார்.

கனகராஜன் அவர் முகத்தைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு, "அப்பா, இந்த மாலை உங்களுக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கம்மிய குரலில் கேட்டான்.

அந்தக் கேள்வி மாணிக்கத்தைத் திடுக்கிடச் செய்தது. "ஏன், இதைப்பற்றி இப்பொழுதென்ன?" என்றார் அவர்.

"மாலையை உங்களிடமே கொடுத்துவிடும்படி சுந்தர வல்லியின் தாய் கூறிவிட்டார்கள். இந்த மாலையைப் பார்த்ததும் அவர்கள் அப்படியே கலங்கிப் போய்விட்டார் கள்" என்று கனகராஜன் கூறினான். அவன் கண்களில் கண்ணீர் உருண்டது.

மாணிக்கம் சற்றுநேரம் அப்படியே ஸ்தம்பித்து நின்றார். பிறகு ஒருவாறு சமாளித்துக்கொண்டு, "காமாட்சி யின் ஊர் எதுவென்று சொன்னாய்?" என்று கேட்டார்.

"நாமக்கல்."

"அது அவளுடைய கணவன் ஊரா? அல்லது அவளு டைய பிறந்த ஊரா?"

"கணவனுடைய ஊர்தான் அது. அதுதானே அவர் களுக்கும் ஊர்?"

"நான் அதைக் கேட்கவில்லை. அவள் பிறந்து வளர்ந்த ஊர்—அதாவது அவளுடைய பெற்றோருடைய ஊரைத்தான் கேட்கிறேன்."

"அதுவா? அது காட்டுப்பாளையமாம். கோயம்புத்தூர் ஜில்லாவிலே ஈரோட்டிற்கு எட்டு மைல் தூரத்திலே இருக்கிறதாம்."

"அப்படியா? இதை ஏன் இத்தனை நாட்களாக எனக்கு நீ சொல்லவில்லை?" என்று மாணிக்கம் அலறினர்.

"நீங்கள் காமாட்சியம்மாளுடைய ஊரைப்பற்றியும் அந்தஸ்தையுமே விசாரித்தீர்கள். அவற்றைத்தான் நான் கூறினேன். பிறந்த ஊரைப்பற்றி இதுவரை கேட்கவே இல்லையே?"

"மகனே, தெய்வம் என்னைத் தண்டித்துவிட்டதடா!" என்று உள்ள முடைந்து புலம்பினர் மாணிக்கம். கனக ராஜனுக்கு ஒன்றும் புரியவில்லை.

"அப்பா, எதற்காக இப்படி வருத்தப்படுகிறீர்கள்? அந்த மாலையைப்பற்றிய விவரமெல்லாம் விளக்கமாக எனக்குச் சொல்லுங்கள். இந்த மர்மமும் சந்தேகமும் என் உயிரைப் பிடுங்கித் தின்கின்றன" என்று வேண்டினான் கனகராஜன்.

"என்னாலே இப்பொழுது பேச முடியவில்லை. பேசினாலும் விளக்கமாக எல்லாம் எடுத்துக் கூற முடியாது. அதனாலே தனியாக என் அறையிலிருந்து என் வரலாற்றைக் கோவையாக எழுதிக் கொடுக்கிறேன். அதிலிருந்து என்னைப்பற்றி நீ தீர்மானம் செய்துகொள்" என்று கூறிவிட்டு மாணிக்கம் தம் அறையை நோக்கி நடந்தார். அவர் கால்கள் தள்ளாடின. திடீரென்று அவர் மிகுந்த முதுமை யெய்திவிட்டது போலத் தோன்றியது.

தந்தையின் கடிதத்தை எதிர்பார்த்துக் கொண்டு கனகராஜன் சிலைபோல அசைவற்று உட்கார்ந்திருந்தான். அவன் உள்ளம் எதிர்எதிரான உணர்ச்சிப் போராட்டங்களால் அலைமோதிக் கொந்தளித்துக்கொண் டிருந்தது.

இரண்டு மணி நேரத்தில் தந்தை எழுதிய குறிப்பைச் சமையற்காரன் கொண்டுவந்து கொடுத்தான். ஆவலோடு அதைக் கனகராஜன் படிக்கலானான்:

பொருளை நான் ஏழைகளுக்காகப் பலவகைகளிலும் வழங்கினேன். திருட்டுச் சொத்து ஒன்றையும் நான் அப்பொழுது வைத்திருக்கவில்லை. ஆனால் காட்டுப்பாளையத்திலே களவாடிய அந்த நவரத்னமாலையை மட்டும் விற்று விடவோ அல்லது ஏழைகளின் பொருட்டுக் கொடுத்துவிடவோ என் பொல்லாத மனம் இசையவில்லை. அதை உனக்கு வாய்க்கப் போகும் மனைவிக்கு அணிந்து கண்குளிரப் பார்க்கவேண்டும் என்ற ஆசை எப்படியோ என்னைப் பற்றிக் கொண்டது. அதனால் அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டேன்.

பல தடவைகளில் அந்த மாலையை வைத்திருப்பது குற்றமாக என் நெஞ்சில் உறுத்தியது. அது என் பழைய வாழ்வின் சிறுமையை நினைவூட்டியது. இருந்தாலும் அதை அதன் சொந்தக்காரருக்கு அனுப்பிவிட மனம் வரவில்லை. குழந்தையிடத்தில் இருக்கும் அளவற்ற ஆசை இப்படியும் செய்துவிடுமோ என்னவோ?

ஆனால் மாலையை அனுப்புவதற்குப் பதிலாக நான் வேறொரு காரியம் செய்தேன். மாலை இரண்டாயிரம் ரூபாய் பெறக்கூடியது. நான் நாலாயிரம் ரூபாயை அதன் சொந்தக்காரருக்கு அவருடைய விலாசத்தைத் தேடிப் பிடித்து இன்ஷூர் செய்து தபாலில் என் பெயர் விலாசம் ஒன்றும் கொடுக்காமல் அனுப்பிவிட்டேன். அப்படி அனுப்பிய பிறகு என் மனத்திலே ஒருவகையான நிம்மதி உண்டாயிற்று.

என் தீச்செயல்களுக்கெல்லாம் நான் பிராயச்சித்தம் செய்துவிட்டதாக இன்றுவரை நம்பியிருந்தேன். ஆனால் எனது பிராயச்சித்தம் பூரணமடையவில்லை என்பது தெய்வத்தின் கருத்துப் போல் இருக்கிறது. தெய்வம் இன்று என்னைத் தண்டித்துவிட்டது.

மகனே, நான் திருடன். ஆனல் கொங்கு நாட்டிலே செய்த ஒரு திருட்டு இங்கே தொண்டை நாட்டில் இப்படி வெளியாகுமென்று நான் கொஞ்சங்கூட எதிர்ப்பார்க்க வில்லை. காமாட்சியின் இளமையிலே அந்த மாலை அவள் கழுத்தில் இருந்திருக்க வேண்டும். அவள் மூலமாகவே என்னைத் தெய்வம் தண்டிக்கத் திட்டமிட்டிருக்கிறது.

இன்று எனது வாழ்க்கையை நீ நன்முக அறிவாய். நீ பிறந்தது முதல் நான் ஒரு புது மனிதன். இன்று நான் ஒரு தீச்செயலும் செய்யத் துணியமாட்டேன். என் உள்ளம் அப்படி முற்றும் மாறியிருக்கிறது. உன்னுடைய இன்பத்தையும் உயர்வையும்பற்றிய ஆசையும், தெய்வ சிந்தனையுமல்லாது என் உள்ளத்தில் வேறொன்றுமில்லை. என்னை நீ எப்படி வேண்டுமானலும் நினைத்துக்கொள்.

உன் தந்தை,
மாணிக்கம்."

கனகராஜன் கடிதத்தைப் படித்து முடித்தான். தன் மேல் உள்ள ஆசையால் தந்தையின் வாழ்க்கையே மாறியமைந்ததை அறிந்து அவன் பெருமை கொண்டான். அவரை மனத்திலேயே போற்றினன். இருந்தாலும் அவன் தன்னுடைய வாழ்க்கை முறிந்து போனதாகவே உணர்ந்தான். 'திருடனுடைய மகன் நான். எந்த முகத்தைக் கொண்டு இனிச் சுந்தரவல்லியைப் பார்ப்பது?' என்று அவன் மனமுடைந்தான். வாழ்நாள் முழுவதும் தந்தையின் பழைய தீச்செயல் அவனுடைய இன்பத்திற்குத் தடையாக நிற்கும் என்று நினைத்தான். அதனல் இனிச் சென்னையிலே அவனுக்கு வாழ்வில்லை என்று தோன்றியது.

உடனே தந்தைக்கு ஒரு சுருக்கமான கடிதம் எழுதி வைத்தான்:

பூசாரி வாக்கு

"என்ன முட்டாள்தனம்! எல்லாம் குருட்டு நம்பிக்கை, குருட்டு நம்பிக்கை" என்று கசந்து பேசினான் சுந்தரேசன்.

"பத்து நாளிலேயே உனக்கு இப்படி வெறுப்பு ஏற்பட்டால் இங்கேயே விடுமுறை முழுவதும் கழிக்க வேண்டிய என் நிலைமை எப்படி இருக்கும்? யோசித்துப் பார். இதுதான் கிராமம்" என்று தன் நண்பனுடைய கருத்தையே எதிரொலித்தான் வேலுசாமி.

கோடை விடுமுறைக்காகக் கொங்குநாட்டிலுள்ள் தன் சொந்தக் கிராமத்திற்கு வரும்போது, வேலுசாமி பட்டணத்திலிருந்து தன் கல்லூரி நண்பன் சுந்தரேசனையும் அழைத்து வந்திருந்தான். சுந்தரேசன் கிராமத்தை இது வரையில் பார்த்ததே இல்லை. காட்டுப்பாளையம் என்ற இந்த ஊரைத்தான் அவன் முதல்முதலில் பார்க்கிறான். அவன் பட்டணத்திலே பிறந்து பட்டணத்திலேயே வளர்ந்தவன். அதனால் முதலில் அவனுக்குக் கிராம வாழ்க்கை, பழக்க வழக்கங்கள் எல்லாம் புதுமையாகவும் மனத்திற்கு உற்சாகம் அளிப்பன வாகவும் தோன்றின. ஆனால் விரைவிலேயே அவனுக்குக் கிராமம் புளித்துப் போய்விட்டது. சுகாதார வசதிகள் குறைந்த கிராமத்து வீடுகளையும் சந்து பொந்துகளையும்விட, கிராம மக்களின் குருட்டு நம்பிக்கைகள் அவனுக்கு அதிக வெறுப்பை உண்டாக்கின. அவன் நண்பன் வேலுசாமி கிராமத்தில் வளர்ந்தவனானாலும் அவனுக்கும் கிராமம் பிடிக்கவில்லை. பட்டணத்திற்குப்போய் நான்கு வருஷங்கள் வாழ்ந்ததன் பயனை வேலுசாமிக்குக்

கிராம வாழ்க்கையே அநாகரிகமானது என்ற எண்ணம் வளர்ந்துவிட்டது. அதனால் அவன் கிராமமென்றால் அதை எல்லா அம்சத்திலும் பழித்துக் கூறத் தயங்கமாட்டான்.

பக்கத்து ஊரிலே மாடுகளுக்குக் கோமாரி நோய் அந்தச் சமயத்திலே பரவியிருந்தது. அது இந்த ஊரிலும் பரவாமல் தடுப்பதற்காகப் பூசாரி சொன்னபடி காட்டுக் கறுப்பண்ணனுக்குப் பூசை போடுவதற்காக ஊர் மக்களெல்லாம் ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். அதைக் கண்டுதான் நண்பர்கள் இருவருக்கும் கோபம் பொங்கி எழுந்தது.

"கிராமமென்றால் இப்படி எல்லாம் குருட்டு நம்பிக்கைகளும் மூடப் பழக்க வழக்கங்களுமாக இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை" என்றான் சுந்தரேசன்.

"இதற்கெல்லாம் தயாராகத்தான் வரவேண்டும் என்று புறப்படும்போதே நான் உனக்கு எச்சரிக்கை பண்ணவில்லையா?" என்று வேலுசாமி கேட்டான்.

"இருந்தாலும் இத்தனை மோசமாக இருக்குமென்று நான் நினைக்கவே இல்லை" என்றான் பட்டணத்து நண்பன்.

இவர்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டே கட்டிலில் படுத்திருந்த வேலுசாமியின் பாட்டனார், "ஏன் அப்பா, பட்டணத்திலே குருட்டு நம்பிக்கையே கிடையாதா?" என்று கேட்டார்.

அந்தக் கேள்வியை நண்பர்கள் எதிர்பார்க்கவில்லை. பாட்டனார் படுத்திருந்ததைக்கூட அதுவரையில் அவர்கள் கவனிக்காமல் தங்களுடைய பேச்சில் மூழ்கியிருந்தார்கள். சற்று நேரம் அங்கு மௌனம் நிலவியது.

வேலுசாமிதான் அந்த மௌனத்தைக் கலைக்கத் துணிந்தான்; "பட்டணத்திலே இப்படிக் கிடையவே கிடையாது" என்று அவன் கூறினான்.

"உனக்கு என்னடா பட்டணத்தைப்பற்றித் தெரியும்? நீ இருக்கிற ஹாஸ்டல் தெரியும்; யாரோ நாலுபேர் பகுத்தறிவு, அது இது என்று பேசியிருந்தால் அது தெரியும். வேறு என்ன உனக்குத் தெரியப் போகிறது? உன் சிநேகிதர் பட்டணத்திலேயே பிறந்து வாழ்ந்தவர். அவர் சொல்லட்டும்" என்றூர் பாட்டனர். இந்தக் கேள்விக்கு விடை சொல்ல சுந்தரேசனுக்குத் தைரியம் வரவில்லை.

"சுந்தரேசனுக்கு மட்டும் எப்படித் தெரியப் போகிறது? நானும் பட்டணத்துக்கு வயசு காலத்திலே வந்திருக்கிறேன். அங்கே பார்த்த எத்தனையோ காட்சிகளைப்பற்றி நானும் உங்களைப்போலக் கேவலமாகத்தான் நினைத்தேன். சிறு வயசிலே இப்படித்தான் பேசத் தோன்றும். வயசு ஆகி, அநுபவம் அதிகமாகிறபோதுதான் குருட்டு நம்பிக்கைகூட ஒரு வழியிலே பலன் கொடுக்கிறதுண்டு என்று தெரியவரும்" என்று பெரியவர் சொன்னர்.

"குருட்டு நம்பிக்கை பலன் கொடுக்குமென்று எனக்குத் தோன்றவே இல்லை" என்று சுந்தரேசன் கூறினன்.

"தாத்தா அப்படித்தான் சொல்லுவார்; அவர் பழங் காலத்து மனிதர்தானே?" என்றூன் வேலுசாமி.

"என் தாத்தாவிடம் நானும் இதே மாதிரிதான் பேசியிருக்கிறேன். அது எனக்கு இன்னும் நன்றாக ஞாபகம் இருக்கிறது. ஆனல் நேற்று வந்தாளே, அந்தக் கிழவி நல்லாயிக்கு நடந்ததைக் கேட்டதிலிருந்து என் அபிப் பிராயமே மாறிப் போச்சு" என்றூர் கிழவர்.

"அந்தக் கிழவிக்கு என்ன நடந்தது?" என்று சுந்தரேசன் கேட்டான்.

'தாத்தா, அந்தக் கிழவி யார்? அவளைப்பற்றித் தெரிந்துகொள்ள வேணுமென்று எனக்கும் ரொம்ப

நாளாக ஆசை. விவரமாகச் சொல்லுங்கள்" என்று வேலு சாமியும் அவள் விஷயத்திலே ஆர்வம் காட்டினான்.

தாத்தா கதை சொல்லுவதிலே கெட்டிக்காரர். அவர் ஆரம்பித்தார் :

"நல்லாயிக்கு அருமையாக ஒரே குழந்தைதான் பிறந்தது. அப்பொழுதே அவளுக்கு நாற்பது வயசாகிவிட்டது. பையன் பிறந்த அடுத்த வருஷத்திலேயே அவள் புருஷன் இறந்து போனான். அவர்களுக்குச் சொத்து சுகம் இல்லை; குடியிருக்கிற குடிசைதான் உண்டு. கூலி வேலை செய்து இருபது வருஷம் எப்படியோ அவள் அந்தப் பையனைக் காப்பாற்றினாள். அவனுக்குப் பேர் முத்துசாமி."

"அந்தப் பையன் ஒன்றும் சம்பாதிக்கவில்லையா?" என்று வேலுசாமி இடைமறித்துக் கேட்டான்.

"அவன் பிறந்ததிலிருந்தே ஒரு மாதிரி புத்தி சுவாதீனம் இல்லாமல் இருந்தான். ஆனால் அவனைச் சுத்தப் பைத்தியம் என்றும் சொல்லமுடியாது. நாலு கேள்வி கேட்டால் ஒரு வார்த்தையாலே ஏதாவது பதில் சொல்லுவான். தானுகவே சிரித்துக்கொள்வான். ஏதாவது வேலை சொன்னால் ஒன்றுக்குப் பாதியாகச் செய்வான். அவ்வளவு தான். என்னவோ மூளைப் பிசகு.

"பையன் அப்படி இருந்தாலும் நல்லாயிக்கு அவன் மேலே உயிர். அவனுக்கு ஒரு கல்யாணம் செய்து வைத்துக் குழந்தையும் குட்டியுமாகப் பார்க்க வேணுமென்று அவளுக்கு ஒரே ஆசை. ஆனால் புத்திசுவாதீனம் இல்லாத வனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? சொத்து இருந்தாலும் அதற்காகவாவது யாராவது பெண்ணைக் கொண்டுவந்து தள்ளுவார்கள். சொத்தும் இல்லை. அதனாலே நல்லாயி முதலில் பையனுக்குப் புத்தி தெளிவதற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று தீர்மானித்தாள். இந்த ஊரி லிருந்து எட்டு மைலில் பூசாரித் தோட்டம் என்று ஒரு

தோட்டம் இருக்கிறது. ரொம்பக் காலமாகப் பூசாரி ஒருத்தன் அங்கே இருந்தான். அவன் சொல்லுகிற வாக்கு நிச்சயமாகப் பலிக்குமென்று எல்லோரும் அவனிடம் போய்க் கேட்பார்கள். தோட்டத்திலே சதா கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். நல்லாயி ஒரு நாள் அந்தப் பூசாரியைத் தேடிப் புறப்பட்டாள்.

"முன்பெல்லாம் பூசாரி தன்னிடம் வருகிறவர்களுக்கு எதிரில் உட்கார்ந்து வாக்குச் சொல்லுவான். கொட்டாவி விட்டுக்கொண்டு சிறிது நேரம் திருதிருவென்று விழிப்பான். கண்ணெல்லாம் சிவந்து போகும். சாமி அவன் மேலே வந்துவிடும். பிறகு அவன் வாக்குச் சொல்லத் தொடங்குவான். ஒரு சமயம் அப்படிச் சாமி வந்தால் மூன்றே முக்கால் நாழிகை இருக்கும். அதன் பிறகு சாமி மலையேறிவிடும். மறுபடியும் சாமி வரும் வரையில் அவன் வாக்குச் சொல்லமாட்டான். அவனுக்குச் சாமி வருவதை நானே பார்த்திருக்கிறேன். ஆனால் நல்லாயி போன சமயத்திலே அந்தப் பூசாரி நேரிலே வந்து வாக்குச் சொல்லுவதில்லையாம். அவன் ஒரு குகைக்குள்ளே இருந்து எப்பொழுதும் பூசை செய்துகொண்டிருப்பதாகவும், அவனிடம் வாக்குக் கேட்டு வந்து தெரிவிப்பதாகவும் ஒருத்தன் அவளுக்குச் சொன்னானும். அப்படியே கேட்டு வரும்படி நல்லாயி கூறினாள்.

"'நீ வளர்த்த கிடாரியாக நாலு கிடாரி விற்று அந்தப் பணத்தை விற்றவுடன் கொண்டு வந்து, பூசாரிக்குச் செலுத்தினால் அவர் தெய்வத்திற்குப் பூசை போடுவார். உன் மகனுக்குப் புத்தி சரியாகிவிடும்' என்று அந்த ஆள் சொன்னான்.

"அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு நல்லாயி தான் கொண்டு போயிருந்த இரண்டு ரூபாயையும் காணிக்கையாக அந்த ஆளிடம் செலுத்திவிட்டுத் திரும்பினாள்.

"அவளுக்கு நம்பிக்கை பிறந்தது. வயசாகி யிருந்தா லும் உடம்பிலே புதிய தெம்பு ஏற்பட்டது. இருந்தாலும், அவளால் நாலு கிடாரிகளை வாங்கவோ மேய்க்கவோ முடி புமா? அதனால் அவள் முதலில் ஒரு கிடாரி வாங்குவதென்று தீர்மானம் செய்தாள். அதற்குக்கூட அவளிடம் பணம் இல்லை. கூலி வேலையில் தினமும் கிடைக்கிற பணம் இரண்டு ஜீவன்கள் வயிறு கழுவவே சரியாக இருந்தது. அதில் மிச்சம் பிடித்துத்தான் சீலைத் துணியும் வாங்கவேண்டும். பிறகு எப்படிக் கிடாரி வாங்குவது? அதனால் நல்லாயி புதிய வரும்படி கண்டுபிடிப்பதற்குப் பல வகைகளிலும் யோசனை செய்து பார்த்தாள். அதோடு இரவிலே கஞ்சி மட்டும் குடிப்பதென்றும் முடிவு செய்தாள். இரவிலே மூன்று நான்கு மணி நேரம் நூல் நூற்றால் அதிலிருந்து கொஞ்சம் பணம் சம்பாதிக்கலாம் என்று அவளுக்குத் தெரியவந்தது. அவள் நூற்க ஆரம்பித்தாள். இப்படியாக ஆறு மாசத்திலே மூப்பது ரூபாய் மிச்சம் பிடித்து, ஒரு நல்ல இளங்கிடாரி வாங்கினாள். வேலைக்குப் போகும்போது அதைக் கூடவே பிடித்துக்கொண்டு போய்ப் பக்கத்திலே மேய விடுவாள். ாலையிலே திரும்பும்போது பிடித்துக்கொண்டு வருவாள். ிரவிலே நூல் நூற்பாள். அந்தக் கிடாரி பெரிதாகிப் லனுக்கு வரும்போது அதை விற்றுவிடவேண்டும். ிற்றுக் கிடைக்கும் பணம் முழுவதையும் பூசாரிக்குக் காடுத்துவிடவேண்டும். வேறொரு கிடாரி வாங்க உடனே ணம் வேண்டுமே, அதற்காகத் தொடர்ந்து நூல் நூற்று ாலானாள். எங்கிருந்து அவளுக்கு உடம்பிலே சக்தி வந் தோ தெரியாது. பகலெல்லாம் கழனியிலே கூலி வேலை; ிரவிலே நூல்நூற்பது. இப்படிச் சதா உழைத்துவந்தாள்.

"இரண்டு வருஷத்திலே கிடாரி பெரிதாகிப் பலனுக்கு ந்தது. அதைச் சந்தையிலே விற்றுக் கிடைத்த 150 பாயை அப்படியே பூசாரிக்குக் கொண்டுபோய்க் கொடுத் ாள்.

"மறுபடியும் ஓர் இளங்கிடாரி வாங்கினுள். மேலும் இரண்டொரு வருஷத்திலே அதுவும் பெரிதாயிற்று. அதையும் விற்றுப் பூசாரிக்குக் காணிக்கை செலுத்தினுள். ஒவ்வொரு கிடாரியை விற்றுப் பூசாரிக்குக் கொடுக்கும்போதும் அவளுக்குப் புதிய உற்சாகம் பிறந்தது.

"பூசாரியிடம் வாக்குக் கேட்டதிலிருந்து சுமார் பத்து வருஷம் நல்லாயி உறுதியான நம்பிக்கையோடு இரவு பகலுமாக உழைத்துவந்தாள். மகனுக்குச் சித்தப் பிரமை நீங்கி அவனுக்குக் கல்யாணம் செய்து வைத்துக் கண் குளிரப் பார்க்கவேண்டும் என்ற ஒரே ஆசையினுல் அந்த கிழவி அப்படிச் சலிப்பில்லாமல் வேலை செய்து வந்தாள். வயசு எழுபதாகியும் அவள் உள்ளம் தளரவில்லை; உள்ளத்திலே இளமையாக இருந்த ஆசையினுல் உடலும் தளராமல் இருந்ததோ என்னவோ? எல்லோரும் அவளைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள். ஆனல் எதற்காக அவள் அப்படி கஷ்டப்படுகிருள், எதற்காக மாடு வளர்க்கிருள் என்று யாருக்குமே தெரியாது. பூசாரி சொன்ன வாக்கைப்பற்றி அவள் யாருக்குமே சொல்லவில்லை. சமீபத்தில்தான் விஷயம் வெளியாயிற்று."

"பிறகு பூசாரி வாக்குப் பலித்ததா?" என்று சுந்தரேச ஆவலோடு கேட்டான்.

"அப்புறம் நடந்ததைச் சொல்லுங்கள், தாத்தா" என்று வேலுசாமி அவசரப்பட்டான்.

"நாலாவது கிடாரியை விற்கப்போகிற சமயத்தில் நல்லாயிக்கு ஒரே பதற்றம் எடுத்துக்கொண்டது. அந்த கிடாரியையும் விற்றுப் பூசாரியிடம் காணிக்கை செலுத்தி விட்டால் மகனுக்குப் புத்தி நேராகிவிடும் என்ற எண்ணம் அவளுடைய உடம்பை உலுக்கியது. அதனுல் அவளால் கிடாரியைச் சந்தைக்குப் பிடித்துக்கொண்டு போக முடியவில்லை. கை காலெல்லாம் நடுங்கின. மேலும் அந்

டாரி ரொம்ப மிரளி. எதையாவது எதிரிலே கண்டால் துள்ளிக் குதித்து வாலைத் தூக்கிக்கொண்டு ஓடும். அதனால் அதைக் கட்டியிருக்கிற கயிற்றை வலிமையாக பிடித்து இழுத்து நிறுத்தக்கூடிய ஓர் ஆள் வேண்டியிருந்தது.

"நல்லாயி யாரையுமே உதவிக்கோ வேலைக்கோ கூப்பிட்டு அறிந்ததில்லை. அதனால் தன் மகனையே அதைப் பிடித்துச் செல்ல அழைத்தாள். அவனுக்குப் பிரமை யென்றாலும் முப்பது வயசு ஆளுக்கு இருக்கும் வலிமை உடம்பிலே இருக்கத்தானே இருக்கும்?

"அதனால் அவன் கிடாரியைப் பிடித்துக்கொண்டு வரத் தயாரானான். கையை விட்டுக் கயிறு நழுவாமல் இருப்பதற்காகக் கையிலேயே அதை நன்றாக முடிபோட்டுக் கட்டிக்கொண்டான். அவன் கிடாரியைப் பிடித்துக்கொண்டு வந்தால் போதும். விற்பனை விஷயத்தைக் கிழவி கவனித்துக்கொள்வாள்.

"இப்படியாகத் தாயும் மகனும் சந்தைக்குப் புறப்பட்டார்கள். கொஞ்ச தூரம் வரை எல்லாம் ஒழுங்காகத்தான் நடந்தது. ஆனால் திடீரென்று ஒரு மோட்டார் திரிலே பூம் பூம் என்று குரல் கொடுத்துக்கொண்டு ரவே, கிடாரி மிரண்டுவிட்டது. ஒரே இழுப்பாக இழுத்துக்கொண்டு சாலையின் ஓரத்திலே உள்ள வேலியருகே ய்ந்தது. முத்துசாமியால் அதை இழுத்து நிறுத்தவும் டியவில்லை; ஓடினால் ஓடித் தொலையட்டும் என்று விடவும் டியவில்லை. கையிலே போட்டிருந்த முடி நன்றாக இறுகிக் காண்டது. அதனால் அவன் கிடாரிக்குப் பின்னாலே மூந்து பூமியில் புரண்டுகொண்டு போனான். கிடாரி ர தரவென்று அவனை இழுத்துக்கொண்டு ஓடிற்று. க்கத்திலே இருந்த வேப்ப மரத்திலே அவன் தலை படாரென்று மோதிவிட்டது. மோட்டார் கொஞ்ச தூரம் ான பிறகுதான் கிடாரி வேகம் தணிந்து பயந்து நின்றது.

"மோட்டாரில் வந்தவர் மிகவும் நல்ல மனிதர்போ இருக்கிறது. அவர் காரைத் தூரத்தில் நிறுத்திவிட் வந்து பார்த்தார். முத்துசாமிக்குப் பிரக்ஞையே இல்ல மண்டையிலிருந்து ரத்தம் பீரிட்டு ஒழுகிக்கொண்டிருந்த நல்லாயி வாயிலும் வயிற்லும் அடித்துக்கொண்டு வே வென்று கதறினள்.

"அவளை ஒருவாறு ஆறுதல் கொள்ளச் செய்து விசாரி தில் சந்தைக்கு அவள் புறப்பட்ட நோக்கம் தெரிய வ தது. அவளுடைய ஏழைமை நிலைமையையும் மகனை பற்றிய தீராத ஆசையையும் அறிந்து, அவருக்கு மிகவு இரக்கம் உண்டாகிவிட்டது. அவள் கேட்ட விலைக் அந்தக் கிடாரியை வாங்கிக்கொள்வதாக ஒப்புக்கொ டார். அதோடு ஈரோட்டிற்கு முத்துசாமியைத் தம காரிலேயே எடுத்துக்கொண்டு போய் ஈரோட்டு அரசாங் ஆஸ்பத்திரியில் சேர்த்து வைத்தியம் பண்ணவும் ஏற்பா செய்தார்.

"மூளையில் அடிபட்டிருந்தாலும் உயிருக்கு ஆபத்தில்ல என்று டாக்டர்கள் தெரிவித்தார்கள். ஆனால் குணமா தற்குச் சரியாக இரண்டு மாத காலம் பிடித்தது. அதுவை யிலே கிழவி பட்ட பாட்டைச் சொல்லியே முடியாது."

"குருட்டு நம்பிக்கையாலே கிடைத்த பலனைப் பார் தீர்களா?" என்று வெற்றிக் குறிப்போடு சுந்தரேச இடைமறித்தான்.

"நல்ல வேளை, முத்துசாமியின் உயிராவது தி பிற்றே!" என்றான் வேலுசாமி. நண்பர் இருவரும் வா விட்டுச் சிரித்தார்கள்.

"அதற்குள்ளே அவசரப்பட்டுத் தீர்ப்புச் சொ லாதீர்கள். அப்புறம் நடந்ததையும் கேளுங்கள்" என்ற தாத்தா தொடர்ந்தார்.

"மண்டையிலே பலத்த அடி பட்டதால் ஓர் அற்புதம் நடந்தது. காயம் ஆற ஆற முத்துசாமிக்கு நல்ல புத்தி வந்துவிட்டது. மூளையில் தாக்கிய அடியின் அதிர்ச்சியாலோ, என்னவோ அவனுடைய குறைபாடு எப்படியோ நீங்கிவிட்டது. டாக்டருக்குக்கூட அது விஷயம் விளங்கவில்லை. அவன் எல்லோரையும்போல ஆகிவிட்டான். நல்லாயிக்கு உண்டான சந்தோஷத்தைச் சொல்லவேணுமா?"

"முத்துசாமி வீட்டுக்கு வந்ததுமுதல் எல்லோரையும் போலக் கூலி வேலைக்குப் போகத் தொடங்கினன். அவனுடைய நடத்தை ஒழுங்காக இருப்பதைக் கண்டு ஒருவர் பெண் கொடுக்கவும் முன் வந்தார். கல்யாண ஏற்பாடும் ஆகிவிட்டது.

"கல்யாணம் நடப்பதற்கு முன்னே பூசாரிக்குக் கடைசிக் காணிக்கையையும் செலுத்திவிட வேண்டும் என்று நல்லாயி தீர்மானித்தாள். மகனையும் கூட வரும்படி சொன்னாள். முத்துசாமிக்கும் இதுவரையில் பூசாரியின் வாக்கு விஷயம் தெரியாது. 'எதற்காகப் பூசாரிக்கு இப்போது இத்தனை ரூபாய் காணிக்கை?' என்று அவன் வற்புறுத்திக் கேட்டான்.

"அப்பொழுதுதான் நல்லாயி விஷயத்தை விளக்கி மகனிடம் கூறினாள். முத்துசாமிக்குத் தன் தாயிடம் என்றும் இல்லாத அன்பும் மரியாதையும் ஏற்பட்டுவிட்டன. தனக்காக அவள் செய்த இடைவிடாத உழைப்பை நினைக்க நினைக்க அவனுக்கு அவன் தாய் தெய்வமாகவே தோன்றலானாள்.

"இருவரும் ஒருநாள் காணிக்கையை எடுத்துக் கொண்டு பூசாரித் தோட்டத்திற்குப் புறப்பட்டார்கள். வழியெல்லாம் நல்லாயி தன் பத்துவருஷ வாழ்க்கையைப் பற்றியே கூறிக்கொண்டு போனாள். மகனுக்கு மனத்

தெளிவு ஏற்பட்டுவிடும் என்ற ஒரே நம்பிக்கை அவள் உயிருக்கு ஊட்டம் கொடுத்து வந்திருக்கிறது. நடக்கும் போது அவள் தள்ளாடுவதைப் பார்த்தவர்கள், இவள் எப்படி அவ்வாறு பத்து வருஷம் இராப் பகலாக உழைத் திருக்க முடியும் என்று சந்தேகிப்பார்கள்.

"மெதுவாக நடந்தாலும் தாயின் வாழ்க்கை அநுபவங் களையெல்லாம் கேட்டுக்கொண்டு சென்ற முத்துசாமிக்குச் சலிப்பே தோன்றவில்லை. இருந்தாலும், திரும்பும்போது வாடகை வண்டி ஒன்று ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்று அவன் தீர்மானித்தான்.

"பூசாரித் தோட்டத்திலே நுழைந்ததும், 'பூசாரி எங்கிருக்கிறார்?' என்று கிழவி அங்கு எதிர்ப்பட்ட ஓர் ஆளை விசாரித்தாள்.

"'எந்தப் பூசாரி?' என்று அந்த ஆள் கேட்டான்.

"'அவர்தான் அப்பா, வாக்குச் சொல்லுவாரே, அந்தப் பூசாரிதான்' என்றாள் நல்லாயி.

"'அவரா? அவர் செத்துப் பன்னிரண்டு வருஷமாச்சே!' என்றான் அந்த ஆள்.

"'இல்லையப்பா, பத்து வருஷத்துக்கு முன்னே எனக்கு அவர் வாக்குச் சொன்னார். அதன் பிரகாரம் நான் மூன்று தடவை இங்கு வந்து அவருக்குக் காணிக்கை செலுத்தி யிருக்கிறேனே?' என்று நல்லாயி சொன்னாள்.

"சரி சரி, பாட்டி. உன்னைத்தானே அந்தப் படுபாவி ஏமாற்றினான்? பூசாரி செத்துப்போன பிறகு அவனோடு இருந்த ஆள் ஒருத்தன் பூசாரி குகைக்குள் இருந்து வாக்குச் சொல்லுவதாகக் கூறி எல்லோரையும் ஏமாற்றிக்கொண் டிருந்தான். கெட்டிக்காரன் புளுகு எத்தனை நாளைக்கு நிலைக்கும்? போன மாசந்தான் அவன் குட்டு வெளியாச்சு.

அதனால் ஊர்க்காரரெல்லாம் அவனை மிரட்டினார்கள். அவன் எங்கேயோ யாருக்கும் தெரியாமல் ஓடிப் போய் விட்டான்' என்றான் அந்த ஆள்.

"'என்ன, அப்போது எனக்குப் பூசாரி வாக்குக் கொடுக்கவில்லையா?' என்று திடுக்கிட்டுக் கேட்டாள் நல்லாயி.

"அவ்வளவுதான். அந்த நிமிஷத்திலேயே அவள் மனம் குழம்பிப் போய்விட்டது. இன்னும் உயிரோடுதான் இருக்கிறாள். இருந்தாலும் அவள் பழைய நல்லாயியாக இல்லை. ஆனால் அவளுடைய அதிருஷ்டம் முத்துசாமி அவளை உயிராக மதித்துக் காப்பாற்றி வருகிறான்" என்று முடித்தார் பாட்டனார்.

"தாத்தா, அப்படியானால் எங்கள் கட்சிதானே வென்றது? பூசாரி வாக்கெல்லாம் வெறும் ஏமாற்றம் என்று தெரிந்ததல்லவா?" என்றான் வேலுசாமி.

'பூசாரி வாக்குப் பொய்யோ மெய்யோ, அதைப்பற்றி இப்போது பேச்சில்லை. பூசாரி சொன்னதாக அந்த ஆள் சொன்னதைக் கிழவி முழுவதும் நம்பினாள். அது குருட்டு நம்பிக்கையாக இருந்தாலும் அதனாலே கிழவியின் ஆசை பூர்த்தியாயிற்றே இல்லையா? அதைப்பற்றித்தானே பேச ஆரம்பித்தது?" என்று தாத்தா கேட்டார்.

வேலுசாமியும் சுந்தரேசனும் சிந்தனையில் மூழ்கினார்கள்.

பாறுங்கல்

ஒரு பெரிய பாறுங்கல். கரடுமுரடான தோற்ற மூடையது. அது பயங்கரமாக மலையின் விளிம்பிலே செங் குத்தான இடத்திலே நின்றது. வெளித் தோற்றத்தில் அது அசைவற்று உயிரற்றுத்தான் கிடந்தது. ஆனால் அதன் உள்ளத்திலே கோபம் குமுறிக்கொண்டிருந்தது.

அந்தக் கிராமக் காதலர்கள் மறுபடியும் அருகிலே வந் தால் அவர்கள் மேலே எப்படியாவது உருண்டு விழுந்து இருவரையும் நசுக்கிப் பிழிந்துவிட வேண்டுமென்று அதற்கு ஆத்திரம்.

எத்தனை தடவை அதை அவர்கள் காலாலே உதைத் திருக்கிறார்கள்! எத்தனை தடவை மாலை வேளைகளில் அதன்மீது அலட்சியமாகச் சாய்ந்துகொண்டு காதல் மொழி பேசியிருக்கிறார்கள்! பாறை என்றாலும் அதற்கு ரோசம் இல்லையா என்ன? தன்னை அவமதித்தவர்களை அது சும்மா விடமுடியுமா? அந்தப் பாறுங்கல் தக்க சமயம் பார்த்துக் கொண்டிருந்தது. காதலைப்பற்றிக் கருணையோ இரக்கமோ அதன் கரடுமுரடான நெஞ்சில் சுரக்கவில்லை.

ஒருநாள் குறும்புச் சிறுவர்கள் சிலர் மலைமேலே உல் லாசமாக ஏறினார்கள். மரங்களிலிருந்து பெரியதும் சிறியது மாகக் கம்புகளை வெட்டிக்கொண்டார்கள். அவற்றையே நெம்புகோலாகக் கொண்டு அந்தப் பாறுங்கல்லைக் கீழே உருட்டிவிட்டார்கள். அது உருண்டோடுவதைப் பார்த்துக் களிக்கவேண்டும் என்பது அவர்கள் ஆசை.

கல் தடதடவென்று பயங்கரமாக இரைச்சலிட்டுக் கொண்டு அடிவாரத்தை நோக்கிப் பாய்ந்தது. அதன் வேகம் ஒவ்வொரு கணமும் வளர்ந்துகொண்டேயிருந்தது

அடிவாரத்திலே காதலர்கள் ஒரு கழனியிலே வேலை செய்துகொண்டிருந்தார்கள். அவன் நிலத்தை உழுகிறான்; அவள் ஏரின் பின்னாலேயே காதலன் அருகில் நடந்து கொண்டே விதைகளை ஒவ்வொன்றாகப் படைச்சாலில் போட்டு மண்ணைக் காலால் மூடி வருகிறாள்

அந்தப் பாறுங்கல் உருண்டுவரும் வழியிலேதான் அவர்கள் வேலை செய்கிறார்கள். அதற்கு நல்ல சந்தர்ப்பம் வாய்த்தது. அத்துடன் காதலர்களைப் பொடியாக்க வேண்டிய வேகமும் வலிமையும் அதற்குக் கிடைத்திருக்கின்றன. தடால், படார் என்று மோதிக் கர்ஜனை புரிந்துகொண்டு பாறுங்கல் ஆத்திரத்தோடும் எக்களிப்போடும் உருண்டோடியது. எதிரிலே இருந்த மரங்களும் சிறு பாறைகளும் அதற்கு லட்சியமில்லை. அவற்றையெல்லாம் அது சாடியழித்துக்கொண்டு மேலே பாய்ந்தது.

வேலை செய்துகொண்டே காதல் மொழி பேசி மெய்ம் மறந்து நடந்த காதலர்களுக்கு அந்தக் கொடிய பாறுங்கல்லின் பேராரவாரம் காதிலே விழவில்லை. ஆயிற்று; இன்னும் ஒரு வினாடியிலே பாறுங்கல் அவர்களைத் தாக்கி அழித்துவிடும். கடைசியாக ஓரே பாய்ச்சல்தான் பாக்கி.

பாறுங்கல் ஒரு செங்குத்தான திடரிலே உருண்டு அங்கிருந்து ஓரே குதியில் காதலர்களை அழிக்கும் ஆத்திரத்தோடு இடிஇடித்து அடியெடுத்துப் பாய்ந்தது. ஆனால் அதன் ஆத்திரமே அதன் அழிவாக முடிந்தது. அந்தச் செங்குத்தான இடத்திலிருந்து கீழேயுள்ள ஒரு பாறையில் தாவியபோது அது நூறு சுக்கலாக உடைந்து சிதறிப் போய்விட்டது.

காதலர்கள் அதையும் உணரவில்லை. அன்புப் பெருக்கிலே மிதந்த அவர்கள் உலகத்தையே மறந்துவிட்டார்கள். மறுநாள் மாலை வேளையிலே மலைமீது அவர்கள் சந்தித்த

போதுதான் அந்தப் பாறுங்கல்லைக் காணது வருத்த பட்டார்கள்.

சுக்கு நூறுகப் போன பாறுங்கல்லுக்கு இன்னு கோபம் தணியவில்லை. காதலர்கள் மலையிலிருந்து இரு டிலே திரும்பி வரும்போது அவர்கள் கால்களிலே மோ அவர்களை இடறி விழச் செய்து அவர்கள் மண்டையை பிளக்க வேணுமென்று திட்டமிட்டுக்கொண் டிருந்தது.

ஆனல் அதன் எண்ணம் கைகூடவில்லை. காதலர்க இருட்டிலே அந்தக் கல் சிதறிக் கிடக்கும் இடத்திற்கு வ தார்கள். புதிதாக வழியிலே கற்கள் விழுந்து கிடப்பதை கண்ட காதலன் தன் காதலியை மெதுவாகத் தன் க களிலே தூக்கிக்கொண்டான். "நானே கவனமாக பார்த்து நடக்கிறேன்; எதற்காக உங்களுக்கு வீண் சிரமம் என்று காதலி கொஞ்சி மொழி பேசினுள். "இதென் சிரமம்? இந்தக் கல்லெல்லாம் முன்னல் இங்கே இப்படி கிடக்கவில்லை. எப்படியோ இன்றைக்கு வந்திருக்கின்ற இருட்டிலே இவைகளில் கால் மோதிவிடும்" என்று சொ விக்கொண்டே அவன் அவளைத் தூக்கிக்கொண்டு எ ரிக்கையாக நடந்தான்.

"உங்கள் காலில் மோதிவிடாதா?" என்று அவ கவலையோடு கேட்டாள்.

"என் காலிலா? நான்தான் தினமும் கல்லிலும் முள் லும் திரிகிறவன். என் கால்களுக்கு அவைகளைக் கண் ஓதுங்கி நடக்கத் தெரியும்" என்றான் அவன்.

அவன் கூறியது மெய்தான். ஒரு கல்லிலும் படா அவன் அந்த இடத்தைக் கடந்துவிட்டான். பாறுங்க லுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதன் நூறு சுக்க களும் உள்ளுக்குள்ளே கொதித்துப் புழுங்கின.

போதுதான் அந்தப் பாறுங்கல்லைக் காணுது வருத்தப் பட்டார்கள்.

சுக்கு நூறுகப் போன பாறுங்கல்லுக்கு இன்னும் கோபம் தணியவில்லை. காதலர்கள் மலையிலிருந்து இருட் டிலே திரும்பி வரும்போது அவர்கள் கால்களிலே மோதி அவர்களை இடறி விழச் செய்து அவர்கள் மண்டையைப் பிளக்க வேணுமென்று திட்டமிட்டுக்கொண் டிருந்தது.

ஆனால் அதன் எண்ணம் கைகூடவில்லை. காதலர்கள் இருட்டிலே அந்தக் கல் சிதறிக் கிடக்கும் இடத்திற்கு வந் தார்கள். புதிதாக வழியிலே கற்கள் விழுந்து கிடப்பதைக் கண்ட காதலன் தன் காதலியை மெதுவாகத் தன் கை களிலே தூக்கிக்கொண்டான். "நானே கவனமாகப் பார்த்து நடக்கிறேன்; எதற்காக உங்களுக்கு வீண் சிரமம்?" என்று காதலி கொஞ்சி மொழி பேசினாள். "இதென்ன சிரமம்? இந்தக் கல்லெல்லாம் முன்னால் இங்கே இப்படிக் கிடக்கவில்லை. எப்படியோ இன்றைக்கு வந்திருக்கின்றன. இருட்டிலே இவைகளில் கால் மோதிவிடும்" என்று சொல் லிக்கொண்டே அவன் அவளைத் தூக்கிக்கொண்டு எச்ச ரிக்கையாக நடந்தான்.

"உங்கள் காலில் மோதிவிடாதா?" என்று அவள் கவலையோடு கேட்டாள்.

"என் காலிலா? நான்தான் தினமும் கல்லிலும் முள்ளி லும் திரிகிறவன். என் கால்களுக்கு அவைகளைக் கண்டு ஒதுங்கி நடக்கத் தெரியும்" என்றான் அவன்.

அவன் கூறியது மெய்தான். ஒரு கல்லிலும படாது அவன் அந்த இடத்தைக் கடந்துவிட்டான். பாறுங்கல் லுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. அதன் நூறு சுக்கல் களும் உள்ளுக்குள்ளே கொதித்துப் புழுங்கின.

ஒருநாள் கல்லுடைப்பவர்கள் அங்கே வந்தார்கள். சிதறுண்ட அந்தப் பாறுங்கல்லின் சுக்கல்களை யெல்லாம் சுத்தியால் இன்னும் ஆயிரம் ஆயிரமாக உடைத்தார்கள். பக்கத்திலிருந்த நீண்ட சாலையிலே அவற்றை ஆங்காங்கே குவித்து வைத்தனர். அடுத்து வரும் மழைக்குப் பிறகு அந்தக் கற்களைச் சாலையிற் பரப்பி மராமத்துச் செய்யவேண்டுமென்பது அவர்களுடைய திட்டம்.

மழைக்கு முன்னே குறும்புச் சிறுவர்கள் சிலர் அந்தக் கற்குவியல்கள் இருந்த இடத்திற்கு வந்தார்கள். சல்லிக் கற்களை மடியில் கட்டிக்கொண்டு சாலையோரத்திலிருந்த புளிய மரத்தைக் கண்வைத்தார்கள். புளியம் பிஞ்சு அடிப்பது அவர்களுடைய நோக்கம். கற்கள் ஆகாயத்திலே விர்விர் என்று பறந்தன.

சாலையருகிலே கழனியிலே காதலர்கள் களை வெட்டிக் கொண்டிருந்தார்கள். தன் ஆத்திரத்தைத் தீர்த்துக்கொள்ளப் பாறுங்கல்லுக்கு இப்பொழுது மற்றொரு நல்ல சமயம் கிடைத்துவிட்டது.

புளியமரத்துக் கிளைகளின் வழியாகத் தப்பிச் சென்ற சல்லிக்கற்கள் வானவெளியிலே கொடுமை கொண்டு பாய்ந்தன. ஆனல் அவற்றுல் காதலர்களை அணுகத்தான் முடியவில்லை. கழனிக்குள்ளே கல் ஒன்றிரண்டு விழுவதைக் கண்ட நிலத்தின் சொந்தக்காரன், சிறுவர்களை விரட்டியடித்து விட்டான்.

மறுபடியும் அந்தச் சல்லிகள் சாலை மருங்கிலுள்ள குவியல்களைச் சேர்ந்தன. அவை இறைந்து கிடப்பதைக் கண்டு சாலை செப்பனிடும் வேலைக்காரர்கள் அவற்றைப் பொறுக்கி வந்தார்கள்.

மழை வந்தது. சாலை போடத் தொடங்கிவிட்டார்கள். சல்லிக்கற்களைப் பரப்பி எந்திர உருளைகளைக் கொண்டு

கெட்டி செய்து சாலை அமைத்து விட்டார்கள். பாறுங்கல்லின் சிறுசிறு சுக்கல்களெல்லாம் மனம் வெந்து கிடந்தன. அவற்றின் கோபம் இன்னும் ஆறவில்லை. எப்படியும் காதலர்களின்மேல் பழி வாங்கவேண்டுமென்று பல்லைக் கடித்துக்கொண்டிருந்தன. காதலர்கள் அந்தச் சாலையின் வழியே பலமுறை எவ்விதத் தீங்குக்கும் உட்படாது போய்க் கொண்டுதான் இருந்தார்கள். சல்லிக்கற்கள் அவர்களுடைய காலில் மிதிபட்டன. கோபம் மேலும் மேலும் பீரிட்டுக்கொண்டுதான் இருந்தது. ஆனால் அந்த நாடி செத்த கோபத்தால் ஒன்றும் செய்ய முடியவில்லை.

சாலையின் வழியாக அல்லும் பகலும் பலவகையான வண்டிகள் சென்றுகொண்டிருந்தன. அவற்றின் சக்கரங்களில் அரைபட்டுச் சல்லிக் கற்கள் பொடியாகிக் கொண்டிருந்தன. பொடியான பிறகு காற்றிலே பறந்து அந்தக் காதலர்களின் கண்களிலே விழுந்து அவர்களைக் குருடாக்கவேண்டுமென்று அவை எண்ணிக்கொண்டிருந்தன. அவர்களை ஒரே நொடியில் கொல்லுவதைவிடக் குருடாக்கி ஆயுள் முழுவதுமே துன்பத்திலே ஆழ்த்துவது இன்னும் நல்ல தண்டனை என்று அவற்றிற்குத் தோன்றியது.

அவைகளின் விருப்பப்படியே புழுதியாகிவிட்டன. காற்றுத் தேவன் இளமையோடு வந்தான். கரடுமுரடான அந்தப் பாறுங்கல் இப்பொழுது நுண்பொடியாக மாறி வானில் எழுந்தது. அந்தப் பாறுங்கற் பொடி தென்றலை நோக்கி, "இளங்காற்றே, நீ எங்கே செல்லுகிறாய்?" என்று கேட்டது.

"அதோ பார்த்தாயா? அந்த இளங்காளையும் அந்த இளங் கன்னியும் எவ்வளவு உண்மையாக ஒருவரை ஒருவர் காதலிக்கிறார்கள்! அவர்களுக்கு நான் இன்பம் கொடுத்துக் குளிர்ச்சியோடு வீசப் போகிறேன். மாசுமறுவற்ற அன்புக்

குச் சேவை செய்வது அனைவருக்கும் கடமையல்லவா?" என்றது தென்றல்.

அதே சமயத்தில் மலர் ஒன்று, "தென்றலே, எனது நறுமணத்தையும் சுமந்துகொண்டு போய் அவர்களுக்கு இன்பம் கொடு" என்று வேண்டிக்கொண்டது.

மேகம் ஒன்று வானத்தின் ஒரு கோடியிலிருந்து கூவிற்று: "தென்றலே, என்னை உயரத்தில் ஏந்திக்கொண்டு போய் அவர்களுக்கு மேலே நிறுத்து. நான் அவர்களுக்குக் குடையாக இருந்து சேவை செய்ய ஆசைப்படுகிறேன்."

"தென்றலே, எனது இன்னிசைப் பாடலைச் சுமந்து கொண்டுபோய் அந்தக் காதலர்களின் செவியிலே தேன் பாய்ச்ச மாட்டாயா?" என்று குயிலொன்று பரிவோடு கேட்டது.

பாறுங்கல்லின் பொடிக்கு இப்பொழுது எப்படியோ மனம் திடீரென்று மாறிப் போயிற்று. பொடியாகி நுண்மை எய்தியதன் விளைவா, அல்லது அது கேட்ட வார்த்தைகளின் மந்திர சக்தியா, ஒன்றுமே புரியவில்லை.

"தென்றலே, என்னை மெதுவாகக் கொண்டு போய அந்தக் காதலர்கள் நடக்கும் பாதையிலே பட்டுப்போலத் தூவிவிடு. அவர்களுடைய பாதம் நோவாமல் மெத்தென்றிருக்க நான் ஆசைப்படுகிறேன்" என்று கனிவோடு வேண்டிக்கொண்டது பாறுங்கல்.

பேய்த் தேர்

"நான் எப்படியெல்லாம் என் உள்ளத்தைத் திறந்து கொட்டுகிறேன். அவள் அதை உணரவில்லையே அவளுடைய அன்பைப்பற்றி ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டேனென்கிறாள்" என்று அந்த இளைஞன் துடி துடித்தான்.

"நம் சமூகத்துப் பெண்களே இப்படித்தான், ராமு மேனாட்டுப் பெண்களைப்போல வெளிப்படையாகப் பேசமாட்டார்கள். மேனாட்டில் இப்படி நான் கண்டதில்லை என்று மேனாடெல்லாம் சுற்றி வந்த அவனுடைய நண்பன் சுந்தரம் ஒத்தூதினான்.

சுந்தரம் ஐரோப்பாவில் இருந்திருக்கிறான். அமெரிக்காவிலும் ஒரு வருடம் இருந்திருக்கிறான். ஆனால் அந்நாட்டுப் பெண்களைப்பற்றி அவனுக்குத் தன் சொந்த அனுபவத்திலிருந்து ஏதாவது தெரியுமா என்பது சந்தேகம் இருந்தாலும், அவன் பேசுவதைப் பார்த்தால் அவனுக்கு தெரியாதது ஒன்றுமில்லை என்று தோன்றும்.

சுந்தரத்தைப்பற்றி ராமுவுக்கு முழு நம்பிக்கை கிடையாது. என்றாலும், காதலால் தவித்துக்கொண்டிருந்த அந்தச் சமயத்தில் சுந்தரத்தின் பேச்சும் தொடர்பும் அவனுக்கு இன்பமளிக்கத்தான் செய்தன. தன் உள்ளத்தை ஆக்குவதற்கு அவன் ஒரு நல்ல சாதகமாக அமைந்திருந்தான்.

இப்பொழுது சுந்தரத்தைப் பிடித்திழுத்துக்கொண்டு வந்து சென்னையில் அடையாற்றுக்குப் பக்கத்திலே கட

க்ரையில் உட்கார வைத்து ராமு தன் உள்ளக் கனலையெல்லாம் வாரிக் கொட்டிக்கொண்டிருக்கிறான்.

கதிரவன் மறைந்துவிட்டான். இருள் மெதுவாகத் தனது ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்றுகொண்டிருந்தது. கடலிலே அலைகள் எழுந்து சுருண்டு முல்லைப் பூக்களைப் போல வெண்ணுரை பொங்கக் கரையை நோக்கி அணியணியாக வந்து விளையாடிக்கொண்டிருந்தன.

"அடக்கமாம் அடக்கம்! யாருக்கு வேண்டும் இந்த அடக்கம்? இரண்டிலொன்று வெளிப்படையாகப் பேச வேண்டும். எத்தனை நாளைக்குக் காத்துக்கொண்டிருப்பது?" என்று ராமு வெறிபிடித்தவன் போல் பேசினான்.

"அதுதானப்பா இந்தியப் பெண்களுக்குத் தனிச் சிறப்பு. அதுதான் நமது பண்பாடு. நம் பெண்களில்லாவிட்டால் இதற்குள் அந்தப் பண்பாடெல்லாம் காற்றிலே போயிருக்குமே—அவர்கள்தான் அதைக் காத்து வைத்திருக்கும் கஸ்தூரி மாத்திரை டப்பிகள்" என்று கிண்டலாகப் பேசினான் சுந்தரம்.

"போடா, உங்கள் பண்பாடும் நீயும்!" என்று கோபித்துக் கொண்டான் ராமு.

"அடடே, நான் அதை ஆதரிக்கிறேன்? நான்தான் பாரதியாரோடு சேர்ந்துகொண்டு 'நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று பெண் விடுதலை பாடுகிறவனச்சே?" என்று சுந்தரம் தன்னைச் சரியானபடி விளக்கிக் காட்டினான்.

இந்தச் சமயத்தில் எதிர்பாராத விதமாகப் புதுக்குரல் ஒன்று கேட்டது.

'அப்பப்பா, நீங்கள் என்ன வேண்டுமானாலும் பேசுங்கள் பாரதியாரைமட்டும் கொலை பண்ணுதீர்கள்.' அவர்

சொல்லுகிற விஷயம் வேறு, நீங்கள் குறிக்கிற விஷயம் வேறு" என்று அந்தப் புதுக்குரல் ஒலித்தது.

ராமுவும் சுந்தரமும் சட்டென்று அந்தக் குரல் வந்த திக்கை நோக்கிப் பார்த்தார்கள். பக்கத்திலே சுமார் முப்பது வயதுள்ள ஒரு வாலிபன் மணலிலே படுத்திருந்தான். பேச்சு விறுவிறுப்பிலே இதுவரை அவனை அவர்கள் கவனிக்கவில்லை.

ராமுவும், சுந்தரமும் தன்னைப் பார்ப்பதை அறிந்த அவன் மெதுவாக எழுந்து அவர்களிடம் வந்தான்.

எதிர்பாராது தோன்றிய அந்தப் புது மனிதனை என்ன பேசுவதென்று தோன்றாமல் ராமுவும் சுந்தரமும் சிறிது நேரம் மௌனமாக இருந்தார்கள்.

"நானும் உங்களைப்போல இந்தக் காதல் புயலிலே சிக்கி இப்படியெல்லாம் எண்ணமிட்டவன்தான். என்னுடைய அனுபவம் உங்களுக்கு வழிகாட்டியாகக்கூட இருக்கலாம்" என்று அந்தப் புது மனிதன் தானாகவே முந்திக்கொண்டு வெளிப்படையாகப் பேசினான்.

அவனுடைய வெளிப்படையான தன்மை நண்பர்கள் இரண்டு பேருக்கும் அதே மனப்பான்மையை மேலோங்கச் செய்தது. மேலும் சுந்தரம், அந்நியர்கள் முன்னிலையிலும் அரட்டை திரிப்பதில் பின்வாங்காதவன். ஆதலால், முதலில் திடீரென்று தோன்றிய மலைப்பை விரைவில் சமாளித்துக்கொண்டு அவன், "இப்படி வாருங்கள்—உங்களுடைய அனுபவத்தைக் கொஞ்சம் விரிவாக எங்களுக்குக் கூறுங்கள்" என்று சொன்னான்.

"பேர் ஊரெல்லாம் கேட்காமல் இருந்தால் தாராளமாகச் சொல்லுகிறேன்" என்றான் அந்தப் புது வாலிபன்.

மற்ற இருவரும் சம்மதம் தெரிவிக்கவே அவன் தன் தையைத் தொடங்கினான்:

"ஆறு ஆண்டுகளுக்கு முன்னே ஒருநாள் ஒரு ட்டத்திற்குச் சென்றிருந்தேன். அவளும் வந்திருந்தாள். தற்கு முன்னல் நாங்கள் ஒருவரையொருவர் அறிந்த ல்லை. கூட்டத்தில்தான் முதல்முதலில் ஒருவரையொருவர் ார்த்தோம்."

அவள் பார்த்தாள். நானும் பார்த்தேன். அவள் ார்வையில் விஷமம் கலந்திருந்தது. அதில் ஏதோ ஒரு ணர்ச்சி ஒளி வெளிப்பட்டது. என் பார்வை மட்டும் யோக்கியமானதென்று கூறமுடியாது. அதிலும் உள்ளத் ில் கிளர்ந்த உணர்ச்சியின் பிரதிபலிப்பு வீசத்தான் செய்தது.

இந்தமாதிரிதான் முதல்முதலில் நாங்கள் சந்தித்துக் ண்ணுலேயே பேசிக்கொண்டோம். அப்படிப் பேசிக் கொள்வதில் ஒரு தனி இன்பம் இருந்தது. காதலெல்லாம் ழங்காலத்திலிருந்து அவ்வாறுதான் பிறந்தது என்று ாங்கள் நினைத்தோம். 'ஆவிற்கு இரு கோடு போல'க் காதல் ஒரே சமயத்தில் இருவர் உள்ளத்திலும் முளைக் றது என்றெல்லாம் நாங்கள் படித்திருக்கிறோம். அவ் யாறே எங்கள் காதலும் நடப்பதாக நாங்கள் கற்பனை செய்துகொண்டோம்.

அன்று கண்ணுடன் கண் பேசிக் கொண்டது. ஆனல் காதல் மட்டும் உதயமாகவில்லை. இந்த உண்மை அப் பொழுது எனக்குத் தென்படாமல் போயிற்று. தெய்விகக் காதல் பிறந்துவிட்டதாகத்தான் நான் அன்று கருதினேன். அதனல் உள்ளம் துடித்தேன்; கலங்கினேன்; அயர்ந்தேன்; இன்பக் கானலைத் துன்பக் கிண்ணியில் மொண்டு குடித் தேன்.

எனக்கு உறக்கம் அற்றுப் போய்விட்டது. உணவில் ருசி குறைந்தது. கவிஞர்கள் எழுதியுள்ள காதல் பாட்டுகள் எனக்கு இனித்தன. அவைகளைச் சுவைத்துச் சுவைத்து மேலும் உள்ளம் நைந்தேன். நானும் பல கவிதைகளை எழுதிக் குவித்தேன்.

ஆசையின் குமுறலினாலும் அதன் விளைவாக வரும் நரம்புக் கிளர்ச்சியினாலும் கருகி வாடி உழல்வதிலே இளம் பருவத்தில் ஓர் இன்பம் தழைக்கின்றது. ஆசை வலையிலே விழுந்து தடுமாறுவதிலே அந்தக் காலத்தில் ஒரு கவர்ச்சி தோன்றுகிறது. நான் அவ்வாறு தவித்துத் தடுமாறிக் கொண்டிருந்தேன். அத்தனையும் எனது காளைப் பருவக் கற்பனைதான் என்று எனக்குப் புலனுகவேயில்லை.

நான் மட்டுமா அவ்வாறிருந்தேன்? அவளும் அதே நிலைமையில்தான் இருந்தாள். நான்பட்ட துன்பங்களையெல்லாம் அவளும் அடைந்து வாடினாள்.

ஆணுக இருந்தால் என்ன, பெண்ணுக இருந்தால் என்ன? இளம் பருவ உள்ளத் துடிப்பு ஒன்றுதானே?

முன்பெல்லாம் இதயத்தின் அலைமோதல்களை வெளியிலே கூறுவதில் பெண்கள் எச்சரிக்கையோடு இருந்தார்கள். சுலபத்திலே அவர்கள் தங்கள் உணர்ச்சிகளை வெளிப்படுத்திவிட மாட்டார்கள். அவர்களிடத்திலே நிதானமும் அடக்கமும் நிறைந்திருந்தன. இன்று புதிய கல்வி கற்ற பெண்களில் பலர் அவற்றைக் காற்றில் விட விரும்புகிறார்கள். ஆண்களோடு சரிநிகர் சமானமாக இருப்பதற்கு அதை ஓர் அடையாளமாக அவர்கள் நினைக்கிறார்கள். திரைப் படங்கள் வேறு இதற்குத் துணை புரிகின்றன. நான் சமீபத்தில் ஒரு தமிழ்ப் படம் பார்த்தேன். அதிலே ஆண் ஒதுங்கி ஒதுங்கி அடக்கமாக இருக்கிறான். அந்த அம்மணிதான் அவனை நெருங்கி நெருங்கிக் காதல் வளர்க்கிறாள். இது ஒரு படத்தில் மட்டும் கண்ட புதுமை

ன்று யாரும் நினைக்க வேண்டாம். திரைப் படங்களில் ன்று காதலைப்பற்றிய கட்டங்களே விநோதமாக இருக் ன்றன. இளமங்கைகள் பாட்டுப் பாடிக்கொண்டு கர ர்வெனச் சுழல்வதும் இடையிடையே ஒரு மரத்தின் தோ கம்பத்தின் மீதோ ஒரு மாதிரியாகச் சாய்வதும், ளங் காளைகள் அந்தப் பாட்டுக்கு ஒத்துப் பாடிக் காண்டு பின்தொடர்வதும் எல்லாம் ஒரே வேடிக்கை ான். அவள் ஓடுவதும், இவன் பின்னல் தொடர்வதும், ூரென்று நிற்பதும், பாடுவதும், ஆடுவதும் எல்லாம் தலின் பெயரால் நடக்கிற கேலிக் கூத்தாக இருக்கும். ங்களும் இதைப் பார்த்திருப்பீர்கள்.

நம் கவிஞர்களும் அறிஞர்களும் தங்கள் கற்பனை லே ஒருவகையாகப் பெண்களுக்கு இலக்கணம் வகுத் ருக்கிறார்கள். அந்தக் கற்பனைப் பெண்ணைத்தான் அவர் ள் லட்சியமாகக் கருதினர். ஆனல் இந்தக் காலத்தில் ந்தப் பெண்ணிற்கு எல்லோரும் மதிப்புக் கொடுப் தில்லை.

நான் ஏதோ பெண்கள்மீது குற்றம் சாட்டுவதாக ங்கள் நினைக்காதீர்கள். இது குற்றமானல் ஆண்களுக் ும். அதில் சரிபாதியான பங்கு உண்டு. கொஞ்சம் அதிக ாகக்கூட அவர்கள்மேல் குற்றம் சாட்டலாம்.

ஆனல் என்னைப் பொறுத்தவரையில் அவளுடைய ணிச்சல் இல்லாவிட்டால் விஷயம் அவ்வளவு தூரத் ிற்குச் சென்றிருக்காது என்பதில் சந்தேகமில்லை. இவ் ாறு கூறி எனது குற்றத்தை மறைத்துக்கொள்ள முயலு தாக நினைக்கவேண்டாம். நான் பெரிய குற்றம் செய்த ன்தான்; அதே சமயத்தில் நான் ஒரு கோழை. குற்றத் ிற்கு அஞ்சுகிறவனு என்ருல் அதை நிலைநாட்ட முடியாது. ந்தனை சீலம் எனக்கு இல்லை என்பதை ஒப்புக்கொள்ளு கிறேன். ஆனல் குற்றம் செய்வதற்கு வேண்டிய துணிச்சல்

என்னிடம் கிடையாது. ஆகையால், நானுகவே ஒருகுற்றத்தைச் செய்ய முதலடி எடுத்து வைக்கமாட்டேன். அந்த முதலடியை, ஏன் இரண்டாவது அடியைக்கூட அவள்தான் வைத்தாள். இளமைக் கிளர்ச்சி வசப்பட்டு நான் மகிழ்ச்சியோடு பின்தொடர்ந்தேன்.

நாங்கள் என்ன என்னவோ ஆசை வார்த்தைகளை மனம் போல் பொழிந்துகொண்டோம்.

நான் என் உள்ளத்தைக் திறந்து காண்பிப்பதாக வார்த்தைகளைக் கொட்டினேன். அவள் எனக்கு மேலே பேசினாள்.

விஷயம் அவ்வளவோடு நின்றுவிடவில்லை. எங்களுக்குக் கட்டுப்பாடு என்னவென்று தெரியவில்லை.

அவள் தன் உள்ளத்தை எனக்குப் பறி கொடுத்தோடு நின்றுவிடவில்லை. இரண்டு மூன்று மாதங்கள் இந்த நிலையிலே நழுவின. அதன் பிறகுதான் ஒரு புதிய உண்மை எங்களுக்குத் தெளிவாகத் தொடங்கியது. எங்கள் காதல் எப்படியோ மறையலாயிற்று. காதல் மறையலாயிற்று என்று கூறுவதைவிட நாங்கள் எங்கள் உள்ளத்தைத் தெளிவாக அறியலானோம் என்று கூறுவது சரியாகும். காதல் காதல் என்று நாங்கள் கற்பனை செய்துகொண்டிருந்ததெல்லாம் பேய்த் தேர் என்று நன்கு வெளியாயிற்று.

நாங்கள் சந்திப்பது கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்து கடைசியில் ஒரேயடியாக நின்றது. அதற்காக நானும் வருந்தவில்லை; அவளும் வருந்தவில்லை. அதன் பிறகு ஓராண்டு கழிவதற்குள் அவளுக்குக் கலியாணமும் ஆகி விட்டது.

பிறகுதான் நான் பெரிய சோதனைக்கு உள்ளானேன். அவளுடைய கலியாணத்திற்கு முன்பு எனக்கு ஒருவித

மன்க் கலக்கமும் ஏற்படவில்லை. அதன் பிறகுதான் என் மனச்சாட்சி என்னைக் குத்த ஆரம்பித்தது.

முன்பு அவள் வேறொரு வீதியில் தன் தாயோடு வசித்து வந்தாள். கலியாணமாகிக் கணவன் வீட்டுக்கு வரவே எங்கள் வீதியில் என் வீட்டிற்கு எதிர்வீடே அவள் இல்லற தர்மத்தை நடத்தும் இடமாய்விட்டது. எதிர் வீட்டுக்காரனே அவளுக்குக் கணவனாக வாய்க்கும்படி எப்படியோ ஏற்பட்டுவிட்டது.

நாங்கள் முன்பின் அறியாதவர்கள்போலவே நடந்து வந்தோம். நான் அவளோடு ஒரு நாளாவது பேசவில்லை. அவளைச் சந்திக்கவும் நான் முயலவில்லை. அவள் கணவன் மட்டும் எனது நட்பை நாடி வரலானார். அவரையும் எவ் வளவு தூரம் விலக்க முடியுமோ அவ்வளவும் விலக்கிவிட முயன்றேன். ஆனால் அவர் என்னை விடவில்லை. அவ ருடைய மனக் கவலைகளையெல்லாம் கூறிக்கொள்ளுவதற்கு நானே ஏற்றவன் என்று அவருக்குத் தோன்றியிருக்கிறது.

அவருக்கு நிறைய சொத்து உண்டு. தம் மனைவி யிடத்திலே அளவற்ற அன்பு உண்டு. இருந்தாலும் அவர் மகிழ்ச்சியோடு வாழ முடியவில்லை.

அவள் அவரிடத்திலே அன்போடுதான் பழகி வந்தாள். வீட்டுக் காரியங்களை அவருடைய மனத்திற்குத் திருப்தி யளிக்கும் வகையிலே நன்முகக் கவனித்து வந்தாள். ஆனால் அவள் உள்ளத்தில் ஏதோ ஒரு பாரம் இருந்து அவளை வாட்டிக்கொண்டிருந்தது. அவளை அன்பிலே மூழ் கடித்து அவள் வாழ்க்கையையே இன்பத் தேனைச் செய்ய வேண்டும் என்று துடித்துக்கொண்டிருந்த அவரால் அவ் வாறு செய்ய முடியவில்லை. எதையோ நினைத்து அவள் உள்ளுக்குள்ளே குமைவதாக அவர் உணர்ந்தார்.

என்னிடம் வரும்போதெல்லாம் அவருடைய இந்த நிலைமையைப் பற்றிப் பேசி ஏங்குவார். 'அவளை மகிழ்ச்சிப் படுத்த முடியவில்லையே; நீங்களாவது ஏதாவது ஒரு வழி சொல்லக்கூடாதா?' என்று என்னிடம் கேட்பார். 'அவளுடைய மனத்திலே மறைந்து கிடக்கும் அந்தப் பாரம் என்னவென்று பரிவோடு கேட்டுப் பாருங்கள்' என்று நான் ஆலோசனை கூறினேன். 'நான் கேட்டுப் பார்க்காமலா இருப்பேன்? எத்தனையோ தடவை எத்தனையோ வழிகளில் கேட்டிருக்கிறேன். அவள் ஏதாவது சொன்னால்தானே? நான் மகிழ்ச்சியோடு தானே இருக்கிறேன் என்ற ஒரே பதிலைத்தான் கொடுக்கிறாள்' என்று விசனத்தோடு அவர் சொன்னார்.

அவளுடைய உள்ளத்திலே புகுந்து அதை அரித்துக் கொண்டிருப்பது என்னவென்று எனக்குத் தெரியும். அவரிடம் அதைச் சொல்ல முடியுமா? முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. இத்தனை அன்பைச் சொரிகின்ற கணவனுக்குத் தகுந்த களங்கமில்லாத மனைவியாகத் தான் இருக்கவில்லையே என்றுதான் அவள் உள்ளம் நைந்திருக்கும். அன்பில்லாத கணவனானாலும், தவறு செய்யும் கணவனாக இருந்தாலும் அவனைத் தெய்வமாகக்கொண்டு அவனுக்கு உண்மையாக வாழ வேண்டுமென்று நீண்டகாலமாக வந்திருக்கும் இந்த நாட்டு லட்சியமும் அவளை வாட்டியிருக்க வேண்டும். கணவன் தனது பேரன்பை அவளிடம் காட்டும் போதெல்லாம் அவள் உள்ளம் குழைந்து குழைந்து வெம்பிக் கொண்டிருந்தாள். நான் ஊமையாயிருந்தேன்.

அவள் உடல்நிலை மனப் பாரத்தைத் தாங்கமுடியாது தளரத் தொடங்கியது. அந்த மனப் பாரத்திற்குக் காரணமாக அவள் உடலை மாசுபடுத்திய என்னால் அதைத் தினமும் பார்த்துக்கொண்டு அந்த இடத்திலே வாழ முடியவில்லை. எனது வீட்டை வந்த விலைக்கு விற்று விட்டு

வேறொரு தெருவுக்குக் குடி போனேன். என்னைப் பார்க்காமலிருந்தாலாவது அவள் பழைய நினைவுகளை மறந்து மனம் ஆறுவாள் என்று நான் எதிர்பார்த்தேன்.

நான் எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. மேலும் மேலும் அவள் நிலைமை சீர்குலைந்து கொண்டுதானிருந்தது. நான் வேறு தெருவில் குடியிருப்பதை அவள் கணவர் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டார். என்னிடம் இரண்டு வாரத்திற்கு ஒரு முறையாவது வருவார். அவர் வாழ்க்கையிலே நான் பரிவு காட்டக்கூடியவன் என்று எப்படியோ அவர் எண்ணியிருந்தார்.

கலியாணமாகி மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது. இந்தச் செய்தியைக் கூற மகிழ்ச்சியோடு என்னைத் தேடி அவள் கணவர் வந்தார். 'குழந்தை பிறந்திருக்கிறது; இனியாவது அவள் மகிழ்ச்சியோடு இருப்பாளென்று நினைக்கிறேன்' என்று ஆவலோடு கூறினர்.

அவர் ஆவலோடு எதிர்பார்த்தபடி ஒன்றும் நடக்கவில்லை. மேலும் அவள் நலிந்து கொண்டுதானிருந்தாள். குழந்தைக்கு ஒரு வயது நிறையுமுன்பே அவள் உடல் எலும்புந் தோலுமாகிவிட்டது. அந்த நிலையிலே அவள் அதிக நாள் உயிரோடிருக்கவில்லை. எத்தனையோ சிகிச்சைகளுக்கும் கவனத்திற்கும் இடையிலே அவள் ஆவி பிரிந்து விட்டது."

அந்தப் புதியவர் தம் கதையை முடிக்கு முன்பே ஆழ ஆத்திரத்தோடு, "உங்கள் கதைக்கும் எனது விஷயத்திற்கும் ஒரு சம்பந்தமும் கிடையாது. அது காதலில்லாது ஏற்பட்ட தவறு. என்னுடைய காதலைப்பற்றி அப்படிக் கேவலமாக நீங்கள் நினைக்க வேண்டியதில்லை" என்று சீறினேன்.

புதியவர் நிதானமாகப் பதில் அளித்தார். "நானு அந்தக் காலத்திலே அப்படித்தான் நினைத்தேன். எ காதலிப்பற்றி யாராவது குறைகூறியிருந்தால் அவ லேசில் விட்டிருக்கமாட்டேன். ஆனால் நான் யாரையு ஓப்பிட்டுப் பேச வரவில்லை. உங்கள் காதல் முழுக் முழுக்க அசைக்க முடியாததாக இருக்கலாம். அப்ப யிருந்தாலும் நான் விடுக்கும் எச்சரிக்கையால் தீ கொன்றும் விளைந்து விடாது. **கொஞ்சம் கட்டுப்பாட்டு குள் அடங்கி இருப்பதால் உண்மைக் காதல் மறைந்துவிடாத அதனால் அது மேலும் உரம் பெறும்** என்பதையே நா எடுத்துக் காட்ட விரும்புகிறேன். இளமையின் துடு கால் தவறு நேர்வதற்கும் இடமில்லாமற் போய்விடும் என்று கூறினர்.

ராமு மௌனம் சாதித்தான். சுந்தரம் மட்டு சற்று ஏளனக் குறிப்போடு சிரிப்புக் காட்டினான்.

புதியவர் மேலும் கூறினர்: "உங்கள் நண்பர் கூ கிறதுபோல மேனாட்டில் பெண்களெல்லாம் தங்க உள்ளத்தை வெகு தாராளமாகத் திறந்து கொட்டி வி கிறார்கள் என்பதை நீங்கள் நம்ப வேண்டாம். நானு சென்ற இரண்டாண்டுகளாக மன நிம்மதியை நாடி உ கத்தைச் சுற்றித் திரிந்தேன். எனக்கும் அந்த நாடுகளை பற்றி அனுபவம் உண்டு. ஆண்களைவிடப் பெண்களு குச் சில விஷயங்களில் அடக்கம் மிக அதிகம் என்பதை அந்த நாடுகளிலும் நான் கண்டேன்."

சுந்தரத்தின் ஏளனச் சிரிப்பு அடங்கிவிட்டது. ராமு சிந்தனையில் மூழ்கினான்.

பிரசாதம்

ஆசிரமத்தில் பூஜை ஆழ்ந்த பக்தியோடு நடந்தது. கருணைநந்த சுவாமிகள் தீபாராதனை முடிந்ததும், தாம் புதிதாக அழைத்து வந்திருந்த பக்தருக்கு அன்போடு பிரசாதம் வழங்கினர். பக்தரும் தமது இரு கைகளையும் ஏந்தி மரியாதையாகப் பெற்றுக்கொண்டார்.

சுவாமிகள் தாமாகவே சிரமப்பட்டுத் தேங்காய் லாடு செய்து இறைவனுக்கு நிவேதனம் செய்வார்; பிறகு அதைப் பிரசாதமாக அங்கு வருபவர்களுக்கெல்லாம் மகிழ்ச்சியோடு அளிப்பார். ஊர் ஊராய்ச் சென்று உபந்நியாசங்கள் புரிவதிலும், புதிய புதிய பேர்வழிகளை ஆசிரமத்திற்கு வரும்படி செய்து அவர்களுக்கு ஆன்ம விஷயங்களைப் போதிப்பதிலும் கருணைநந்த சுவாமிகளுக்கு இருந்த ஆர்வம் இவ்வளவென்று சொல்லி முடியாது. வருகின்ற அத்தனை பேருக்கும் பிரசாதம் என்றும் தயாராக இருக்கும். மக்கள் கூட்டங் கூட்டமாக ஆசிரமத்திற்கு வந்து ஆன்ம ஞானம் பெற்று உய்ய வேண்டுமென்று அவருக்குப் பேராசை. அதற்காக அவர் எவ்விதமான சிரமத்தையும் மேற்கொள்ளச் சித்தமாக இருந்தார்.

ஆனால் அவருடன் இருந்த சுயம்புலிங்க சுவாமிகளுக்கு இது பிடிக்கிறதில்லை. "இந்தச் சாது ஏன் இப்படி எல்லா மனிதர்களையும் உய்விக்க வேண்டுமென்று நினைக்கிறார்? அது அவ்வளவு சுலபமாக முடிகிற காரியமா என்ன? எவ்வளவு தான் விஷயங்களை அறிந்திருந்தாலும் துறவிக்குக்கூட இவ்வித சபலம் இருக்கின்றதே" என்று அவர் பற்றற்றவர் போல நினைத்துக் கொண்டிருப்பார்.

சில வேளைகளில் இருவருக்கும் இதுபற்றி விவாதம் வந்துவிடும். கருணைனந்த சுவாமிகள் மிக உற்சாகத்தோடு தமது முயற்சி சரியானதென்று எடுத்துப் பேசுவார்; சுயம்புலிங்க சுவாமிகள் அமைதியாகச் சில வார்த்தைகளால் தமது நோக்கத்தை வெளியிடுவார். முன்னவர் பேச்சில் ஆர்வம் ததும்பும்; பின்னவர் வாக்கில் தெளிவு முன்னிற்கும்; பேசுகின்றபோதே இதழ்களில் ஒரு மங்காத இள நகை தவழ்ந்து கொண்டிருக்கும்.

கருணைனந்த சுவாமிகள் தாம் சென்று பிரசங்கம் செய்த ஊர்களைப் பற்றியும், அழைத்து வந்த மக்களைப் பற்றியும் உற்சாகமாகப் பேச ஆரம்பிப்பார். "ஏன் இப்படி வீணாகக் காலத்தைப் போக்குகிறீர்? ஆன்ம சிந்தனையில் ஈடுபடுவதை விட்டுவிட்டு ஊரூராகப் போய் எல்லோரையும் இங்கே இழுத்துக்கொண்டு வருகிறீரே?" என்பார் சுயம்புலிங்க சுவாமிகள். உடனே வாக்குவாதம் ஆரம்பமாகிவிடும்.

"நான் மட்டும் ஆன்ம ஞானம் பெற்றால் போதுமா? நான் பெறும் இன்பத்தை இவ்வுலகமும் பிரசாதமாகப் பெற வேண்டாமா?"

"இப்படி வருந்தி அழைத்து வந்தவர்களெல்லாம் ஆன்ம ஞானம் பெற்றுவிடுவார்களோ?"

"ஏன் பெறமாட்டார்கள்? முயற்சி இருந்தால் நிச்சயமாகப் பெறுவார்கள். அந்த முயற்சிக்குத் தூண்டுகோலாக நான் இருக்க விரும்புகிறேன்."

"ஆன்ம ஞானத்தில் நாட்டம் உள்ளவன் உம்மைத் தேடித் தானே வரமாட்டானு?"

"அவன் வந்தாலும் சரி, வராவிட்டாலும சரி. நானே போய் எல்லோரையும் அழைத்து வருவதில் என்ன குற்றமிருக்கிறது? அவனே வர வேண்டுமென்று கட்டாயமா?"

"தானுகவே தேடி வருகிறவனுக்குத்தான் ஆர்வம் அதிகமாக இருக்கும்."

"நான் எல்லோருக்கும் ஆர்வத்தை உண்டாக்க முயல் கிறேன்."

"எல்லோருக்கும் உண்டாக்க முடியுமா?"

"ஏன் முடியாது?"

இத்துடன் விவாதம் நின்றுவிடும். சுயம்புலிங்க சுவாமிகள் அதற்கு மேல் பேசமாட்டார். அவருடைய இதழ் களில் அந்தக் குறுநகை மட்டும் மாறுது.

கருணானந்தருக்குத் தமது முயற்சி வீணுனதல்ல என்று சுயம்புலிங்க சுவாமிக்குப் பிரத்தியட்சமாகக் காண்பிக்க வேண்டுமென்று நெடு நாட்களாக ஆசை. அதற்குத் தகுந்த சமயம் வரும் என்று அவர் எதிர்பார்த்திருந்தார்.

இரண்டு சாதுக்களும் காவேரிக்கரையிலே ஏகாந்த மான ஓர் அழகிய இடத்தில் சிறிய ஆசிரமம் ஒன்று அமைத்துக்கொண்டு இறைவனை யடையும் வழியில் சென்று கொண்டிருந்தார்கள். எல்லா விஷயங்களிலும் இவர்களுக் குள் ஒரு மனப்பட்ட அபிப்பிராயமிருந்தது. ஆனால் இந்த ஒன்றில் மட்டும் அவ்வாறில்லை. சுயம்புலிங்கம் அமைதி யையும் தனிமையையும் விரும்புபவர். யாராவது தேடி வந் தால் அவருக்கு வேண்டிய உபதேசங்களைச் செய்வார். மற்றபடி மறைந்து வாழ்வதில் நாட்டமுடையவர். கருணு னந்தர் அப்படியல்ல. அவருக்குக் கூட்டம் வேண்டும். பகவான் நாமத்தை முழக்கும் பேரொலி வேண்டும். அனை வருக்கும் உபதேசம் புரிவதிலே அவருக்கு ஆவலுண்டு, பாத்திர மறிந்து பிச்சையிடு என்ற பழமொழியிலே அவருக்கு நம்பிக்கை கிடையாது. அவர் தமது கொள்கை யைத் தம்முடன் மட்டும் வைத்துக்கொண்டிருந்தால் மற்ற வர் அதைப் பற்றிக் கவலைப்படமாட்டார். ஆனால் அவ

ரையும் தமது கொள்கைக்கு மாற்றிவிட வேண்டும் என்று கருணைனந்த சுவாமிகள் நினைப்பதால்தான் இந்த விவாதத்திற்கே இடமேற்பட்டது.

அன்று புதிதாக வந்திருந்த பக்தர் பெயர் ராமசாமி என்பது. அவர் விடைபெற்றுக்கொண்டு சென்ற பிறகு வழக்கம்போல் மேற்சொன்ன விவாதம் நடைபெற்றது. என்றும்போலக் கருணைனந்த சுவாமிகள் உற்சாகமாகப் பேசினர். தமது புதிய சிடர் ஒரு குக்கிராமத்தைச் சேர்ந்த வரென்றும், அங்கு தாமே போய் அவரைக் கண்டு பேசி அழைத்து வந்திராவிட்டால், அவருக்குள்ள உண்மையான ஞான மார்க்க அவாவைப் பூர்த்தி செய்துகொள்ள வழி ஏற்பட்டிருக்காதென்றும் எடுத்துக் கூறினர். சுயம்புலிங்க சுவாமிகள் இரண்டொரு மறு மாற்றம் உரைத்துவிட்டு முடிவாகத் தமது இயற்கை முறுவலுடன் மௌனம் சாதித்தார். கருணைனந்தருக்கு அந்த முறுவலைக் கண்டால் தான் சகிப்பதில்லை. தமது செய்கையின் பயனைப் பிரத்தியட்சமாகக் காண்பிக்க இன்னும் சமயம் வரவில்லையே என்று ஏங்கினர்.

சில தினங்கள் கழிந்தன. கருணைனந்த சுவாமிகளுக்கு ஏற்பட்டிருந்த ஏக்கம் நீங்கும் வகையில் ஒரு கடிதம் அவருடைய புதிய சிடர் ராமசாமியிடம் இருந்து வந்தது. அதைப் படிக்கப் படிக்க அவருக்கு ஆனந்தம் பொங்கலாயிற்று. பல நாள் தாம் நினைத்திருந்த எண்ணம் கைகூடும் சமயம் வந்து விட்டதென்று அவருடைய முகம் பிரகாசமடைந்தது. கண்ணில் வெற்றி துள்ளியது. கடிதத்தைப் பலமுறை தமது மனத்திற்குள்ளேயே வாசித்தார்; பிறகு ஒருமுறை உரத்துப் படிக்கலானர்.

காட்டுப் பாளையம், சர்வஜித்து, சித்திரை, 5.

"ஸ்ரீமத் கருணைனந்த சுவாமிகள் அவர்களுடைய திருவடிகளுக்கு,

அடியேன் ராமசாமி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து ரூதிக் கொண்டதாவது.

நான் அன்று தங்கள் ஆசிரமத்திற்குப் பூஜை நேரத் தில் வந்து தரிசனம் செய்து விட்டுப் பிரசாதம் பெற்றுத் திரும்பியதை என்றும் மறக்கவே மாட்டேன். அங்கு வந்து திரும்பியது முதல் என் உள்ளத்தில் அடக்க முடியாத ஆவலொன்று தோன்றியிருக்கிறது. அதை எவ்வகை யாலும் என்னால் தடுக்க முடியவில்லை. அதனால் அடிக்கடி அங்கு வரலாமென்ற ஆசை பிறக்கின்றது. இருந்தாலும் தூரத்தை உத்தேசித்தும், இங்குள்ள பல வேலைகளை உத் தேசித்தும் வர இயலாதிருக்கின்றது. இருப்பினும் அது பற்றித் தங்களிடம் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற நோக்கோடு இருக்கிறேன்.

ஆனால் தங்களுக்கு எத்தனையோ அலுவல்கள் இருக் கும். அவற்றிற்கிடையே நான் தங்களுக்குத் தொந்தரவு கொடுப்பது சரியல்ல வென்று அஞ்சுகிறேன். தாங்கள் என்னைப் போன்ற பாமரர்கள் சந்தோஷ மடைய வேண்டு மென்ற ஒரே நோக்கத்துடன் வாழ்ந்து வருவதால் தங்க ளுடன் சொல்லுவதனால் தவறில்லை என்றும் தோன்று கிறது. எப்படி இருந்தாலும் இவ்வேழையின் மனோ நிஷ்டத்தை நிறைவேற்றி வைப்பது தங்களாலேயே ஆகும். ஆதலால் தாங்கள் அனுமதி கொடுத்தால் மறு தபாலி லேயே எனது ஆவலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இப்போது அங்கு வருவதற்குச் சமயம் இல்லாததால் நான் தபால் எழுதுகிறேன். ஏதேனும் பிழையிருக்கு மானால் பொறுத்தருள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

தங்கள் பதிலை எதிர்பார்க்கும்

அடியேன்,

ராமசாமி."

கடிதத்தை எடுத்துக்கொண்டு சுயம்புலிங்க சுவாமிகளிடம் ஓடினர். "இதோ பாருங்கள், எனது வேலைக்குப் பலன் இருக்கிறதா, இல்லையா என்பதை இதிலிருந்து தெரிந்து கொள்ளுங்கள்" என்று குதூகலத்துடன் கடிதத்தை அவரிடம் கொடுத்தார்.

சுயம்புலிங்க சுவாமிகள் மனத்திற்குள்ளேயே நிதானமாக அதைப் படித்துப் பார்த்துவிட்டுத் திருப்பிக்கொடுத்தார். அப்பொழுதும் அவர் இதழ்களில் பழைய புன்முறுவலே விளையாடிக் கொண்டிருந்தது. தோல்விக்கோ, வேறுவித உணர்ச்சிக்கோ அறிகுறியாக அவர் முகத்தில் ஒருவித மாறுதலும் ஏற்படவில்லை.

கருணைனந்த சுவாமிகளுக்கு அவருடைய அமைதி எரிச்சலே உண்டு பண்ணியது. "நான் மட்டும் அவரை இங்கு அழைத்து வந்திராவிட்டால் இந்த ஆசை அவருக்கு ஏற்பட்டிருக்குமா?" என்று வெற்றித் தொனியில் அவர் கேட்டார். மற்றவர் பதில் ஒன்றும் கூறவில்லை. அதனால் கருணைனந்த சுவாமிகள், "இன்னும் உங்களுக்கு ஏதாவது சந்தேகமிருக்குமானால் அடுத்த கடிதத்தைப் பார்த்தால் அதுவும் தீர்ந்து போகும்" என்று சொல்லிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் போனார்.

அன்றைய தபாலிலேயே ராமசாமிக்குப் பதில் எழுதிவிட்டார். தாராளமாகத் தம்மிடம் அவர் எந்த விஷயத்தைப்பற்றி வேண்டுமானாலும் கேட்டுக் கொள்ளலாமென்றும், சிறிய விஷயம், பெரிய விஷயம் என்ற யோசனையே வேண்டியதில்லை யென்றும், தமது வாழ்க்கை பிறருக்கு உபகாரம் செய்வதிலேயே கழிந்தால் அதுவே தமக்குப் பரம திருப்தியென்றும் அதில் சுவாமிகள் எழுதியிருந்தார்.

மூன்றும் நாள் தவறாமல் ராமசாமியிடமிருந்து பதில் கடிதம் வந்துவிட்டது. கருணைனந்த சுவாமிகளுக்கு வந்த

மகிழ்ச்சியை இங்கு எழுத முடியாது. அவர் கடிதத்தைப் படித்துக்கூடப் பார்க்கவில்லை. ஒரே ஓட்டமாகச் சயம்புலிங்க சுவாமிகளிடம் ஓடினர். அவர் கையில் ராமசாமியின் லிகிதத்தைக் கொடுத்து, "இதோ, இந்தக் கடிதத்தை நீங்களே படித்துப் பாருங்கள். பிறகு நாம் நமது தீராத விவாதத்தைப்பற்றி முடிவாகத் தீர்மானத்திற்கு வந்துவிடுவோம்" என்று உற்சாகமாகச் சொன்னர்.

சுயம்புலிங்க சுவாமிகள் கடிதத்தை மனத்திற்குள்ளேயே நிதானமாகப் படித்து முடித்துவிட்டுக் கருணானந்தரை நோக்கினர். அப்பொழுதும் அவர் முகத்தில் எவ்விதமாறுதலும் ஏற்படவில்லை. சாந்தி பொங்கும் பழைய புன்முறுவலே நிலைத்திருந்தது.

கருணானந்த சுவாமிகள், "இப்பொழுது என்ன சொல்லப்போகிறீர்கள்? அக் கடிதம் என்ன கூறுகிறது? அதை உரத்துப் படியுங்கள், நானும் கேட்கிறேன்" என்றார்.

சுயம்புலிங்க சுவாமிகள் மௌனம் சாதித்தார். ஆனல் கருணானந்த சுவாமிகள் மறுபடியும் மறுபடியும் கடிதத்தைப் படிக்கும்படி வற்புறுத்தவே கடைசியாக வாய்விட்டு வாசிக்கலானர்:

காட்டுபாளையம், சர்வஜித்து, சித்திரை, 9.

"ஸ்ரீமத் கருணானந்த சுவாமிகள் அவர்களுடைய திருப்பாத கமலங்களுக்கு,

அடியேன் ராமசாமி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து எழுதிக் கொண்டதாவது:

தங்கள் கடிதம் கிடைத்துப் பரம சந்தோஷம் அடைந்தேன். தாங்கள் சிறிய விஷயமானலும் தாராளமாக எழுதலாம் என்று குறிப்பிட்டதனலேயே எனக்கு இதை

எழுதத் தைரியம் வந்தது. தங்களுக்கு இருக்கும் கருணையும் உபகாரச் சிந்தையும் மிகப் பெரிதென்று கண்டுகொண்டேன்.

எனக்கு அங்கு வந்து தாங்கள் அளித்த தேங்காயிலாடு பிரசாதம் வாங்கிக் கொண்டது முதல் அதன் மேலேயே ஞாபகமாய் இருக்கிறது.

அந்த மாதிரி பாகமும், ருசியும் நான் எங்கும் கண்டதே இல்லை. அதைத் தாங்களே கைப்படத் தயார் செய்வதாக நான் அன்று கேள்விப்பட்டேன். ஆதலால் தயவுசெய்து அதை எவ்வாறு செய்கிறீர்கள் என்பதையும், என்ன என்ன பொருள்கள் என்ன அளவில் சேர்க்கிறீர்கள் என்பதையும் விவரமாக எழுதியனுப்புமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்ளுகிறேன். பதில் எழுத இத்துடன் விலாசமிட்ட கவரும் அனுப்பி யிருக்கிறேன். இதில் ஏதேனும் பிழை இருந்தால் மன்னிக்குமாறு வேண்டுகிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அடியேன்

ராமசாமி."

பால் பொங்கிற்று?

காங்கயம் காளை என்று உலகப் புகழ் பெற்ற காளைகள் வளரும் காங்கயம் என்ற பிரதேசத்தைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கொங்கு நாட்டிலே அது காளைகளுக்கும் வறட்சிக்கும் பேர் போனது. அந்தப் பிரதேசத்தில்தான் (மாயக்காட்டு வலசு இருக்கிறது.) ராமசாமியின் குடும்பம் அந்த ஊரிலே கண்ணியமாகத் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்தது. அந்தக் குடும்பத்திலே யாரும் ஒரு தப்பான காரியத்தைச் செய்ய நினைத்ததில்லை. தப்பு என்றால் பயப்படுவார்கள். அதைத் தெய்வம் பொறுக்காது என்று உறுதியாக நம்பி வாழ்ந்தவர்கள் அவர்கள். ஊரிலுள்ள மக்களெல்லாம் அந்தக் குடும்பத்தாரிடம் வழக்கமாக நல்ல மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தார்கள்.

அதனால்தான் ராமசாமிக்கு இன்று ஏற்பட்ட மானக் கேட்டைக் கண்டு அந்த ஊரார் அனைவரும் பரிதவித்தார்கள். மாட்டுப் பொங்கலன்று அவனுக்கு இப்படி நேரவேணும் என்று அங்கலாய்த்தார்கள்.

ராமசாமிக்கு வயது வந்து கலியாணமாகி அவன் தனிக் குடும்பம் ஆரம்பித்தபோது சொத்துப் பிரிவினையிலே அவனுக்குக் குடியிருக்க வசதியான வீடும் பத்து ஏக்கரா புன்செய் நிலமும் கிடைத்தன. ராமசாமி தனது மனைவி முத்தம்மாளோடு தனிக் குடித்தனம் நடத்தி வரலானான். நீண்ட காலமாக நிலைத்துவந்த குடும்ப கௌரவத்தை அவனும் காப்பாற்றுவான் என்று எல்லோரும் நிச்சயமாக நம்பினார்கள்.

சமீப காலம் வரையில் ஊராருடைய நம்பிக்கை வீண் போகவில்லை. அது மேலும் மேலும் வலுவடையும்படி யாகத்தான் அவன் நடந்துவந்தான். இத்தனைக்கும் அவனுக்கு ஏராளமான வருவாயில்லை. பத்து ஏக்கரா புன்செய் நிலத்திலே என்ன கிடைத்துவிடும்? அந்த நிலத்தின் மத்தியிலே ஓரே ஒரு கிணறுதான் இருந்தது. பருவ மழை எல்லாம் ஒழுங்காகப் பெய்தால் ஒரு மூன்று ஏக்கரா விலே தோட்டப் பயிர்கள் வைக்கலாம். மற்ற நிலமெல்லாம் வானம் பார்த்துக் கம்பு தினை முதலிய தானியங்களை விளைவிக்கத்தான் ஏற்றவை.

ராமசாமி நல்ல காங்கயம் வருக்கத்தைச் சேர்ந்த பத்து உருப்படி மாடுகள் வைத்திருந்தான். கிணற்றிலே தண்ணீர் இறைப்பதற்கு ஒரு ஜோடி எருதுகளும் உண்டு. இவையெல்லாம் மேய்ந்து வளருவதற்குத் தனது நிலத்தில் ஒரு பாதியை மேய்ச்சல் நிலமாக விட்டிருந்தான். அதிலே வெள்வேல மரங்கள் ஏராளமாக வளர்ந்திருந்தன. மழை சீராகப் பெய்யும்போது கொழுக்கட்டைப் புல் நன்கு அந்த நிலத்திலே ஓங்கி வளரும். நல்ல சுண்ணும்புக் கல் நிறைந்த நிலம். அப்படிப்பட்ட நிலத்தில்தான் கொழுக்கட்டைப் புல் செழிப்பாக வளரும். அப்புல்லிலே சுண்ணும்புச் சத்து அதிகமாக இருக்கிறபடியால், அதைத் தின்று வளரும் மாடுகளும் கண்ணைக் கவரும் அழகோடு இருக்கும்.

வேளாண்மை செய்வதால் அதிக வருமானம் கிடைக்க விட்டாலும் ராமசாமிக்கு மாடுகளால் நல்ல வரவுண்டு. அவனுடைய பட்டியிலே ஆண்டுதோறும் ஒரு ஜோடி புதிய காளைக் கன்றுகளாவது பிறந்து வளரும். கொழுக்கட்டைப் புல்லையும், வேலாங்காயையும் தின்று அவை கம்பீரமாகப் பருத்து, சிவபெருமானுக்கு ஏற்ற வாகனம்போலக் காட்சியளிக்கும். ஐந்நூறு, அறுநூறு என்று விலைக்குப்போகும்

இந்த வருமானத்தைக் கொண்டு ராமசாமி மரியாதை யாகக் குடும்பம் நடத்திவந்தான்.

ஆனல் இப்பொழுது அவன் நிலைமை மாறிவிட்டது. அவனுடைய நிலைமை மட்டுமல்ல. அந்த வட்டாரத்தி லுள்ள பல மக்களுடைய நிலைமையே கெட்டுப் போயிற்று. ஐந்து ஆண்டுகளாகத் தொடர்ந்தாற்போல் சரியான மழை பெய்யவில்லை. பருவ மழையெல்லாம் பொய்த்துவிட்டன. மேய்ச்சல் நிலத்திலே பசுமை என்பதைக் கண்ணிலே பார்த்த ஞாபகம்கூட மறந்துபோய்விட்டது.

ராமசாமி தன் கையிலிருந்த பணத்தை எல்லாம் சிறிது சிறிதாகச் செலவு செய்து கிணற்றை ஆழப்படுத்திக் கொண்டே இருந்தான். எவ்வளவு ஆழம் போனலும் ஐந்து வருஷமாக மழையில்லை என்றால் என்ன செய்ய முடியும்? கடைசியில் குடி தண்ணீருக்கே பஞ்சம் ஏற்பட்டு விட்டது.

ஊரிலிருந்த கூலிக்காரர்களெல்லாம் ஒவ்வொருவராக ஊரை விட்டு, பிழைப்பதற்காகக் காவிரியாற்றின் கரை ஓரத்திலுள்ள ஊர்களை நாடிச் செல்லலானர்கள். பூஸ்திதி உள்ளவர்களும், அவர்களை யண்டிப் பிழைத்த ஒரு சிலருமே ஊரில் இருந்தார்கள். ஆனல், யாருக்குமே வேலை கிடையாது. ஆழக் கிணறுகளிலே ஒரு மூலையிலே லேசாக ஊறி வரும் தண்ணீரைக் கொட்டாங்கச்சியால் இறைத்து இறைத்துக் குடத்தை நிரப்பி, வீட்டிற்கும், கால் நடை களுக்கும் வேண்டிய குடிநீரைச் சேகரிப்பதொன்றுதான் ஒரே வேலையாக இருந்து வந்தது. கிணற்றுக்குள்ளே கோகூட்டமாக இருக்கும். பல கிணறுகள் மூற்றிலும் வற்றிக் கிடந்தன.

ராமசாமிக்குத் தனது மாடுகளை விற்றுவிட மனம் வரவில்லை. அவற்றைக் காப்பாற்றுவதும் சிரமமாக இருந் தது. சித்திரைக் கோடை மழை தப்பிவிட்டதென்றால்

ஐப்பசி மாதத்தில் அடை மழையாவது பெயயாதா என்றி படி ஒவ்வொரு பருவத்தையும் அவன் எதிர்பார்த்து ஏமாற்றமடைந்து கொண்டிருந்தான். இதுவரை அ ளுக்குச் சொந்தமான கிணற்றிலே ஓரளவு குடி தண்ண ராவது கிடைத்துக்கொண்டிருந்தது. கோடைக் காற்று ஆரம்பித்ததும் அதற்கும் திண்டாட்டம் வரலாயிற்று. நாளொன்றுக்கு இரண்டு குடம் மூன்று குடத்திற்கு மேலே தண்ணீர் கிணற்றிலே ஊறவில்லை. அதனால் மாடு கள் சிலவற்றையாவது விற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற் பட்டது. ஆனால் இந்த வறட்சியிலே யார் மாடு வாங்கு கிறார்கள்? அதோடு மாடுகளெல்லாம் மேய்வில்லாமல் எலும்புந் தோலுமாகக் கிடந்தன.

சந்தைக்குக் கொண்டுபோய் வந்த விலைக்கு நான்கு உருப்படிகளை ராமசாமி விற்றுவந்தான். அந்தப் பணத்தைக் கொண்டு மறுபடியும் கிணற்றைத் தோண்டிப் பார்த்தான் பலன் ஒன்றும் கிட்டவில்லை. மாடுகளுக்கு இதுவரை பசு லையாவது ஓரளவு தீனியாகக் கிடைத்து வந்தது. இன அதற்கும் பஞ்சம் வந்துவிடும்போல் இருக்கிறது. இருப தைந்து மைலுக்கு அப்பாலுள்ள காவிரி பாயும் வயல் பி தேசங்களிலிருந்து வைக்கோல் வாங்கி வந்து போடுவத என்றால் பணத்திற்கு எங்கே போவது? ஐந்தாண்டுகளா ஒரு வருவாயுமில்லாது குடும்பம் நடத்துவதே பெரிய காரி மாக இருக்கும்போது வைக்கோலுக்குப் பணமேதி மேலும் வைக்கோல் விலையும் ஏறிவிட்டது.

மாயக்காட்டு வலசிற்குத் தெற்கே மூன்று மைலில் ஒரு காட்டாற்றுப் பள்ளம் உண்டு. அங்கே தோண்டி ஓர் ஆழமான கிணற்றிலே தண்ணீர் கொஞ்சம் தாரா மாக இருந்தது. அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து மக்க அங்கு வந்துதான் தண்ணீர் கொண்டு சென்றார்கள். ரா சாமி தனது மாடுகளை மாலை வேளைகளிலே அங்கே ஓட்டி

கொண்டுபோய், அக்கிணற்றிலிருந்து தண்ணீர் மொண்டு வந்து ஊற்றி அவைகளுக்குத் தண்ணீர் காட்டலானான். நாளடைவில் அதுவும் முடியாது போயிற்று. மாடுகளுக்கு அவ்வளவு தூரம் நடக்கவும் சக்தி குறைந்துவிட்டது; அவனுக்கும் சலித்துப் போயிற்று.

ராமசாமிக்கு இனி வேறு வழியில்லை. மாடுகளையே அவன் உயிராக மதித்திருந்தாலும் அவை எல்லாவற்றையும் விற்றுவிடுவதைத் தவிர வேறு வகை கிடையாது. இந்த மாட்டுப் பொங்கல் வரையிலாவது அவற்றை வைத்திருக்கவேண்டும் என்று அவன் எவ்வளவோ முயற்சி பண்ணினான். தலைமுறை தலைமுறையாக அவர்கள் குடும்பத்திலே ஓராண்டிலாவது மாட்டுப் பொங்கல் வைக்கத் தவறியதில்லை. அதை இப்பொழுது எப்படி விட்டுவிடுவது? ஆனால் மாடுகளில்லாமல் பொங்கல் வைக்க முடியுமா?

மாட்டுப் பொங்கலைப் பட்டிப் பொங்கல் என்றும் கூறுவார்கள். விவசாயிகளுக்கு அதுதான் மிக முக்கியமான நோன்பு. அவர்களுக்கு வாழ்வளிக்கும் மாடுகளுக்குத் தங்கள் நன்றியைச் செலுத்தவே அந்தப் பொங்கலை அவர்கள் அவ்வளவு உற்சாகத்தோடும் பக்தியோடும் கொண்டாடுகிறார்கள். மழையில்லாத வறட்சி காலத்திலும் குடியானவர்கள் தங்களுடைய தொல்லைகளையெல்லாம் மறந்துவிட்டு அந்த நோன்பிலே ஈடுபடுவார்கள். பட்டி நோன்பு கொண்டாடாத வீடு அவர்களுக்குப் பாழ் வீடாகவே தோன்றும்.

ராமசாமி தனது பட்டியைக் கலைக்காமலிருக்கப் பல வகைகளிலும் முயன்றான். பூமியையெல்லாம் அடகு வைத்துக் கடன் வாங்கிவிட்டான். அதற்கு மேலே கடன் கொடுக்க யாரும் இசையவில்லை. அந்த நிலையிலே வேறு வகையில்லாமல் விசனத்தோடு அவன் தன் மாடுகளையெல்லாம் விற்கவேண்டியதாயிற்று. இப்பொழுது அவனுடைய பண்ணையின் லக்ஷ்மீகரமே அடியோடு மறைந்துவிட்டது.

ராமசாமிக்கு வாழ்க்கையே பயனற்றதாகத் தோன்றியது. நிலத்திலே வேளாண்மை நடைபெறுத காலத்திலும் பட்டியிலே மாடுகளிருக்கும்போது அவற்றைக் கவனிக்க வேண்டிய வேலையிருந்தது. இப்பொழுது அந்த வேலையும் கிடையாது. காலையிலிருந்து மாலைவரை பொழுதுபோவதே கஷ்டமாக முடிந்தது. ராமசாமிக்குச் சீட்டாட்டமே இது வரையில் தெரியாது. சீட்டாடுகிற பக்கத்திற்கே அவன் போகமாட்டான். வாழ்க்கையே வெறிச்சென்று போன தோடு பொழுதைப் போக்கவே முடியாத நிலைமையிலே, ராமசாமி மற்றவர்களோடு சேர்ந்து சீட்டாடப் பழகிக் கொண்டான். சீட்டாடும்போது வாயிலே பீடியில்லாமல் முடியுமா? அதையும் பழகிக்கொண்டான். சீட்டாட்டக் கூட்டத்தின் பேச்சும், சூதும், குடி வெறியும் முதலில் அவனுக்கு அருவருப்பாக இருந்தன. ஆனால் வர வர எல்லாம் பழகிப்போய்விட்டது. நிலத்தை எட்டிக்கூடப் பார்க்காமல் நாள் முழுவதையும், சில நாட்களில் இரவில் வெகு நேரத்தையும் அவன் இந்தக் கூட்டத்திலே கழித்தான். அவன் மனைவிக்கு அவன் போகிற போக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை. பல வழிகளிலே அவள் ராமசாமிக்கு எச்சரிக்கை செய்து பார்த்தாள். ஒன்றும் பலனளிக்கவில்லை. மாடுகள் போனதோடு அவனுடைய மனத் தெளிவும் போய்விட்டது. எது நல்லது, எது கெட்டது என்று எண்ணிப் பார்க்கவே அவனுக்கு இப்பொழுது விருப்பமில்லை.

சீட்டாடுவதென்றால் அதற்குக் காசு வேண்டாமா? அதிலும் ராமசாமிக்கு இது புதிய பழக்கமாகையால் தினமும் பெருத்த நஷ்டமடைந்து வந்தான். கடனுக்கு கைமாற்றும் வாங்க முடிந்த இடங்களிலெல்லாம் வாங்கியாய்விட்டது. வாக்குத் தவறுத அவன் இப்பொழுது ஒவ்வோரிடத்திலும் பொய் பேச வேண்டியதாயிற்று.

வாங்கிய பணத்தைத் திருப்பிக் கொடுக்க வகையில்லாத போது பொய் பேசாமல் என்ன செய்வது?

முத்தம்மாளின் நகைகளெல்லாம் ரகசியமாக ஒவ்வொன்றாக வெளியேறத் தொடங்கின. சிலவற்றை ராமசாமி அடகு வைத்தான். சிலவற்றை ரொக்கத்திற்கு விற்றான். இயல்புக்கு மாறான இப்படிப்பட்ட செய்கைகளெல்லாம் அவனை மேலும் மேலும் கெட்ட பாதைகளிலேயே இழுத்துச் சென்றன. இந்தச் சமயத்திலே அவனுடைய சீட்டாட்டத் தோழர்கள் சிலர் பண வருவாய்க்கு ஒரு புதிய யோசனை கூறினர்கள். அந்த யோசனைப்படி வியம் செய்தால் நிறையப் பணம் சம்பாதிக்க முடிவதோடு, அடகு வைத்துள்ள நகைகளையெல்லாம் மீட்டு விடலாம். ருகிற தைப்பொங்கலுக்குள்ளே ஒன்றிரண்டு மாடுகள் ங்கி வந்து பட்டியிலே அடைத்துவிடலாம். வழக்கம் போலப் பட்டிப் பொங்கலையும் தவறாமல் கொண்டாடி டலாம். இந்த ஆசைகள் ராமசாமியைப் பற்றிக் காண்டன. அவனால் அந்த யோசனையைத் தள்ளிவிட டியவில்லை.

சீட்டாடும் இடத்திலே குடிவெறி என்று சொன்னே ல்லவா? மதுவிலக்குச் சட்டம் அமலிலிருக்கும்போது டி வெறி ஏது என்று நீங்கள் சந்தேகப்படலாம். இந்த ளிலே கொங்கு நாட்டில் தண்ணீருக்குத்தான் பஞ்சம்; ளைச் சாராயத்திற்கு அத்தனை பஞ்சமில்லை. ராமசாமிக் கூறப்பட்ட யோசனையும் அந்தத் தொழிலில் இறங்கு பற்றித்தான்.

பெரிய பெரிய மிராசுதார்கள், பணக்காரர்கள், வியா கள் கள்ளச் சாராயத்திற்கு நல்ல விலை கொடுக்கிறார் காவிரிக் கரையோரத்திலுள்ள மிராசுதார்களுக்கு றுபின்மையால் மேட்டாங்காட்டு மக்களுக்குப்போல னை கஷ்டமில்லை. காவிரியின் கருணையால் விளைந்த

நெல்லுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. அதைக் கொண்டு அவர்களிற் பலரும், நகரங்களில் வாழும் சில சீமான்களும், வியாபாரிகளும் தங்களுடைய மதுத் தாகத்தை மறைமுகமாகத் தணித்துக்கொண்டிருந்தார்கள்.

ராமசாமியின் இணற்றிலே நிறையத் தண்ணீர் ஊறெடுக்காமல் இருந்தது இப்பொழுது வசதியாக முடிந்தது. ஏதோ ஒரு மூலையிலே ஒரு ஊற்றுக் கண்ணிலிருந்து தண்ணீர் நூலிழை போலக் கசிந்துகொண்டிருந்தது. மற்றபாகமெல்லாம் வறண்டு கிடந்தது. அங்கே செடிகளையும் செத்தைகளையும் போட்டு ஒரு நல்ல மறைவிடம் செய்து கொண்டு ராமசாமி தனது புதிய தொழிலை ஆரம்பித்தான். ஐந்து வருஷ வறட்சியையும் தாக்குப் பிடித்துக்கொண்டு உயிரை வைத்திருந்த வெள்வேல மரங்கள் பட்டைகளை நிறைய உதவின. அவற்றை ஊற வைத்து ராமசாமி கள்ளச் சாராயம் காய்ச்சலானான்.

முத்தம்மாளுக்கு இந்த விஷயம் தெரியவந்தது. அவள் உள்ளம் பதை பதைத்தாள். குடும்பத்தின் மானம் போய்விடுமே என்று கணவனோடு வாதாடினாள்; கெஞ்சினாள்; அழுதாள்; உயிரை மாய்த்துக்கொள்வதாகப் பயமுறுத்தினாள். ஒன்றும் பயன்படவில்லை.

ராமசாமிக்குப் பணம் கிடைத்தது. பட்டியிலே இரண்டு காங்கயம் மாடுகள் வந்து சேர்ந்தன. காவிரிக் கரையிலிருந்து வைக்கோல் வந்தது. தூரத்திலே இருந்து பீப்பாய் வண்டியிலே மாடுகளுக்குத் தண்ணீர் கொண்டு வர அவன் இரண்டு ஆட்கள் வைத்துக்கொண்டான். எல்லாம் சௌகரியமாக அவன் விருப்பப்படி நடக்கிறபோது முத்தம்மாளின் பேச்சு அவனுக்கு ஏற்கும்படி அவனுடைய தொழில் இப்படிச் சில மாதங்கள் நல்ல வருவாயோடு நடந்து வந்தது.

கள்ளச் சாராயம் காய்ச்ச ஆரம்பிக்கிறபோது மறு படியும் மாடுகளைப் பட்டியிலே பார்க்கலாம், பட்டிப் பொங்கலைத் தவறவிடாமல் வைக்கலாம் என்கிற ஆசை தான் மிக முக்கியமாக அவனுக்கிருந்தது. ஆனால் அந்தச் சாராயம் அவனை அப்படி லேசில் ஆசை பூர்த்தியானதும் விட்டுவிடுவதாகக் காணோம். பட்டியிலே மாடுகளைப் பார்த்த பிறகும் ராமசாமியின் மனம் தெளிவடையவில்லை அவனுடைய கிணறு இரவெல்லாம் புகைந்துகொண்டு இருந்தது.

தவறாமல் கொண்டாடவேண்டுமென்று அவன் விரும் பிய மாட்டுப்பொங்கல் நாள் வந்தது. உடம்பு வற்றிக் கிடக் கும் மாடுகளைப் பார்த்துப் பரிகசிப்பது போலச் சிரித்துக் கொண்டு சூரியன் உதயமானான். அன்று மாலையிலே ஒவ் வொரு பட்டியிலும் பொங்கல் விழா நடைபெறும். காலையி லிருந்து மாடுகளைக் கழுவுவதும், அவற்றிற்கு அலங்காரம் செய்வதும், விசேஷமான உணவுகளை அளிப்பதுமாக இப் படி விவசாயிகள் பொழுதைச் செலவிட்டு மாலையில் நடை பெறவேண்டிய பொங்கல் விழாவை ஆவலோடு எதிர்பார்த் திருப்பார்கள். பஞ்ச காலத்திலும் இதற்குள்ள ஆர்வம் அவ்வளவாகக் குறைந்துவிடாது.

ஆனால் ராமசாமி எதிர்பார்த்தபடி அவனுடைய பட் டியிலே இந்த ஆர்வம் அன்றிருக்கவில்லை. பொழுது விடி யும்போதே வந்த போலீஸ்காரர்கள் அவனுடைய கிணற் றைச் சுற்றி வளைத்துக்கொண்டார்கள். ராமசாமி அதற்குள்ளே போதை மயக்கத்திலே உருண்டு கிடந்தான்.

மாட்டுப் பொங்கல் நடைபெறுகிறபோது பட்டிக்கு வருகிறவர்கள் "பால் பொங்கிற்றா?", "பட்டி பெருகிற்றா?" என்று கேட்பது வழக்கம். "பால் பொங் கிற்று. பட்டி பெருகிற்று" என்று பதில் மகிழ்ச்சியோடு வரும்.

ராமசாமியின் பண்ணையிலே அன்று பால் பொங்கவில்லை. ஆனால் போலீஸார் அவனைக் கைது செய்யக் கிணற்றிற்குள் இறங்கி அவனை அணுகியபோது அவன் வாயிலிருந்து கள்ளச் சாராயம் பொங்கி வழிந்துகொண்டிருந்தது; அதிலிருந்து ஒரு வகை துர் நாற்றம் எங்கும் பெருகிப் பரவிக்கொண்டிருந்தது.

காளிங்கராயன் கோடை

"வாங்க தம்பீ, பட்டணத்துக்குப் போனதிலிருந்து கண்ணிலே கூடக் காண முடியரதில்லே, வாங்க, இப்படிப் பாயிலே உட்காருங்கோ" என்று அந்தப் பெரியவர் அன்போடு என்னை வரவேற்றார். அந்தி வேளை, பகல் ஒளி மறைந்து இருள் கூடிக்கொண்டிருந்தது. பெரியவர் அப்பொழுதுதான் பண்ணையிலிருந்து வீட்டிற்குத் திரும்பி யிருக்கிறார்.

அவருடைய மருமகள் ஒரு செம்பிலே தண்ணீரும், ஒரு தட்டத்திலே வெற்றிலைபாக்கும் கொண்டுவந்து வைத்து விட்டு, உள்வீட்டுக் கதவருகிலே போய்ச் சற்று மறைவாக நின்று, "வீட்டிலே எல்லோரும் சுகமா இருக்காங்களா?" என்று அடங்கிய குரலில் கேட்டாள்.

"எல்லோரும் சௌக்கியந்தானுங்க" என்று நான் பதில் சொல்லிக்கொண்டே பாயில் அமர்ந்தேன்.

"நம்ம சின்னப்பையன் முத்து வீட்டுக்காரி உங்க வீட்டைப் பற்றி நினைக்காத நாளே கிடையாது தம்பீ. நீங்க இந்த ஊரிலே இருந்தபோது அவர்கள் ரண்டுபேரும் அப்படி உயிருக்குயிரா இருந்தாங்கோ-ஏன் தம்பீ, நீங்கள் தனியாத்தான் வந்தீங்களா?" என்று பெரியவர் தமது மருமகள் கேட்டகேள்விக்கு வியாக்கியானமாகப் பேசினார். என் மனைவியைப் பற்றித்தான் அவர்கள் அப்படி விசாரிக் கிறார்கள் என்பது எல்லோருக்கும் சட்டென்று விளங்காம லிருக்கலாம். ஆனல் எங்கள் நாட்டு மக்களுக்கு அது உடனே விளங்கும்.

"தனியாத்தானுங்க வந்தேன். அவளையும் கூட்டி வர வேணும்னு எங்கே முடியுது?" என்றேன் நான்.

"ஆமா, உங்களுக்கு எத்தனை சோலியோ?.....இருந்தாலும் எல்லோருமா வந்து நாலு நாளைக்கி இப்படி இருந்துட்டுப்போனு மனசுக்கு சந்தோசமா இருக்கும். கட்டுத் தறியிலேயே கட்டிப் போட்டாப் புடி ஒரே பக்கத்திலே இருந்தா அவுங்களுக்கும் சலிச்சுப்போகும்" என்று பெரியவர் தம் அனுபவத்திலே உறுதிப்பட்ட உண்மையை எடுத்துக் கூறினர்.

கொங்கு நாட்டிலே எங்கள் ஊரிலே இப்படி அன்போடு பேசி வரவேற்பது சாதாரணமான பழக்கம். எனக்கு இந்தப் பேச்சைக் கேட்பதிலே தனி மகிழ்ச்சியுண்டு. இந்தத் தடவை ஊருக்குச் சென்ற போதும் இந்த அன்புப் பேச்சைக் கேட்டு என் உள்ளம் பூரித்தது. கொங்குநாட்டு வேளாளர்களின் பேச்சு ஓர் அலாதியான சுவையோடு இனிக்கும். அவர்கள் என் உறவினர்கள் என்பதால் மட்டும் அப்படி இனிக்கிறதென்று யாரும் நினைக்கவேண்டாம்; அந்தக் கொச்சையான பேச்சிலே அத்தனை கனிவும் கபடற்ற அன்பும் குழைந்து கிடப்பதை யாரும் எளிதில் உணர்ந்து கொள்ளலாம்.

நான் செம்பிலே யிருந்த தண்ணீரைக் கொஞ்சம் பருகிவிட்டு வெற்றிலையை மடிக்க ஆரம்பித்தேன். எனக்கு வெற்றிலை போடும் பழக்கம் இடையாது. ஆனால் எங்கள் ஊர்ப் பக்கத்திற்குச் சென்றால் வெற்றிலை போடாமல் இருக்க முடியாது. அங்கு வாழும் மக்களுடைய அன்பை மனமார ஏற்றுக் கொண்டதற்கு வெற்றிலை போடுவது ஓர் அடையாளம். ஒரு வீட்டிலே விருந்துண்ணுமல்கூட வந்துவிடலாம். ஆனால் வெற்றிலையை ஏற்காமல் வந்து விட்டால் அந்த வீட்டார் மனம் வருந்துவார்கள். "ஏனோ வெற்றிலையைக்கூடத் தொடாமல் போய்விட்டார்கள். எங்கள்மேலே மனசிலே என்ன வருத்தமோ?" என்று அவர்கள் கவலைப்படத் தொடங்கிவிடுவார்கள்.

"பட்டணத்திலே இந்த வருசம் மழைதுளி எல்லாம் எப்படி?" என்று மருமகள் இந்த சமயத்திலே கேட்டாள்.

"பட்டணத்திலே மழையைப்பற்றி அவுங்களுக்கு என்ன கவலே? அங்கேதான் பணமா விளையுது. நம்மைப் போலே நிலத்தை நம்பியா அவுங்க பிழைக்கிறுங்கோ?" என்று பெரியவர் இடைமறித்துப் பேசினர்.

"இல்லீங்க, பட்டணத்திலேயும் மழை இல்லாது போனல் கஷ்டந்தானுங்க. குடிக்கக்கூடத் தண்ணீர் கிடைக்காது" என்று நான் சொன்னேன்.

"அது வாஸ்தவம் தம்பீ, மழை இல்லாமல் போனல் எல்லோருக்கும் கஸ்டந்தான். இருந்தாலும் எங்க கஸ்டம் உங்களுக்கு வராது. நாங்கள் மழையை நம்பித்தான் பிழைக்க வேணும்" என்று பெரியவர் விவசாயிகளுக்கு மழை எவ்வளவு முக்கியம் என்பதைக் குறிப்பாகக் காட்டினர்.

அந்த சமயத்திலே ஒரு தள்ளாத கிழவர் கைத்தடியை ஊன்றிக்கொண்டு தடுமாறித் தடுமாறி அங்கே வந்தார். அவரைப் பார்த்தவர்கள் அவர் குறைந்தது இரண்டு நாட் களாவது பட்டினியாக இருந்திருக்க வேண்டும் என்று உடனே கண்டுகொள்வார்கள்.

அவரை யாரென்று வீட்டுக்காரப் பெரியவருக்குத் தெரியாது. இருந்தாலும் வழக்கப்படி அவரை அன்போடு வரவேற்றுப் பாயில் உட்காரும்படி சொன்னர்.

"வெற்றிலே போடுங்கோ - எங்கேயோ ரொம்பத் தூரம் போய் வந்திருக்கிறுப்பிலே தெரியுது" என்று பெரியவர் அவரை இன்னரென்று தெரிந்துகொள்ளுவதற்காகக் குறிப் பாகக் கேட்டார்.

"ஆமாங்கோ, திருச்செங்கோட்டுக்குப் போய் மலே யேறி அர்த்தனாரீசுவரரைத் தரிசிக்க வேணும்னு ரொம்ப

நாளாகத் தவணை. அதுக்கு இப்பத்தான் வேளை வந்து கூடிச்சு" என்று கிழவர் தமது நீண்ட பயணத்தைப்பற்றி விளக்கினார்.

"கால் நடையாகவே போய்விட்டு வந்துட்டாப்படி இருக்குது?" என்று பெரியவர் மீண்டும் கேட்டார்.

"ஆமாங்க, அப்படி-த்தான் வேண்டுதலை செய்துக்கிட்டேன். வண்டி பூட்டவும் வசதி பத்தாதுங்க. எங்க ஊரிலிருந்து இருபத்தஞ்சு மைல் தானுங்கோ திருச்செங்கோடு. போக ஒரு நாள் - வர ஒரு நாள் - அங்கே சுவாமி தரிசனத்துக்கு ஒரு நாள், அவ்வளவு தானுங்கோ. இந்த வயசிலும் எனக்கு அது கஸ்டமில்லீங்கோ" என்றார் கிழவர்.

"இங்கிருந்து திருச்செங்கோட்டுக்கு நேராகக் காவிரியைத் தாண்டிப் போனுப் பத்து மைல் ஆகுது. அப்போ நம்ம ஊரு இங்கிருந்து இன்னும் மேக்கே இருக்குதுங்களா?" என்று பெரியவர் விநயமாகக் கேட்டார்.

"ஆமாங்கோ, இங்கிருந்து இன்னும் பதினைஞ்சு மைல் போகவேணும். திருச்செங்கோட்டிலிருந்து நான் காலையிலே புறப்பட்ட நேரத்துக்கு இந்நேரம் ஊரே போய்ச் சேர்ந்திருக்க வேணும். இருபத்தஞ்சு மைல் ஒரே மூச்சிலே நடந்திடுவனுங்க.....ஆனால் இன்னைக்கி அப்படி முடியல்லே."

"அதுக் கென்னங்க? அப்படி அவசரமாப் போகாவிட்டால் என்ன முழுகிப் போவுது? நாங்களெல்லாம் மனுசரு இல்லையா? இருந்து சாப்பிட்டுவிட்டு இளைப்பாறி நாளைக்குப் போனுப் போகுது" என்றார் பெரியவர்.

"அதுக்கொன்னும் உங்கவீட்டிலே குறைவில்லீங்கோ. நீங்கதான் ஊர்ப் பண்ணைடன்னு கேள்விப்பட்டு ராத்திரிக்கு இங்கே தங்கியிருந்து போகலாம்னு வந்தேன். இருட்டிலே கண் சரியாத் தெரியாதுங்கோ" என்றார் கிழவர்.

"கண் தெரிஞ்சாலும் தெரியாது போனாலும் இருட்டிலே அப்படி எதுக்குப் போகவேணும்? இது உங்க வீடு மாதிரிதானுங்கோ. எழுந்திருங்கோ சாப்பிடலாம்" என்று பெரியவர் அவரிடம் கூறிவிட்டு, "தம்பீ, நீங்களும் இன்னிக்கு இங்கேதான் சாப்பிடவேணும்" என்று என்னிடம் சொன்னார்.

நான் அவருடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு உடனே எழுந்தேன். பட்டினியாக வந்திருக்கும் கிழவருக்கு உடனே உணவு தரவேண்டும் என்பது எங்கள் இருவருடைய உட்கருத்தாகவும் இருந்தது.

ஆனால் கிழவர் பாயைவிட்டு எழுந்திருக்கவில்லை. "நீங்கள் போய் சாப்பிடுங்கோ. நான் இன்னிக்கு சாப்பிடரதில்லை; உடனே படுத்துக்க வேணும்; அவ்வளவுதானுங்க" என்று அவர் கூறினார்.

பண்ணுடி அவரை விடவில்லை. சாப்பிட்டே தீர வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர். வந்தவர் ஒரே மனமாக மறுத்துக்கொண்டே இருக்கவே பண்ணுடிக்கு ஒரு சந்தேகம் வந்தது. "கோயிலுக்குப் போய் வந்ததனால் விரதம் ஒண்ணும் இல்லையே?" என்று அவர் கேட்டார். கோயிலுக்குப் போய்த் திரும்புகிறவர்கள் வீடு சேரும் வரை உண்ணுவிரதம் இருப்பதுண்டு.

"கோயிலுக்குப்போனதிலே விரதம் இல்லீங்கோ. ஆனால் வேறே ஒருவிரதம் இருக்குதுங்கோ. அதைஅப்புறம் நீங்கள் சாப்பிட்டுவிட்டு வந்த பிறகு வேணும்னு சொல்லறேன். இப்போ நீங்கள் போய்ச் சாப்பிடுங்கோ" என்றார் கிழவர்.

"எங்களுக்கு இப்போ அவசரம் இல்லீங்கோ. நாங்கள் வழக்கமாச் சாப்பிட இன்னும் நேரமாகும்" என்றேன் நான்.

"அது தெரிஞ்சுது தம்பீ. எனக்காகத்தான் பண்ணுடியும் இத்தனை அவசரமாச் சாப்பிட எழுந்திருக்கிறாங்

கோன்னு நான் கண்டுக்கிட்டேன்...ஆனல் நான் சா பிடரது இல்லே" என்ருர் கிழவர்.

ஏன் சாப்பிடரது இல்லேன்னு தெரியாமல் நாங்க போகப் போரதில்லே. வீட்டுக்கு வந்த விருந்தாளியை வி டுப்போட்டு சாப்பிடர வழக்கம் எங்க வமிசத்திலே இல்லீங்கோ" என்று உட்கார்ந்தார் பண்ணுடி.

பண்ணுடி அப்படி ஒரே தீர்மானமாக உட்கார்ந் பிறகும் தாம் சாப்பிட மறுப்பதற்கு விளக்கம் சொல்லா லிருப்பது சரியல்லவென்று கிழவருக்குப் பட்டது.

"விருந்தாளியை விட்டுச் சாப்பிடரது உங்கள் வமிச திலே இல்லீங்கோ. கொடுத்த தருமத்தை மறுபடியு கையிலே தொடரது எங்க வமிசத்திலேயும் இல்லீங்கோ ஏழையாப் போய்ட்டாலும் காளிங்கராயன் வமிசமுங்கே நாங்கோ" என்ருர் கிழவர்.

"அப்படிங்களா? ரொம்ப சந்தோசமுங்கோ. அப்பே உங்களே நான் இனிமேலும் சாப்பிடக் கூப்பிட மாட்டே னுங்கோ. விசயம் தெரிஞ்சு போச்சு—ஆனல் வீட்டுக்கு வந்தவங்கள் பட்டினியாக இருக்கிறபோது நானும் சா பிடப்போறதில்லே...தம்பீ, நீங்கமாத்திரம் போய் சா பிட்டு வாங்கோ" என்ருர் பெரியவர். "எனக்கு மாத்திர எதுக்குங்கோ?" என்றேன் நான். "தம்பீ, இப்போ நீங் இந்த ஊருக்காரர் அல்ல. நீங்கள் விருந்தாளிதான். நீங்க சாப்பிட்டாக் குத்தமில்லே" என்ருர் பண்ணுடி.

இதே சமயத்தில் அவருடைய மருமகளும் வந்து எ னைச் சாப்பிட வற்புறுத்தத் தொடங்கவே நான் சமைய பகுதிக்குச் சென்றேன்.

சாப்பிட்டுக்கொண்டே, "அவர் ஏன் சாப்பிடமாட்டே னென்று பிடிவாதமாக இருக்கிருர்?" என்று கேட்டேன் மருமகள் சொன்ன பதில் எனக்கு ஆச்சரியமாக இருந்த

"காளிங்கராயன் வமிசத்தார் நம்ம பக்கத்திலே தண்ணீர்கூடத் தொடமாட்டார்கள்" என்றாள் அவள்.

"ஏன், அவர்களும் நம்மைப் போல வேளாளக் கவுண்டர்கள்தானே? நம்மை விட உயர்ந்தவர்களா?"

"அப்படி ஒன்னும் இல்லே. ஆனால் காளிங்கராயக் கவுண்டர்தான் அந்தக் காலத்திலே சுமார் நூறு நூற்றம்பது வருசத்துக்கே முன்னேலே நம்ம ஊருக்கு வாய்க்கால் வெட்டி வச்சார். அந்த வாய்க்காலிலிருந்து தண்ணீர் பாஞ்சுதான் நம்ப ஊரிலே நெல் விளையுது."

"அது எனக்கும் தெரியும். அதனால்தான் இந்த வாய்க்காலுக்குக் காளிங்கராயன் வாய்க்கால் என்று பெயர் வந்திருக்கிறது. பவானி ஆறு காவிரியில் சங்கமமாகிற இடத்திலிருந்து வாய்க்கால் கொண்டு வந்திருக்கிறார்கள்" என்று நான் மேலும் விளக்கம் கூறினேன்.

"ஆமாம். இந்த வாய்க்காலே வெட்டி வச்சதும் அந்த வமிசத்தார் எல்லோரும் மேற்கே குடிபோய்விட்டார்களாம். தருமத்திற்காக அவர்கள் வெட்டிய வாய்க்காலிலிருந்து தண்ணீர் பாஞ்சு விளைகிற அரிசியை அவுங்க சாப்பிடமாட்டாங்களாம். அப்படி சாப்பிட்டால் தருமம் கெட்டுப்போகுமாம். அந்த வமிசத்திலே இப்போ ஏழையா இருக்கிறவங்ககூட நம்ம பக்கத்திலே தண்ணீர் கூடக் குடிக்க மாட்டாங்கோ."

"அப்படியா?" என்று நான் ஆச்சரியத்தில் முழுகிவிட்டேன். எனக்கு அதற்கு மேலே சாப்பிடக்கூட முடியவில்லை. அவசரம் அவசரமாக ஒருவாறு உணவை முடித்துக்கொண்டு அந்தக் கிழவர் தூங்குவதற்குமுன் அவரை நன்றாகப் பார்க்க வேண்டுமென்று வந்தேன்.

"ஏனுங்கோ, இந்தப் பக்கம் வர்றபோது உங்கள் விட்டிலேயே செய்த கட்டு சோறுவது கொண்டு வரலாமே?

அதைக்கூடக் காணமே?" என்று பண்ணடி கிழவரை அந்த சமயத்தில் கேட்டுக்கொணடிருந்தார். அந்தக் கேள்வியைக் கேட்க வேணடுமென்று நானும் எண்ணிக்கொண்டிருந்தேன்.

"கொண்டுகிட்டுத்தான் வந்தனுங்கோ. கோயிலுக்குப் போரபோது காளிங்கராயன் வாய்க்காலத் தாண்டித் தானுங்கோ போகவேணும். அப்படிப் போகிறபோது அந்த வாய்க்காங் கரையிலே ரண்டு மாடு மேய்க்கிற பசங்கள் கஞ்சிக்குச் செத்து உட்கார்ந்திருந்தாங்கோ. கண்ணெல்லாம் குழிபாஞ்சு கிடந்தது."

"சரி சரி - கட்டுச் சோத்து மூட்டையை அவுங்களுக்குக் கொடுத்திட்டீங்களா?"

"ஆமாங்கோ, வாய்க்கால் வெட்டிவச்சவன் வச்சான. ரண்டு வேளைக்குச் சோறுகூடப் போடப்படாதுங்களா? ரண்டு நாளைக்குப் பட்டினியாக் கிடந்தா நான் என்ன செத்தா போவனுங்க?"

கிழவர் பேச்சைக் கேட்டு எனக்கு அவரிடத்திலே மிகுந்த மரியாதை ஏற்பட்டது. காளிங்கராயனுடைய தாராள மனம் இன்னும் இருக்கிறதென்று நான் பூரிப்படைந்தேன்.

மறுநாட் காலையிலே அந்தக் கிழவரின் முகத்தைப் பகல் வெளிச்சத்திலே நன்றாகப் பார்க்க வேணடுமென்று எனக்கு ஆசை. ஆனால் அந்த ஆசை நிறைவேறவில்லை. கிழக்கு வெளுக்கு முன்னமேயே காக்குருவி கூப்பிடுகிற போதே எழுந்து அந்தக் கிழவர் கால்நடையாகத் தமது ஊருக்குப் புறப்பட்டுவிட்டார்.



தங்கச் சங்கிலி

பெ. தூரன்

தங்கச் சங்கிலி

பெ. தூரன்

விற்பனை உரிமை:

பாரி நிலையம்

5ஆ பிராட்வே · சென்னை 1.

மூன்றும் பதிப்பு: மே, 1962.
உரிமை பதிவு.

விலை ரூ. 2—00

சுதந்திர நிலைய வெளியீடு—8



மாருதி பிரஸ், 83, பீட்டர்ஸ் ரோடு, சென்னை—14.

முன்னுரை

வாழ்க்கை யென்றுல் அதிலே எத்தனை சிக்கல்கள்! ஒருவனுடைய வாழ்நாளிலே அவனுடைய மனதிலே எத்தனை எத்தனை உணர்ச்சிப் போராட்டங்கள் தோன்று கின்றன! முடிவில்லாத சிக்கல்கள்; ஓயாத போராட் டங்கள்—இதுதான் வாழ்க்கைப் பிரயாணத்தின் அடிப் படையான ரகசியம்.

வாழ்க்கையும் மனமும் அவற்றுல் வளம் பெறுகின் றன; நலிவடைகின்றன; ஓங்குகின்றன; தாழ்வடைகின் றன. அவை வாழ்க்கைக்குப் பெருமை அளிக்கின்றன; சிறுமை அளிக்கின்றன. வாழ்க்கைக்குச் சுவை அளிப் பவையும் அவையே.

சிக்கல்களையும் போராட்டங்களையும் ஒருவன் எப் படிச் சமாளிக்கிறுனே அதைப் பொருத்து அவனுக்குப் பெருமையும் சிறுமையும், உயர்வும் தாழ்வும் ஏற்படு கின்றன.

அவை ஒவ்வொன்றையும் அடிப்படையாகக்கொண்டு அழகான கற்பனைச் சித்திரங்கள், கவிதைகள், கதைகள் உண்டாக்கலாம். வாழ்க்கைச் சம்பவங்களையும், உள்ளக் குமுறல்களையும் வண்ணமாகக்கொண்டு கிராமத்தையோ பட்டணத்தையோ திரையாக நிறுத்தி, கற்பனைத் தூரிகை யால் நவநவமான ஓவியங்கள் தீட்டலாம். கலைகளுக் கும், இலக்கியத்திற்கும் அவைதானே ஊற்று?

இலக்கியத்தில் பலவகையான துறைகளுண்டு; சிறு கதை அவற்றிலே ஒன்று. ஒவ்வொரு துறைக்கும் ஒரு தனி இலக்கணம் உண்டு; தனிச் சிறப்பும் உண்டு. சிறு கதைக்கும் அவ்வாறுதான்.

சிறுகதை வாழ்க்கையின் முழுப்படலமல்ல. அது வாழ்க்கையிலே ஒரு சிறிய, மிகச் சிறிய காட்சி. பலவித மான வண்ணங்களுடைய மலர்களையும் இலைகளையும் கொண்டு தொடுத்த மாலையாக வாழ்க்கையைக் கற்பனை செய்தால் அந்த மாலையிலே ஒரு தனி மலருக்குச் சிறு கதையை ஒப்பிடலாம். அதற்குத் தனி உருவம் உண்டு; நிறமுண்டு; மணமுண்டு. வாழ்க்கை என்னும் சுவைமிக்க விரிந்த ராக ஆலாபனையிலே குறிப்பிட்ட ஓர் அற்புத மான சஞ்சாரம் சிறுகதை.

சிறுகதையின் இலக்கணத்தை இவ்வாறு விளக்கிக் கொண்டே போகலாம். கற்பனைத் திறன் மிக்க ஒருவன் அதற்குப் புதிய புதிய அழகுகளை வகுக்கலாம்; அமைப் பிலே, வெளித் தோற்றத்திலே புதுமைகளைப் புகுத்த லாம். என்றாலும் அதன் அடிப்படைக் கட்டுக்கோப்பு அநேகமாக மாறுமல்தானிருக்கும்.

வாழ்க்கையிலே ஏற்படும் சம்பவங்களுக்கு முக்கியத் துவம் கொடுத்து அவற்றின் பின்னல்களிலே சுவை தோன்ற எழுதுவது ஒரு வகை; மனத்திலே பொங்கும் உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவற்றின் குமுறல்களைப் படம் பிடித்து எழுதுவது மற்றொரு வகை. பின்னல் கூறிய இந்த வகையிலேதான் எனக்குப் பற்று தல் அதிகம். அதிலும் மனத்தின் மறைந்து கிடக்கும் பாகமாகிய மறை மனத்தின் வஞ்சகங்களை, மாயங்களை, சேஷ்டைகளை ஆதாரமாக வைத்து எழுதுவதிலே அலாதி யான ஆர்வம் எனக்கு. பின்னணிக் காட்சி கிராமமா

இருக்கலாம்—கிராம வாழ்க்கையிலே எனக்கு நிறைந்த அனுபவம் உண்டு...அல்லது பட்டணமாக இருக்கலாம். அந்தக் காட்சி மனக்கோளாறுகளை விளக்க உதவியாக அமைய வேண்டுமென்பதே எனது விருப்பம்.

நான் எந்த நோக்கத்தோடு எழுதுகிறேன் என்பதை யாசக நண்பர்கள் முன்னதாகவே தெரிந்து கொண்டால் கதைகளைச் சுவைக்கவும் மதிப்பிடவும் எளிதாக இருக்கு மென்றே இவ்வளவு தூரம் முன்னுரை எழுதினேன்.

இது எனது மூன்றுவது சிறுகதைத் தொகுப்பு நூல். ளை வரம், உரிமைப் பெண் என்ற முதலிரண்டு நூல்களை யும் வாசித்து மகிழ்ந்து புகழுரை கூறிய அன்பர்கள் இதையும் நிச்சயமாய் வரவேற்பார்கள் என்று நம்பு றேன். இன்னும் ஒரு சிறிய துணிச்சல். ''மறைமனத் தின் தத்துவத்தை எழுத்திலே திறம்படக் கையாளு கின்றீர்'' என்று ஒரு சிலர் எனது கதைகளைப் படித்து விட்டுப் பாராட்டினர்கள். அதுவும் என் மனதிலே புகுந்துகொண்டு வேலை செய்திருக்கிறது. இந்த மனத் திற்குத் துணிவு கொடுக்க அது போதாதா?

இந்நூலின் மூன்றும் பதிப்பு இப்பொழுது வெளி யாகிறது.

பெ. தூரன்.

பொருளடக்கம்

தங்கச் சங்கிலி	...	7
உறக்கம் தந்த ஓவியம்	...	19
சீர்க்கடாரி	...	29
ஹிமாலய மருந்து	...	41
நம்பிக்கை	...	56
மதி மது மயக்கம்	...	74
நண்பன் வீராசாமி	...	83
சினிமாக் காட்சி	...	90
போராட்டம்	...	96
எது காதல்?	...	102
மௌனம்	...	118
குழந்தை மருந்து	...	128
கடைசி ஓவியம்	...	135
குப்பன்	...	139

தங்கச் சங்கிலி

வாழ்க்கை ஒரு பெரிய சிக்கலான சோதனை. அதிலே வெற்றி பெறுவது அவ்வளவு எளிய காரிய மல்ல. சதா விழிப்போடிருக்க வேண்டும்; நெருக்கடி யான நிலைமைகளிலும் மன உறுதியைத் தளரவிடக் கூடாது; இல்லாவிட்டால் அந்த சோதனையிலே ஏமாந்து போக நேரிடும்.

இப்படி உபதேசம் செய்வது மிக எளிது; ஆனால், அதைப் பின்பற்றி நடப்பது அவ்வளவு எளிதல்ல. எவ்வளவு பெரிய சோதனை ஏற்பட்டாலும் நேர்மையிலே தவறுமல் மன உறுதியோடு நடக்க வல்லவர்களை அனைவரும் பாராட்டுகிறார்கள் மகான்கள் என்றுகூடப் புகழ்ந்து பேசுகிறார்கள்

கிருஷ்ணசாமி தன்னை யாரும் மகான் என்று போற்ற வேண்டும் என்று ஒருநாளும் எதிர்பார்க்க வில்லை. இருந்தாலும் அவன் இதுவரை தனது மனச் சாட்சிக்கு விரோதமாக எந்தக் கெட்ட காரியமும் செய்தது கிடையாது; நேர்மையற்ற செயலை மனத் தாற்கூட அவன் தீண்டியதில்லை.

ஆனால், இன்று அவன் மனம் மாறிவிட்டது. தன்னைத் தத்தளிக்க வைத்த இந்த சமூகத்தைப் பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்று அவன் தீர் மானித்து விட்டான். அதற்குக் காரணமாகச் சற்று முன்புதான் ஒரு சம்பவம் நடைபெற்றது. பட்ட ணத்துக் கடைத் தெருவிலே இப்படிப்பட்ட சம்ப வங்கள் சர்வ சாதாரணம்; ஆனால், கிருஷ்ணசாமிக்கு இதுவே முதல் அனுபவமாகையால் அவன் மன மூடைந்து போனான்.

கிருஷ்ணசாமி ஒரு சாதாரணக் குமாஸ்தா. மராமத்து இலாக்காவிலே வேலை பார்த்து வந்தான். பஞ்சப்படி, வீட்டு வாடகைப்படி என்றெல்லாம் சேர்த்து மொத்தமாக மாதம் 125 ரூபாய் அவனுக்குக் கிடைத்தது. அதை வைத்துக்கொண்டு இந்தக் காலத்திலே பட்டணத்திலே குடும்பம் நடத்துவதென்றால் சுலபமான காரியமா? சுலபமல்லாவிட்டாலும் அவனுடைய குடும்ப வாழ்க்கை இன்பமாகவே நடந்து வந்தது. அவனும் அவன் மனைவியும் தவிர வீட்டிலே யாரும் இல்லை. கல்யாணம் ஆனது முதல் சென்ற இரண்டு ஆண்டுகளாக அவர்கள் தனிக் குடும்பம் நடத்தி வருகிறார்கள். கிருஷ்ணசாமியின் தாய் தந்தையர்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பார்த்துக்கொண்டு கிராமத்திலே வசித்து வந்தார்கள். இவன் கல்லூரிப் படிப்புப் படித்தவனதலால் விவசாயம் செய்ய முடியவில்லை. உத்தியோகம் தேடிப் பட்டணம் வந்திருக்கிறான். மேலும் கிருஷ்ணசாமியின் படிப்பிற்காக ஏற்பட்ட கடனை அடைப்பதில் நிலங்களில் பாதியை விற்கவேண்டியதாயிற்று. மீதியுள்ள நிலங்களிலிருந்து வரும் வருமானத்தைக் கொண்டு தாய் தந்தையர் குடும்பம் நடத்துவதே பெரிய காரியம். இதனால் இவனுக்கு உத்தியோகம் செய்வதைத் தவிர வேறு வழி இல்லை.

கிருஷ்ணசாமியும் அவன் மனைவி ருக்மிணியும் ஒருவர்மீது ஒருவர் ஆழ்ந்த அன்புகொண்டிருந்தனர். அந்த அன்பை அடிப்படையாகக் கொண்டு குடும்பம் நடக்கிறபடியால் வாழ்க்கை ஓர் அழகிய இசைப் பாடலைப் போல இன்ப ஊற்றாகச் சென்றுகொண்டிருந்தது. வேலை செய்வதற்கென்று அவர்கள் ஆள் வைத்துக் கொள்ளவில்லை. வீட்டு வேலையை இருவருமாகப் பகிர்ந்துகொண்டு செய்து வந்தார்கள். கிருஷ்ணசாமி தண்ணீர் நிறைத்து வைப்பான்;

ருக்மிணி பாத்திரம் துலக்குவாள். சாயங்காலத்திலே ருக்மிணி தேநீர் தயாரிப்பாள்; கிருஷ்ணசாமி கோப் பைகளை அலம்பி வருவான். பிறகு இருவரும் சேர்ந் தாற்போல் அமர்ந்து பேசிக்கொண்டே தேநீர் அருந்துவார்கள். இவ்வாறு வேலைகளை இருவரும் சேர்ந்து செய்வதிலே அவர்கள் அதிகமான இன்பம் கிடைப்பதைக் கண்டார்கள்.

கிருஷ்ணசாமி தனக்குக் கிடைக்கும் குறைந்த சம்பளத்திலும் மாதம் பத்து ரூபாய் மீதம் பிடித்து வைத்து வந்தான். கல்யாணத்தின்போது அவ னுக்குப் பரிசாகக் கிடைத்த பணம் கொஞ்சம் இருந் தது. எல்லாவற்றையும் சேர்த்து இன்று காலையில் கணக்குப் பார்க்க மொத்தம் நானூறு ரூபாய் ஆயிற்று. அதைக் கண்டவுடன் கிருஷ்ணசாமியின் உள்ளம் பூரித்தது. தன் நெடுநாள் கனவு இன்று பூர்த்தியாகப் போகிறது என்ற ஆனந்தத்தால் அவன் துள்ளிக் குதித்தான்.

ருக்மிணிக்குப் புது மோஸ்தரிலே ஒரு தங்கச் சங்கிலி வாங்கிப் போட வேண்டுமென்று அவன் பலகுநாட்களாக ஆசை கொண்டிருந்தான். அவளுக் கும் அதிலே அளவில்லாத ஆசை இருந்தது. இரு வருடைய ஆசையும் நிறைவேறுவதற்குத் தருணம் இன்று வாய்த்துவிட்டது. கிருஷ்ணசாமி காரியா லயத்தில் வேலையை முடித்துக்கொண்டு மாலையில் வீடு சேர்ந்ததும் உடனே கடைக்குப் புறப்படப் போவதாக ருக்மிணியிடம் கூறினான். ருக்மிணி அவசர அவசரமாகத் தேநீர் போட்டுக்கொண்டு வந்தாள்.

இருவருக்கும் ஒரே குதூகலம். "என்னுடைய கனவு இன்று பலிக்கப் போகிறது" என்று அவன் தேநீர் அருந்திக்கொண்டே புன்முறுவலோடு சொன்னான். "என்னுடைய கனவுந்தான் பலிக்கப்

போகிறது'' என்று ருக்மிணி கூறிக்கொண்டே சிரித்தாள். அவளுடைய உள்ளத்திலே பொங்கிக்கொண்டிருந்த காதலெல்லாம் அவள் கண் வழியே காட்டியளித்தது. வார்த்தையில் கூற முடியாத ஓர் இன்ப உணர்ச்சியிலே அவர்கள் முழுகினர்கள்.

கிருஷ்ணசாமி நானூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து மணிபர்ஸில் வைத்துக்கொண்டு சுமார் ஐந்தரை மணிக்குச் சைனுபஜாரை நோக்கிப் புறப்பட்டான். நகைக் கடைக்குள்ளே புகுந்ததும் அவன் பிரமித்துப் போனான். எத்தனை விதமான சங்கிலிகள்! என்ன என்ன நகைகள்! அவன் இதுவரை அந்த மாதிரி பெரிய நகைக் கடைக்குள் போனதே இல்லை. கொஞ்ச நேரம் அவற்றையெல்லாம் உற்றுப் பார்த்துக்கொண்டே நின்றான். ஒவ்வொரு சங்கிலியைப் பார்த்ததும் அது ருக்மிணியின் கழுத்தில் இருந்தால் எப்படி இருக்குமென்று கற்பனை செய்யலானான். ஒரு சங்கிலி அவளுக்கு மிகப் பொருத்தமாக இருக்குமென்று அவனுக்குத் தோன்றிற்று. அதன் விலையைக் கேட்டான். விற்பனை வரி எல்லாம் சேர்த்து முந்நூற்று எழுபது ரூபாய் என்று கூறினார்கள். உடனே மகிழ்ச்சியோடு அந்தத் தொகையைக் கொடுத்து விட்டுச் சங்கிலியை வாங்கிக்கொண்டான்.

லேசான அழகிய காகிதத்திலே சங்கிலியை மடித்துக் கொடுத்தார்கள். அதைப் பத்திரமாக மணிபர்ஸில் போட்டுக்கொண்டே அவன் வெளியில் கிளம்பினான். ஆகாயத்தில் பறப்பதுபோல அவனுக்கு உணர்ச்சி பிறந்தது. உலகமெல்லாம் இன்ப மயமாகக் காட்சி அளித்தது. தடதடவென்று இரைச்சலிட்டுக்கொண்டு ஆடியசைந்து செல்லும் டிராம் வண்டிகூட அவனுக்கு அழகின் வடிவமாகத் தென்பட்டது. கடைத் தெருவிலே இருமருங்கிலும் ஒருவர் மீது ஒருவர் மோதி இடித்துக்கொண்டு பரபரப்

டனே அங்குமிங்கும் செல்லும் ஆண் பெண் கூட்டங்
ளினிடையே ஒரே மகிழ்ச்சி தாண்டவமாடுவதாக
வன் கருதினான். அந்த மக்கள் வெள்ளத்தி
னிடையே அவனும் புகுந்துகொண்டு கைத்தறி
நசவுச் சேலைகள் விற்கும் கூட்டுறவுச் சங்கக்
டையை நோக்கி மெதுவாக நடக்கலானான்.

"எதை எடுத்தாலும் இரண்டரையணா, இரண்
ரையணா!" என்று ஒருவன் ஒரு மூலையில் தன்
டையை விரித்து வைத்துவிட்டுக் கூவிக்கொண்
ருந்தான். அவனைச் சுற்றி ஒரு சிறு கூட்டம் சதா
டிக்கொண்டிருந்தது. கிருஷ்ணசாமி அந்த இடத்
லே சற்று நேரம் நின்று பார்த்தான். யாரைப்
பார்த்தாலும் தன் காதல் மனைவிக்குப் பிடித்த
மான ஏதாவது ஒரு பொருளை வாங்கிக்கொண்டு
போவதாக அவனுக்குத் தோன்றியது. உடனே
அவன் பிளாஸ்டிக் குங்குமபரணி ஒன்றை வாங்கிக்
கொண்டான். ருக்மிணிக்கு அது பிடிக்கும்.

மறுபடியும் அவன் மேலே நடக்கலானான். ஓர்
இடத்திலே கூட்டம் மிக நெருக்கமாக இருந்தது.
எட்டணாப் பவுண்டன் பேனா விற்கிறவன், பல்பொடி
விற்கிறவன், ரிப்பன் விற்கிறவன் என்று இப்படிப்
பலர் அங்கே குழுமிப் பலவிதமாக இரைச்சல்
போட்டுக்கொண்டிருந்தார்கள். வியாபாரம் அங்கே
கூடாக நடந்து கொண்டிருந்தது. கிருஷ்ணசாமி
அந்த நெருக்கத்திலே புகுந்து வியாபாரப் பொருள்
களையெல்லாம் கவனித்துக்கொண்டே சென்றான்.

அவனுடைய நண்பன் குருமூர்த்தி அந்த சமயத்
திலே அவனைத் தாண்டி வேகமாகப் போனான்.
'இவனுக்கு என்ன இத்தனை அவசரம்? மேலே
இடித்துக் கொண்டு திரும்பிக்கூடப் பார்க்காமல்
போகிறானே!' என்று கிருஷ்ணசாமி ஆச்சரியப்

பட்டான். குருமூர்த்தியைக் கூப்பிடலாமென்று நினைத்துக் கையைத் தட்டினான். நூறு பேர் அவனைத் திரும்பிப் பார்த்து முகத்தைச் சுளித்தார்கள். அவன் நண்பன் மட்டும் கண்ணில் படவில்லை. கூட்டத்திலே கையைத் தட்டுவது தவறு என்று கிருஷ்ணசாமிக்கு அப்பொழுதுதான் பட்டது. தலையைக் குனிந்து கொண்டு காலெடுத்து வைத்தான். குருமூர்த்தியைக் கூப்பிட்டு ஆகவேண்டியது ஒன்றுமில்லை. 'யோசிக்காமல் எதற்காகக் கையைத் தட்டினேன்? அவனிடம் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லையே!' என்று தன்னையே நொந்து கொண்டான். அதிலிருந்து அவன் எண்ணமெல்லாம் குருமூர்த்தியைப்பற்றி எழுந்தது. அவன் ஓர் அதிசயமான பிறவி என்பது கிருஷ்ணசாமியின் எண்ணம். ஒரே சந்தில்தான் அவர்கள் இருவரும் வெவ்வேறு வீடுகளில் வசித்தார்கள். குருமூர்த்தி எப்பொழுதும் குஷியாக இருப்பான். திடீரென்று கிருஷ்ணசாமியின் வீட்டிற்குள்ளே சில சமயங்களில் நுழைவான். வேடிக்கையாக ஏதாவது சம்பாஷித்துக் கொண்டிருப்பான். வந்தது போலவே திடீரென்று மறைந்துவிடுவான். அவன் நல்ல பணக்காரனாகத்தான் இருக்கவேண்டும்; அல்லது தொழிலிலே நல்ல வரும்படி உள்ளவனாக இருக்கவேண்டும். அவனுடைய நடை உடையெல்லாம் அப்படித்தான் எண்ணும்படி செய்கின்றன. ஆனால் அவனுடைய தொழிலைப்பற்றித்தான் நிச்சயமாக ஒன்றும் அறிந்துகொள்ள முடியவில்லை. கிருஷ்ணசாமி அதைப்பற்றி விசாரிக்கும் போதெல்லாம் குருமூர்த்தி லேசாக ஏதாவது பதில் சொல்லுவான். நீர் இறைக்கும் யந்திரம் போன்ற சாமான்களிலே கமிஷன் வியாபாரம் என்று அவன் கூறியதிலிருந்து தெரிந்து கொள்ள முடிந்தது. கொஞ்சம் கறுப்பு வியாபாரம் போலத்தான் தோன்றுகிறது. கன்ட்ரோல் விலைப்படி நியாயமாக வியாபாரி

செய்வதானால் அவன் அத்தனை ஆடம்பரம் பண்ண முடியுமா?

சென்னை நகரத்து வாழ்க்கையிலே நண்பர்களைப் பற்றிக்கூடச் செவ்வையாக அறிந்துகொள்ள முடிகிறதில்லை. மேலும் அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களல்ல—தற்செயலாக ஒருநாள் வீதியிலே சந்தித்து அது முதல் அவர்கள் ஒருவரோடு ஒருவர் பழகலானார்கள். ஆனால் அடிக்கடி சந்திக்க முடிகிறதில்லை. ஒரே சந்தில் வசிப்பதால் வெளியே போகிற போதும் வருகிறபோதும் சில வேளைகளில் எதிர்ப்பட்டுப் பேசிக்கொள்வார்கள். ஒரு நாள் கூடக் கிருஷ்ணசாமி தன் நண்பனுடைய வீட்டுக்குச் சென்றதில்லை; தன் வீட்டிற்கு வரும்படி இதுவரை அவன் வற்புறுத்தாததைப் பற்றித் திடீரென்று நினைப்பு வந்தது. 'வீட்டிற்கு அழைக்க வேண்டும் என்பது போன்ற சம்பிரதாயங்களைப் பற்றியெல்லாம் அவன் கவலைப்படுகிறதில்லை. நல்ல குஷிப் பேர்வழி' என்று இப்படியெல்லாம் நினைத்துக் கொண்டே கிருஷ்ணசாமி கூட்டுறவுச் சங்கக் கடைக்கு வந்துவிட்டான்.

கைத்தறியில் நெய்த சேலைகளுக்கு நம் நாடு பேர் போனதல்லவா? ருக்மிணிக்கு அந்தச் சேலையென்றால் தனிப்பட்ட பிரியம் உண்டு. மேலும் விலையும் குறைச்சல். அதனால் கிருஷ்ணசாமி தங்கச் சங்கிலியோடு புது மாதிரி கரை போட்ட சேலை ஒன்றும் வாங்கிக் கொண்டுபோய் அவளை மகிழ்விக்க விரும்பினான். இருபது ரூபாயில் ஒரு பச்சை நிறச் சேலையைத் தேர்ந்தெடுத்தான். அதற்குப் பட்டியலும் தயாராகிவிட்டது.

பணத்தைக் கொடுக்கக் கிருஷ்ணசாமி தம் ஜிப்பாவிலுள்ள ஜேபியில் கையை விட்டான். அவனுக்கு

பகீரென்றது. மணிபர்ஸைக் காணவில்லை. ஜனநெருக்கத்திலே எந்த இடத்திலே இந்த ஜேப்படித் திருட்டு நடந்ததோ, யார் கண்டார்கள்?

கிருஷ்ணசாமி சில நிமிஷம் ஒன்றும் தோன்றாமல் ஸ்தம்பித்து நின்றான். அவன் தலை கிறுகிறுத்தது. "எங்கே, பணத்தைச் சீக்கிரம் கொடுங்கள்" என்று வியாபாரி அவசரப்படுத்தினான். "எனக்கு இந்தச் சேலை வேண்டாம்" என்று தடுமாறிக் கொண்டு கிருஷ்ணசாமி பதில் சொன்னான். "வேண்டாமென்று சொல்லுவதற்கா இத்தனை நேரம், 'அதை எடு, இதை எடு' என்று தொந்தரவு செய்தாய்? பட்டியல் கூடப் போட்டாய்விட்டதே!" என்று சேலையைக் காகிதத்தில் மடித்துக் கட்டிக் கொண்டிருந்த பையன் சீறினான்.

"கையிலே பணமில்லை" என்று கிருஷ்ணசாமி குழறிக் குழறிக் கூறினான்.

"பின்னே சேலை சும்மா கிடைக்குமென்று வந்தாயா? கொஞ்சம் ஏமாந்தால் அப்படியே சுருட்டிக்கொண்டு போகிற ஆள் போலிருக்கிறது!" என்று மறுபடியும் அந்தப் பையன் குத்தலாகப் பேசினான்.

கிருஷ்ணசாமி தன் உள்ளத்தில் திடீரென்று எழுந்த கோபத்தையெல்லாம் அடக்கிக்கொண்டு கடையைவிட்டு வெளியே வந்தான். அவனுக்கு உலகமே இருண்டு தோன்றியது. 'எங்கும் ஏமாற்றும் வஞ்சனையுந்தானா? இந்த நகரத்தின் நாகரிகமெல்லாம் வெளிப்பகட்டுத்தானா? இத்தனை பேர் இந்தக் கடைத் தெருவிலே உல்லாசமாகப் போய்க் கொண்டிருக்கிறார்களே. இவர்களெல்லாம் திருடர்கள் தானா?' என்று இப்படி அவன் மனக் கசப்போடு எண்ணமிட்டான்.

அவனுடைய ஆசையெல்லாம் பாழாகிவிட்டது. மலர்ந்த முகத்தோடு வழியனுப்பிய ருக்மிணி இதை அறியும்போது எத்தனை வருத்தமடைவாளோ? 'ஐயோ! நான் என் வாழ்நாளிலே ஒரு நாள் கூடத் தவறு செய்ததில்லையே! நேர்மை தவறி நடந்ததில்லையே! அப்படி இருக்க எனக்கு எதற்காக இத்தனை பெரிய தண்டனை கிடைத்தது?' என்று அவன் உள்ளம் குமுறினான்.

எத்தனை காலமாக எவ்வளவு சிக்கனமாக வாழ்ந்து சேமித்து வைத்த பணம்! அது ஒரு நொடியிலே மாயமாகப் போய்விட்டதே! 'நல்லவர்களுக்கு இந்த உலகத்திலே காலமில்லை போலிருக்கிறது. என்னைப் போலவே அந்த ராமசாமியும் ஒரு குமாஸ்தாதான். அவன் இரண்டு கையிலும் லஞ்சம் வாங்குகிறான். பெண்டாட்டிக்கு நல்ல நல்ல பட்டுச் சேலைகளாக வாங்கிக் கொடுக்கிறான். அவள் விரும்பியபடியெல்லாம் நகை செய்து போடுகிறான். லஞ்சம் வாங்கியதால் அவனுக்கு என்ன குறைச்சல் வந்துவிட்டது? அவன்தான் இந்த உலகத்திலே சுகப்படுகிறான். நான் மனச் சாட்சிப்படி நடந்து என்ன பிரயோஜனம்?' என்று இப்படி மறுபடியும் அவன் சிந்தையிலே பல விதமான எண்ணங்கள் கொதித்தன.

அவன் மூளை கலங்கிற்று. பஸ் நிற்கும் இடத்திற்குத் தன்னை அறியாமல் வந்து சேர்ந்தான். ஆனால், பஸ்ஸில் போக கையில் காசு வேண்டுமே? நல்ல வேளையாகப் பஸ்ஸில் ஏறுவதற்கு முன்பே விஷயம் ஞாபகத்திற்கு வந்துவிட்டது. இல்லாவிட்டால் பஸ் கண்டக்டரிடம் வேறு பேச்சுக் கேட்க வேண்டும். நடு வழியில் பஸ்ஸை நிறுத்தி அவனைக் கீழே இறக்கிவிடுவான். அப்போது அந்தப் பஸ்ஸில் போகிறவர்கள் எல்லோரும் அவனை அலட்சியமாகப்

பார்ப்பார்கள். அப்படிப் பார்க்கிறவர்களில் ஒருவனே அவனுடைய பணப் பையைக் களவாடியவனாகவும் இருக்கலாம். இருந்தாலும் அந்தத் திருடனுக்குங்கூட அவனே இழிவாக நோக்க உரிமை இருக்கிறது!

'சீ, என்ன உலகமடா இது! இதிலே நல்லவன் பிழைக்க முடியாது' என்று முடிவு கட்டிக்கொண்டே கிருஷ்ணசாமி வீட்டை நோக்கி நடந்தான். எத்தனையோ கார்கள், பஸ்கள், டிராம்கள் இவனைத் தாண்டிச் சென்றுகொண்டிருந்தன. ஜனத்திரள்களும் அலையலையாகச் சென்றுகொண்டிருந்தன. அவனுடைய கண்களிலே இவையெல்லாம் படவில்லை. அவன் தன்னுடைய மனப் போராட்டத்திலே ஈடுபட்டிருந்தான். கால்கள் மட்டும் மாறி மாறி யந்திரம்போல் எட்டி வைத்துக்கொண்டிருந்தன.

இரவு சுமார் பத்து மணி இருக்கும். கிருஷ்ணசாமி மிகுந்த களைப்புடனே தான் வசித்து வந்த சந்திலே புகுந்தான். அது மிகவும் குறுகலானது. பகலிலேகூட அதில் அதிகமாக ஜன நடமாட்டம் இருக்காது. இந்தச் சமயத்திலே அது உயிரற்றது போல இருட்டிலே முழுகிக் கிடந்தது. அவன் தன் வீட்டை அணுகினான். "ருக்மிணி என்ன என்னவோ இன்பக் கனவுகளெல்லாம் கண்டு கொண்டிருப்பாள். ஏன் இன்னும் வரவில்லை என்று ஏக்கமும் கொண்டிருப்பாள். அவளிடத்திலே வெறுங் கையாக எப்படிப் போவது? அவளுடைய அழகிய முகம் ஏமாற்றத்தால் வாட்ட மடைவதை எப்படிப் பார்த்துச் சகிப்பது? ஐயோ! எப்படியாவது எனக்கு ஒரு நானூறு ரூபாய் கிடைக்காதா? அப்படிக் கிடைத்தால், 'இன்று நல்ல சங்கிலியாகப் பொறுக்கி எடுக்க முடியவில்லை. நாளைக்குப் போய் வாங்கி வருகிறேன்' என்று ருக்மிணிக்குச் சமாதானம்

சால்லிவிடலாம். ஆனல், பணத்திற்கு எங்கே போவது ? பணமில்லாமல் பொய் சொன்னல் மறு ாள் அது வெளியாகிவிடுமே" என்று பலவிதமாக ண்ணி உள்ளம் தடுமாறினன். முன்னல் கால் டுத்து வைக்கத் தயங்கினன்.

வீட்டை அணுக அணுக அவன் உள்ளம் டைந்து விடும்போலத் தோன்றிற்று. சடா ன்று அவன் வந்த வழியே திரும்பி நடக்கத் தாடங்கினன். வீட்டு வாசற்படியை மிதிக்க வனுக்கு விருப்பமில்லை. அவன் உள்ளம் ஒளி ழந்து கிடப்பதுபோல் அந்தச் சந்தும் அப்போது ளியிழந்து கிடந்தது. மின்சார விளக்குகள் திடீ ன்று அணைந்துவிட்டன. இருட்டிலே யாரோ நவர் எதிரில் வருவதுபோலத் தெரிந்தது. இந்த ரத்திலே அந்தச் சந்தில் வருவது யாராக இருக் ாம் ? சாதாரணமாக யாரும் வரமாட்டார்களே?

'யாராக இருந்தால்தான் என்ன ? அவனை டக்குவதே சரி' என்று கிருஷ்ணசாமி மின்னல் கத்திலே முடிவு செய்துவிட்டான். தன்னை ஞ்சித்த உலகத்திற்கு அதுதான் சரியான தண்டனை ன்று அவன் கருதினன். "டேய், பேசாமல் மணி ஸை இப்படிக் கொடு. இல்லாவிட்டால் உன் யிரை வாங்கிவிடுவேன்" என்று அவன் பயங்கர க உறுமினன். குரல் ஓங்கியிராவிட்டாலும் திலே கொடுமை நிறைந்திருந்தது. அவன் தியை ஓங்குவதுபோல கையை ஓங்கினன். ஆனல், த சமயத்தில் அவன் நடுங்கினன். 'ஐயோ, ன காரியம் செய்ய முனைந்துவிட்டேன் !' என்று தத்தான். சற்று முன் கூறிய கொடிய வார்த்தை க்காக அவன் தன்னைத் தானே வெறுத்துக் ண்டான். அந்த வார்த்தைகள் வெளிவந்த

போதே அவனுள்ளத்திலே ஏமாற்றத்தால் எழுந்த கொடிய நினைப்பும் வெளியேறிவிட்டது.

எதிரே வந்தவன் பயங்கொள்ளி போலிருக்கிறது. அவன் யாதொரு சப்தமும் செய்யவில்லை. எதிர்த்து நிற்கவும் கருதவில்லை. திருதிருவென்று விழித்துக்கொண்டு பேசாமல் தன் ஜேப்பிலிருந்த மணிபர்ஸை எடுத்துக் கிருஷ்ணசாமியை நோக்கி வீசி எறிந்துவிட்டு ஓட்டம் பிடித்தான். அப்படி ஓடுகிற போதுதான் அவன் தன் நண்பன் குருமூர்த்தி என்று தெரிந்தது. கிருஷ்ணசாமி அலறினான். அந்த மணி பர்ஸை அவன் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

'நான் திருடனா? பணம் போனாலும் மானம் கெடாமல் வாழ நான் கொடுத்து வைக்கவில்லையா? இந்தத் திருடனையா ருக்மிணி இனிமேலும் காதலிக்கப் போகிறாள்? நண்பனாக என்னை மதித்து வீட்டிலே கொள்ளையடிக்கத் தலைப்பட்டேனே! எனக்கு எப்படி இந்தக் கெடுமதி வந்ததோ தெரியவில்லையே! பர்ஸை இழந்தபோதே அறிவையும் இழந்தேனே?' என்று அவன் தலையில் அடித்துக் கொண்டு தன் வீட்டை நோக்கி பாய்ந்து ஓடினான்.

மணிபர்ஸ் வீதியிலே கவனிப்பாரற்றுக் கிடந்தது. அன்று மாலையிலே கிருஷ்ணசாமி வாங்கிய தங்கச் சங்கிலியும், மீதி வைத்திருந்த பணமும் அதற்குள்ளேதான் இருந்தன. அது அவனுடைய பையேதான்.

சீர்க்கடரரி

வள்ளியாத்தாளுக்கு ஆண் குழந்தை பிறந்
ருக்கிறதென்று அறிந்தவுடன் காட்டுப்பாளையத்து
க்களெல்லாம் தாயும் குழந்தையும் சுகமாக இருக்க
வண்டுமென்று மனத்திற்குள்ளேயே வாழ்த்தினர்
ள். அவள் எல்லோருக்கும் நல்லவள். கொஞ்சம்
டுக்குக்காரிதான்; தன்னிஷ்டம் போலவே எதை
யும் செய்ய விரும்புவாள். "ஆண் பிள்ளைகளால்
ளர்க்கப்படும் குழந்தைகளே அப்படித்தானிருக்
தும். இருந்தாலும் வள்ளியாத்தா ரொம்ப நல்ல
தணம்; ஈவிரக்கம் உள்ளவள்" என்று அனைவரும்
அவளைப் பாராட்டிப் பேசுவார்கள். அதனால் அவ
ருக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிற செய்தியைக்
கேட்டு அவர்கள் மகிழ்ச்சி யடைந்ததில் வியப்
பொன்றுமில்லை.

அவர்கள் எல்லோரையும்விட அதிகமாக
மகிழ்ச்சியடைந்தவன் ஒருவன் உண்டு. அவன்தான்
சின்னன். ஆறு வருஷங்களுக்கு முன்னால் சின்ன
னுடைய மனைவிக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்த
போதுகூட அவன் அத்தனை மகிழ்ச்சியடையவில்லை.
வள்ளியாத்தாள் என்றால் அவனுக்குத் தெய்வம்.
அவளில்லாவிட்டால் அவனுடைய குழந்தை அந்தக்
காலத்திலே உயிர் பிழைத்திருக்க முடியுமா?

வள்ளியாத்தாளின் தகப்பனார் சொங்கப்ப
கவுண்டருக்கு நன்செய் புன்செய் நிலங்களெல்லாம்
இருந்தபோது சின்னன் அவருடைய பண்ணையில்
வேலை பார்த்து வந்தான். பஞ்சம் பிழைப்பதற்காக

எங்கிருந்தோ வந்து அவன் தன் மனைவியுடன் அந்த ஊர்ச் சேரியிலே குடியேறிய காலத்தில் வள்ளியாத்தாளுக்குப் பன்னிரண்டு வயதிருக்கும். அவளுடைய தாயார் காலமாகிவிட்டபடியால் அந்த வயதிலேயே அவள் தன் தந்தையின் வீட்டுக் காரியங்களை எல்லாம் பொறுப்பேற்றுக் கவனிக்க வேண்டியிருந்தது. சொங்கப்ப கவுண்டருக்கு வேறு குழந்தையில்லை.

சின்னனுக்கு மாதந்தோறும் படியளப்பதும் அவள்தான். பண்ணையிலே வேலை செய்துவிட்டு ஓட்டிய வயிறோடு அவன் வீட்டுக்கு வந்தால் வள்ளியாத்தாள் அவனுக்குப் பழைய சாதமாவது போடத் தவறமாட்டாள். அதனால் அவளிடத்திலே சின்னனுக்கு தனிப்பட்ட அன்பும் மரியாதையும் ஏற்பட்டிருந்தன.

வள்ளியாத்தாளிடம் அவனுக்கிருந்த இந்த அன்பு மேலும் பெருக்கெடுப்பதற்குக் காரணமாக மற்றொரு சம்பவம் நிகழ்ந்தது. சின்னனின் மனைவிக்கு முதற் குழந்தை பிறந்து இரண்டு மாதங்கூட ஆகவில்லை. அவள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனாள். சக்கிலியர்கள் வாழும் குடிசையிலே பிரசவமென்றால் அது ஒரு பெரிய கண்டம். வறுமையும் அழுக்கும் குடி கொண்ட அந்தச் சேரியிலே தாயும் குழந்தையும் யமனுடைய வாயிலே புகுந்து தப்பி வரவேண்டும். அந்த சோதனையில் சின்னன் மனைவி வெற்றியுடன் மீள முடியாமற் போய்விட்டது.

தாயையிழந்த குழந்தையிடத்திலே சின்னனுக்குச் சொல்ல முடியாத ஆசை பிறந்தது. அதை எப்படியாவது காப்பாற்றி வளர்க்க வேண்டுமென்று அவன் விரும்பினான். பாலில்லாமல் இரண்டு மாதக் குழந்தை உயிர் வாழ முடியுமா? தாய்க்குப் பதிலாக

ற்குப் பால் கொடுக்க வேறு யாரும் கிடைக்க லை. அந்தச் சேரியில் அவனுக்கு உறவினர் யாரும் டயாது. அங்கிருந்தவர்களிலும் அந்த சமயத் ல குழந்தைத் தாய்ச்சியாக யாரும் இல்லை. பசும் ல் கிடைத்தால்தான் அவன் எப்படியாவது குழந் யைக் காப்பாற்றலாம். ஆனல், பசும்பாலுக்கோ மைப் பாலுக்கோ எங்கே போவது ?

அந்தச் சேரியில் வாழ்ந்த மக்கள் மாடு கன்று பத்துப் பிழைக்கக்கூடிய பணம் படைத்தவர்க லை. கிடைக்கின்ற ஊதியம் அன்றன்று வயிற்றைக் வவே போதாது. அந்த நிலைமையில் மாடு பத்துக்கொள்ள முடியுமா ? ஆடு வளர்க்கக்கூட ர்களால் முடியவில்லை. பண்ணைக்காரர்களிடம் ட்கலாமென்றால் அவர்களுக்கு யாரும் பால் ற்றமாட்டார்கள். அவர்களைக் கேட்பதே பெரிய ற்றமாகும். மாட்டைத் தின்பவர்களுக்குப் பாலோ ாரோ எது கொடுத்தாலும் மாடுகளுக்குக் கஷ்டம் நும் என்பது கிராம மக்களுடைய திடமான நம் க்கை. வெகு காலமாக இந்த நம்பிக்கை இருந்து நகிறது. சக்கிலியர்களும் அதை உண்மையென்று ற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையிலே சின்னன் தனது அருமைக் குழந் தையை யமனுக்குப் பலி கொடுப்பதைத் தவிர வேறு ழியில்லை. அவன் உள்ளம் கலங்கினன். என்ன ய்வதென்று தெரியாமல் தத்தளித்தான். 'பெண் ாட்டிதான் நோய் வந்து செத்துப் போனுள். ந்தக் குழந்தையை நான பட்டினி போட்டுக் கால்லவேண்டி யிருக்கிறதே ?'' என்று அவன் அங்க ாய்த்தான். பசியால் வாடி இறக்கப் போகும் ந்தக் குழந்தைக்கு முன்னுலேயே தன்னுயிரை ாய்த்துக் கொள்ளலாமா என்று ஆத்திரப் டான்.

அப்படி அவன் துடித்துக்கொண்டிருக்கும்போ
வள்ளியாத்தாள் அந்தக் குழந்தைக்கு உயிரளிக்கு
சஞ்சீவியாக வாய்த்தாள். அவள் தன் வீட்டிலிருந்
தைரியமாகப் பசும்பால் அனுப்பலானாள். பலபோர்
அப்படிச் செய்வது கூடாது என்று தடுத்தும் அவ
கேட்கவில்லை. "எங்கள் வீட்டிலே மாடு செத்து
போனால் போகிறது. அந்தக் குழந்தையின் உயிர
விட இந்த மாடு பெரிசா ?" என்று அவள் உறு
யாகக் கூறிவிட்டாள். சொங்கப்ப கவுண்டரும் அ
ளுடைய மன உறுதியைக் கண்டு அவளிடமுள்
அன்பினால் தடை ஏதும் சொல்லாமல் மௌனமா
இருந்துவிட்டார்.

நல்ல வேளையாகச் சின்னனுடைய குழந்த
உயிர் பிழைத்துக்கொண்டது. குடிசைக் கதவை
தாண்டி உள்ளே வந்த யமன் தனது தோல்வின
ஒப்புக்கொண்டு மறைந்து போனான். சின்னனு
குண்டான ஆனந்தத்தைச் சொல்லி முடியாது
அந்தக் காலம் முதல் வள்ளியாத்தாள் அவனது கு
தெய்வமாகிவிட்டாள்.

அவளுக்குக் கல்யாணம் ஆனபோதும், சீர்சிறப்
களுடன் அவள் கணவன் வீடு சென்ற போது
சொங்கப்ப கவுண்டர் எவ்வளவு பெருமையடை
தாரோ அதைவிட அதிகமாகச் சின்னன் பெருமை
யடைந்தான். மூன்று மாதத்திற்கொரு முறையாவ
புழுக்காட்டுவலசிற்குச் சென்று வள்ளியாத்தாளை
கண்டு அவள் கையில் பழைய சாதம் வாங்கி
குடித்துவிட்டு வராவிட்டால் அவனுக்குத் திருப்
ஏற்படாது.

இவ்வாறு இரண்டு வருஷங்கள் கழிந்தன. வள்
யாத்தாள் கர்ப்பவதியானாள். ஏழாவது மாதத்தில்
சொங்கப்ப கவுண்டர் புழுக்காட்டுவலசிற்கு இ
தடவை வந்தார். மகளைத் தமது சொந்த ஊராகி

நாட்டுப்பாளையத்திற்கு அழைத்துக்கொண்டு போக வேண்டும் என்பது அவருடைய கருத்து. பெற்றோர் வீட்டில்தானே மகளுக்கு முதற் குழந்தை பிறக்க வேண்டும்?

"எதற்கப்பா உங்களுக்கு வீண் தொந்தரவு? அம்மா உயிரோடிருந்தால் நான் வரவேண்டியது தான்; உங்களுக்கும் கஷ்டமிருக்காது" என்று குறிப்பாக வள்ளியாத்தாள் கூறினாள்.

ஆனால், சொங்கப்ப கவுண்டர் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. "உன் தாயார் உயிரோடிருந்தா அவளுக்கு எத்தனையோ சந்தோசமா இருக்கும். உன் குழந்தையைப் பார்க்க அவள் கொடுத்து வைக்க வில்லை. இருந்தாலும் ஊரிலே நாலு பேர் செய்ய றதைப்போல நானும் செய்ய வேண்டாமா? நம்ம வீட்டிலேதான் குழந்தை பிறந்து வளர வேணும்" என்று அவர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்.

அவருடைய விருப்பத்தின்படி நடந்துகொள்ளு வதுதான் நல்லதென்று வள்ளியாத்தாளின் கணவன் மாரப்பனுக்கும், மாமனார் மாமியாருக்கும் தோன்றி யது. அதனால் அவர்களும் சம்மதம் தெரிவித்தார்கள். வள்ளியாத்தாள் பிறந்தகம் வந்து சேர்ந்தாள்.

குழந்தை பிறந்திருக்கிற சேதியறிந்து கணவ னும், மற்றவர்களும் காட்டுப்பாளையம் வந்தார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரே சந்தோஷமாகிவிட்டது. வீட்டிலே பெண் துணையில்லாதிருந்தும் அக்கம்பக்கத் தாருடைய உதவியைக் கொண்டு சொங்கப்ப கவுண்டர் வள்ளியாத்தாளையும், குழந்தையையும் நன்றாகக் கவனித்து வந்தார். தாயும் குழந்தையும் ஒருவிதமான நலக்கமுமில்லாமல் ஆரோக்கியத்தோ டிருந்தார்கள். குழந்தையைப் பார்க்கப் பார்க்க மாரப்பனுக்குண்டான பெருமையையும் மகிழ்ச்சி

யையும் சொல்லி முடியாது. வள்ளியாத்தாளிடம் முன்பிருந்ததைவிட அவனுக்கு அன்பு பலமடங்கு அதிகரித்தது. இருந்தாலும் இவற்றையெல்லாம் அவள் வெளியே காட்டிக்கொள்ளவில்லை. அவன் மனதிற்குள்ளேயே சந்தோஷப்பட்டுக் கொண்டு புருக்காட்டுவலசிற்குத் திரும்பிவிட்டான்.

வள்ளியாத்தாள் காட்டுப்பாளையம் வந்ததிலிருந்து சின்னன் இன்பக் கடலில் முழுகியிருந்தான். வயிற்றுக்குச் சோறு தேடுவதிலே எத்தனை சிரமப்பட்டாலும் அதையெல்லாம் அவளைப் பார்த்தவுடன் மறந்துவிடுவான். "என் மகனுக்கு உயிர்ப் பிச்சை கொடுத்த அந்த தெய்வத்துக்கு நல்ல ஆண் குழந்தை தான் பிறக்கும்" என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான். அவன் வாக்குபடியே ஆண் குழந்தை பிறந்துவிடவே அவன் உள்ளம் பூரித்தான்.

இப்பொழுதெல்லாம் சின்னன் எங்கெங்கோ தினக்கூலியாக வேலை செய்து வந்தான். சொங்கப்ப கவுண்டர் தமது நிலங்களையெல்லாம் பங்காளிகளுக்குள் எதிர்பாராது ஏற்பட்ட வழக்கிலே இழந்து விட்டார். கோர்ட்டுச் செலவு வக்கீல் செலவு என்று அவர் சொத்தெல்லாம் கரைந்து போயிற்று. அதனால் சின்னன் இப்படி வேறிடத்திலே வேலைக்காக அலைய வேண்டியதாயிற்று.

கையிலே பொருளிருந்த காலத்திலேயே வள்ளியாத்தாளுக்குக் கல்யாணத்தை முடித்துவிட்டதால் சொங்கப்ப கவுண்டர் அவளுக்கு வழக்கமாகச் செய்ய வேண்டிய சீர்சிறப்புக்களையெல்லாம் தமது சக்திக்கேற்றபடி திருப்திகரமாகச் செய்திருந்தார். காளை மாடுகள் இரண்டு மகளுக்கு அனுப்பி வைத்தார். நல்ல வில்லமைந்த கூட்டு வண்டியும், சீராகக் கொடுத்தார். மற்ற சீர் வரிசைகளும் நாலு பேர் மெச்சும்படிதான் செய்தார். இன்றைய நிலைமையால்

நந்தால் அவரால் ஒன்றும் செய்திருக்க முடியாது. வரே கஷ்ட ஜீவனம் செய்துகொண்டிருந்தார்.

இருந்தாலும் வள்ளியாத்தாளின் குழந்தைக்கு னறு மாதமானதும் அதை எடுத்துக்கொண்டு ருக்காட்டுவலசிற்குப் போகும்போது எல்லோரும் ய்வதுபோல பசுவுங் கன்றுமாக அனுப்புவதற் தன்று ஒரு காங்கயம் கடாரியை சிரமத்தோடு மமாக அவர் வளர்த்து வந்தார். சொத்தெல் ம் போன பிறகு அது ஒன்றுதான் மீதியிருந்தது. ள்ளியாத்தாள் பிறந்த வீட்டிற்கு வந்த முதல் ருத்திலேயே அது ஒரு சேங்கன்றை ஈனிற்று. ாங்கப்ப கவுண்டருக்கு ஒரே மகிழ்ச்சி. அந்தக் ாரியையும் கன்றையும் சீராக அனுப்பினுல் ல்லோருக்கும் வெகு திருப்பதியாக இருக்குமென்று வர் பெருமைப்பட்டுக் கொண்டார்.

அந்தக் கடாரி, வள்ளியாத்தாளுக்குச் சீராகப் ாகப் போகிறது என்று அறிந்ததும் சின்னன் தின ம் எங்காவது அலைந்து அதற்குப் பசும்புல் வெட்டி ந்து போடத் தொடங்கினன். அதற்காக அவன் ாதொரு ஊதியமும் எதிர்பார்க்கவில்லை என்று சால்லத் தேவையில்லை. அவனுக்குப் பழையது பாடக்கூட இப்பொழுது முடியாமலிருப்பதால் வன் இப்படிப் புல் கொண்டு வந்து போடுவது ள்ளியாத்தாளுக்குச் சங்கடமாக இருந்தது. "எதற் க நீ தினமும் இப்படிக் கஷ்டப்படுகிறுய் ? பொழு தல்லாம் இடுப்பு முறியக் கூலிவேலை செய்யறது ாதாதா ?" என்று அவள் சின்னனிடம் கூறினுள். னல், அவன் அவள் கூறுவதைக் காதில் போட்டுக் ள்ளவில்லை. "ஒரு கத்தை புல் வெட்ட எத்தனை மாகும் ? எனக்கு அது ஒரு வேலையா?" என்று தில் கொடுத்துவிட்டு அவன் வழக்கம்போல் புல் ண்டு வரலானன்.

"உனக்கு ஒரு கடாரிக் கன்று அப்பா கொடு தார்களே அது நல்லா இருக்கிறதா?" என்று ஒருநா வள்ளியாத்தாள் கேட்டாள். "ஆமாம் தாயி. அந்த கடாரி இப்போ காளைக் கன்று போட்டிருக்கு அந்தக் காலத்திலே பண்ணைக்காரர் அப்படியெ லாம் தாராளமாகக் கொடுப்பாங்க" என்று சொல் விட்டுச் சின்னான் பெருமூச்சு விட்டான். சொங்க கவுண்டருடைய அன்றைய நிலைமையும் இன்றை நிலைமையும் அவன் மனதிலே மாறி மாறிக் காட் யளித்தன.

குழந்தைக்கு மூன்று மாதமாகிவிட்டது. அடுத் வாரத்திலே நல்ல நாள் பார்த்துத் தாயையு குழந்தையையும் புக்ககத்திற்கு அனுப்புவதென் ஏற்பாடாயிற்று.

சொங்கப்ப கவுண்டர் தம் மகளை அனுப்பு போது கூடவே கன்றையும் இளம்பசுவையு அனுப்ப விரும்பினர். சின்னன்தான் அவற்றை பிடித்துக்கொண்டு புழுக்காட்டுவலசிற்குப் போ தென்றும் ஏற்பாடாயிற்று. அதை நினைத்து அ னுக்கு ஒரே கொண்டாட்டமாக இருந்தது.

ஆனால் எல்லோருடைய ஆசையும் நிறைவேறும போய்விட்டது. திடீரென்று பசுவிற்கு ஏதோ நோ கண்டது. என்ன நோயென்றே தெரியவில்ல சொங்கப்ப கவுண்டர் அந்த வட்டாரத்திலே மாட வாகடத்திலே கைதேர்ந்த ஒருவரை அழைத்து வந் காண்பித்தார். அவரும் எத்தனையோ பச்சிலைகளை பிழிந்து மருந்து தயாரித்துக் கொடுத்தார். ஒன்று பயன்படவில்லை.

வள்ளியாத்தாள் புழுக்காட்டுவலசிற்குப் பு படும் நாள் வந்தது. அவளுடைய மாமியார் வ யோடு அதிகாலையிலேயே வந்து சேர்ந்தாள். மா

லே புறப்படுவதென்று தீர்மானம் செய்தார்கள். சிலைகளைத் தேடிச் சென்ற சொங்கப்ப கவுண்டர் லை சுமார் பத்து மணிக்கு சோர்ந்த முகத்தோடு ந்து திண்ணையில் உட்கார்ந்தார். முழங்கால் வரை ல் படிந்திருந்த புழுதியையும் சாணியையும் கழுவக் ட அவர் நினைக்கவில்லை. வளர்ந்து கிடந்த அவ டைய நரைத்த தாடியும் உழுத நிலத்திலே தோன் ம் படைக்கால்களைப் போன்று நெற்றியிலே கால தவன் ஊன்றியிருந்த சுருக்குகளும் அவருடைய னக் கவலையைப் பலமடங்கு அதிகப்படுத்திக் காண் த்தன.

"வள்ளியாத்தா, என் ஆசையெல்லாம் வீணாய்ப் பாச்சு" என்று விசனம் தோய்ந்த குரலில் அவர் பசினார்.

வள்ளியாத்தாளுக்கு அவர் கூறுவதின் பொருள் டனே விளங்கிவிட்டது. அவளுக்கும் அது பெரிய மாற்றந்தான். இருந்தாலும் அவள் அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. "போனால் போகுது அப்பா, எனக்குக் கொடுத்து வைக்கவில்லை" ன்று கவலையற்றவள்போல் பதில் சொன்னாள்.

அந்த இளம்பசு இறந்ததைப்பற்றி ஊரிலே பலர் பலவாறு பேசிக்கொண்டார்கள். சக்கிலிப் பைய னுக்குப் பால் ஊற்றின வீட்டிலே மாடு விருத்தி யாகுமா? வள்ளியாத்தாள் அந்தச் சின்னானுடைய பையனுக்குப் பால் ஊத்தவில்லையா? அதுதான் மாடு செத்தது. மாட்டைத் தின்கிற சக்கிலிக்குப் பால் ஊத்தவேபடாது?" என்று பலரும் பேசிக் கொண்டார்கள்.

"அந்த வள்ளியாத்தாளுக்கு இப்படித்தான் வேணும். நான் வேண்டாம் வேண்டாமுன்னு சொல்லச் சொல்லக் கேட்காமே அந்தப் பையனுக்கு

பால் ஊத்திஞள். அதுதான் தெய்வம் இன்னைக்
அவளுக்கே தண்டனை கொடுத்துவிட்டது. இல்ல
விட்டால் சீர்க்காரி இப்படி ஊருக்குப் போ
நாளன்னிக்குச் சாகுமா ?" என்று பக்கத்து வீட்டு
கிழவி கையை நீட்டி நீட்டிப் பேசிஞள்.

சின்னனுக்கு ஏற்பட்ட வருத்தத்தை அளவி
முடியாது. அவனைப் பார்த்தவர்களெல்லா
"ஏண்டா, உன் குழந்தைக்குப் பால் ஊத்திஞளே
இப்போ என்னைச்சு பார்த்தியா ? ஊருக்குப் போ
நாளிலே பசு செத்துதோ இல்லையோ?" என்று கே
டார்கள். அவனுக்கு இரவெல்லாம் தூக்கம்
வில்லை. தான் ஏதோ பெரிய தவறு செய்துவிட
தாக உணர்ந்தான். தன் மகனுக்கு உயிர் கொடு
அந்த வள்ளியாத்தாளைத் தெய்வம் இப்படித் தா
டித்து விட்டதே என்று அவன் கலங்கினன். இதை
கெல்லாம் காரணம் தான்தான் என்று அவன் நிச்
மாக நம்பினன். ஊரார் சொல்லுவது உண்மை
யென்று அவனுக்குத் தோன்றியது. அதனால் அவ
மனம் வெதும்பி இரவில் வெகுநேரம் வரையிலு
படுக்கையிலே புரண்டுகொண்டிருந்தான். சொங்க
கவுண்டருடைய வறுமைநிலையிலே அவரால் வேறு
பசு வாங்கிக் கொடுக்க முடியாது. அதுதான் அவரை
பெரிதும் வாட்டியது. அவன் மனதிலே ஆயி
ஆயிரம் எண்ணங்கள் எழுந்து மறைந்துகொ
டிருந்தன.

வள்ளியாத்தாள் தன் குழந்தையோடு பு
பட்டதும் சொங்கப்ப கவுண்டருடைய வீடு வெ
சென்று போய்விட்டது. அவர் சோர்ந்து ப
திருந்தார். மகள் சமைத்து வைத்துவிட்டுப் பே
உணவையும் அவர் தொடவில்லை. அன்றிரவெல்ல
அவரும் தன் நிலைமை குறித்து ஏதேதோ எண்
மிட்டுக் கொண்டிருந்தார்.

அடுத்தநாள் பொழுது விடியும் தருணத்திலே சின்னன் கையிலே ஒரு அழகான காங்கயம் பசுவையும், கன்றையும் பிடித்துக்கொண்டு புறுக்காட்டு வலசில் வள்ளியாத்தாளின் வீட்டுக்கு முன் காட்சி ளித்தான். அவனையும் பசுவையும் பார்த்த வள்ளி பாத்தாளுக்கு ஒரே ஆச்சரியமாகப் போய்விட்டது.

"இது உன்னுடைய கடாரிதானே? இதை எதுக்கு இப்போ கொண்டு வந்தாய்?" என்று அவள் சின்னனை நோக்கிக் கேட்டாள்.

"பண்ணைக்காரருக்கு உங்களை ஊருக்குப் பசுவுங் கன்றுமில்லாமே அனுப்பியது மனசுக்குச் சமாதான மாக இல்லை. அதனாலே விலையைக் கொடுத்துட்டு இந்தப் பசுவை எங்கிட்டிருந்து வாங்கி உங்களுக்கு அனுப்பினுங்கோ" என்று அவன் மளமளவென்று பேசினான்.

"இது ரொம்ப விலையிருக்குமே? எத்தனை கொடுத்தார்கள்?"

"நம்ம வடக்கு வீட்டு பெரிய பண்ணைக்காரர் பத்து நாளைக்கு முந்தித்தான் இதுக்கு 450 ரூபாய் கொடுக்கிறேன்னு சொன்னுங்க. எனக்கு அன்னைக்கு விற்க மனசில்லை. நம்ம பண்ணைக்காரர் அதே விலையைக் கொடுத்துட்டாங்கோ."

"அப்பாவிடம் அத்தனை பணம் இருக்காதே?" என்று வள்ளியாத்தாள் கவலையோடு கேட்டாள்.

"தாயி, அப்படியா நினைச்சிங்கோ? பிழைச்ச பயடிலே அப்பவும் பூசினிக்காயளவு தங்கமிருக்கு மின்னு சொல்லுவாங்கோ. பண்ணைக்காரர் ஏதாவது ஆபத்துக்கு வேணுமின்னு இதை வெச்சிருந்திருக் காங்கோ."

வள்ளியாத்தாள் அவன் வார்த்தையை நம்பி
னாள். சின்னான் அவளிடம் என்றுமே பொய் சொன்ன
தில்லை. மேலும் நம்பாமலிருப்பதற்கு அப்படி நடை
பெறக் கூடாத சம்பவம் ஒன்றும் இல்லையே ?

சின்னான் ஊருக்குத் திரும்பிப் போக உத்திரவு
கேட்டான். வள்ளியாத்தாள் சாப்பிட்டுவிட்டுத்
தான் போக வேண்டுமென்று வற்புறுத்தி நிறுத்தி
விட்டாள். ஆனால், அன்றைக்குச் சின்னான் மோரை
ஊற்றிக்கொள்ள அறவேமறுத்துவிட்டான். "தாயே
முன்னால் கிடைத்த தண்டனையே உங்களுக்குப்
போதும். இனிமே நான் உங்களிடம் மோரோ
பாலோ வாங்கிக்கொள்ளவே மாட்டேன்" என்று
கூறிவிட்டான்.

அடுத்த வாரத்திலே சொங்கப்ப கவுண்டர் தன்
மகனைப் பார்த்துப் போவதற்காகப் புறுக்காட்டு
வலசிற்கு வந்திருந்தார். சின்னனுடைய கடாரியை
யும், கன்றையும் பார்க்க அவருக்கு ஒரே ஆச்சரிய
மாகப் போய்விட்டது. அதைத் தாம் அனுப்பவில்லை
என்றும் அதற்கு விலை கொடுக்கத் தம்மிடம் பண
கிடையாதென்றும் அவர் கூறினர். வள்ளியாத்தி
ளுக்கு ஒன்றும் புரியவில்லை. சின்னனை வரவழைத்து
விஷயத்தைக் கேட்கலாமென்று ஏற்பாடு செய்த
போது, அவன் ஒரு வாரமாக சேரியிலேயே இல்லை
யென்றும் மகனை அழைத்துக்கொண்டு எங்கேயோ
திடீரென்று குடி போய் விட்டானென்றும் தெரிய
வந்தது. யாராலும் அவனைக் கண்டுபிடிக்க முடிய
வில்லை.

ஹிமாலய மருந்து

சந்திரனுக்கு எத்தனையோ புதுப்புது எண்ணங்கள் உதயமாகும். அவற்றையெல்லாம் காரியத்திலே கொண்டு செலுத்தினால் வியாபாரத்தில் நிச்சயமாகப் பெரிய வெற்றி கிடைக்கும். அதில் சந்தேகமே கிடையாது. ஆனால், சந்திரன் என்றுவது தன் எண்ணங்களைப் பயன்படுத்தினானே? அதுதான் இல்லை. அவனிடத்திலே ஒரு பெரும் குறை உண்டு. அவனுக்குத் தன்னம்பிக்கை கிடையாது. தன் எண்ணங்களிலே, ஏன் தன் மேலேயே அவனுக்கு நம்பிக்கை இல்லை. தன்னால் என்ன செய்ய முடியும் என்று நினைத்துக்கொண்டு மௌனமாக இருந்துவிடுவான்.

இவ்வாறு தன்னம்பிக்கை யற்ற அவனுக்கு உத்தியோகத்தில் உயர்வு கிடைக்காததில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. பத்து ஆண்டுகளுக்கு முன்பு சாதாரண குமாஸ்தாவாக ஆரம்பித்தவன் இன்னும் அதே நிலையில்தான் இருக்கிறான். பதவியிலே ஒருவித மாறுதலும் ஏற்படவில்லை. சாதாரணமாகச் சம்பளத்திலே வருஷமொன்றிற்குக் கிடைக்கும் ஒரு ரூபாய் உயர்வைத் தவிர வேறு உயர்வும் கிடைக்கவில்லை.

அது அவனுக்குப் பெரிய வேதனையை அளித்தது. கல்யாணமாகாத காலத்தில் அவன் அதைப்பற்றி அவ்வளவு கவலைப்படவில்லை. இப்பொழுது கல்யாணமாகி ஐந்து வருஷங்கள் ஆகிவிட்டன; இரண்டு குழந்தைகளும் பிறந்திருக்கின்றன.

சந்திரனுக்கு அவன் மனைவியிடத்திலும் குழந்தைகளிடத்திலும் அளவற்ற அன்புண்டு. அவர்களைச் சந்

தோஷமாக வைத்திருக்க வேண்டுமென்று அவனுக்கு ஒரே ஆவல். கமலாவுக்குப் பட்டுச் சேலை வாங்கிக் கொடுக்க வேண்டும். புது மாதிரி கழுத்துச் சங்கிலி வாங்கிப் போட வேண்டும் என்று அவனுக்கு இந்த ஐந்து ஆண்டுகளாக ஆசை. ஆனால், அவனுடைய சம்பளம் மாதம் முழுவதும் குடும்பச் செலவிற்குத் தான் ஒரு மாதிரி சரிக்கட்டி வந்தது. ஒரு நாளைக்குப் போல இரண்டு நாள் சினிமாவிற்குப் போய்விட்டால் அந்த மாதக் குடும்பச் செலவில் வேறு ஏதாவது ஓர் அம்சத்தை வெட்டிவிட வேண்டும். இல்லாவிடில் கடன் ஏற்பட்டுவிடும். இந்த நிலையில் அவனுடைய ஆசை நிறைவேறுவதற்கு வகை ஏது? அது அவனுக்குத் தீராத வருத்தத்தைக் கொடுத்தது.

"கமலா, உனக்கு ஒரு பட்டுச் சேலை வாங்கிக் கொடுக்கக்கூட என்னால் முடியவில்லை. எனக்கு மனைவியாக வந்து நீ என்ன சுகம் கண்டாய்?" என்று அவன் அடிக்கடி ஏக்கத்தோடு கூறுவான். எலுமிச்சம் பழம் போன்ற அவள் நிறத்திற்கும், ஒல்லியான அழகிய மேனிக்கும் கிளிப் பச்சை நிறத்திலே ஜரிகை போட்ட பட்டுப் புடவை உடுத்துக்கொண்டால் மிக நன்றாக இருக்கும் என்பது அவன் கருத்து.

கமலா தனக்குப் பட்டுச்சேலை இல்லையென்று வருத்தம் அடையவில்லை. சந்திரனுடைய அன்பு ஒன்றே அவளுக்கும் போதும். "எனக்குப் பட்டுச் சேலை எதற்கு? உங்கள் அன்பு கிடைத்திருக்கிறதே அதே பெரிய பாக்கியம். அதைவிட எனக்கு ஒன்றுமே வேண்டியதில்லை" என்று அவள் தழுதழுத்த குரலில் தனது நீலவிழிகளிலே அன்பின் ஒளி வீச உணர்ச்சியோடு பதில் அளிப்பாள்.

அந்தப் பதில் சந்திரனுக்கு ஒருவாறு ஆறுதலளித்தாலும் மறு கணத்திலே அவன் தனது தன்னம்பிக்கையற்ற நிலையை எண்ணி உள்ளுக்குள்ளே

ங்கலாய்ப்பான். "எனக்கு நல்ல நல்ல எண்ணங்கள் தான்றுகின்றன. ஆனால், அவற்றை முதலாளியிடம் சொல்லுவதற்குத் தயக்கமாக இருக்கிறது. அவர் அவற்றைக் கேட்டு நடந்தால் வியாபாரம் பல டங்கு பெருகி அவருக்கு லாபம் வரும். எனக்கும் திகச் சம்பளம் கிடைக்கும்" என்று அவன் ஒரு ாள் மாலை தன் மனைவியிடம் கூறிக்கொண்டிருந் நான்.

"அவரிடம் சொல்வதற்கு எதற்குப் பயப்படு றீர்கள்? அவர் ரொம்பக் கோபக்காரரா?" என்று மலா கேட்டாள்.

"அவருக்குக் கோபமே வராது. இருந்தாலும் அவரிடம் போய் நிற்கிறபோது என்னுடைய தைரிய மெல்லாம் பறந்துவிடுகிறது. சிறுபிள்ளைத்தனமாக ர்தாவது சொல்லி அவர் என்னைப் பார்த்துச் சிரிக் தும்படியாக வைத்துக் கொள்ளகூடாது என்ற ண்ணம் வருகிறது. பிறகு என்னால் ஒன்றுமே பேச முடிகிறதில்லை" என்று அவன் தன் நிலைமையை மனைவிக்குத் தெளிவாக எடுத்துக் காட்டினான்.

"அவரே உங்களை ஏதாவது யோசனை கூறும்படி கேட்கமாட்டாரா?" என்று மெதுவாகக் கேட்டாள் கமலா.

"அவரும் சில சமயங்களிலே என்னுடைய எண் ணத்தை அறிந்துகொள்ளக் கேட்பார். ஆனால், நான் அந்தச் சமயத்திலெல்லாம் தலையைக் குனிந்து கொண்டு மௌனமாக இருந்துவிடுகிறேன். அவரே இப்படி எனக்குக் கொடுக்கும் சந்தர்ப்பங்களையும் நான் பயன்படுத்திக்கொள்ள முடிகிறதில்லை. எனக்கு அந்தத் துணிச்சல் ஏது?" என்று தன் மேலேயே வெறுப்போடு சந்திரன் பேசினான்.

கமலா அதை உணர்ந்துகொள்ளாமல் இருப்பாளா? உடனே அவள், "இதைப்பற்றி எதற்காக நீங்கள் கவலைப்படுகிறீர்கள்? ஏதோ கடவுள் கொடுத்த உத்தியோகம் இருக்கிறது. கிடைக்கிற சம்பளத்தைக் கொண்டு சுகமாகக் குடும்பம் நடத்திக் கொண்டிருக்கிறோம். அனாவசியமாக அதிக ஆசை எதற்கு?" என்று கூறி அவன் வருத்தத்தைப் போக்க முயலுவாள்.

இந்த நிலையிலே சந்திரனுக்கு வேறொரு பெரிய நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுவிட்டது. சம்பள உயர்வு கிடைக்காததோடு உத்தியோகத்திற்கே ஆபத்து வந்தது. முதலாளிக்குச் சந்திரனால் அதிகப் பிரயோஜனம் இருக்கவில்லை. அவருடைய வியாபாரத்திற்குப் புதுப்புது யோசனையோடு காரியம் செய்யும் உத்தியோகஸ்தர்கள் தேவை. வெறும் கணக்குப் பதிகின்ற குமாஸ்தாக்களை வைத்துக்கொண்டு அவர் சொந்தமாகத் தயாரிக்கும் மருந்துகளை ஏராளமாக விற்க முடியாது. மக்களின் உள்ளத்தைக் கவருகிற மாதிரி திறமையாக விளம்பரங்களும் மற்ற ஏற்பாடுகளும் செய்யக்கூடிய மனிதர்கள் அவருக்கு வேண்டும். அதனால் அவர் சந்திரனைக் கூப்பிட்டு, "உனக்கு ஒரு மாதம் முன்னறிக்கை கொடுக்கிறேன். அடுத்த மாதத்திற்குமேல் வேறிடம் தேடிக்கொள்" என்று கூறிவிட்டார்.

சந்திரன் தான் பத்து வருஷமாக வேலை செய்து வந்ததைப்பற்றிக் கூறிக் கொஞ்சம் வாதாடினான். "ரொம்ப காலமாக என்னிடம் வேலை பார்ப்பதை நினைத்துத்தான் இதுவரையில் யோசனை பண்ணினேன். ஆனால், என்ன செய்கிறது? எனக்கு வெறும் கணக்கெழுதுவதற்குமட்டும் தனியாக ஒருகுமாஸ்தா வேண்டியதில்லை. புதிய புதிய யுக்திகள் கண்டுபிடித்து

வியாபாரத்தைப் பெருக்க உதவும் ஊழியர் ஒருத்தர் வேண்டியிருக்கிறது'' என்று நிலைமையை எடுத்தியம்பினர் முதலாளி.

அவர் கூறியது மெய்தான். அவர் வியாபாரம் மிகப் பெரிய அளவில் நடக்கவில்லை. நடக்கிற அளவிற்கு இரண்டு மூன்று குமாஸ்தாக்கள் வைத்துக் கொண்டால் கட்டுப்படியாகாது. வியாபாரம்பெருகியிருந்தால் அவர் சந்திரனைக் கணக்கு எழுதுவதற்கென்றே வைத்துக் கொண்டிருப்பார். அதற்கு நிலைமை இன்னும் ஏற்படாததால் கணக்குப் பதியவும் திறமையாகச் சரக்குகளை விற்பதற்கு உதவவும் தகுதியுள்ள ஒருவரை மட்டும் நியமித்துக் கொள்ள அவர் முடிவு செய்திருந்தார்.

சந்திரன் விசனத்தோடு வீடு வந்து சேர்ந்தான். ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தன் மனைவியிடம் எப்படிக் கூறுவதென்று கலங்கினான். ஆனால் எப்படியும் கூறித்தானே ஆகவேண்டும்?

கடைசியில் கமலாவுக்கு விஷயம் தெரிந்தபோது அவள் சந்திரனுக்குத் தன்னால் முடிந்தவரை ஆறுதல் கூறத் தொடங்கினாள். ''இன்னேர் இடத்திலே வேலை கிடைக்காமலா போகும்? எதற்காக வருத்தப்படுகிறீர்கள்?'' என்று சிரித்த முகத்தோடு கூறினாள்.

''எனக்கு மூளையில்லை என்றிருந்தாலும் இத்தனை கவலைப்படமாட்டேன். வியாபாரத்தைப் பெருக்குவதற்கு நல்ல நல்ல தந்திரங்களெல்லாம் எனக்கு உதயமாகின்றன. முதலாளிக்கு அவற்றை எடுத்துக் கூறி எப்படியெல்லாம் செயல் முறையில் அவற்றைக் கொண்டுவரலாம் என்று விளக்குவதற்குத்தான் தைரியம் ஏற்படுகிறதில்லை. அதனால் அவருக்கும் என்னால் பிரேயோஜனம் இல்லை. என்னுடைய

நிலைமையும் சீர்திருந்தாததோடு இன்று படுமோச மாகிவிட்டது'' என்று அவன் உள்ளம் உருகினான்.

கமலா தன் ஆறுதல் மொழிகளை வேறு விதமாக மாற்றினாள்: ''இன்னும் ஒரு மாதம் இருக்கிறது. அதற்குள்ளே நீங்கள் எப்படியாவது முதலாளியிடம் உங்கள் யோசனைகளைக் கூறப் பழகிக் கொள்ள வேண்டும். நம் குழந்தைகளை நினைத்துப் பாருங்கள், உங்களுக்குத் துணிச்சல் பிறந்துவிடும்.''

''கமலா, நீ பக்கத்தில் இருக்கும்போது எனக்கு நம்பிக்கை உண்டாகிறது. ஆனால் காரியாலயம் போனதும் எப்படியோ அது மறைந்துவிடுகிறது. உன்னுடைய நினைவுகூட அதை மேலோங்கச் செய்ய முடிகிறதில்லை.''

''ஒரே தீர்மானத்தோடு முயன்று பாருங்கள். முயற்சி செய்தால் ஆகாத காரியம் இல்லை'' என்று கமலா மேலும் தைரியமாகக் கூறினாள். அவளுக்கும் மனத்திற்குள்ளே கவலைதான். ஆனால் அதை அவள் வெளியில் காட்டவில்லை.

நாட்கள் ஓட ஆரம்பித்தன. முன்னறிக்கை கொடுத்த ஒரு மாதமும் முடியப் போகிறது. சந்திரன் வகையறியாது திண்டாடினான். அவ னுடைய கவலை ஒவ்வொரு நாளும் அதிகரித்தது. அவன் எங்கெங்கோ ஓடினான். யார் யாரிடமோ ஆலோசனை கேட்டுப் பார்த்தான். ஒன்றும் அவனு டைய குறையைத் தீர்ப்பதாக இல்லை. பலருக்கு அவனுடைய மன நிலைமையை அறிந்துகொள்ளவே முடியவில்லை.

ஆயிற்று. மாதத்தின் கடைசி நாள் பிறந்து விட்டது. சந்திரன் காரியாலயத்திற்கு வழக்கம் போல் சென்று அமர்ந்திருக்கிறான். ஆனால் அவன் மனம் கணக்குகளிலே செல்லவில்லை. 'இன்றைக்கு

ரு நாள் இந்த இடத்திலே வேலை. பிறகு எங்கு லையப் போகிறேனோ?' என்று அவன் கவலையோடு ண்ணமிட்டுக் கொண்டிருந்தான். வியாபாரத் தப் பெருக்குவதற்கு ஒரு புது முறையை அவன் யாசித்து வைத்திருந்தான். அதைப்பற்றி முதலாளி டம் கூறித் தனது திறமையைக் காண்பிக்கலாமா ன்று ஆவலோடு நினைத்தான். இந்தச் சமயத்திலே திதாகக் கூந்தல் தைலமொன்றை அவர் தயாரித் திருந்தார். தனது தைரியத்தையெல்லாம் கட்டிப் பிடித்துக்கொண்டு அவருடைய அறைக்குள்ளே ந்திரன் நுழைந்தான்.

"என்ன சந்திரா, இன்றைக்குக் கடைசி நாள். ன்னைப் போகச் சொல்ல எனக்கும் வருத்தமாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் வேறு வழியில்லை. ாளைக்கு வா. ஒரு சர்ட்டிபிகேட் வேண்டுமானால் ழுதிக் கொடுக்கிறேன்" என்று அவர் மளமள வென்று பேசினார்.

சந்திரனுடைய மன உறுதியெல்லாம் காற்றிலே போய்விட்டது. அடுத்த நாள் வருவதாகக் கூறி விட்டு அவன் வெளியேறிவிட்டான்.

அன்று மாலையில் வேலை முடிந்ததும் அவன் வீட் டிற்குச் செல்லவில்லை. அவன் மனம் தத்தளித்தது. திய தைலத்தை விளம்பரம் செய்ய நல்ல தந்திர மான்றை அவன் யோசனை செய்திருந்தும் அதை டுத்துச் சொல்லத் தைரியமில்லாமல் வெளியேறி தை நினைத்து அவன் தன்னைத்தானே நொந்து கொண்டான். இந்தமாதிரி தன்னம்பிக்கையற்ற ழைக்கு வாழ்க்கையில் துன்பத்திற்கு மேல் ன்பம் வருவதுதான் சரியென்றும் அவன் வெறுப் போடு கூறிக்கொண்டான். தன் மனைவியும் குழந்தை ளும் வருந்துவார்களே என்ற எண்ணந்தான்

அவனை வாட்டியது. பட்டணத்து வீதியிலே காரணமாகப் போன போக்கிலே அவன் நடந்தான்..

மாலைக் கதிரவனின் ஒளி மங்கத் தொடங்கியது. இருள் பரவுகின்ற அந்த நேரத்திலே ஒரு சிறிய வெளி இடத்திலே மின்சாரக் கம்பத்தின் அடியில் நின்றுகொண்டு ஒருவன் உரத்த குரலிலே பிரசங்கம் செய்துகொண்டிருந்தான். சுற்றிலும் மக்கள் சிலர் குழுமியிருந்தனர். பிரசங்கியின் உடையும் தோற்றமும் ஏதோ வடநாட்டுப் பக்கிரி என்று சொல்லும் படி இருந்தன. ஆனால் அவன் நல்ல தமிழிலேதான் பேசினான். கூட்டத்தோடு கூட்டமாகக் கலந்து கொண்டால் தன் மனக் கவலையைக் கொஞ்சம் மறக்கலாமென்று சந்திரன் அங்கே சென்று நின்றான்.

பக்கிரி தன் கையிலிருந்த சிறு புட்டியைச் சுட்டிக் காட்டிக்கொண்டு பிரசங்கம் செய்தான். "மகா ஜனங்களே, உலகத்திலே அநேகம் பேர் மூளை இல்லாததால் முன்னுக்கு வரவில்லை என்று நினைக்கிறீர்கள். அவர்களுக்கு நல்ல மூளை இருக்கும்; நல்ல அறிவுத் திறமை இருக்கும். ஆனால் தன்னம்பிக்கை இருக்காது. வாழ்க்கையிலே வெற்றி பெறுவதற்கு மூளை மட்டும் போதாது. தன்னம்பிக்கை நிறைய வேண்டும். தன்னம்பிக்கை யுள்ளவன் அறிவுத் திறமை குறைந்திருந்தாலும் வாழ்க்கையிலே சிறந்த வெற்றி பெறுவான். உங்களிலே அநேகம் பேருக்கு நல்ல மூளை இருப்பதை நான் உணர்கிறேன். உங்கள் முகத்தோற்றம் அதைக் காண்பிக்கிறது. ஆனால் உங்களுக்குத் தன்னம்பிக்கை இல்லை. அதனாலேயே உங்கள் வாழ்க்கை நிலைமை உயரவில்லை. அந்தக் குறையைப் போக்குவதற்குத்தான் நான் வந்திருக்கிறேன். இதோ இந்த மருந்தைப் பாருங்கள். இந்த மருந்திலே இரண்டு சொட்டு ஒரு தடவைக்கு

ாப்பிட்டால் உடனே அற்புதமாக உங்களுக்கு அந்தத் தன்னம்பிக்கை வளரும். நீங்கள் புது மனி நர்களாவீர்கள். இந்த மருந்து இமயமலையில் எடுத்த மூலிகைகளால் தயார் செய்யப்பட்டது. இமய மலையில் தவம் செய்யும் என் குருநாதர் உங்களைப் போன்ற மக்களைக் கடைத்தேற்ற வேண்டுமென்று இந்த மருந்தைத் தயாரித்துக் கொடுத்து என்னை உலகத்திற்கு அனுப்பினார். இந்த மருந்தின் விலை இரண்டே ரூபாய்தான். லாபத்திற்காக இதை விற்க வில்லை. இமயமலையிலிருந்து வந்து திரும்புவதற்கு வழிச் செலவுக்காக இந்தப் பணம் வாங்குகிறேன். நான் ஒரு சந்நியாசி. எனக்குப் பணத்திலே ஆசை கிடையாது. இது சத்தியம்" என்று அவன் பிரசங் கத்தை முடித்துவிட்டுச் சுற்று முற்றும் பார்த்தான். அவனுடைய தாடியும் ஒளி பொருந்திய கண்களும் பார்ப்பவர்கள் மனத்திலே மரியாதையையும் கவர்ச் சியையும் உண்டாக்கின.

இருந்தாலும் அவன் காண்பித்த மருந்தை ாங்கு வதற்கு யாரும் முன்வரக் காணோம். சந்திர ுக்கு அவனுடைய வார்த்தைகள் ஒரு புதிய நம்பிக் கையை அளித்தன. வாழ்க்கையில் முன்னேற்றமடை தற்கு உதவி கிடைத்துவிட்டதாக அவன் கருதி ான். உடனே தன் ஜேபியிலிருந்த அம்மாதச் சம்ப த்தில் இரண்டு ரூபாயை எடுத்துக்கொண்டு ன்னாலே சென்றான். மற்றவர்கள் ஒருவரும் வாங்க வில்லையே, தான் மட்டும் வாங்கினால் மற்றவர்கள் ன்னை ஏளனமாகக் கருதுவார்களே என்ற எண்ணம் அவனைத் தடுக்கவில்லை. அவனுடைய நெருக்கடியான நிலைமை அவனுக்குத் தைரியம் கொடுத்தது. மருந்தை வாங்கிக்கொண்டான். அவன் வாங்கின தைப் பின்தொடர்ந்து பலபேர் மருந்து வாங்க முன் வந்தார்கள்.

சந்திரன் தன் கண்களிலே புதிய ஒளியுடன் வீட்டுக்குச் சென்றான். உடனே மருந்தின் சக்தியைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் பொங்கிற்று. இரண்டு துளி மருந்தைச் சிறிதளவு தண்ணீரில் விட்டு ஆவலோடு பருகினான்.

சுறுசுறுவென்று மருந்து வாயிலே சுவைத்தது. தன்னுடைய உடம்பிலே ஒரு புதிய சக்தி புகுந்தது போல அவனுக்குத் தோன்றியது. தன் கவலையெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டதென்று அவன் உள்ளம் பூரித்தான். கமலாவுடன் அன்றிரவு அவன் எதிர்பாராத விதமாய்க் குதூகலமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தான்..

மறுநாள் காலையிலே இன்னும் இரண்டு சொட்டு மருந்தைச் சந்திரன் உட்கொண்டான். மேலும் மேலும் அவன் தன்னம்பிக்கை வளரலாயிற்று. மருந்தைப் பையிலே போட்டுக்கொண்டு பத்து மணிக்கு வழக்கம்போலக் காரியாலயம் போய்ச் சேர்ந்தான்.

முதலாளியைப் பார்க்கச் செல்வதற்கு முன்பு இன்னும் ஒரு முறை மருந்தைப் பருகினான். முதலாளி அவனிடத்திலே ஒரு புதிய துடிப்பு இருப்பதைக் கண்டார். அவர் எதிர்பார்த்தபடி சந்திரன் உடனே சர்ட்டிபிகேட் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக அவன் கூந்தல் தைலத்தை விளம்பரப் படுத்துவதற்கு ஒரு புதிய யுக்தியை அழகாக விவரித்தான். முதலாளியின் உள்ளம் அந்த யோசனையிலே லயித்துவிட்டது.

அவர் சந்திரனைப் பார்த்து, "சந்திரா, உனக்கு இந்த மாதிரி நல்ல திறமை இருக்கிறதென்று நான் முதலிலிருந்தே நினைத்தேன். ஆனால் இதுவரையிலும் அதை நீ வெளியில் காண்பிக்க முன்வரவில்லை. இனி நீ வேறு வேலை தேட வேண்டிய அவசியமில்லை. இ

கேயே இருக்கலாம். சம்பளம் அதிகம் கொடுக் நிறேன்" என்று கூறினர். சந்திரன் திருப்தியடைந் தான். பழையபடி அங்கேயே வேலை பார்க்கத் தொடங்கினன். ஆனால் அவன் இப்பொழுது பழைய கணக்குக் குமாஸ்தாவல்ல. அவன் ஒரு புது மனித னாகிவிட்டான். பக்கிரி கொடுத்த மருந்து நல்ல வேலை செய்தது.

ஒரு நாள் காலையில் சென்னையிலுள்ள உத்தியோ கஸ்தர்களெல்லாம் தங்கள் காரியாலயத்திற்கு விழுந் தடித்துக்கொண்டு போகின்ற நேரத்திலே அவர்களு டைய கூட்டத்திற்கு இடையிலே டிராமில் உட் கார்ந்துகொண்டு இருவர் உற்சாகமாக உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் நெருங்கியிருப்பதை அவர்கள் கவனித்ததாகவே தெரியவில்லை.

"என்ன கிருஷ்ணு, உன்னை அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லையே!" என்றார் அவர்களில் ஒருவரான வழுக்கைத் தலையர்.

"என் தலையைப் பார்த்தாயா?" என்றார் மற்ற வர் பெருமையோடு.

"ஆமாம், அதுதான் கேட்கிறேன். திடீரென்று உன் தலையில் மயிர் ஒரே அடர்த்தியாக முளைத்திருக் கிறதே! கல்லூரியிலே படிக்கிறபோதுகூட உனக்கு இப்படித் தலைமயிர் அடர்ந்து இருக்கவில்லை. ஏதாவது டோப்பாப் போட்டிருக்கிறாயா என்ன?"

"அதெல்லாம் இல்லை. இயல்பாக அப்படி ளர்ந்துவிட்டது."

"ஆமாம், போன மாசத்திலே என் தலையைவிட ன்தலை மோசமாக இருந்ததே. அதற்குள்ளே என்ன ந்திரம் கண்டுபிடித்தாய்?"

சந்திரன் தன் கண்களிலே புதிய ஒளியுடன் வீட்டுக்குச் சென்றான். உடனே மருந்தின் சக்தியைப் பரீட்சை செய்து பார்க்க வேண்டுமென்ற ஆவல் பொங்கிற்று. இரண்டு துளி மருந்தைச் சிறிதளவு தண்ணீரில் விட்டு ஆவலோடு பருகினான்.

சுறுசுறுவென்று மருந்து வாயிலே சுவைத்தது. தன்னுடைய உடம்பிலே ஒரு புதிய சக்தி புகுந்தது போல அவனுக்குத் தோன்றியது. தன் கவலையெல்லாம் பஞ்சாய்ப் பறந்து விட்டதென்று அவன் உள்ளம் பூரித்தான். கமலாவுடன் அன்றிரவு அவன் எதிர்பாராத விதமாய்க் குதூகலமாய் வார்த்தையாடிக் கொண்டிருந்தான்.

மறுநாள் காலையிலே இன்னும் இரண்டு சொட்டு மருந்தைச் சந்திரன் உட்கொண்டான். மேலும் மேலும் அவன் தன்னம்பிக்கை வளரலாயிற்று. மருந்தைப் பையிலே போட்டுக்கொண்டு பத்து மணிக்கு வழக்கம்போலக் காரியாலயம் போய்ச் சேர்ந்தான்.

முதலாளியைப் பார்க்கச் செல்வதற்கு முன்பு இன்னும் ஒரு முறை மருந்தைப் பருகினான். முதலாளி அவனிடத்திலே ஒரு புதிய துடிப்பு இருப்பதைக் கண்டார். அவர் எதிர்பார்த்தபடி சந்திரன் உடனே சர்ட்டிபிகேட் கேட்கவில்லை. அதற்குப் பதிலாக அவன் கூந்தல் தைலத்தை விளம்பரப் படுத்துவதற்கு ஒரு புதிய யுக்தியை அழகாக விவரித்தான். முதலாளியின் உள்ளம் அந்த யோசனையிலே லயித்துவிட்டது.

அவர் சந்திரனைப் பார்த்து, "சந்திரா, உனக்கு இந்த மாதிரி நல்ல திறமை இருக்கிறதென்று நான் முதலிலிருந்தே நினைத்தேன். ஆனால் இதுவரையிலும் அதை நீ வெளியில் காண்பிக்க முன்வரவில்லை. இனி நீ வேறு வேலை தேட வேண்டிய அவசியமில்லை. இ

கேயே இருக்கலாம். சம்பளம் அதிகம் கொடுக்கிறேன்" என்று கூறினர். சந்திரன் திருப்தியடைந்தான். பழையபடி அங்கேயே வேலை பார்க்கத் தொடங்கினன். ஆனால் அவன் இப்பொழுது பழைய கணக்குக் குமாஸ்தாவல்ல. அவன் ஒரு புது மனிதனாகிவிட்டான். பக்கிரி கொடுத்த மருந்து நல்ல வேலை செய்தது.

ஒரு நாள் காலையில் சென்னையிலுள்ள உத்தியோகஸ்தர்களெல்லாம் தங்கள் காரியாலயத்திற்கு விழுந்தடித்துக்கொண்டு போகின்ற நேரத்திலே அவர்களுடைய கூட்டத்திற்கு இடையிலே டிராமில் உட்கார்ந்துகொண்டு இருவர் உற்சாகமாக உரத்த குரலில் பேசிக்கொண்டிருந்தார்கள். மற்றவர்கள் நெருங்கியிருப்பதை அவர்கள் கவனித்ததாகவே தெரியவில்லை.

"என்ன கிருஷ்ணு, உன்னை அடையாளமே கண்டுபிடிக்க முடியவில்லையே!" என்றார் அவர்களில் ஒருவரான வழுக்கைத் தலையர்.

"என் தலையைப் பார்த்தாயா?" என்றார் மற்றவர் பெருமையோடு.

"ஆமாம், அதுதான் கேட்கிறேன். திடீரென்று உன் தலையில் மயிர் ஒரே அடர்த்தியாக முளைத்திருக்கிறதே! கல்லூரியிலே படிக்கிறபோதுகூட உனக்கு இப்படித் தலைமயிர் அடர்ந்து இருக்கவில்லை. ஏதாவது டோப்பாப் போட்டிருக்கிறாயா என்ன?"

"அதெல்லாம் இல்லை. இயல்பாக அப்படி வளர்ந்துவிட்டது."

"ஆமாம், போன மாசத்திலே என் தலையைவிட உனதலை மோசமாக இருந்ததே. அதற்குள்ளே என்ன மந்திரம் கண்டுபிடித்தாய்?"

"அது உண்மைலேயே மந்திர சக்தி வாய்ந்தது தான். கார்மோகினி என்ற அந்தத் தைலத்தின் வேலைதான் இது. அதைத் தயாரித்தவர்கள் உண்மையிலே மகா கெட்டிக்காரர்களாக இருக்க வேண்டும். அதை இந்த ஒரு மாதமாகத் தடவி வருகிறேன். அதன் மகிமையால் வழுக்கையெல்லாம் மாயமாய் மறைந்துவிட்டது."

"அப்படியா? அந்தத் தைலம் எங்கே கிடைக்கும்? விலாசம் கொஞ்சம் சொல்லு" என்று வழுக்கைத் தலையர் ஆவலோடு கேட்டார். மற்றவர் விலாசம் கூறினர். டிராமிலே இருந்த எத்தனையோ வழுக்கைத்தலையர்கள் அந்த விலாசத்தைக் குறித்துக் கொள்ளலானார்கள்.

இந்த மாதிரி சம்பாஷணை அந்த நாளன்று 10 மணிக்கு ஒவ்வொரு டிராமிலும் பஸ்ஸிலும் நடந்தது. ஒருத்தர் நல்ல அடர்த்தியான மயிருள்ளவராகவும் மற்றொருவர் வழுக்கையராகவும் இருந்தார்கள். அப்படி ஆசாமிகளைப் பொறுக்கி ஜோடிகள் செய்து வைத்திருந்தான் சந்திரன். இதுதான் அவன் செய்த முதல் விளம்பர தந்திரம்.

இந்த விளம்பரத்தின் பயன் அபாரமாக இருந்தது. புதிய கூந்தல் தைலம் தினமும் ஆயிரம் பத்தாயிரம் கணக்கில் விற்பனையாகத் தொடங்கியது. முதலாளிக்கு அளவு கடந்த திருப்தி. அதுமுதல் சந்திரன் இப்படியே புதிய வியாபார தந்திரங்கள் கூறி அவருக்கு ஏராளமாக லாபம் வரச் செய்தான்.

சந்திரன் தன் ஆசைகளையெல்லாம் ஒரே மாதத்தில் பூர்த்தி செய்துவிட்டான். பழைய ஏக்கங்களெல்லாம் அடியோடு மறைந்துவிட்டன. கமலா விற்கும் புதிய புதிய பட்டுச் சேலைகளும் நகைகளும்

டைத்தன. ஆனால் நாட்கள் ஓட ஓட அவனுக்குப் புதியதோர் பெரிய ஏக்கம் உண்டாயிற்று.

புட்டியிலிருந்த மருந்து குறைந்துகொண்டே வந்தது. அது தீர்ந்து போனால்? ஐயோ; அதை நினைக்கவும் சந்திரனுக்குப் பயமாக இருந்தது. எப்படியாவது அந்தப் பக்கிரியைத் தேடிப் பிடித்து நிறைய வாங்கி வைத்துக்கொள்ள வேண்டுமென்று நினைத்தான். அவனுடைய விலாசத்தை முன்னாலேயோடு வாங்கிவைக்கவில்லையே என்று தன்னைத்தானே நொந்துகொண்டான்.

ஒவ்வொரு நாள் மாலையும் அவனைத் தேடிச் சென்னைப் பட்டினத்து வீதி வீதியாகச் சந்திரன் அலைய ஆரம்பித்தான். அவனுடைய முயற்சி பல நாட்கள் பலன் அளிக்கவில்லை. மருந்தில்லாமல் தன் வாழ்க்கை பழையபடி மாறிவிடுமே என்ற பயம் முன்பிருந்த கவலைகளையெல்லாம்விட அதிகத் துன்பத்தை விளைவித்தது. அவனுக்குத் தூக்கங்கூட வரவில்லை. "இப்பொழுது பணம் இருக்கிறது; ஆனால் அவர் ஏனோ உற்சாகமிழந்து காணப்படுகிறார்" என்று கமலா வருந்தினாள். சந்திரன் தன்னம்பிக்கைக்கு மருந்து சாப்பிடும் விஷயம் அவளுக்குத் தெரியாது. அதை அவன் யாரிடமும் கூறாமல் மறைத்து வைத்திருந்தான்.

மருந்து அநேகமாகத் தீர்ந்துவிட்டது. சந்திரன் அந்தப் பக்கிரியைத் தேடும் முயற்சியைத் தீவிரமாக்கினான். மாலை நேரத்தில் வாடகைக் காரை அமர்த்திக்கொண்டு வீதி வீதியாகச் சுற்றினான்.

ஒரு நாள் சந்திரன் அந்தப் பக்கிரியை எதிர்பாராத விதமாக வீதியில் காண முடிந்தது. ஆனால் அந்த நிலையிலே அவனைக் காண அவன் எதிர்

பார்க்கவே இல்லை. சந்திரன் பக்கிரியைத் தேடிக் கொண்டு ஒரு காரில் வேகமாகப் போய்க்கொண்டிருந்தான். தூரத்திலே அந்தப் பக்கிரி கையிலே ஒரு பெட்டியை எடுத்துக்கொண்டு பாதையை ஒரு புறத்திலிருந்து மறு புறத்திற்குக் கடந்துகொண்டிருப்பதைக் கண்டான். அவனுக்கு உண்டான சந்தோஷத்திற்கு அளவேயில்லை.

ஆனால் அடுத்த கணத்திலே எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. அந்தப் பக்கிரி என்னவோ யோசனையில் ஆழ்ந்து நடந்துகொண்டிருந்தான் போலிருக்கிறது. எதிர்ப் பக்கத்திலிருந்து வேகமாக வந்த ராணுவ லாரி ஒன்று அவன்மீது மோதி விட்டது. பக்கிரி பிரக்ஞை அற்றுக் கீழேவிழுந்தான். அவன் பெட்டியிலிருந்த புட்டிகளெல்லாம் உடைந்து அவற்றிலிருந்த மருந்து வீதியில் வழிந்து ஓடியது.

சந்திரன் அளவற்ற துக்கத்தோடு பக்கிரியிடம் ஓடினான். அவனைத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனான்.

அவன் எவ்வளவோ முயன்றும் பக்கிரி பிழைக்கவில்லை. ஓர் அரைமணி நேரம் கழித்து அவனுக்குச் சுய உணர்வு வந்தது. மறுபடியும் உணர்வு தப்பிவிட்டது. பிறகு அவன் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை.

சுய உணர்வு வந்திருந்தபோது பக்கிரி தனக்கு சந்திரன் செய்த உபகாரத்தை நன்குணர்ந்தான். அவனை வாயார வாழ்த்தினான். "என் அந்திய காலத்தில் நீ செய்த உதவிக்கு நான் என்ன கைம்மாறு செய்ய முடியும்?" என்று அவன் நன்றியறிதலோடு பேசினான். "நீ உயிர் பிழைக்க வேண்டும் என்பதுதான் என் ஆசை" என்று சந்திரன் தன் உண்மையான ஆவலை வெளியிட்டான்.

"அது இனி முடியாது. தலையிலே பலத்த அடி பட்டிருக்கிறதல்லவா? அதனால் என் மூளை குழம்பு றது போலத் தோன்றுகிறது" என்றான் பக்கிரி.

"உன் மருந்தால் நான் வாழ்க்கையிலே பெரிய வெற்றி அடைந்தேன். அதைச் செய்யும் முறையை பாவது எனக்குச் சொல்லிக் கொடு" என்று சந்திரன் இரங்கிய குரலில் கேட்டான்.

பக்கிரியின் முகத்திலே புன்னகையின் சாயல் படர்ந்தது. விளையாட்டுப் பொம்மை யொன்று வேண்டுமென்று ஆவலோடு கேட்கும் குழந்தையை நோக்கிப் பேசுவதுபோல அவன் சந்திரனைப் பார்த்துப் பேசினான்; அவன் வாயிலிருந்து கடைசித் தடவையாகக் கீழ்க்கண்ட வார்த்தைகள் வெளி யாயின: "அய்யா! அந்த மருந்தின் ரகசியம் உனக்குத் தெரியாதா? உண்மையிலே அதில் ஒன்றுமே இல்லை. வாயில் ஊற்றினால் சுறுசுறுவென்று இருப்பதற்காகச் சுக்கு, லவங்கம், பச்சைக் கற்பூரம், மிளகு இப்படி ஏதாவது சில சரக்குகளைச் சேர்த்துக் கஷாயம் செய் வேன்! அவ்வளவுதான், தன்னம்பிக்கை ஏற்படுவ தற்கு அதிலே ஒன்றும் இல்லை. எல்லாம் நம்பிக்கை தான்."

அதற்கு மேலே அவன் பேசவில்லை.

நம்பிக்கை

"நம்பிக்கைக்கு ஒரு மஹத்தான சக்தி இருக்கத்தான் செய்கிறது; அதை நாம் மறுக்க முடியாது" என்று வாதாடினர் முருகப்பசாமி.

"நான் அதை ஒப்புக்கொள்ள முடியாது; பகுத்தறிவு ஒன்றுதான் நமக்கு வேண்டியது. இந்தக் குருட்டு நம்பிக்கையால்தான் நமது தேசமே கெட்டுக் குட்டிச் சுவராய்ப் போய்விட்டது" என்று ஆத்திரமாய்ப் பேசினர் இளங்கீரனர்.

"நம்பிக்கை குருடாக இருக்கலாம். ஆனால் கண்ணை மூடிக்கொண்டு சாதிக்கக்கூடிய சில காரியங்களைக் கண்ணைத் திறந்துகொண்டு செய்ய முடியாது. அதைத்தான் எடுத்துக்காட்ட விரும்புகிறேன்." இப்படிப் பிடிவாதமாகத் தமது கொள்கையை முருகப்பசாமி நிலைநாட்ட முயன்றார்.

"அந்தக் கதையெல்லாம் என்னிடத்திலே வேண்டாம். கதை கேட்டுக் கேட்டுத்தான் உலகம் ஏமாந்து போகிறது. உலகத்தை ஏமாற்றிப் பிழைக்கச் சில சுயநலக்காரர் செய்கின்ற சூழ்ச்சி இது" என்று மேலும் ஆத்திரங்கொண்டு இளங்கீரனர் உரையாடினர்.

"நம்பிக்கை ஒரு பெரிய புதிர்" என்று திடீரென்று வேறொரு குரல் கேட்டது. முருகப்பசாமியும் இளங்கீரனரும் சட்டென்று குரல் வந்த பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். அங்கே மீசையும் தாடியுமாக ஒரு மனிதர் உட்கார்ந்து கொண்டிருந்தார். தங்களுடைய விவாதத்திலேயே ஆர்வத்தோடு ஈடு

ட்டிருந்ததால் அந்த மனிதரை அவர்கள் இதுவரை
யிலும் கவனிக்கவில்லை.

முருகப்பசாமியும் இளங்கோவனும் நெருங்கிய
ண்பர்கள். அவர்களுக்குள்ளே பல விஷயங்களில்
ருத்து வேறுபாடு இருந்தாலும் அவை நட்புக்குப்
ங்கம் விளைவிக்கவில்லை. இளமைத் துடிப்போடு
அவர்கள் காரசாரமாக விவாதம் செய்து தத்தம்
கோட்பாடுகளை நிலைநாட்ட முயல்வார்கள். உள்ளத்
தைத் தாக்கும் சொற்கள்கூடப் பல சமயங்களிலே
அவர்களையும் மீறிக்கொண்டு வெளிக்கிளம்பும்.
இருந்தாலும் அவையெல்லாம் அந்த நிமிஷத்திற்குத்
நான். அடுத்த நிமிஷத்திலே இளமை இயல்புக்குப்
பொருந்தக் கொள்கைகளையும், விவாதத்தையும்
றந்துவிட்டுத் தோள்மேல் தோள் போட்டுக்
கொண்டு குஷியாக வேறு பொழுதுபோக்கைத்
தேடிப் புறப்பட்டுவிடுவார்கள்.

இப்பொழுது இந்த நண்பர்கள் இருவரும்
யிலிலே பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.
இரவு ஒன்பது மணியிருக்கும். தூங்குவதற்கு
இன்னும் கொஞ்சம் நேரமிருந்தபடியால் ஏதேதோ
உல்லாசமாகப் பேசத் தொடங்கினர்கள். பேச்சுப்
போக்கிலே நம்பிக்கையைப்பற்றிய விவாதம் எழுந்து
விட்டது. பிறகு சொல்ல வேண்டுமா? நல்ல வேளை
யாக அந்த மீசை தாடி மனிதர் குறுக்கே பேச்சுக்
கொடுத்துவிட்டார். இல்லாவிட்டால் இந்த நண்
பர்கள் தூங்கும் வரையில் மழையில்லாத இடி
முழக்கம்போல யாதொரு முடிவுக்கும் வராமல்
தொண்டையை வற்றடித்துக்கொண்டிருப்பார்கள்.

இரண்டே பெஞ்சுகள் உள்ள சிறிய ரயில்
பெட்டியாக இருந்தாலும் இந்தக் காலத்திலே
மூன்று பேர் மட்டும் அதில் பிரயாணம் செய்வது
நம்ப முடியாத ஒரு சம்பவம். எப்படியோ அன்று

அந்தச் சிறிய பெட்டியிலே அவர்கள் மூவர் மட்டும் சென்று கொண்டிருந்தார்கள். முருகப்பசாமியும் இளங்கீரனும் தங்கள் படுக்கைகளை இரண்டு பெஞ்சுகளிலும் தாராளமாக விரித்துப் போட்டுப் படுத்து படியே பேசிக்கொண்டிருந்தார். அந்த மூன்றாவது மனிதர் இளங்கீரனின் கால்மாட்டிலே ஒதுங்கி உட்கார்ந்துகொண்டிருந்தார்.

நண்பர்களின் விவாதம் மேலே கூறியவாறு தடைபட்டுச் சற்று நேரம் அமைதி நிலவியது. அவர்கள் பேசாமலிருப்பதைக் கண்டு அந்த மீசை தாடியார் மேலும் சொன்னார்: "முன்பெல்லாம் எனக்கும் நம்பிக்கையிலே கொஞ்சங்கூட நம்பிக்கை கிடையாது. ஆழ்ந்த நம்பிக்கையிருந்தால் எதிர் பார்க்க முடியாத பலன்களையெல்லாம் பெறலாம் என்று யாராவது அந்த நாளிலே கூறினால் நான் விழுந்து விழுந்து சிரிப்பேன். ஆனால், ஒரு திருட னுடைய வரலாற்றை அறிந்தது முதல் எனக்கு என் கொள்கையிலே சந்தேகம் உண்டாய்விட்டது. அத னால்தான் நம்பிக்கை ஒரு பெரிய புதிர் என்று கூறி னேன்."—இவ்வாறு அவர் சொல்லி முடிப்பதற்குள் "திருடனைப்பற்றிய வரலாறு? அது என்ன?" என்று இரண்டு நன்பர்களும் ஒரே சமயத்தில் ஆவலோடு கேட்டார்கள். திருடன் என்றவுடனே அவனை பற்றி அறிந்துகொள்ள வேண்டுமென்று அவர்களுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது.

"ஆமாம்; திருடனைப்பற்றிய செய்திதான். நம் பிக்கையைப்பற்றி நான் முன்புகொண்டிருந்த எண் ணத்தை அவனுடைய வாழ்க்கை வரலாறு குலைத்து விட்டது" என்றார் அந்த மனிதர்.

"அவனைப்பற்றி எங்களுக்குச் சொல்ல வேண் டும்" என்றார் முருகப்பசாமி.

"நீங்கள் கேட்கிறதாயிருந்தால் சொல்லத் டையில்லை. எனக்கும் மதுரை போகும்வரையில் ங்காமலிருக்க உதவியாக இருக்கும்" என்று அவர் மதம் தெரிவித்தார்.

"மதுரையில் இறங்கப் போகிறீர்களா ?" என்று ளங்கீரனர் கேட்டார்.

"ஆமாம் ; எங்கே தூக்கம் வந்து ஏமாந்து ாகுமோ என்று கவலையாயிருக்கிறது. இரவு ரத்திலே பிரயாணம் செய்வதென்றால் இதுதான் தால்லை" என்று பதில் சொன்னார் அந்த மீசை டியார்.

"சரி, ரொம்ப நல்லதாயிற்று. திருடன் தையைச் சொல்லுங்கள். உங்களுக்கும் தூக்கம் ராது ; நாங்களும் அதுவரையில் தூங்கப் போவ ல்லை" என்று மீண்டும் திருடன் கதையை நினைப் டினார் முருகப்பசாமி.

அந்த மனிதர் ஆரம்பித்தார். "உங்களுக்குத் நடர்களைப்பற்றி அதிகமாகத் தெரியாதிருக்கலாம். பாதுவாகத் திருடன் என்றால் எல்லோருக்கும் பம் உண்டாகிறது ; அவனைப் பெரிய அரக்கன் ன்றும், அசாதாரணமான வல்லமையும் துணிச்ச மும் உடையவன் என்றும் பலர் நினைக்கிறார்கள். னக்கென்னவோ அப்படித் தோன்றவில்லை. அவ மும் நம்மைப்போல் மனிதன்தானே? நமக்கிருக்கும் டியான பொதுவான தன்மைகளெல்லாம் அவ க்கும் இருக்கும். எல்லாத் திருடர்களைப்பற்றியும் ச்சயமாக நான் கூற இயலாதென்றாலும் ராம மியைப்பற்றி நான் நிச்சயமாகப் பேச முடியும்."

"யார் அந்த ராமசாமி ? அவன் திருடன் ?" னறு இளங்கீரனர் இடைமறித்துக் கேட்டார்.

"ஆமாம் ; அந்தத் திருடன் பெயர் ராமசாமி ான். அவனைப்பற்றியே நான் சொல்லப் போகி

றேன்" என்று மீசை தாடியார் பதில் கூறிவிட்டுத் தமது கதையைத் தொடர்ந்தார் :

"திருட்டிலே ராமசாமி பலே கெட்டிக்காரன். எந்த வீட்டிலும் சாமர்த்தியமாக கை வைத்து விடுவான். எவ்வளவு காவல் இருந்தாலும் அவனுக்கு லட்சியமில்லை. எல்லோரையும் ஏமாற்றிவிட்டு உள்ளே புகுந்து கொள்ளையடித்துவிடுவான். ஜனங்களுக்கு அவனிடத்திலே ஒரே பயம். நினைத்தால் அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான் என்று அவர்கள் நம்பினார்கள். போலீசார் அவனைப் பிடிக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அவன் பெயர் கூட யாருக்கும் தெரியாது. ஆனால், அவன் ஒரு மாயக்காரனென்றும், அவனிடத்திலே மக்களை மயக்கித் தூக்கத்தில் ஆழ்த்தும் சொக்குப்பொடி இருக்கிறதென்றும் எங்கு பார்த்தாலும் வதந்திகள் பரவியிருந்தன. உண்மையில் அவனிடம் மந்திரமும் கிடையாது ; மாயப் பொடியும் கிடையாது. அவனிடம் இருந்தது ஒன்றே ஒன்றுதான். அதுதான் நம்பிக்கை. அந்த நம்பிக்கையின் வலிமையால் அவன் யாரிடமும் சிக்காமல் கொள்ளையடித்து வந்ததாக அவனே கூறுவான்.

"சங்கிலிக் கறுப்பண்ணன் என்ற தேவதையைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா ? அந்த தேவதை மிகவும் சக்தி வாய்ந்ததென்று எல்லோரும் பேசிக்கொள்வார்கள். சின்னக்காரியூர் சங்கிலிக் கறுப்பண்ணன் என்றால் நினைத்தது முடியும் என்று சொல்லுகிறவர்கள் பலர். அந்தத் தேவதையிடத்திலே ராமசாமிக்கு அபார நம்பிக்கை இருந்தது. கொள்ளையடிக்கிற பொருளிலே சரியாகக் கால் பங்கை அவன் அதற்குக் காணிக்கையாக வைத்து விடுவான். காணிக்கையைச் செலுத்துவதற்கு முன்பு

ஒரு சல்லிக் காசைக்கூட அவன் தன் வீட்டிற்குக் கொண்டுவரமாட்டான்.

"சங்கிலிக் கறுப்பண்ணனுடைய கோயில் பக்கம் இரவு நேரத்தில் யாருமே போகமாட்டார்கள். காடுகளின் மத்தியிலே அது ஊரைவிட்டுத் தள்ளித் தனியாக இருந்தது. அங்கே நாட்டப் பெற்றிருக்கும் பெரிய பெரிய வேல்களிலுள்ள மணிகள் இரவெல்லாம் கலகலவென்று ஒலிக்குமென்றும், செங்கல்லாலும் காரையாலும் உருவாக்கபபட்டிருக்கும் பூதாகாரமான குதிரை வாகனங்கள் கர்ஜனை புரியுமென்றும் மக்கள் கூறுவதுண்டு. அதனல் அந்தப் பக்கத்திற்கே இரவில் ஒருவரும் காலெடுத்து வைப்பதில்லை. ராமசாமிக்கு இது வசதியாக இருந்தது. இருட்டு நேரத்திலே அவன் அங்கு சென்று சங்கிலிக் கறுப்பண்ணனுக்கு முன்னல் தான் திருடிவந்த பொருள்களில் கால் பாகத்தைக் காணிக்கையாக வைத்துவிடுவது வழக்கம். அந்த தேவதைக்கு இவ்வாறு கால் பங்கு கொடுப்பதாலேயே அவன் ஒரு நாளும் யாரிடமும் அகப்பட்டுக்கொள்ளாமல் தனது தொழிலை நடத்தி வருவதாக உறுதியாக நம்பியிருந்தான்.

"இந்தத் தொழிலிலே அவனுக்கு ஒரு கூட்டாளி உண்டு. தெய்வத்திற்குக் கால் பங்கு கிடைக்கிறது போல் அவனுக்கும் கால் பங்கு உண்டு."—இப்படி அந்த மனிதர் சொல்லி முடிக்குமுன், "ஏன் அவனுக்கு கால் பங்கு? கூட்டாளி என்றல் சரிபாதி கிடைக்க வேண்டாமா?" என்று குறுக்கிட்டார் இளங்கீரனர்.

"அந்தக் கூட்டாளி ராமசாமியோடு சேர்ந்து திருடப் போவதில்லை. எந்த வீட்டிலே, எந்த சமயத்திலே கை வைக்கலாமாமென்பது பற்றிச் சரியான உளவறிந்து சொல்லுவதோடு அவன் வேலை முடிந்து விடும். குடும்பங்களின் பொருள் நிலை பற்றியும்,

வீடுகளின் அமைப்பைப்பற்றியும் தெளிவான விவ
ரங்கள் அறிந்து கூறுவதிலே அவன் சமர்த்தன்
இப்படி உளவறிந்து வருவதற்காக அவனுக்குக் கால்
பங்கு கிடைத்தது'' என்று விளக்கம் கூறினார் கதைக்
காரர்.

ஆனால் இளங்கீரனுக்கு அது முழுத் திருப்தி
யளிக்கவில்லை. ''சாமர்த்திபமாக யாரும் சந்தேகிக்
காமல் உளவறிந்து வருவதுதானே முக்கியம்? அதை
செய்துவிட்டுப் பிறகு திருட்டுக்குக் கூடப்போகாமல்
தனக்கு உரித்தான சரிபங்கில் பாதியை இழப்பது
எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது?'' என்று அவர்
தமது ஐயப்பாட்டை வெளியிட்டார்.

அதற்குச் சமாதானம் கூறுகிறார் அந்த மனிதர்.
''அந்தக் கூட்டாளியைப்பற்றி ஒரு விஷயத்தை நான்
உங்களுக்கு இதுவரை சொல்லவில்லை; அதனால்தான்
இந்த சந்தேகம் தோன்றியிருக்கிறது. அதாவது
ராமசாமியின் கூட்டாளி ஒரு நொண்டி. அவன்
பிச்சைக்காரனைப்போல வீடு வீடாகச் சென்று உள
வறிந்து வந்தான். அவன் நொண்டியாக இருந்தது
இந்தக் காரியத்திற்குப் பெரிதும் உதவியாக இருந்
தது. நொண்டி என்று மக்கள் அவனிடம் சற்று
அதிகமாக இரக்கம் காட்டினார்கள். ஆனால் அவனை
கொள்ளையிலே நேரடியாகப் பங்கெடுத்துக்கொள்ள
இயலவில்லை. சுவரில் ஏறிக் குதிக்கவும், அவசியமான
போது ஓட்டம் பிடிக்கவும் நொண்டியால் முடியுமா

''அப்படியானால் சரி; அந்த நொண்டியின் பெயர்
என்ன?'' என்று முருகப்பசாமி தமது மௌனத்தைக்
கலைத்தார்.

'அவன் பெயர் உங்களுக்கு எதற்கு? அவனை
நொண்டியென்றே குறிப்பிடலாம்'' என்று கூறி
விட்டு, அந்த மனிதர் கதையை மேலே தொடர்ந்
தார்

"அந்த நொண்டிக்கு நம்பிக்கை என்பது துளி டக் கிடையாது. உளவறிவதில் தனக்குள்ள திற மையிலே அவனுக்கு நம்பிக்கை உண்டு; கொள்ளை டிப்பதில் ராமசாமிக்கிருந்த சாமர்த்தியத்திலே வனுக்கு நம்பிக்கை உண்டு. ஆனால் தெய்வத்தினி த்திலே அணுவளவும் நம்பிக்கை கிடையாது. கால் ங்கு காணிக்கை செலுத்தினால் திருட்டுப் பலிப் தற்கு சங்கிலிக் கறுப்பண்ணன் உதவி புரிவார் ன்ற நம்பிக்கையை அவன் கொஞ்சங்கூட ஏற்றுக் காள்ளவில்லை. ராமசாமிக்கிருந்த தெய்வ நம்பிக் கையைக் குலைப்பதற்கும் அவன் பல உபாயங்களைக் கையாண்டான். 'தெய்வமென்பதெல்லாம் வெறும் ரளி—திருட்டுக்கு உதவி புரிவதுதான் தெய்வமோ?' ன்று அவனையும் அவன் தெய்வத்தையும் கேலி செய்வான்.

"ஆனால் ராமசாமியின் நம்பிக்கை அவ்வளவு லபத்தில் அவனை விட்டொழிவதாகக் காணோம். நனது கூட்டாளி அறியாமையினால் பேசுகிறான் ன்று அவன் கருதினான். தொழிலிலே அவனுக்குத் துணிச்சலும், சமயோசித புத்தியும், எளிதிலே வெற்றியும் தெய்வந்தான் கொடுக்கிறதென்றும், அதற்குக் கால் பங்கு காணிக்கை செலுத்துவதிலே ஒருநாளும் தவறக் கூடாது என்றும் அவன் உறுதி பாக நம்பியிருந்தான். அந்த நம்பிக்கையை என்று இழக்கிறானோ அன்றே தனக்கு அழிவு வந்துவிடும் ன்பதும் அவன் கருத்து. ஒருநாள் இதைப்பற்றிக் கூட்டாளிகளுக்குள்ளே பலமான சொற்போர் தொடங்கியது."

'ஏண்டா, நீயோ திருடன்; உனக்குத் தெய்வ மேது?' என்று ஏளனமாகக் கேட்டான் நொண்டி.

'என்னையும் அந்தத் தெய்வந்தானே படைத் திருக்கிறது? அப்படியிருக்க எனக்கேன் இல்லாமல்

போகும்?' என்று ராமசாமி பதில் கேள்
விடுத்தான்

'நீ கொள்ளையடிக்கிறாயே, அந்த வீட்டுக்க
னையும் அந்த முட்டாள் தெய்வந்தானே பட
திருக்கிறது? ஒரு மகனைக் கொள்ளையடிக்க இன்னெ
திருட்டு மகனுக்குத் தெய்வம் உதவி செய்யுமா?'

'நம்பினவர்களுக்குத் தெய்வம் உதவி நிச்சய
செய்யும். எந்த மகன் தன்னிடத்திலே விசுவா
மாக இருக்கிறானே அவனுக்குத்தானே தந்தை அ
கூலம் செய்ய வேண்டும்?

'நேற்று நீ கன்னம் வைத்தாயே அந்த வீட்டு
காரனைப்பற்றி உனக்குத் தெரியுமா? நீ கால் பங்
தான் தெய்வத்திற்குக் கொடுக்கிறாய். அதுவ
வேறொருத்தருடைய சொத்து; ஆனால் அவன் த
னுடைய சொத்திலே சரி பாதியைக் கடவுளுக்கு
கொடுத்திருக்கிறான். நியாயமுள்ள கடவுள் என்
ஒன்றிருந்தால் அவனைக் கவனிக்காமல் நேற்
உனக்கு உதவி புரியுமா?' என்று உதாரணங் காட்
நொண்டி தனது கொள்கையை நிலைநாட்
முயன்றான்.

'நீ இப்படியெல்லாம் தெய்வத்தைக் கேவ
மாகப் பேசாமல் என்ன செய்வாய்? நொண்டிக்கு
கால் பங்கு அந்தத் தெய்வம் கொடுக்கிறதல்லவா
அதனால் உனக்கு இத்தனை கொழுப்பு' என்று ரா
சாமி கோபமாகப் பேசினான்.

'நான் என்னுடைய சொந்த சாமர்த்தியத்தினா
கால் பங்கு சம்பாதிக்கிறேன். உளவறிந்து வந்
நான் சொல்லாவிட்டால் உனக்குத் திருட்டு
பலித்துவிடுமா? எனக்குப் பதிலாக அந்தத் தெய்வ
உனக்கு உளவு சொல்ல வரட்டும் பார்க்கலா
என்று கொஞ்சம் தற்புகழ்ச்சியோடு நொண்டி
கூட்டாளி சொன்னான்.

'நீ உளவறிவதற்கும் அந்தத் தெய்வந்தான் ணை புரிகிறது. உன்னை நொண்டியாக அதற்குத் ான் செய்திருக்கிறது. நீ தெய்வத்தை நம்பாதபடி ட்டாள் என்றாலும் உன்னுடன் சேர்ந்திருக்கும் னக்காக அது உனக்கும் கருணை காட்டுகிறது' ன்றான் ராமசாமி.

"இம்மாதிரி தர்க்கம் செய்து ராமசாமியின் ம்பிக்கையைப் போக்கமுடியாதென்பதை நொண்டி ாளடைவில் தெரிந்துகொண்டான். அவன் குருட் த்தனமாக நம்பிக்கை கொண்டிருக்கிறான்; அதன் க்கத்திலே செல்வதற்கும் அவனுடைய பகுத்தறிவு ஞ்சுகிறது. அதனால் அவனை வேறு விதத்திலே டக்க வேண்டுமென்று நொண்டி யோசித்தான். வனுக்கு ராமசாமியின் நம்பிக்கையைக் குலைப் தில் ஒரு தனி ஆர்வம் பிறந்துவிட்டது. தனக்கு வர வேண்டிய பங்குதான் சரிவரக் கிடைக்கிறதே, அவன் தோடு திருப்தியாக இருக்கக் கூடாதா? அவனால் து முடியவில்லை. அவன் கருத்தை ராமசாமி ற்றுக்கொள்ளவில்லை யல்லவா? அவனை எப்படி ாவது நம்பிக்கை இழக்கும்படி செய்து தனது அறி ன் மேன்மையை ஸ்தாபிக்கவேண்டும் என்ற வெறி நொண்டியைப் பிடித்துக்கொண்டது. எப்படி தைச் செய்து முடிக்கலாம் என்று அவன் பலவாறு ண்ணமிடலானான். கடைசியில் அவனுக்கு ஒரு நல்ல யாசனை உதயமாயிற்று. அதைச் செயல் முறையில் காண்டு வருவதற்கு அவன் சமயம் பார்த்து ஒரு ாள் ராமசாமியிடம் போனான்.

'நேற்று நீ சங்கிலிக் கருப்பண்ணனுக்குக் காணிக் கையாக வைத்தாயே, அந்தப் பொருளையெல்லாம் ார் எடுத்துக்கொண்டு போனார்கள் தெரியுமா?' ன்று மெதுவாக அவன் ஆரம்பித்தான்.

'யார் எடுத்துக்கொண்டு போனாலும் அதைப் ற்றி எனக்குக் கவலையில்லை. நான் ஒழுங்காகத்

தெய்வத்திற்குக் கால்பங்கு செலுத்திவிட்டேன்' என்று பிகுவாகப் பதில் கொடுத்தான் ராமசாமி.

'யார் எடுத்துக் சொண்டாலும் உனக்குச் சம்ப தந்தானே? அப்படியானால் சரி; நீ வழக்கம்போல் உனது கடவுளுக்குக் கால் பங்கு செலுத்திவிடு. நீ கோயிலிலிவிட்டு வந்தவுடன் நான் அதை எடுத்துக் கொள்ளுகிறேன். எனக்காக நீ தனியாக மற்றொரு கால் பங்கு கொடுக்க வேண்டியதில்லை. அதுவே எனக்குப் போதும்?' என்று நொண்டி வலையை விரித்தான்.

"ராமசாமி உடனே பதில் சொல்லவில்லை ஆனால் இந்த யோசனை அவன் மனதிலே புகுந்து வேலை செய்யத் தொடங்கி விட்டது என்பதை நொண்டி அறிந்துகொண்டான். அதுதானே அவன் விரும்பியது? அவன் ராமசாமியை அப்பொழுதே பதில் கூறுமாறு வற்புறுத்தாமல், 'நீ நிதானமா ஆலோசித்துப் பிறகு சொல். நான் சொன்னபடி செய்வதானால் நீ கடவுளுக்குக் காணிக்கை செலுத்து வதில் தவற வேண்டியதில்லை. அதே சமயத்தி உனக்கு ஒரு கால் பங்கு அதிகம் கிடைக்கிறது; எனது வழக்கம்போல என் பங்கு வந்துவிடுகிறது கோயிலில் எறிந்துகிடக்கும் பொருள்களை எவனுவ சுருட்டிக்கொண்டு போவதற்குப் பதிலாக நா எடுத்துக்கொள்கிறேன் அவ்வளவுதான்' என் விளக்கம் செய்துவிட்டுப் பேச்சை நிறுத்தி கொண்டான்.

"அன்று சாயங்காலம் வரையில் ராமசாமி சி தனையில் மூழ்கியிருந்தான். தனது நம்பிக்கையையு இழக்க வேண்டியதில்லை; அதே சமயத்தில் கால்பங் கொள்ளைப் பொருளும் அதிகமாக அவனுக்கே கிடைக்கும்—இந்த ஆசையை அவனால் சுலபமாக தள்ள முடியவில்லை. இப்பொழுது அவனுடை

சலவுகளும் பலவழிகளில் பெருகிக்கொண்டிருந்தன. தனால் எத்தனை வந்தாலும் வந்ததுபோலவே போய்விடும். இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்து ராமசாமி கடைசியாக நொண்டியின் ஏற்பாட்டிற்கு இணங்கிவிட்டான்.

"நொண்டிக்கு அது ஒரு பெரிய வெற்றியாகத் தான்றியது. தனது அறிவு நுட்பத்தை நினைத்து நினைத்து அவன் உள்ளம் பூரித்தான். சில காலம் வரை ராமசாமியின் மனத்திலே அவனது செய்கை யைப் பற்றிப் போராட்டம் இருந்தாலும் பின்னல் எல்லாம் சரியாகிவிட்டது. ராமசாமி பழையபடி நெஞ்சமும் நெஞ்சிலே குறுகுறுப்பில்லாமல் தனது தோழிலிலே ஈடுபட்டான்.

"ஆனல் நொண்டியின் பாடுதான் திண்டாட்ட தற்கு வரத் தொடங்கியது. ராமசாமி ஒழுங் ராகக் கால்பங்கு கொள்ளைப் பொருளை சங்கிலிக் றுப்பண்ணனுக்குச் செலுத்திஞலும் அவனும் நொண்டியும் சேர்ந்து கடவுளை ஏமாற்றுவதை உள் நுக்குள்ளே அறியாமலில்லை. அது சிறுகச் சிறுக அவ னுடைய நம்பிக்கையைச் சிதைக்கலாயிற்று. கடவு நுக்குக் காணிக்கை செலுத்துவது வெறும் பாவனை ராக முடிந்துவிட்டதை அவன் தெளிவாகக் கண் டான். கோயிலுக்குச் சென்று கடவுளுக்கு எதிரிலே அவன் காணிக்கை வைத்துவிட்டு வெளியேறுவதும், உடனே அவனுடைய கூட்டாளி உள்ளே சென்று அதை எடுத்துக் கொள்வதும் தெய்வத்தை ஏமாற் றும் வித்தையென்று அவன் உணர்ந்தான். அப்படி இருந்தும் அவனுக்குத் திருட்டுப் பலித்துக்கொண்டு தான் இருந்தது. அதனல் நொண்டி கூறியதுபோல தெய்வநம்பிக்கை யெல்லாம் வெறும் முட்டாள் தனம்தானு என்று அவன் தீவிரமாக எண்ணமிட லானுன். ஒவ்வொரு தடவையும் அவன் கொள்ளை

யடித்துவிட்டு வெற்றியுடன் வரும்போது இந்த எண்ணம் வலிமையடைந்து கடைசியில் அவன் நம்பிக்கையை முற்றிலும் இழந்துவிட்டான்.

"அதன் விளைவாக அவன் காணிக்கை செலுத்துவதில் அசிரத்தை காட்டலானான். முன்பெல்லாம் கால்பங்கு கணக்காகச் செலுத்தியவன் இப்பொழுது இஷ்டம்போல் ஏதாவது வைப்பதென ஆரம்பித்துவிட்டான். ஒரு கையால் காணிக்கை செலுத்தி மறறொரு கையால் எடுத்துக் கொள்வதற்கு எவ்வளவு செலுத்தினால் என்ன என்று அவன் கருதினான். அவன் காணிக்கை செலுத்துவதும் நொண்டி அதை எடுத்துக் கொள்வதும் அப்படித்தான் அவனுக்குத் தோன்றியது. தெய்வ நம்பிக்கை இருந்தபோது அவன் கணக்கில் தவறியதில்லை. தெய்வத்திற்குக் கால்பங்கு பிரிப்பதுபோலவே கூட்டாளிக்கும் சரியாகப் பங்கு பிரித்து வந்தான். இப்பொழுது தெய்வத்தையே ஏமாற்றும்போது அந்த நொண்டியைப் பற்றி அவன் கவலைப்படுவானா? அதனால் நொண்டியின் வருவாய் வரவரக் குறையத் தொடங்கிற்று. அவன் உண்டாக்கிய சூழ்ச்சி அவனுக்கே பாதகமாக முடிந்தது. அவனுக்கு என்ன செய்வதென்று புலப்படவில்லை. முன்புபோல ஒழுங்காகத் தனது பங்கைப் பெற வழிகாண முடியுமா என்று அவன் பலவாறு ஆலோசனை செய்தான். ஒரு வழியும் அவனுக்குப் புலப்படவில்லை. நம்பிக்கையைப் போக்கடிக்கிறவனுக்கு அது தெய்வங்கொடுக்கும் தண்டனையோ என்றுகூட அவன் சந்தேகிக்கலானான். அந்த சந்தேகத்தைக் கண்டு அவனுக்கே சிரிப்பு வந்துவிட்டதே, அது பலவீனத்தின் அறிகுறி என்று அவன் தன்னைத்தானே திடப்படுத்திக்கொண்டு மேலும் ஆலோசனையில் ஆழ்ந்தான். பலநாள் ஆலோசனையின் பின் அவன் ராமசாமியிடம் நயமாகப் பேசி நிலைமையைச் சமாளிப்பதென்ற முடிவுக்கு வந்தான்

'ராமசாமி, கொள்ளைப் பொருளைப் பங்கு போடும்போது நானும் உனக்கு உதவி செய்யட்டுமா?' என்று மெதுவாகக் கேட்டான்.

'உன்னுடைய உதவி தேவையில்லை. இத்தனை நாட்களும் நான் தனியாகத்தானே பங்கு பிரிக்கிறேன்; இப்பொழுது நீ எதற்கு?' என்று ராமசாமி கொஞ்சம் சூட்டோடு பதில் சொன்னான்.

'தெய்வத்திற்குப் பிரிக்கும் பங்கில் தவறு வராமல் இருக்க வேண்டுமென்றுதான் சொன்னேன்; வேறென்றுமில்லை' என்று மழுப்பினான் நொண்டி. இருந்தாலும் அவன் கூறியதின் உட்கருத்து ராமசாமிக்குத் தெரியாமல் போகவில்லை.

'தெய்வத்தைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். அதை நான் பார்த்துக் கொள்ளுகிறேன்' என்றான் அவன்.

"அதில் ஏதாவது தவறு நேர்ந்தால் தெய்வம் பொறுக்காது என்பதற்காகத்தான் சொன்னேன்' என்று நொண்டி மேலும் பேசினான்.

'தெய்வத்தைப்பற்றி உனக்கென்னடா தெரியும்? உனக்குத்தான் அதில் நம்பிக்கையில்லையே?' என்று ராமசாமி கேலி செய்தான்.

"நொண்டியின் வாய் அடைத்துப் போய் விட்டது. ஆனால், அவன் உள்ளம் குமுறியது. தன்னை ஏமாற்றத் தொடங்கியிருக்கும் அந்தத் திருடனுக்கு நல்ல பாடம் கற்பிக்க வேண்டுமென்று புதியதோர் ஆத்திரமுண்டாயிற்று. அடுத்த முறை திருடும்போது அவனைக் காட்டிக் கொடுத்துவிடுவதென நொண்டி முடிவு செய்துவிட்டான்.

"சங்கிலிக் கறுப்பண்ணனுக்குத் தினசரி பூசை செய்ய ஒரு பூசாரி இருந்தான். அவன் மகா உலோபி. விடிவதற்குச் சற்று முன்னதாகவே அவன் கோயிலுக்குக் காலைப் பூசை செய்ய வரும்போது முன்பெல்

லாம் பல சமயங்களில் கறுப்பண்ணனுக்கு ராமசாமி செலுத்திவந்த காணிக்கைப் பொருள்கள் கிடைத்து வந்தன. தனது வேண்டுகோளுக்கு இரங்கித் தெய்வமே அவற்றைக் கொடுப்பதாக அவன் நம்பியிருந்தான். அதனால் அவன் கறுப்பண்ணனுக்கு அதிக உபசாரத்தோடு பூசை செய்து வந்தான். ஆனால், நொண்டியின் ஆலோசனைப்படி காணிக்கை செலுத்துவதிலே புதிய ஏற்பாடு அமலுக்கு வந்ததிலிருந்து அவனுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. பூசாரிக்கு இது ஏமாற்றமாக முடிந்தது. கொஞ்சங் கொஞ்சமாக அவனுக்கு சங்கிலிக் கறுப்பண்ணன்மேல் வெறுப்பும் கோபமும் உண்டாயின. ஒருநாள் அவன் தான் பூசை செய்யும் கடவுளை அதன் எதிரில் நின்று கொண்டே நிந்தனை செய்வதை நொண்டி தற்செயலாக மறைவிலிருந்து கேட்டான். 'பழையபடி எனக்குப் பொன்னும் பொருளும் கொடுக்காவிட்டால் உனக்குப் பூசை செய்வதை நிறுத்தி விடுவேன். இன்னும் மூன்றே நாட்கள்தான் பொறுத்திருப்பேன். அதற்குள் எனக்கு ஒன்றும் கிடைக்கவில்லையென்றால் உன் தலையை உடைத்தெறிந்து நீ வெறும் கல்லென்று எல்லோருக்கும் தெரியும்படி செய்வேன்' என்று அவன் சொன்னதைக் கேட்டு நொண்டி ஆச்சரியமடைந்தான். இவ்வளவுக்குட அந்தப் பூசாரி தனக்குக் கிடைக்கும் பொருள்களை அனுபவிக்கிறான் என்றால் அதுவும் இல்லை. அவற்றை எடுத்துப் பார்ப்பதிலும் மறுபடியும் வீட்டிற்குள்ளே பத்திரமாகப் பூட்டி வைப்பதிலும்தான் அவனுக்கு இன்பம். எத்தனை பொருள்கள் இருந்தாலும் அவற்றோடு இன்னும் புதிய பொருள்களைச் சேர்த்து பார்ப்பதிலே அவனுக்கு ஒரு அலாதியான திருப்தி

"அந்தப் பூசாரியின் மேலே நொண்டிக்கு ஒரு விஷேதமான வெறுப்பேற்பட்டது. தெய்வம் தெய்வம் என்று சொல்லி மக்களை ஏமாற்றுவதோடு

அந்தத் தெய்வத்தையே மிரட்டி அதனிடம் பொருள் வாங்கப் பார்க்கிறானே அவனுக்கு என்ன திமிர் என்று நொண்டி கோபங்கொண்டான். ஆதலால் ராமசாமியிடம் அவனுடைய வீடு கோயிலுக்குப் பக்கத்தில் தனியாக இருப்பதையும் அவனிடம் ராளமான பொருள் உண்டென்பதையும் கூறி மறு நாளே திருட்டுக்கு ஏற்பாடு செய்துவிட்டான். அதே சமயத்தில்போலீசுக்கும் துப்புக் கூறிவிட்டான். ஒரே அடியில் ராமசாமியையும் பூசாரியையும் தண்டிக்க வேண்டுமென்பது அவன் ஆவல். பிறகு கெட்பானேன்? மறுநாள் இரவு நடந்த கொள்ளை யிலே ராமசாமி பூசாரியின் வீட்டில் புகுந்து பல பொருள்களைச் சுருட்டிக்கொண்டு வெளியேறும் போது போலீசாரிடம் அகப்பட்டுக் கொண்டான். அவனுக்கு எட்டு வருஷம் கடுங்காவல் தண்டனை கிடைத்தது. திருட்டுப் பொருள்களை வைத்திருந்த தால் பூசாரிக்கும் சிறைவாசம் ஏற்பட்டது" என்று கூறிவிட்டு அந்த மீசை தாடிக்காரர் ஜன்னலின் வழியே வெளியே எட்டிப் பார்த்தார். தூரத்திலே மின்சார விளக்குகள் நக்ஷத்திரங்கள்போல் தோன்றின.

"இந்தக் கதையின் மூலம் என்னுடைய கட்சி தான் வலிவடைகிறது. ராமசாமி அந்த நொண் டிக்குத் துரோகம் நினைத்ததால் அகப்பட்டானே ழிய தெய்வ நம்பிக்கையை இழந்ததாலல்ல. ம்பிக்கை இழந்த பிறகும் அவன் சில தடவை திருட்டிலே வெற்றியடைந்திருக்கிறானல்லவா?" ன்று இளங்கீரனர் உற்சாகத்தோடு கேட்டார்.

"நானும் முதலில் அவ்வாறுதான் நினைத்தேன். ஆனால் ராமசாமி நீதிஸ்தலத்திலே கடைசியாகக் றிய வார்த்தைகள் எனது அபிப்பிராயத்தை மாற்றிவிட்டன. அவன் போலீசாரிடம் பிடிபட்ட

விதம் எனக்குப் பல நாட்கள் வரையில் ஒரு விந்தையாகத் தோன்றிற்று. ஏனென்றால் போலீசார் அவனைக் கைப்பற்றச் செய்த முயற்சி அவ்வளவு கேவலமாக இருந்தது. அவன் வெகு சுலபமாக அவர்களிடமிருந்து அன்று தப்பிப் போயிருக்க முடியும். அவனுடைய சாமர்த்தியத்திற்கு அது பெரிய காரியமே அல்ல. இருந்தாலும் அவன் கால் கை வராதவன் போலப் போலீசாரிடம் எளிதில் அகப்பட்டு விட்டான். அதன் காரணத்தை அவன் நீதிஸ்தலத்திலே எடுத்துச் சொன்னான். தெய்வ நம்பிக்கை போன பிறகும் அவன் அதுவரை தெய்வத்திற்குக் கொஞ்சமாவது காணிக்கை செலுத்தி வந்தான். ஆனால் பூசாரி வீட்டுக்குத் திருடப் போகுமுன்பே இனிமேல் தெய்வத்திற்கென ஒரு துரும்பும் கொடுப்பதில்லை என்று முடிவு செய்திருந்தானாம். அதை உணர்ந்துதான் தெய்வம் அன்று போலீசைத் தன் முன்பு நிறுத்தியதென்றும், தன் மனத்திலே பீதியை விளைவித்துக் கை கால் ஓடாமல் செய்து விட்டதென்றும், இவற்றிற்கெல்லாம் அடிப்படையான காரணம் தான் நம்பிக்கை இழந்ததே என்றும் அவன் கூறினான்.) அவன் கூறியது மெய்தான். நம்பிக்கை சரியோ தப்போ அந்த நொண்டிமட்டும் அவனுடைய நம்பிக்கையைக் குலைப்பதற்கு வழி காணுமலிருந்திருந்தால் அவன் நிச்சயமாக அன்று போலீசாரிடம் அகப்பட்டிருக்கமாட்டான்" என்றார் அந்த மனிதர். அவர் பேசி வாய் முடுமுன், "நொண்டிக்குத் துரோகம் நினைத்திராவிட்டால் போலீசே அங்கு வந்திருக்காதே?" என்று இளங்கீரனர் கேள்வி போட்டு மடக்கினர்.

"அதுவும் மெய்தான். ஆனால் ஒரு விஷயம் நீங்கள் கவனிக்கவேண்டும். ராமசாமியைக் காட்டிக் கொடுப்பதால் நொண்டிக்கு எந்தவிதமான அனு

கூலமுமில்லை. அவனைப்போல் மறுபடியும் நொண்டிக்கு ஒரு கூட்டாளி கிடைப்பது அரிது. அவனிடம் சமாதானமாகப் பேசி எப்படியாவது ஓரளவு பங்கு பெறுவதிலேதான் அவனுக்கு லாபமிருக்கிறது. இந்த விஷயம் நொண்டிக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும் அவன் ராமசாமியைக் காட்டிக் கொடுக்கவே நினைத்திருந்தான். அதுவும் ராமசாமி இனிமேல் தெய்வத்திற்குப் பங்கே கொடுப்பதில்லை என்று முடிவு செய்த அதே சமயத்தில் ஏற்பட்டிருக்கிறது. நொண்டியை அவ்வாறு நினைக்கும்படி செய்தது ராமசாமியைக் கைவிட்ட தெய்வந்தானே என்று அவன் தீவிரமாகச் சந்தேகப்படலானான். அவன் முன்பு போல இப்பொழுது தெய்வத்தைப் பழிப்பதில்லை. அதனால்தான் நம்பிக்கை ஒரு பெரிய புதிர் என்று எனக்குத் தோன்றுகிறது'' என்று மீசைதாடிக்காரர் கதையை முடித்தார். ரயிலும் வேகம் தணிந்து நிற்கத் தொடங்கிற்று

''மதுரை வந்துவிட்டது. நான் போய் வருகிறேன்'' என்று அவர் தமது கைப் பையையும், துணி மூட்டையையும் எடுத்துத் தோளில் வைத்துக் கொண்டு ரயிலை விட்டிறங்கி நடக்கலானார். அது வரையிலும் யோசனையில் ஆழ்ந்து மௌனமாக இருந்த நண்பர்கள் வெளியே எட்டிப் பார்த்தார்கள். அந்த மனிதர் நொண்டி நொண்டி நடந்து ஜனத்திரளில் மறைவது அவர்கள் கண்களில் பட்டது.

''கைப்பெட்டிகளெல்லாம் பத்திரமாக இருக்கிறதா என்று பார்'' என்று சட்டென்று இளங்கீரனர் கூறினர்.

''அந்த நொண்டி திருடுவானென்று நான் நம்பவில்லை'' என்றார் முருகப்பசாமி.

''எதற்கும் ஒரு தடவை பார்த்துவிடுவோம்'' என்றார் இளங்கீரனர்.

மதி மது மயக்கம்

ஆற்றங்கரையிலே நல்ல வெண் மணற் பரப்பிலே படுத்துக்கொண்டு, முழு நிலவின் முத்துச் சுடர் போன்ற தண்ணிய வெண் மதுக் கிரணங்களை அனுபவித்திருக்கிறீர்களா? அரவமெல்லாம் அடங்கி உலகமே உறங்கிக் கொண்டிருக்கும் நள்ளிரவாக இருக்க வேண்டும். வானம் களங்கமில்லாது ஒரே நீலப் பட்டு விதானம்போல உற்றுற்று நோக்குந்தோறும் ஆழமும் நிறமும் அதிகரிக்கும்படியாக விரிந்திருக்க வேண்டும். அந்த நிலையிலே ஆற்றுக் கன்னியின் அணைப்பிலே அவளுடைய மெல்லிய இன்பப் பாட்டின் நறவம் காதுகளிற் பாய நிலவை அனுபவிப்பது பெரியதோர் பாக்கியம். எனக்கு அப்படிப்பட்ட வாய்ப்புச் சமீபத்திலே கிடைத்தது.

காவிரி ஆற்றை என்னுல் என்றுமே மறக்க முடியாது. சின்னஞ்சிறு பருவத்தில் அதன் கரைகளிலே உலாவித் திரிந்து நான் கட்டிய மனக்கோட்டைகளுக்கு அளவே இல்லை. கவிதைக் கனவுகள் எத்தனையோ அங்கே கண்டேன். ஆதலால் சமயம் கிடைத்தபோதெல்லாம் அதன் நீரருகே சென்று இயற்கை எழிலைக் கண்டு களிக்க நான் ஆவலோடு இருக்கிறேன். அந்த ஆவலினுல் உந்தப்பட்டு சமீபத்திலே ஒரு பௌர்ணமி இரவில் காவிரியின் வெள்ளி மணல் விரிப்பிலே நான் படுத்துக்கொண்டிருந்தேன்.

கொங்கு நாட்டிலுள்ள கொடுமுடி என்னுந் திருப்பதியைப்பற்றி அறிந்திருப்பீர்கள். அதிலிருந்து சுமார் ஆறு மைல் ஈரோட்டை நோக்கி வந்தால் அங்கே கோட்டை மாரியம்மன் கோயில் இருக்கிறது.

ப் பக்கத்திலே அது ~~பிரசித்தமான~~ கோயில். அருகிலே பச்சைப் பசேலென்று நெல் வயல் / கரையின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்த ப முதலிய காட்டு மரங்களும் நாணற் புதர் அழகிய காட்சியளிக்க, இயற்கையின் கன்னி ல் என்றும் மாறுதிருக்குமாறு வளம் சுரந்து ந்து நெளிந்தோடும் காவிரிக்கும் எனக்கும் னியோ வகையான நெருங்கிய தொடர்பு). உண்மையான தோழமையின் அமுதின்பப் க்கையும், உள்ளத்திலே அதனல் நிறைந்து ங்கும் மகிழ்ச்சிக் கிளர்ச்சியையும் அங்கேதான் ~~பரிபூரணமாகத்~~ துய்த்திருக்கிறேன்.

முழு நிலா தனது மோகன மந்திரச் சுடர்க் றகளை அள்ளி வீசிக்கொண்டிருந்த அந்த நள் லே நான் அங்கே தன்னந்தனியாக உலாவிக் ண்டிருந்தேன். எங்கும் அமைதி; எங்கும் ~~தூய்~~ எந்தவிதமான அரவமும் இல்லை. நடு லே ஆறு தூங்கும் என்று சொல்லுவார்கள். மெய்தான் போலிருக்கிறது. ஏனெனில் நீரிலே மே தெரியவில்லை! பாறைகளின்மீது புரண்டு ந்து சலசலக்கும் அந்த இடையறுத பண்ணிசை அந்த இடத்தில் கேட்கவில்லை. இடையிடையே லொன்று மட்டும் தன் காதலியை ஆர்வத்தோடு அழைக்கும் இன்குரல் வானவெளியில் மிதந்து து. நிலவென்னும் அமுத கலசத்திலிருந்து ங்கிப் பொழியும் பாற்கிரணங்களிலே குழைந்து ம் குயிலின் காதற் பேச்சைக் கேட்டிருக்கிறீர் ? ஆஹா! அதற்குத்தான் எவ்வளவு இனிமை! த்திலே உள்ள மரச் செறிவிலிருந்து அந்தக் லோசை கேட்கிறது. அதன் இனிய நாதத்திலே மதி மேலும் பெருகுகின்றது. நிசப்தம் பன் ங்கு அதிகரிக்கின்றது.

இன்னிசை குழைகின்றபோது தேன் கலந்த பால் போல வெண்ணிலவு சுவையேறிவிடும். அதன் இன்ப மயக்கத்திலே வெண்மணல் திடர்களும், தண்புனற் பரப்பும், வெண்பச்சைப் புகை படிந்ததுபோலத் தோன்றும் நாணற் புதர்களும், கரும் பச்சைப் பெரு மரங்களும் கட்டுண்டு அசைவற்றுக் கிடந்தன. நானும் அந்த நிலையிலேதான் மணல்மீது படுத்தேன்.

குயில்களிலே ஆணுக்குத்தான் அற்புதமான குரலெடுத்துப் பாடும் திறன் உண்டு. பெண் குயில் குகு-குகு-குகுவென்று குதப்பும். ஆண் குயிலினுடைய பாட்டின் வன்மைக்கு ஏற்றவாறு அதற்குக் காதலிகள் கிடைப்பார்கள் என்று கூறுவர். இப்பொழுது காதலுணர்ச்சி பொங்கப் பாடும் ஆணின் குரலில் ஒரு குயிற்பேடை சொக்கிப் போய் தன் மறைவிடத்தைக் குதலை மொழிகளால் வெளிப்படுத்திவிட்டது. அதை அறிந்த ஆண் குயிலின் உற்சாகத்தை என்னென்று சொல்வது! மேலும் மேலும் அது உச்ச ஸ்தாயியிலே பாடத் தொடங்கிற்று.

குயிலனும் குயிலியும் கிளை கிளையாகத் தாவி ஒன்றை ஒன்று நெருங்க, நெருங்க அவற்றின் காதல் கரை கடந்து அந்தப் பிரதேசத்தையே வெண்ணிலவில் கரைந்த மதன லோகமாக்கியது. "கலந்தவர்க் கினியதோர் கள்ளுமாய், பிரிந்தவர்க்குயிர்சுடு விடமுமாய்" என்ற கம்பனுடைய கவிதை வரிகள் திடீரென்று என் ~~மனத்~~ நெஞ்சத்திலே மலர்ந்தன.

மலர்ந்த கவிதையிலும், மலர்ந்த நெடு நிலவிலும், அதன் மயக்கிலும் கட்டுண்டு அசைவற்றுக் கிடந்த மணற் பரப்பிலும், காவிரிப் பெண்ணணங்கின் எழிலிலும் லயித்துப் போய் நான் மெய் மறந்திருந்தேன்.

எவ்வளவு நேரம் அவ்வாறு இருந்தேனோ தெரியாது. தண்ணீருக்குள்ளே யாரோ வேகமாகக்

காலெடுத்து வைக்கும் ஓசை என் இன்பக் கனவைக் கலைத்தது. நான் மெதுவாகத் தலையைத் தூக்கி ஓசை வந்த திசையிலே உற்று நோக்கினேன். ஓர் இள மங்கை காவிரியின் புனலூடே நடந்துகொண் டிருந்தாள். அசைவில்லாமல் படுத்திருந்தேனுதலால் அவள் என்னைக் கவனிக்கவில்லை என்று நான் அறிந்து கொண்டேன். அகாலத்தில் அவள் அங்கு வந்தது எனக்கு ஆச்சரியத்தையும் கலக்கத்தையும் உண்டு பண்ணியது.

முழங்காலளவு தண்ணீரில் அவள் நின்றாள். மேற்கு நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள். "கோட்டை மாரியம்மா, என்னை உன் பாதத்தில் சேர்த்துக்கொள். இனிமேல் இந்த வேதனையை என்னால் தாங்க முடியாது" என்று சோகங் கனிந்த குரலில் பிரார்த்தனை செய்தாள். எனக்கு அவள் எண்ணம் தெரிந்துவிட்டது. அவள் காவிரியில் விழுந்து தற்கொலை செய்துகொள்ள வந்திருக்கிறாள்.

நான் எழுந்து அருகே செல்வதற்குள் அவள் ஆற்றிற்குள் மேலும் இரண்டு மூன்று அடி வைத்து விட்டாள். நானும் வேகமாக ஓடினேன். ஆனால் குரல் எழுப்பவில்லை. சப்தம் செய்தால் அவள் விரைந்து ஆழமான இடத்தில் பாய்ந்துவிடுவாள் என்று எனக்குப் பயம்.

எப்படித் தண்ணீரில் தாவினேன், எப்படி அவளைப் பிடித்து மேலே இழுத்து வந்தேன் என் றெல்லாம் சொல்ல எனக்கே தெரியவில்லை. அந்த மங்கையை உயிருடன் மணல் மேட்டிற்குக் கொண்டு வந்தது என்னவோ உண்மை. காரியம் அவ்வளவு விரைவாக நடந்துவிட்டது.

அவளுக்கு வயது பதினெட்டு இருக்கலாம். இளமையும் வனப்பும் வாய்ந்த மங்கையாகக் காணப் பட்டாள். அவள் என்னை வெறுப்போடு பார்த்தாள்;

பிறகு தேம்பித் தேம்பி அழுதாள். "என்னை எதற்காக இப்படித் தடுத்தீர்கள்? சாகப் போனாலும் என் பாவம் என்னைத் தடுக்கிறதே!" என்று விம்மிக் கொண்டே அரற்றினாள்.

"ஏனம்மா, இப்படிச் சிறு வயசில் உயிரைப் போக்கிக்கொள்ள நினைக்கிறாய்? இது கடவுளுக்கு அடுக்குமா?" என்று நான் ~~கே~~துவாகக் கேட்டேன்.

"எத்தனை நாளைக்கு இந்தத் துன்பத்தைச் சகிக்க முடியும்? கொண்டவன் நல்லவனாக இல்லாவிட்டால் பெண்ணுக்கு இந்த உலகத்திலே சுகம் ஏது?" என்று அவள் ஏக்கத்தோடு கூறினாள்.

அவள் கழுத்திலே தாலி மின்னுவதைக் கவனித்தேன். கன்னத்தில் வழிந்த கண்ணீரைத் துடைக்க அவள் கையை மேலே தூக்கினாள். அந்தக் கை மணிக்கட்டு வரையில் தீய்ந்து கிடப்பது அப்பொழுதுதான் எனக்குத் தெரிந்தது. நான் திடுக்கிட்டு, "ஏனம்மா, கையில் என்ன?" என்று தடுமாற்றத்தோடு கேட்டேன். அவள் மறுபடியும் விம்மலானாள். அவளால் துக்கம் தாங்க முடியவில்லை. நான் சமாதானப்படுத்த முயன்றேன். கை வெந்து போயிருப்பதன் காரணத்தைச் சொல்லும்படி மேலும் வற்புறுத்தினேன்.

"'சாராயம் பெட்டியிலே இருக்கிறது, எடுத்து வா' என்று வீட்டுக்காரர் சொன்னார். நான் எடுத்துக் கொண்டு போக மறுத்தேன். அதனால் அவருக்குக் கோபம் வந்துவிட்டது. தாமே சென்று சாராயத்தை எடுத்துக் குடித்துவிட்டு அந்தக் குடிவெறியிலே இப்படிக் காரியம் செய்தார். 'இந்தக் கையா எடுத்து வரமாட்டேனென்றது!' என்று குழறிப்பேசிக்கொண்டு அடுப்பில் இருந்த கொள்ளிக் கட்டையை எடுத்து என் கையிலே வைத்தார்" என்று கூறிக்கொண்டே கோவென்று கதறினாள்.

எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. என்ன ஆறுதல் சொல்வதென்றும் படவில்லை. "இப்போது சாராயம் ஏது? மதுவிலக்குச் சட்டம் அமலில் இருக்கிறதே?" என்று ஏதாவது பேச்சுக் கொடுக்க வேண்டுமென்று கேட்டேன்.

"மதுவிலக்குச் சட்டம் இருந்து நாசமாய்ப் போச்சு! எங்கே பார்த்தாலும் கள்ளச் சாராயம் காய்ச்சுகிறார்கள். கேள்வியா முறையா?"

"ஏன், இதையெல்லாம் தடுக்கப் போலீஸ் இல்லையா என்ன? காங்கிரஸ் சர்க்கார் இருக்கும் போது இப்படியெல்லாம் நடக்காதே?"

"காங்கிரஸ்காரரை போலீசில் இருக்கிறார்கள்? பழைய ஆட்கள்தானே இருக்கிறார்கள்? போன தீபாவளியன்று மாரியம்மன் கோவிலில் நடந்தது. அந்தச் சமயத்திலே கள்ளச் சாராயம் விற்பனைக்கு வருவதைக் கண்டு பிடிப்பதற்காக சர்க்கார் அதிகாரிகள் ரொம்பப் பேர் வந்திருந்தார்கள். கடையில் என்ன நடந்தது? சாராயம் காய்ச்சுகிறவன் ஒருத்தனைக்கூடப் பிடிக்கவில்லை. சர்க்கார் ஆட்களிலே நாலுபேர் குடி வெறியிலே பாதையில் விழுந்து கிடந்தார்கள். ஊரே சிரித்துவிட்டது."

"இதையெல்லாம் ஒருவரும் மந்திரிகளுக்கு எழுதி அனுப்பவில்லையா? எழுதி அனுப்பினால் அவர்கள் நிச்சயம் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களே?"

"யார் எழுதிப் போடுவார்கள்? ஊரிலே உள்ள பெரிய பெரிய சீமான்களெல்லாம் கள்ளச் சாராயம் வாங்கிக் குடிக்கிறார்கள். சர்க்காருக்கு எழுதியதாகத் தெரிந்தால் அவர்களுடைய விரோதம்வரும். அப்படி விரோதம் வந்தாலும் பரவாயில்லை என்று தைரியமாக இருந்தாலும் எழுதிய விஷயம் உண்மை என்று

எப்படி ருசுப்படுத்துகிறது? பெரிய மனிதர்களுக்கு எதிராகச் சாட்சியம் கூற ஒருவருமே வரமாட்டார்கள். பிறகு பணக்காரர்களின் பகைதான் மிச்சம்.''

''காங்கிரஸ்காரர்கள் ஊரில் இருப்பார்களே; அவர்கள் இதைத் தடுக்க ஒன்றும் செய்வதில்லையா?''

''காங்கிரஸ்காரர் ஒழுங்காக இருந்தால் இத்தனை கஷ்டம் எதற்கு வருகிறது? எங்கள் வீட்டுக் காரரும் கதர்தான் கட்டுகிறார். காங்கிரஸ்காரர் என்றுதான் சொல்லிக் கொள்ளுகிறார்.''

''நீ சொல்லுவதைப் பார்த்தால் இந்த மதுவிலக்குச் சட்டமே கூடாது என்பது போலிருக்கிறதே?'' என்று பேச்சை வேறு விதமாக மாற்றினேன்.

உடனே அவள் தயங்காமல் பேசலானாள். ''நான் அப்படிச் சொல்லவில்லை. இந்தச் சட்டம் எனக்கு எத்தனையோ நம்பிக்கையை எல்லாம் உண்டாக்கிற்று. என்னைப் போலத் துன்பப்படும் ஆயிரக் கணக்கான பெண்கள் சுகவாழ்வு பெறுவார்கள் என்று நான் மகிழ்ச்சி அடைந்தேன். இப்படிச் சட்டம் கொண்டு வரத் தெய்வமே தூண்டியிருக்க வேண்டும் என்று நான் இன்றும் நினைக்கிறேன். என்னைப் போலத்தான் இந்த நாட்டிலுள்ள பெண்களெல்லாம் நினைப்பார்கள். அதில் சந்தேகமே வேண்டாம். ~~ஆனால் சட்டம் செய்து விட்டால் போதுமா?~~''

''கள்ளச் சாராயம் உண்டாக்குவதைத் தடுக்க சர்க்காரும் முயற்சி செய்துதான் வருகிறார்கள்.''

''அவர்களுடைய முயற்சியை நான் பாராட்ட முடியாது. ~~கட்டுக் கோப்பில் எலியை வைத்துக் கட்டுவதைப் போலக் காரியம் செய்தால்~~ என்னைப் போன்றவர்களுக்குக் கதிமோட்சமே இல்லை.''

எனக்கு மேலும் பேச ஒன்றும் தோன்றவில்லை. அம்மா, என்ன இருந்தாலும் உயிரை மாய்த்துக் கொள்வது பாவம்" என்று தர்மத்தை எடுத்துக் காட்டலானேன்.

"இந்தப் பாவமெல்லாம் சர்க்காரைச் சேரட்டும் என்றுதான் நான் விரும்புகிறேன். இப்படித் தற் கொலைகள் நடப்பதைக் கண்டாவது அவர்கள் தகுந்த நடவடிக்கை எடுக்க மூன்வரட்டும்." மனம் மாறட்டும்.

அவள் நன்கு விஷயம் தெரிந்தவள் என்று நான் உணர்ந்துகொண்டேன். அவளைப் பேச்சில் வெல்ல என்னால் முடியவில்லை. எதோ மௌனமாகவே பேசினாள்.

"காங்கிரஸ் சர்க்கார் வந்துவிட்டாலும் அதிகாரி கள் பழைய பேர்வழிகள்தானே? அவர்களில் சில பேர் குடித்துப் பழகியவர்கள். அந்தப் பழக்கம் மாறுவதென்றால் ஆகிறதா? ஏதோ இன்னும் சில காலம் இப்படி இருக்கும். பிறகு எல்லாம் சரியாகப் போய்விடும். பழையவர்கள் மாறிப் புதியவர்கள் வந்துவிடுவார்கள். குடிப் பழக்கத்தில் ஊறிப்போன மனிதர்களும் சாகுவதும் அல்ல. அவர்களுக்குப் பிறகு நான் இந்தக் கட்டம் நல்ல வெற்றிகரமாக நடந்து வெல்லோருக்கும் நன்மை பயக்கும். அதுவரை நீ பொறுத்திரு அம்மா. உனக்குக் கடவுள் அருள் செய்வார்" என்று உபதேசம் செய்தேன். ஒரு உபதேசம் செய்தேன்

தற்கொலை செய்துகொள்வதென்றால் அவ்வளவு லேசம் அல்ல. ஏதோ ஒரு கலக்கத்தால் திடீரென்று அந்த எண்ணம் உண்டாகும். அந்தச் சமயம் மாறி விட்டால் பிறகு பயம் தோன்றிவிடும். அதன் பிறகு தற்கொலை செய்துகொள்ள முடியாது. அம்மாதிரி யான நிலை இம்மங்கைக்கும் இப்போது ஏற்பட்டு விட்டது போலும். அவள், "நான் வீட்டிற்குப் போகிறேன். தெய்வம் விட்டபடி விடட்டும். இந்

நேரத்திலே தனியாக இங்கே பேசிக்கொண்டிரு
தால் யாராவது கண்டால் என்னவாவது நினை
பார்கள்" என்று சொல்லி விரைந்து போ
விட்டாள்.

நான் ஆழ்ந்த யோசனையோடு மணல்வெளியி
படுத்தேன். கொஞ்ச நேரத்தில் ஐந்தாறு ஆடவர்க
அக்கரையிலிருந்து பரிசலிலே ஆற்றைக் கடந்து வ
தார்கள். அவர்கள் குரலிலே வெறி இருந்த
தோளிலே புட்டிகள் தொங்கின.

சாராய வெறியால் அவர்கள் என்னைக் கவனி
வில்லை. தள்ளாடி நடந்துகொண்டே ஊரை நோக்கி
புறப்பட்டுவிட்டார்கள். அவர்கள் மறைந்தபின் ப
படியும் நான் வானை நோக்கினேன்.

முழு நிலா மாறுத புன்முறுவலோடு க
அமுதத்தை வீசிக்கொண்டிருந்தது. ஆனால், எ
உள்ளம் அதில் லயிக்கவில்லை ; எங்கேயோ அலை
தொடங்கியது.

நண்பன் வீராசாமி

எனது நண்பன் வீராசாமி இந்த நாட்டிலே பிறந்திருக்கக் கூடாது. அவனுடைய அளவு கடந்த நற்பணித் திறனுக்கும் புதிய புதிய யந்திரங்களைக் கண்டுபிடிக்க வேண்டுமென்ற விஞ்ஞான ஆர்வத்திற்கும் இந்த நாட்டில் யார் ஊக்கமளிக்கப் போகிறார்கள்? ஒருவரும் உதவி செய்ய மாட்டார்கள் என்பது அவனுடைய உறுதியான எண்ணம். அதனால் அவன் தன்னைப் பெரிய துரதிர்ஷ்டம் பிடித்தவன் என்று அடிக்கடி சொல்லிக்கொள்வான். அவன் மட்டும் ஐரோப்பாவிலோ அல்லது அமெரிக்காவிலோ பிறந்திருந்தால் இதற்குள் ஒரு பெரிய விஞ்ஞானியென்று பெயர் வாங்கியிருப்பான்; அல்லது பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைபட்டிருப்பான். இது அவனுடைய சிநேகிதர்களுடைய அந்தரங்கமான அபிப்பிராயம்.

இந்தியாவிலே அதிலும் தமிழ் நாட்டிலே பிறந்ததால் அவனுக்கு அப்படி ஒன்றும் நேர்ந்துவிடவில்லை. ஆனால், வீராசாமிக்கு இத்தேசத்தின்மேல் தீராத வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. எப்போது பார்த்தாலும் இதைச் சபித்துக்கொண்டும், இழிவாகப் பேசிக்கொண்டுமிருப்பான். "நாய்கள்கூட வாழ்வதற்கு இந்தத் தேசம் லாயக்கில்லை" என்பான் அவன்.

"உன்னை ஒருத்தரும் இங்கே வாழச் சொல்லவில்லையே?" என்றால், "வாழச் சொல்லவில்லையா?.... என்னைப் போல நாலுபேர் அறிவாளிகள் இல்லாவிட்டால் இந்த தேசத்தை நாய்கூட மதிக்காது"

என்று உருமுவான். சாமர்த்தியமாகப் பதில் சொல்
வாயடக்கிவிட்டதாக அவன் நினைத்துக்கொண்
உள்ளுக்குள்ளே சிரித்துக்கொள்வான்; அதற்குமே
அவனை எதிர்த்து யாரும் வாதாடமாட்டார்கள்.

"ஏண்டா இப்படி உனது தாய் நாட்டை
கேவலமாகப் பேசுகிறாய்? இது நியாயமா? பெற்
தாயை நிந்திக்கலாமா?" என்று யாராவது ஒ
சமயத்தில் கேட்டால், "இங்கே அறிவு படைத்த
னுக்கு ஆதரவு எங்கே கிடைக்கிறது? எனது மூளை
யெல்லாம் இந்த தேசம் பயன்படுத்திக்கொள்
வேண்டாமா? நான் இப்பொழுது ஒரு புதிய யந்திர
யோசனை செய்து வைத்திருக்கிறேன். அதைச் செய்
எனக்கு யார் உற்சாகமளிக்கிறார்கள்? ஐரோப்ப
வாக இருந்தால் இதற்குள் எத்தனையோ பேர் என்
ஆதரிப்பார்கள். எனது முயற்சிகளுக்கு உதவியளி
பார்கள்" என்பான். அவனுடைய பேச்சிலே கோ
மும் வெறுப்பும் கலந்து ஒன்றையொன்று முந்தி
கொண்டு வரும்.

வீராசாமியின் புதியது கண்டுபிடிக்கும் மூ
சிறு வயதிலேயே அதன் வல்லமையைக் காட்ட ஆர
பித்தது. அவனுக்கு வயது பத்திருக்கும்; அ
பொழுதே முறத்தை இரண்டு கைகளிலும் கட்டி
கொண்டு அவன் ஒரு வைக்கோல் போரின் மேலேறி
பறப்பதற்குத் தயாராக நின்றான். நானும் மற்
விளையாட்டுத் தோழர்களும் ஆச்சரியத்தோடு திறந்
வாய் திறந்தபடி பார்த்துக்கொண்டிருந்தோம்
அவனைத் தடுக்க யாருக்கும் தைரியம் வரவில்லை
மேலும் அந்த சமயத்தில் நாங்களும் அவனைப் போல
சிறுவர்கள்தானே?

அவன் பறந்தது கொஞ்ச தூரத்திற்குத்தான்
அதுவும் அநேகமாகச் செங்குத்தாகவே தரையை
நோக்கியிருந்தது. நல்ல வேளை! கீழே ஐந்தாறடி உ

த்திற்கு வைக்கோல் குவித்திருந்தது. வீராசாமியை அந்த வைக்கோல் புதருக்குள்ளிருந்து வெளியே விடுவிக்கும்வரை எங்களுக்கு ஒரே பயம். எங்காவது ஆபத்து ஏற்பட்டிருந்தால் விஷயம் வெளியாகி நல்ல உதை கிடைக்குமே.

வீராசாமியும் நானும் எங்கள் பெற்றோர் களோடு பள்ளி விடுமுறை சமயத்தில் திருச்சிராப் பள்ளிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்திற்கு உறவினர் வீட்டிற்கு விருந்தாகச் சென்றிருந்தோம். அங்கே தான் இந்தப் பறக்கும் சோதனை நடந்தது. வேறி டத்தில் வைக்கோற்போர் அவ்வளவு வசதியாகக் கிடைக்குமா?

சிறு வயதில் ஏற்பட்ட அந்த அனுபவம் வீரா சாமியின் விஞ்ஞான உற்சாகத்தைக் குறைத்துவிட வில்லை. "எனக்கு மட்டும் வேண்டிய கருவிகள் எல்லாம் கிடைத்தால் இன்றைக்கே பறந்து காட்டு வேன்" என்று இன்றும் சொல்லிக் கொண்டிருக் கிறான்.

ஆனால் யந்திரமில்லாமலேயே பறக்கும் அந்த ஆராய்ச்சியை வீராசாமி மேலே தொடர்ந்து செய்ய வில்லை. எந்த முயற்சியையும் தொடர்ந்து செய்யும் தூர்க்குணம் அவனிடத்திலே கிடையாது. அவ்வப் பொழுது பத்திரிகைகளிலே அடிபடும் விஞ்ஞான ஆராய்ச்சி விஷயத்திலே மனதைச் செலுத்துவான். அதைப்பற்றிச் சதா பேசிக்கொண்டிருப்பான்.

மேகங்களை நாம் விரும்பிய இடத்திற்குக் கொண்டுவந்து மழை பொழியுமாறு செய்வதற்கு ஒரு முயற்சி நடந்துகொண்டிருக்கிறதல்லவா? அதைப் பற்றிய விபரம் முதன் முதலிலே பத்திரிகையில் வந்த உடன் வீராசாமி ஆவேசம் கொண்டவன் போல மாறுகொண்டெழுந்தான். வருண பகவானோடு நேரடியாக அவன் பேச்சு வார்த்தை நடத்திக்கொண்

டிருப்பதுபோல எனக்குத் தோன்றியது. கடைசியில் அவன் மத்திய சர்க்காருக்குத் தனது ஆராய்ச்சிகளின் முடிவுகளை எழுதினான். யானைகளை இரும்புச் சங்கிலியால் கட்டி இழுத்து வருவதுபோல கருமேகங்களைக் கட்டி இழுத்துக்கொண்டு வர முடியுமென்றும், ஆனால் அதற்கு இரும்புச் சங்கிலிக்குப் பதிலாக நுட்பமான கிரணங்களாகிய சங்கிலி வேண்டுமென்றும் அவன் கடிதத்திலே குறிப்பிட்டிருந்தான். காமாக் கதிர், எக்ஸ் கதிர் என்பதுபோல அவற்றிற்கு மழைக் கதிர் என்று அவன் பெயரிட்டிருந்தான். மேகங்களுக்கெதிரே ஒரு ஆகாய விமானத்திலிருந்து கொண்டு மேகங்களை மழைக் கதிரால் காந்தத்தில் ஊசியைக் கட்டி இழுத்து வருவதுபோல் இழுத்து வந்துவிடலாம் என்பது அவனுடையசித்தாந்தம்.

"அது சரி; ஆனால் மழைக் கதிரை எப்படி உண்டாக்குவது?" என்று நான் மெதுவாகக் கேட்டேன்.

"அதற்குத்தான் சில யந்திரங்கள் வேண்டுமென்று சர்க்காருக்கு எழுதினேன்; அங்கிருந்து ஒரு பதிலும் வரவில்லை. இப்படியிருந்தால் இந்த தேசம் எப்படி உருப்படப் போகிறது?" என்று அவன் ஆத்திரத்தோடு பதிலளித்தான்.

இம்மாதிரியாக அரசாங்கத்தாரின் அலட்சிய புத்தியைப்பற்றி அவன் மும்முரமாக எங்கு பார்த்தாலும் பேசிக்கொண்டிருப்பான். நாட்டிலே வெகு காலம் மழையின்மையால் நலிந்திருந்த மக்களுக்கு இவன் கூறுவது மெய்தானென்று பட்டது; மழையின்மையால் ஏற்பட்ட அவர்களுடைய துன்பம் அத்தனை பெரிதாகவிருந்தது.

ஆனால் நல்ல வேளையாக நாடெங்கும் மழை பெய்யவாரம்பித்தது. அதற்குமேல் வீராசாமியின் பேச்சைக் காது கொடுத்துக் கேட்க மக்களுக்கு நேரமிருக்கவில்லை; மனமும் இல்லையோ என்னவோ?

னால் மக்களின் மனம் மாறுவதற்கு முன்னாலே னது நண்பனின் மனமும் மாறிவிட்டது. மழையைப் டித்து இழுத்து வரும் மேகஜித்தாக ஆவதற்கு ன்னால் அவனுடைய நாட்டம் அணுகுண்டிலே சன்றுவிட்டது. மழையைப் பற்றி அவன் மறந்து விட்டான்.

"உலகத்திற்கே அழிவு வருகிறபோது மழை பெய்தாலென்ன, பெய்யாவிட்டாலென்ன?" என்று அவன் பேசவாரம்பித்தான்.

அவன் பேச்சு எனக்கு விளங்கவில்லை. "உலகம் ன் அழியப் போகிறது?" என்று நான் அவனைக் கேட்டேன்.

எனது அறியாமையையும், சிறுபிள்ளைக் கேள்வி யையும் கண்டு அவன் இரக்கப்பட்டான். "ஹைடி ரஜன் குண்டு உன் தலை மேலே விழுந்தால்தான் உனக்கு விஷயம் விளங்கும். அதுவரையில் விளங் ாது" என்று அவன் கூறி, மேலும் எனக்குக் குழப் த்தையும் சந்தேகத்தையும் உண்டாக்கினான். அவனுடைய சிந்தனைகள் போகும் வேகத்தோடு ஓட்டிப் போக என்னால் என்றுமே முடிவதில்லை. அதை அவன் பலமுறை எனக்கு எடுத்துக் காட்டி யிருக்கிறான்.

"ஆமாம், என் தலையில் குண்டு விழுந்தால் உல கமே அழிந்து போகுமா?" என்று நான் கேட்டேன்.

வீராசாமிக்குக் கோபமே வந்துவிட்டது. ஹைடிரஜன் குண்டு ஓரிடத்திலே வெடித்தால் அதிலிருந்து தொடரும் எதிர் விளைவுகள் எங்குமே பரவிவிடும். உலகத்திலுள்ள பொருள்களெல்லாம் தாமாகவே அணுக்களாகப் பிரிய ஆரம்பித்துவிடும். அவையனைத்தும் அப்படிப் பிரியும்போது ஏராளமாக சக்தியைக் கக்கி உலகத்தையே அழித்துவிடும்.

அதுதான் யுகப் பிரளயம். ரஷ்யாவிலே ஹைடிரஜன் குண்டு தயாரித்துவிட்டதாக இன்று சேதி வந்திருக்கிறது. அதை நான் தடுத்தே ஆகவேண்டும்'' என்று அவன் ஆத்திரத்தோடு பேசினான். உணர்ச்சிக் கொந்தளிப்பினாலே அவன் உடம்பெல்லாம் துடித்தது.

''எப்படித் தடுக்கப் போகிறாய்?'' என்று நான் கேட்டேன்.

''ஹைடிரஜன் குண்டை நான் கண்டுபிடித்தாக வேண்டும். அதுதான் உலகத்தைக் காப்பாற்ற வழி. வேறே வழி கிடையாது'' என்று அவன் எழுந்தான்.

''நீயும் கண்டுபிடித்து விட்டால் இரண்டு குண்டும் சேர்ந்து சீக்கிரம் உலகத்தைப் பொசுக்கி விடுமே?'' என்று கவலையோடு கேட்டுக்கொண்டே நான் அவனைத் தொடர்ந்து ஓடினேன்.

''அடே, முட்டாள், என் பின்னாலே வராதே. ரஷ்யா கண்டு பிடித்ததென்று சொன்னால் இன்னும் இல்லை என்று அர்த்தம். அந்த தேசத்திற்கு முந்திக் கொண்டு நான் கண்டு பிடிக்க வேண்டும். இல்லாவிட்டால் பிரளயத்தைத் தவிர்க்க முடியாது'' என்று கூறிக்கொண்டே அவன் வேகமாக மறைந்து விட்டான்.

இன்று காலையிலே அவனைப் போலீஸார் கைது செய்த செய்தி கேட்டு நான் திடுக்கிட்டுப் போனேன். உடனே அவனைக் காண ஓடினேன். விஷயம் அவ்வளவு தூரத்திற்குச் செல்லுமென்று நான் எதிர் பார்க்கவில்லை.

ஹைடிரஜன் குண்டு கண்டுபிடிக்க உடனே எல்லா வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டுமென்றும், அதற்குச் சம்மதம் தெரிவித்து நேற்று மாலைக்குள் கடிதம் வராவிட்டால் இன்று காலை

10-மணிக்கு சென்னை நகர ஹைலண்டு மைதானத்திற்கு அருகேயுள்ள குதிரை வீரனுடைய சிலையை உடைத்து விட்டு, அந்த குதிரையிலே தான் அமர்ந்து கொண்டு உண்ணாவிரதம் இருக்கப் போவதாகவும் அவன் சென்னை முதல் மந்திரிக்குக் கடிதம் எழுதினானும்.

அதன் பயனாக வீராசாமியை இன்று அதிகாலையிலே கைது செய்திருக்கிறார்கள்.

"ஆமாம், அந்தக் குதிரை மேலே உட்கார்ந்து சத்தியாக்கிரகம் செய்ய எதற்காகத் திட்டமிட்டாய்?" என்று பாதுகாவலிலிருந்த வீராசாமியைக் கேட்டேன்.

"குதிரைதான் கலியுக முடிவிற்கு அறிகுறி. அதன் மேலே அமர்ந்துதான் அடுத்த அவதாரம் வரப்போகிறது. நான் கைதியாகிவிட்டதால் இனிப் பிரளயத்தைத் தடுக்க வழியேயில்லை" என்று அவன் கூறினான்.

அவன் பார்வையிலே ஏதோ ஒரு வெறியிருந்தது. அவனை மீட்டுக் கொண்டு போக வழியொன்றும் இருக்கவில்லை. போலீஸார் கேட்டபடி உத்திரவாதம் கொடுக்க அவன் மறுத்துவிட்டான். அவனுக்காக ஜாமீன் கொடுக்க யாருக்கும் தைரியம் வரவில்லை.

"கீழ்ப்பாக்கம் ஆஸ்பத்திரியிலே சோதனை செய்ய முதலில் அனுப்புகிறோம். பிறகு பார்க்கலாம்" என்று கூறிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் எனக்கு விடை கொடுத்தார்.

"இந்த தேசம் என்றைக்குமே உருப்படாது என்று எனக்கு ஆதியிலிருந்து தெரியும். அது இன்றைக்கு நிச்சயமாகிவிட்டது" என்று வீராசாமி உரத்த குரலில் கூறிக் கொண்டிருந்தது, வெளியே புறப்பட எழுந்த என் காதில் விழுந்தது.

சினிமாக் காட்சி

சுந்தரத்தை இப்பொழுதெல்லாம் பார்ப்பதற்கே பரிதாபமாய் இருக்கிறது. பாழடைந்து கவனிப்பாரற்று இடிந்து விழுந்துகொண்டிருக்கும் கோபுரத்தைப்போல அவன் காட்சியளித்தான். ஒரு காலத்திலே நாகரிகமாய் உடுத்திக்கொள்வதில் அவன் பெயர் வாங்கியிருந்தான். உடையணிவதில் அவனுக்குள்ள தேர்ந்த சுவையைக் கண்டு அவனுடைய நண்பர்களெல்லாம் ஆச்சரியப் படுவார்கள். ஆனால், இன்று அவன் உடையைப்பற்றிச் சிந்திப்பதாகவே தெரியவில்லை. அவனுடைய அழகிய கிராப்பு சீர்குலைந்து கிடக்கிறது. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னுலே அவனுடைய காதல் மனைவி திடீரென்று நோய்வாய்ப்பட்டு மரணமடைந்தபோது இருண்டு போன அவன் முகம் இன்னும் ஒளி காணவேயில்லை. மேலும் மேலும் அதில் இருளின் ரேகைகள் வந்து குவிவது போலவே எனக்குத் தோன்றுகிறது. அவன் சிரித்துப் பேசி எங்களையெல்லாம் இன்பக் கடலில் ஆழ்த்தியதெல்லாம் கனவுபோல மங்கி மறைந்து விட்டது. இப்பொழுது அவன் கல கலவென்று பேசுவதே கிடையாது. எங்களோடு அதிகமாகக் கலந்துகொள்ளுவதுமில்லை. நாங்களாக வலியச் சென்று இழுத்தால் எங்களுடன் வருவான். ஆனால் அவனுடைய சிந்தனையெல்லாம் எங்கேயோ இருக்கும். முன்பெல்லாம் நாங்கள் எந்த விஷயத்தைப் பற்றிப் பேசினாலும் அதில் அவன் பிரதான பங்கெடுத்துக்கொண்டு ஹாஸ்யமாகவும் குத்தலாகவும் சாதுர்யமாகவும் பேசுவான்; மற்றவர்களைத்

தணற அடிப்பான்; இப்பொழுது அதற்கு முற்றிலும் விரோதமாக மௌனம் சாதிக்கிறான். அவனை வைத்துக்கொண்டு நாங்கள் உரையாடுவது இடிந்துபோன ஒருகோட்டையின் முன்னாலே இருந்து கொண்டு உரையாடுவது போலத்தான் எனக்குத் தோன்றுகிறது. சினிமாவிற்குச் செல்லுவதிலும், நல்ல இன்னிசையைக் கேட்பதிலும், அவனுக்கு எங்களைவிட அதிக விருப்பம் உண்டு. ஆனால் இப் பொழுது அவன் எங்கும் செல்வதாகக் காணேம். நண்பர்கள் வற்புறுத்தினாலும் அவன் கூடவரப் பிடி வாதமாக மறுத்துவிடுகிறான்.

ஆனால் சென்ற சில நாட்களாக அவன் அடிக்கடி சினிமாவுக்குச் செல்கிறான் என்று கேள்விப்பட்டு நான் ஆச்சரியம் அடைந்தேன். நேற்று மாலை சுமார் மூன்று மணிக்கு எதிர்பாராத விதமாக அவன் என்னைத் தேடிக்கொண்டு வந்தான். இரவு 9-30 மணி சினிமாவுக்குத் தன்னுடன் வரவேண்டுமென்று கட்டாயப்படுத்தினான். முதல் காட்சிக்குப் போகலா மென்று நான் கூறியும் அவன் அதற்கு உடன்பட வில்லை. தனக்கு ஏதோ வேறு வேலை இருக்கிற தென்றும், இரவு 9-30 மணிக்கு சினிமாக் கொட் டகையில் டிக்கெட் வாங்கிக்கொண்டு எனக்காகக் காத்திருக்கப் போவதாகவும் கூறினான். நான் அவன் விருப்பப்படியே சினிமாக் கொட்டகையில் அவனைச் சந்திக்க உடன்பட்டேன்.

அவனைக் காக்கவைக்கக் கூடாதென்று நான் கற்று முன்பாகவே அவன் குறிப்பிட்ட சினிமாக் கொட்டகைக்குச் சென்றேன். முதற் காட்சி அப்பொழுதுதான் முடிந்து மக்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்திலே சுந்தர மும் யாரோ ஒருவருடன் பேசிக்கொண்டு வெளியே வந்தான். முதற் காட்சியைப் பார்த்துவிட்டு அவன்

அப்படி வருவது எனக்கு மலைப்பை உண்டாக்கியது. முதலில் அவன் என்னைக் கவனிக்கவில்லை. பிறகு கூட்டம் சிறிது குறையவே என்னைக் கண்டதும் அப்பொழுதுதான் அங்கு வந்தவன்போல அவசரம் அவசரமாக அருகே வந்தான். "வந்துவிட்டாயா? இதோ டிக்கெட் வாங்கி வருகிறேன்" என்று கூறி விட்டு வேகமாக ஓடினான்.

காட்சி தொடங்கும் வரையில் அவன் என்னிடம் வார்த்தையாடவில்லை. எனக்கு அது சங்கடமாக இருந்தது. இருந்தாலும் நான் அவனுடைய மௌனத்தைக் கலைக்க விரும்பாமல் கொட்டகைக் குள் மெதுவாக நுழையும் மக்களைக் கவனித்துக் கொண்டே அமர்ந்திருந்தேன்.

அந்தப் படம் நாங்கள் பார்த்ததுதான் கடைசிக் காட்சி. கூட்டம் அதிகம் இருக்கவில்லை; காரணம் அந்தப் படம் அவ்வளவு சுவாரசியமாக இல்லை. எப்படியோ இழுத்துப் பிடித்துக்கொண்டு விளம்பர பலத்தினால் ஒரு வாரம் ஓடியிருந்தது.

இடைவேளைக்கு முன்னதாகவே எனக்கு அலுப் புத் தட்டிவிட்டது. இருந்தாலும் சுந்தரத்தைத் திருப்திப்படுத்துவதற்காக மற்றப் பகுதியையும் சகித்துக்கொண்டிருந்தேன். சுந்தரம் படத்தைப் பெரிதும் ரசிக்கிறானென்று நான் நினைத்துத் திரும்பிப் பார்த்தேன். அவன் படத்தைப் பார்ப்பதாகவே தோன்றவில்லை. கண்களை மூடிக் கொண்டு கன்னத்தில் கை வைத்தவாறு அசைவற் றிருந்தான். தலைகீழேகுனிந்தபடியிருந்தது. எனக்கும் அவனுக்கும் ஒரே வயதுதான். இருவரும் ஒரே தெருவில் வசிப்பவர்கள். பால்யம் முதல் நாங்கள் தோழர்கள். ஆனால், இப்போது பார்ப்பதற்கு என்னைவிட அவன் இரட்டிப்பு வயதானவன்போல் தோன்றினான்.

கண்ணை மூடிக்கொண்டு அவன் உட்கார்ந் திருந்தது எனக்கு வியப்பாக இருந்தது. எதற்காக அவன் என்னை இவ்வாறு சினிமாப் பார்க்க அழைத் தான் என்பதும் அந்தக் காட்சி முடியும்வரை ஒரு புதிராகவே இருந்தது.

சினிமா வேதனை ஒருவாறு முடிவடைந்ததும் நாங்கள் வீட்டை நோக்கிப் புறப்பட்டோம். இரவு அதிகநேரம் ஆகிவிட்டபடியால் பஸ், டிராம் ஒன்றும் கிடையாது. நாங்கள் வசித்த தெரு சமீபத்தில்தான் இருந்ததாகையால் நடந்தே போகலாமெனக் கூறி னேன்; அவன் யாதொரு பதிலும் கூறாமல் வீட்டை நோக்கி அடியெடுத்து வைத்தான்.

கொஞ்சநேரம் வரையில் இவ்வாறு சுந்தரம் பேசாமல் நடந்தான். நானும் அவனைத் தொந்தரவு செய்யக் கூடாதென்று வார்த்தை கொடுக்காமல் பின்தொடர்ந்தேன். பகல் நேரத்திலே இரைச் சலும், பரபரப்பும் மிகுந்துள்ள அந்தச் சென்னை நகர வீதியிலே இப்பொழுது எவ்வித நடமாட்டத்தையும் காண முடியவில்லை. உயிரற்றது போன்ற அந்த வீதியின் நிசப்தம் என் உள்ளத்திலே ஒருவித விநோத மான உணர்ச்சியை உண்டுபண்ணிற்று.

"படக்காட்சி பிடித்ததா?" என்று சுந்தரம் திடீ ரென்று கேட்டான்.

"உனக்குப் பிடித்திருந்தால் அதுவே எனக்குத் திருப்தி — உனக்காகத்தானே நான் வந்தேன்?" என்றேன் நான்.

"படம் சுத்த ஆபாசந்தான். ஆனால் அதிலே ஏதாவது ஒரு அம்சங்கூட உன் மனதைக் கவர வில்லையா?" என்று கேட்டுவிட்டு அவன் என்னைக் கூர்ந்து நோக்கினான். அவன் கண்களுக்குள்ளே நூறு

யோசனை தூரத்திற்குப் பின்னல் கனன்றுகொண்டிருப்பதுபோல ஒரு ஒளி தோன்றிற்று.

"ஒரு பாட்டு என் உள்ளத்தை எப்படியோ தொட்டது" என்றேன்.

"எந்தப் பாட்டு?" என்று கடுமையான குரலில் அவன் கேட்டான்.

"உனக்கு ஞாபகமில்லையா? இங்கே கேட்ட பாட்டின் அதே மெட்டில் உன் மனைவி ஒரு பாட்டெழுதி ஒரு நாள் பாடினாளே"—என்று கூறி முடிப்பதற்குள் என் கன்னத்திலே பளாரென்று ஒரு அறை கொடுத்தான். நான் திகைத்துப் போனேன்.

"சுந்தரம், இதென்ன இது?" என்று தடுமாறிக் கொண்டு மெதுவாகக் கேட்டேன்.

"என் மனைவியின் பாட்டை நினைத்துக்கொண்டிருக்க உனக்கென்ன உரிமை யிருக்கிறது?" என்று அவன் குரூர வார்த்தை சொன்னான். அவன் முகத்திலே மிருக உணர்ச்சி தாண்டவமாடியது. அவன் உடம்பெல்லாம் பதறிக்கொண்டிருந்தது.

என் கண்களிலே எதற்காகவோ நீர் ததும்பலாயிற்று. அதைச் சுந்தரம் பார்த்துவிட்டான்போல் இருக்கிறது. சட்டென்று அவன் உள்ளம் மாறியது.

"சங்கரா, என்னை மன்னித்துக்கொள். இந்த ஒரு வாரமாகத் தினமும் இரண்டு காட்சிக்கும் சென்று இந்த இசையை நான் அனுபவித்து வருகிறேன். ஒவ்வொரு காட்சிக்கும் எனது நண்பர்களில் ஒருவரை அழைத்துச் சென்றேன். ஒருவராவது என் மனைவி பாடிய அந்தப் பாட்டை நினைத்திருக்கவில்லை. அவர்கள் முற்றிலும் மறந்துவிட்டார்கள். அதிலே எனக்கு ஒரு திருப்தி ஏற்பட்டது. அவளுடைய இன்ப கானத்தை மறவாமல் நினைத்துக்கொண்

டிருக்க எனக்கு மட்டும் உரிமை உண்டு என்று நினைத்து, அந்த நினைப்பிலே பூரித்துப் போயிருந்தேன். நீ மட்டும் எதிர்பார்த்ததற்கு மாறுக அந்த இசையை நினைவில் வைத்திருக்கிறாய். அதை அறிந்ததும் எனக்கு என்றுமில்லாத பொறுமை ஏற்பட்டு விட்டது. மன்னிக்க வேண்டும்" என்று அவன் கம்மிய குரலில் கூறினான்.

என்னால் பதில் ஒன்றும் பேச முடியவில்லை. ஏதாவது கூறவேண்டுமென்று வார்த்தைக்காகத் திண்டாடினேன். அவனுடைய உள்ளத்திலே அழுந்திக் கிடந்த அந்தச் சோகத்தை எப்படியாவது தணிக்க வேண்டுமென்ற ஆவல் மேலெழுந்தது.

"உன் மனைவி எழுதிய பாட்டுக்களை அவளே பாடுவதைக் கேட்கும்படி எங்களை அந்தக் காலத்தில் உற்சாகமாக அழைத்துச் செல்வாயே?" என்று ஏதோ கேட்டுவைத்தேன்.

"ஆமாம், அதெல்லாம் அந்தக் காலம். இப்பொழுது அவளுடைய பாட்டெல்லாம் எனக்கே தான் சொந்தம். அதிலே யாரும் பிரவேசிக்கக் கூடாது" என்று அவன் பேசிக்கொண்டே போனான்.

என் வீட்டு வாசலை நெருங்கினேம். "போய் வரட்டுமா, சுந்தரம்" என்றேன் நான். அது அவன் காதில் விழவில்லை. அவன் திரும்பிப் பாராமல் நடந்துகொண்டிருந்தான். அவன் வாயிலிருந்து வெளி வந்துகொண்டிருந்த வார்த்தைகள் என் காதை அடைவதற்குள், அவன் வாழ்வைப்போலவே உருக்குலைந்து பொருளிழந்து வெற்றொலியாய் மாறிக்கொண்டிருந்தன.

போராட்டம்

அது ஒரு அடர்ந்த மலைக்காடு. பகலவனுடைய கிரணங்களும் பதுங்கிப் பதுங்கித்தான் அதற்குள்ளே எட்டிப் பார்க்கவேண்டும். ஓங்கி வளர்ந்த மரங்கள் ஒன்றையொன்று பின்னிக் கொண்டு மழையைத் தடுக்கும் கூரைபோல நின்றன. பரந்து தழைத்த புதர்கள் மண்ணிடத்தைக் கண்ணில் படாதவாறு மறைத்தன. மலைச் சரிவுகளிலே கொடிய விலங்குகள் எதேச்சையாகத் திரிந்தன. அங்குள்ள குகைகளிலே இருள் நிரந்தரமாக வாசம் செய்தது

அந்தக் காடு அவனுக்குப் பெரிதும் திருப்தியளித்தது. அங்கே தனக்கு எவ்வித ஆபத்தும் வர முடியாதென்று அவன் கருதினான். பட்டணத்திலே வசித்தபோது எத்தனையோ ஆசைகள் அவனைத் தாக்கின. அவையெல்லாம் இந்தக் காட்டிலே அவனை அணுக முடியாது. ஆத்மஞானத் தோட்டத்திலே அவன் இனி எவ்விதத் தடையுமில்லாமல் ஈடுபட்டிருக்கலாம்.

புறத்திலே காட்சியளித்து உள்ளத்தைக் கவரும் பல ஆசைகளை அவன் இவ்வாறு ஒதுக்க முயன்றான். ஆனால் அந்த அடர்ந்த காட்டிலும் உள்ளத்தைக் கலக்கித் தடுமாற வைக்கும் சில காட்சிகள் அவனுக்குத் தோன்றுமலில்லை. அவற்றையெல்லாம் அறவே களைந்துவிட அவன் உறுதி கொண்டான்.

பறவைகளிலே பெட்டை இனம் எதுவும் அவன் கண்ணிலே படக்கூடாது. பட்டால் அதற்கு உடனே

மரணம்தான். காய்ந்த களிமண் உருண்டைகளை வில்லிலே வைத்துக் குறி தவறாது அடிப்பதில் அவன் நாளடைவில் கைதேர்ந்தவனாகிவிட்டான். சிட்டுக்குருவி முதல் மயில் வரையில் சிறிதும் பெரிதுமான எந்தப் பறவையும் ஆணும் பெண்ணுமாகக் கொஞ்சிக் குலாவிக்கொண்டு அவன் முன்னே தென்படக் கூடாது. ஜோடியாக வீற்றிருக்கும் பறவைகளைத் தற்செயலாக அவன் பார்க்க நேரிட்டபோது ஆரம்பத்திலே கண்களைப் பொத்திக்கொண்டான். உடலிச்சையை நினைவிற்குக் கொண்டு வரும் அம்மாதிரியான காட்சியைப் பாராமல் கண்ணை மூடிக் கொள்வதும் கொஞ்ச நாளில் அவனுக்கு திருப்தியளிக்கவில்லை. அதனால் பெட்டை இனத்தையே அழித்துவிடுவதென்றுகங்கணம் கட்டிக்கொண்டான்.

பெண்ணினத்தின் மேலிருந்த இந்த வெறுப்பு, பறவை ஜாதியோடு நில்லாமல் விலங்கினத்தின் மேலும் பாய்ந்தது.

ஒருநாள் அதிகாலையிலே அவன் குளிப்பதற்காக அருகிலே ஓடிய காட்டாற்றிற்குச் சென்றான். அங்கே ஓரிடத்திலே கலைமானென்று தன் துணையோடு அன்பு செய்துகொண்டிருப்பதை அவன் பார்க்க நேரிட்டது. கோபமும் வெறுப்பும் அவன் உள்ளத்தில் குமுறிக் கொந்தளித்தன. விலங்குகளிலும் பெண்ணினத்தைக் கருவறுத்துவிட வேண்டும் என்று அன்று முதல் சங்கற்பம் செய்துகொண்டான்.

கடினமான மரக் கொம்புகளைக் கூராக்கி அம்புகளாக உபயோகிக்கவும், அவற்றின் முனையிலே மிகக் கொடிய விஷத்தைத் தோய்த்து வைக்கவும் அவன் கற்றுக்கொண்டான். ஓயாத முயற்சியால் இவையெல்லாம் எளிதாகக் கைவந்தன. அதனால் புலி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களும் அவன் அம்புக்கு இரையாய்க்கொண்டிருந்தன.

ஆனால், அவன் கொல்லக் கொல்ல எங்கிருந்தோ பெண் பறவைகளும் பெண் விலங்குகளும் வந்து கொண்டே யிருந்தன. காட்டில் காமதேவனுடைய ஆட்சி ஓய்ந்து போய் விடவில்லை. ஆனால், அவன் பல நாட்கள் நாள் முழுவதும் வில்லுங் கையுமாகத் திரிந்துகொண்டிருக்க வேண்டியதாயிற்று.

பெண் இனத்தைக் கொன்றொழிப்பதே அவன் மதமாகிவிட்டது. பட்டணத்திலே மானிடப் பெண்களை அவன் மனத்திலேயே வெறுத்துச் சபித்துக் கொண்டிருந்தான்; ஆனால், இங்கே அவன் அந்தப் பெண் இனத்தையே வேருடன் களையக் கொலைத் தொழிலில் ஈடுபட்டான்.

பகலெல்லாம் இவ்வாறு போராடிவிட்டுக் களைப் போடு அவன் தனது குகையை அடைவான். இரவெல்லாம் உள்ளத்திலே இதே போராட்டந்தான்.

சில சமயங்களில் அவன் தூக்கத்திலிருந்து திடுக்கிட்டு எழுவான். உள்ளத்திலே தோன்றிய உடல் சம்பந்தமான கனவுகளையும் கற்பனைகளையும் நினைத்துத் தன்னைத்தானே வெறுத்துக்கொள்ளுவான். பிறகு விடியுமளவும் உறங்காது உடலை வருத்தி உள்ளத்தை இறைவனது சிந்தனையில் லயிக்கச் செய்ய முயல்வான்.

இவ்வாறு பல மாதங்கள் கழிந்தன. வசந்த காலத்திலே ஒருநாள் மாலை நேரம். எங்கிருந்தோ ஒரு இளநங்கை அந்தக் காட்டினுள் புகுந்து அவனுடைய குகையின் எதிரிலே காட்சியளித்தாள். இளமையின் வனப்பு அவளுடைய ஒவ்வொரு அவயவத்திலும் ததும்பிக்கொண்டிருந்தது.

அவளைக் கண்டதும் அவன் முதலில் திடுக்கிட்டான். எதிர்பாராமல் அவளைக் காண நேர்ந்ததால் விளைந்த திகைப்பு மறுகணத்திலே பெண்ணினத்தின்

ல் அவன் கொண்டுள்ள பெரு வெறுப்பாக றியது. கண்கள் சிவந்து தோன்றின. அவன் ரூரமே வடிவானுன். பூமியின் கர்ப்பத்தில் உள்ள ாடு நெருப்பைப்போல் அவன் குகையினுள்ளே ாதித்துக்கொண்டிருந்தான்.

அவள் சிரித்த முகத்தோடு அந்தக் குகைக் ாளே நுழைந்தாள். உள்ளே நிலைத்திருந்த அந்த ரம் அவர்கள் இருவரையும் விழுங்கிவிட்டது.

நாழிகை ஒன்று கழிந்தது. எங்கேயோ அடங்கிக் ந்த விலங்குணர்ச்சியெல்லாம் எரிமலை போலத் ரென்று வெடித்து மேலெழுந்து ஆதிக்கம் லுத்துவதாயிற்று. வருந்தி வருந்தி அடக்க ன்ற அந்த விலங்கின் உடலுணர்ச்சி அவனை மீறி டது.

"ஐயோ! என் தவத்தைக் குலைத்தாயே" என்ற கக் குரல் ஒரு நாழிகையாக நிலைத்திருந்த மதியைக் குலைத்துக்கொண்டு குகையினின்றும் ந்தது.

"நானு உங்கள் தவத்தைக் குலைத்தேன்; என்னை லவா நீங்கள் விலங்காக்கினீர்?" என்று அந்த கை மறுமொழி பகர்ந்தாள்.

"உன்னை நான் சதா வெறுத்துக்கொண்டிருந் ன். நீ எப்படி இங்கு வந்தாய்?"

"அத்தான், நீங்கள் என்னையே நினைத்துக் ரண்டிருந்தீர்கள். அந்த நினைப்பின் வலிமையால் ன் இங்கு இழுக்கப்பட்டேன்?"

"அடி பாதகீ, பொய் சொல்லாதே, உன்மேல் ணுவளவும் எனக்கு ஆசை கிடையாது."

"ஆனல், என்னையே நினைத்துக்கொண்டிருந் கள். அதுமட்டும் உண்மை. உங்களுடைய தீராத

வெறுப்பிலே நான் சதா நிலைபெற்று நின்றிருந்தேன். அந்த வெறுப்பென்னும் கோட்டைக்குள்ளே ஆசைப் பேய் குடியிருக்கவில்லையா ? அதை வெளியில் விடாமல் தடுப்பதற்குத்தானே அவ்வளவு பெரிய கோட்டையை உண்டாக்கினீர்கள் ?"

"ஐயோ! நான் அறிவிழந்தேன் ?" என்று அவன் விம்மி அழுதான். தலையிலே இரு கைகளாலும் புடைத்துக்கொண்டான். மறுகணத்திலே, "நீயல்லவா என்னை நிலைகுலையச் செய்தவள்? உன்னையும் இதோ கொன்றொழிக்கிறேன் பார்" என்று வெறி பிடித்தவன்போல் அவன் குகையினுள்ளே கதறி எழுந்தான்.

அந்த மங்கை அவன் கைக்குள் அகப்படாமல் சிரித்துக்கொண்டே குகையினின்றும் வெளியே வந்தாள்.

"என்னைக் கொல்லுவதால் உங்களுக்கு வெற்றி கிடையாது ; முதலில் அந்தப் பேயை வேறு வழியிலே தப்பியோடும்படி செய்யுங்கள்" என்று அவள் ஆலோசனை கூறினாள்.

"அதைக் கொல்வதற்குத்தானே நான் என் உடலையே வாட்டுகிறேன் ?" என்றான் அவன்.

"உடம்பை வாட்டுவதிலும் வெறுப்பதிலும் அந்த உடம்பைப்பற்றிய ஆசையும் நினைப்பும் இருக்கின்றனவே ; அவற்றையல்லவா நான் ஒழிக்கச் சொல்லுகிறேன் ? வெறுப்பினுள்ளே ஆசை குடி கொண்டிருக்கிறது. அதனால் அந்த வெறுப்பை விலக்காது ஆசை யொழியாது" என்று அவள் தெளிந்த குரலிலே மொழிந்தாள்.

அவன் குகையைவிட்டுத் தடுமாறி வெளியே வந்தான். அவன் மூளை கலங்கியது. அறிவு தடுமாறி

யது. ஆயிரம் ஆயிரம் ஊசிகள் உடம்பெல்லாம் குத்து வதுபோலத் தோன்றியது. "நீ சொல்லுவதிலே உண்மை இருக்கிறது. அதை உணராமல் நான் எத்தனை கொடுமை செய்தேன்! அந்தோ நான் பெரும் பாவி" என்று அவன் அலறிக்கொண்டே சோர்ந்து விழுந்தான்.

அவன் உணர்வு பெற்று எழுந்தபோது அவளைக் காணேம். அவள் மரங்களிடையே மறைந்து விட்டாள். "அன்னையே, எனக்கு வழி காட்டு" என்று கூவிக்கொண்டே அவளைத் தேடி அவன் இப் பொழுது அலைந்துகொண்டிருக்கிறான்.

இன்று அவன் எதையும் வெறுப்பதில்லை; அதனால் அவன் எதையும் விரும்புவதில்லை. அவன் ஆசையற்றவனாகி விட்டான்.

எது காதல்?

"இந்தமாதிரி காதல் எனக்கென்னவோ விசித்திரமாக இருக்கிறது—இப்படியும் காதல் இருக்க முடியுமா?"

"ஏனிருக்க முடியாது? காதலின் போக்கை இப்படித்தான் இருக்குமென்று வரம்பு கட்ட யாரால் முடியும்?"

"இருந்தாலும் நீ எழுதியிருப்பது கொஞ்சமும் நம்ப முடியாத விஷயம். கதை என்றால் வாழ்க்கையோடு ஓரளவு பொருந்தி இருக்கவேண்டும்—இந்தக் கதையை என்னால் ஒரு சிறிதும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை."

அந்தக் கதையை எழுதிய இளம் எழுத்தாளனின் முகம் வாடிவிட்டது. அவன் உள்ளத்தில் கொழுந்துவிட்ட எழுத்தாவேசமெல்லாம் ஒரு கணத்தில் மடிந்தொழிந்தது போலத் தோன்றியது.

மேலே கூறியவாறு பேசிக்கொண்டிருந்த இரு வாலிப நண்பர்களின் சம்பாஷணையைக் கேட்டுக் கொண்டே நான் கடற்கரை மணலில் அமர்ந்திருந்தேன். சூரியன் மெதுவாக மறையத் தொடங்கினான். அவன் மறைவால் கலையிழந்த உலகம்போல அந்த இளங்கதையாசிரியனும் சோர்வடையக் கூடாதென்று நான் விரும்பினேன். அவனுடைய நண்பனுக்கும் அதுவே நோக்கம் என்றாலும் வாழ்க்கைக்கு இணங்காத முறையில் கதை எழுதக்கூடாது என்ற எண்ண ஆர்வத்தால் அவன் மேற்கூறியவாறு

பேசியிருக்கிறான். வாழ்க்கை அனுபவத்திலே எத்தனையோ விசித்திரங்கள் இருக்கின்றன என்பது அவனுக்குத் தெரியவில்லை. அதனால்தான் நண்பன் எழுதிய கதையில் சித்தரிக்கப்பட்டுள்ள முறையை அவனால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. எனது அனுபவத்திலே கண்டறிந்த ஒரு உண்மைக் காதல் சம்பவத்தை எடுத்துக் கூறி அவர்கள் இருவருக்கும் திருப்தியும் உற்சாகமும் உண்டாக்க வேண்டுமென்று எனக்கு ஆசை பிறந்தது.

"காதலின் போக்கு இவ்வாறுதான் இருக்கும் என்று வரையறுப்பது மிகவும் கஷ்டம்" என்று நான் அவர்களுக்குக் கேட்கும்படி இடையே பேசினேன்.

அவர்கள் இருவரும் சட்டென்று என் பக்கம் திரும்பிப் பார்த்தார்கள். "உங்கள் விவாதத்தில் நான் குறுக்கிடுவது சரியல்லவாயினும் எனது அனுபவம் உங்கள் சந்தேகத்தை ஒரு சமயம் போக்கலாம் என்று நினைத்தேன்" என்று நான் குறுக்கிட்டுப் பேசியதற்குக் காரணம் கூறினேன்.

அதிலே அவர்களுக்கு உற்சாகம் பிறந்துவிட்டது. "உங்கள் அனுபவம் என்னவோ? அதை எடுத்துச் சொன்னால் நாங்கள் ஆவலோடு கேட்போம்" என்று இருவரும் ஏகோபித்துச் சொன்னார்கள்.

நான் ஆரம்பித்தேன் :—

"கார்த்திகை மாதம் கடைசி வாரம் மழையெல்லாம் நின்றுவிட்டது. ஆனால் வானம் இன்னும் மப்பும் மந்தாரமாகத்தான் இருக்கிறது. பருத்திக் காட்டில் பெண்கள் கூட்டங் கூட்டமாகக் களை வெட்டுகிறார்கள். அவளும் வேலை செய்கிறாள். ஐப்பசி அடை மழையில் ஓங்கி வளர்ந்து வரப்புக்களை மூடியிருந்த புல்லை மேய்த்துக் கொண்டே அவன் ஒரு எருமையை ஓட்டி வருகிறான்.

களை வெட்டும் இடத்திற்கு அருகிலேயே வந்து விட்டான். அப்போழுதுதான் முதல் முதலாக அவர்கள் சந்தித்தார்கள்.

அவனுக்கு இன்னும் கல்யாணமாகவில்லை. நல்ல கட்டுறுதியுள்ள உடல். மானிறமாக இருந்தாலும் பார்ப்பதற்கு வசீகரமான தோற்றமுடையவன்.

அவளுக்குக் கல்யாணமாகிவிட்டது. ஆனால் புருஷன் பட்டாளத்தில் சேர்ந்து வட ஆப்பிரிக்கா விலே எகிப்துப் பாலைவனப் பிரதேசத்தில் எங்கேயோ சண்டையில் ஈடுபட்டிருக்கிறான். இரண்டாவது உலக யுத்தத்திலே ஜெர்மானியரை எதிர்த்துப் போரிட்ட வீரர்களில அவனும் ஒருவன். அந்தப் பெண் தன் கிழத் தாயாருடன் தனியாக வசித்து வந்தாள். அவள் கூலி வேலை செய்துதான் கிழவிக்குச் சோறு போட வேண்டும்; தானும் வயிறு வளர்க்க வேண்டும். கணவனோடு வாழ்ந்த ஒரு வருஷ காலத்திலே அவள் சுகம் என்பதைக் கண்டதே யில்லை. அவனே குடிகாரன். குடி மயக்கத்தில் வீட்டுக்கு வருவான். அவளையும் அவள் தாயையும் சேர்த்து வாயில் வந்தபடி பேசுவான். பதில் பேசினால் அடி தான் கிடைக்கும்.

அவன் முட்டக் குடிகாரன் என்று தெரிந்தே கிழவி அவனுக்குத் தன் ஒரே பெண்ணைக் கொடுத் தாள். வேறு நல்ல வரனை அந்த ஏழைக் கிழவியால் தேட முடியவில்லை. பெண்ணென்று பிறந்துவிட்டால் யாருக்காவது கல்யாணம் செய்து கொடுத்தாக வேண்டுமே. அதனால் வீரப்பன் என்ற அந்தக் குடிகாரனுக்குப் பெண்ணைக் கொடுக்கச் சம்மதித்து விட்டாள்.

வீரப்பன் பட்டாளத்தில் சேர்ந்து கொண்டதால் அந்தப் பெண் ராமக்காளுக்கும் அவள் தாய்க்

கும் அதிக விசனம் உண்டாகவில்லை. அவர்கள் பட்ட அடியையும் உதையையும் நினைக்கும்போது அவன் ஊரைவிட்டுச் சென்றதே அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. "பட்டாளத்தில் சேர்ந்து அடிபட்டாவது நல்ல புத்தி வந்து சுகமாக வீடு சேரட்டும்" என்று கிழவியும் மகளும் எண்ணித் திருப்தியடைந்தார்கள். பட்டாளத்தில் சேர்ந்தவர்கள் வீட்டிற்குப் பணம் அனுப்புவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் வீரப்பன் ஒரு காசுகூட அனுப்பவில்லை. மனைவியையும் மாமியாரையும் அவன் நினைத்ததாகவே சொல்ல முடியாது.

ராமக்காள் பருத்திக் காட்டிலே களையெடுத்துக் கொண்டிருந்தாள். எருமை மேய்த்துவந்த செல்லப்பன் அன்று முதல் தடவையாக அவளைப் பார்த்தான்; அவளும் வேலையைச் சற்று நிறுத்திவிட்டு அவனைப் பார்த்தாள்.

"பருத்திச் செடிகளை எருமை மேய்ந்துவிடப் போகிறது? பண்ணுடி கண்டால் சத்தம் போடுவார்" என்று யாரோ ஒருத்தி களை வெட்டிக்கொண்டே கூறினாள். "செடிகளை மேயவிட எனக்குத் தெரியாதா? நான் வரப்பில்தான் மேய்க்கிறேன்" என்று பதில் அளித்துக்கொண்டே செல்லப்பன் எருமையை அங்கிருந்து ஓட்டிப் போய்விட்டான்.

அவன் ஒரு அனாதை. அவனுக்குத் தன் தாயும் தந்தையும் எப்படியிருந்தார்கள் என்றுகூடத் தெரியாது; அவன் சிறு குழந்தையாக இருந்தபோதே அவர்கள் இறந்து போய்விட்டார்கள். யாரோ ஒரு உறவினர் வீட்டில்தான் அவன் வளர்ந்துவந்தான். அங்கே அவன் அடைந்த துன்பம் கொஞ்சமல்ல. குழந்தைப் பருவத்தை எப்படியோ கடந்துவிட்டான். ஆனால் ஐந்து வயதிலிருந்து அவன் எவ்வளவோ வேலை செய்யவேண்டியிருந்தது. வேலை

செய்வதற்கு அவன் என்றுமே பயப்படமாட்டான். எத்தனை வேலையென்றாலும் அவன் முகம் கோணாமல் செய்வான். ஆனால் அப்படி வேலை செய்த பின்னும் கடுகளவாவது அன்பான பேச்சில்லையே என்றுதான் அவன் மனம் குலைந்தான். தாயிடத்து அவன் அன்பை அறியக் கொடுத்து வைக்கவில்லை; தந்தையிடத்து அன்பைப் பெறவும் அவனுக்கு அதிர்ஷ்டம் இல்லை. அனுதையாக வளர்கின்ற வீட்டிலும் அன்பு அவனுக்குக் கிடைக்கவில்லை. சிறுவனாக இருந்த பொழுது வேறு வழி தெரியாமல் அவன் எப்படியோ காலத்தைக் கடத்தி வந்தான். ஆனால் கொஞ்சம் வயது வந்ததும் அவனால் அந்த நிலையைச் சகித்துக் கொண்டிருக்க முடியவில்லை. சொந்தக் குழந்தைகள் சோம்பேறிகளாகவும் துஷ்டத்தனமுடையவர்களாகவும் இருந்தாலும் அவர்களிடம் அன்பு காட்டுகிற அந்த உறவினர்கள் வேலைகளையெல்லாம் சரிவரச் செய்துவரும் தன்னிடம் அன்பு காட்டவேயில்லை என்ற காரணத்தால் அவன் தான் பிறந்த ஊரைவிட்டு யாருக்கும் சொல்லாமல் ஓடிப் போய் விட்டான். செல்லப்பன் சுமார் ஏழெட்டு வருஷங்கள் பல கிராமங்களிலும் நகரங்களிலும் சுற்றி அலைந்துவிட்டுக் கடைசியில் தற்செயலாகக் காட்டுப் பாளையம் வந்து சேர்ந்தான்.

அங்கு வந்தபோது அவனுக்கு ஒரு புதிய எண்ணம் உண்டாயிற்று. அதுவரையில் அவன் பலரிடம் பலவிதமான ஊழியம் செய்து அலுத்துப்போயிருந்தான். இனிமேல் சுதந்திரமாக யாருக்கும் அடிமை செய்யாமல் வாழ முயலவேண்டும் என்று அவனுக்கு ஆவலுண்டாயிற்று. ஊரெல்லாம் சுற்றியலைந்து வேலை செய்ததில் கிடைத்த வருவாயில் மீதியாக அப்பொழுது அவன் கையில் நூற்று இருபது ரூபாய் இருந்தது. அதைக் கொண்டு இளங்கறவையாக ஒரு எருமை வாங்கிக்கொண்டான், மாதம் இரண்டு

நபாய் வாடகையில் ஒரு சிறு குடிசையையும் ஏற் பாடு செய்துகொண்டான்.

எருமை காலையில் மூன்று படியும் மாலையில் இரண்டுப டியுமாகப் பால் கொடுத்தது அதனால் அவனுக்குத் தாராளமாகப் பணம் கிடைத்தது. சொந்தமாக அவனே எருமையை மேய்ப்பது, பால் கறப்பது, விற்பது முதலான வேலைகளைச் செய்ததால் செலவும் அதிகமாக ஏற்படவில்லை. பாலைக் கறந்து காட்டுப்பாளையத்திற்கு அருகாமையிலுள்ள நகரத் திலே கொண்டுபோய் விற்பான். சமையலுக்கு வேண்டியதை வாங்கிக் கொள்வான். சமைத்து உண்ணும்நேரம் போக மற்ற பகல் நேரத்தில் அவன் எருமை மேய்ப்பான்; இரவானதும் உணவருந்தி விட்டுப் படுத்துறங்குவான். யாரிடமும் அவன் அதிக மாகப் பழக்கம் வைத்துக்கொள்ளவில்லை.

ஒருநாள் காலையிலே சுமார் பத்து மணிக்கு வழக்கம்போல் எருமையை மேய்த்துக்கொண்டு வரும்போதுதான் அவன் ராமக்காளைப் பார்த்தான். பார்த்தவுடனேயே அவள்மேல் அவனுக்கு ஒரு தனி அன்பு பிறந்துவிட்டது. முன்னதாகவே அவன் அவ ளுடைய பரிதாபகரமான வாழ்க்கையைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் இதுவரை அவளை அவன் நேரில் கண்டதில்லை.

நம்முடைய மனம் எப்படியெல்லாமோ வேலை செய்கிறது. கண்டதும் காதல் கொள்ளுகிறது; வெறுப்புக் கொள்ளுகிறது; பொறுமை கொள்ளு கிறது; இப்படி எத்தனையோ விதமான உணர்ச்சி களைப் பெறுகின்றது. அதற்குத்தான் ஏதாவது ஒரு நியதி உண்டா என்றால் அதையும் காண முடிய வில்லை. இப்படிக் காரணங்கூற முடியாத வகையில் தான் செல்லப்பனும் ராமக்காளிடம் அன்பு கொண் டான். அந்த அன்பைக் காதல் என்று சொல்லு

வதா அல்லது சகோதர வாஞ்சை என்று சொல்லு வதா என்று யாருக்குமே புரியவில்லை. நானும் பல பேரிடம் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்திருக்கிறேன் எல்லோருக்கும் அது ஒரு வியப்பாகவே இருந்தது. எனக்கென்னவோ அதைக் காதல் என்று கூறவேண்டு மென்றுதான் தோன்றுகிறது. ஆனால் அதைப்பற்றி இப்பொழுது எண்ணிக் கொண்டிருக்க வேண்டிய தில்லை. நான் கூறிவரும் வரலாற்றை முற்றிலும் கேட்ட பிறகு அதை நீங்களே தீர்த்துக்கொள்ளுங் கள். உங்கள் சந்தேகத்திற்கும் வாக்குவாதத்திற்கும் விடையாகவும் அது அமையலாம்.

ராமக்காளைப் பார்த்ததுமுதல் செல்லப்பன் அவ ளுடனும் அவள் தாயுடனும் நெருங்கிப் பழகலா னான். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யச் சமயம் வாய்க்க வேண்டுமென்று ஆவலோடு எதிர்பார்த் திருப்பான். அவர்கள் குடியிருந்த குடிசைக்கு அடிக் கடி போவான். நாள்தோறும் அவர்களுக்குப் பால் கொண்டுபோய்த் தருவான். அதற்குப் பணம் வாங் கிக்கொள்ள அவன் அறவே மறுத்துவிட்டான். அன்பு உணர்ச்சியையே அறியாது வறண்டுகிடந்த அவன் உள்ளத்திலே அவ்வுணர்ச்சி திடீரென்று வெள்ளம்போலப் பொங்கி எழுந்தது. அவன் ஒரு புது மனிதனானான். உலகமே ஒரு புது இன்பத்தோடு அவனுக்குக் காட்சியளித்தது. ராமக்காள் அவனிடம் காட்டிய அன்பு அப்படிப் பெரிய மாறுதல் உண்டு பண்ணிற்று.

தன்னிச்சையாக யாதொரு கவலையுமின்றித் திரிந்துகொண்டிருந்த அவன் இப்பொழுது அந்தக் கிழவிக்கும் அவள் மகளுக்குமாகப் பலவிதமான கவலைகளையும் கடமைகளையும் மேற்கொண்டான். அவற்றிலே அவனுக்கு இன்பம்கிடைத்தது. கிழவி ஒரு சமயம் காய்ச்சலாகப் படுத்துவிட்டாள். ராமக்கா

ளுக்கு ஒரே வேதனை. ஒரு வேளை தாயார் மாய்ந்து போனால் தன்னுடைய நிலைமை என்னாகுமோ என்று அவள் துடித்தாள். செல்லப்பன் இரவு பகல் கிழவியின் பக்கத்திலிருந்து அவளுக்குப் பணிவிடை செய்தான். நகரத்திலிருந்து ஒரு வைத்தியரை அழைத்துவந்து சிகிச்சை செய்ய வகை செய்தான். அவனுக்கும் ஒரே கவலை. ராமக்காள் வருத்தப்படுவதை அவனால் சகிக்க முடியவில்லை. அதோடு அவன் கிழவியைத் தன் தாயைப் போலவே மதித்திருந்தான். அவளும் அவனிடத்திலே அத்தனை அன்பு காட்டினாள். செல்லப்பன் எடுத்துக்கொண்ட சிரத்தையால் கிழவி நோய் நீங்கி எழுந்தாள்.

செல்லப்பனும் ராமக்காளும் அநேகமாக ஒத்த வயதினர். செல்லப்பன் சற்று மூத்திருப்பான். இருந்தாலும அவனை பெயர் சொல்லியே அவள் அழைத்தாள். அதுதான் அவனுக்கு விருப்பமாக இருந்தது.

இவ்வாறு அவர்கள் பழகி வருவதைக் கண்ட ஊர் சும்மா இருக்குமா? முதலில் பேச்சுக் கொஞ்சம் லேசாக எழுந்தது. கிழவி படுத்திருந்தபோது செல்லப்பன் பல தடவை இரவு வேளைகளிலே அவர்கள் குடிசையிலே தங்கியதைக் கவனித்த பிறகு வதந்திகள் பலமாகப் பரவலாயிற்று. இருந்தாலும் யாரும் செல்லப்பன் முன்னிலையிலோ மற்ற இருவர் முன்னிலையிலோ ஜாடையாகக்கூட ஏதாவது சொல்லப் பயந்தனர். செல்லப்பனின் தேக வலிமை மட்டும் அதற்குக் காரணமல்ல. அவர்கள் மூவரிடத்திலும் ஏதோ ஒரு விதமான களங்கமற்ற தன்மையின் பொலிவிருந்தது. வெளிப்படையான பேச்சும், குற்றமற்ற பார்வையும் எல்லோரையும் அவர்களிடம் மரியாதையாக நடந்து கொள்ளச் செய்தன. ஆனால் எதிரிலே பேச அஞ்சியவர்கள் மறைவிலே ஏதாவது கதை கட்டாமலிருக்கவில்லை. ஒன்றையும்

ஒன்றையும் பார்த்தால் உடனே இரண்டு என்று மனதிற்குள்ளாவது முடிவுகட்டாவிடில் மக்களுக்குத் திருப்தி ஏற்படாது. ஆனால் ஊரார் சந்தேகிக் கிறார்கள் என்று கிழவியோ அவள் மகளோ செல்லப் பணை இம்மிகூட அறியார்கள். ஒருவருஷம் இவ்வாறு கழிந்தது.

ஒருநாள் யாரும் எதிர்பாராத நிலையில் வீரப்பன் அந்த ஊரிலே தோன்றினான். ராமக்காளுக்குத் தன் கணவன் திரும்பியதில் எந்தவிதமான தனி மகிழ்ச்சியும் உண்டாகவில்லை. பழைய நினைவுகளெல்லாம் மேலெழுந்து அவளுடைய உள்ளத்தை மரம்போல உணர்ச்சியற்றதாக்கின. இருந்தாலும் கணவன் உயிரோடு வந்திருப்பதிலே அவளுக்குத் திருப்தியும் பெருமையும் ஏற்பட்டது.

இரண்டாவது உலக யுத்தம் முடிவடைந்தும் ராணுவத்திலிருந்து பல சிப்பாய்களை விலக்கி விட்டார்கள். அவர்களில் வீரப்பனும் ஒருவன். அவன் சில நாட்கள் வீட்டு நினைவே இல்லாமல் அங்குமிங்கும் சுற்றினான். ஆனால் அப்படிச் சுற்றுவது ஒன்றிரண்டு மாதங்களில் அலுத்துப் போய்விட்டது. அதனால் காட்டுப்பாளையத்தை நினைத்து அங்கு வந்தான். சொந்தமாக மனைவி என்ற ஒருத்தி இருக்கும்போது கண்ட இடத்திலெல்லாம் அலைவானேன் என்று அதுவரை அலைந்ததால் ஏற்பட்ட சலிப்புணர்ச்சியாலேயே அவன் ஊர் வந்தான்.

தன் மனைவி இளமையின் பூரிப்புப் பொங்க விளங்குவதைக் கண்டு அவன் மகிழ்ச்சியடைந்தான். அவளோடு இனிமேல் யாதொரு சச்சரவுமில்லாமல் வாழவேண்டும் என்று உறுதி கொண்டான். குடிப் பழக்கம் ஒன்று மட்டும் அவனுடைய உறுதிக்குப் பங்கமாக இருக்குமோ என்று பயந்து அதைக்கூட விட்டுவிட வேண்டும் என்று நினைத்தான். ஆனால்

துது அவ்வளவு சுலபத்தில் கைகூடுகிற காரியமாக
ல்லை. முன்பே அவன் போர்போன குடிகாரன்.
ாணுவத்தில் சேர்ந்த பிறகோ சொல்லத் தேவை
ல்லை.

வீரப்பன் அந்தக் குடிபழக்கத்தை விடவேயில்லை.
னென்றால் அவன் ஊருக்கு வந்த சில நாட்களில்
ன் மனைவியைப்பற்றிய ஊரார் பேசுகின்ற வதந்தி
ாதில் விழுந்துவிட்டது. அது அவன் கொண்டிருந்த
ர்மானங்களையெல்லாம் ஒரே கணத்தில் சிதறடித்து
ாய்த்தது. அவனைப் பழைய வீரப்பனாகவே இருக்கச்
சய்தது.

வீரப்பன் திரும்பி வந்ததால் செல்லப்பன் எவ்
கையிலும் பாதிக்கப்படவில்லை. ராமக்காள் தன்
ணவனோடு வாழ்ந்து பிள்ளைகள் பெற்று வாழட்டும்
ன்றுதான் மனதார நினைத்தான். இனிமேல் தனது
தவி அவளுக்கும் அவள் தாய்க்கும் தேவையாக
ருக்காதே என்றுதான் சற்று ஏங்கினான். ஆனால்
வர்களோடு முன்பு போலவே நெருங்கிப் பழகு
தில் யாதொரு தடையும் இருக்காதென்று நம்பி
ருந்தான்.

அந்த நம்பிக்கை வெற்றி பெறவில்லை. வீரப்பன்
வனைச் சில நாட்களில் வீட்டிற்கு வரக்கூடா
தன்று தடுத்துவிட்டான். ராமக்காளோ அவள்
ாயோ அவனோடு எவ்விதத் தொடர்பும் வைத்துக்
காள்ளக்கூடாது; பேசவும் கூடாது என்று கண்டிப்
ான உத்தரவு பிறந்தது.

இவ்விதக் கட்டுப்பாட்டின் காரணம் என்ன
வன்று இப்பொழுதுதான் செல்லப்பனுக்கும்
மக்காளுக்கும் பட்டது. ஊரார் தங்களைப்பற்றி
த்தனை நாட்கள் வசைமொழி கூறிவந்திருக்
ார்கள் என்பதும் தெரிந்தது. முதலில் அவர்

களுக்கு ஊரார்மேல் ஆத்திரம் பொங்கிற்று. பிறகு 'எவனே என்னவோ பேசினால் அதைப்பற்றி நமக் கெதற்குக் கவலை?' என்ற மனப்பான்மை பிறந்தது. அதனால் அவர்கள் வதந்தியை லட்சியம் செய்ய வில்லை. ஆனால் வீரப்பன் இவ்வாறு தடை விதித்ததைத்தான் அவர்களால் சகிக்க முடிய வில்லை.

செல்லப்பன் உள்ளம் குமுறியது. வாழ்க்கை யிலே என்றும் காணுத ஒரு பெருஞ் செல்வத்தைப் பெற்றுத் திடீரென்று இழந்ததுபோல அவன் பரி தவித்தான். அவனுக்கு வாழ்க்கை மறுபடியும் பாலை வனமாகிவிட்டது. ராமக்காளைச் சந்திக்காமல் தன்னால் உயிர் வாழ முடியாது என்று அவன் அறிந் தான். ஆனால் வீரப்பன் இருக்கும் அந்த வீட்டிற்குள் அடியெடுத்துவைக்க அவன் விரும்பவில்லை.

ராமக்காளின் மன நிலையும் இதே போலத்தான் இருந்தது. பத்து நாட்களாக அவள் செல்லப்பனைப் பார்க்கவில்லை. அவனுடைய அன்பு நிறைந்த முகத்தை அவள் கண்டு களிக்கவில்லை. அவளால் அவனைப் பார்க்காமல் உயிர் தரிக்க முடியாது என்று தோன்றியது. மறுநாள் இரவு யாரும் அறியாமல் செல்லப்பனுடைய குடிசைக்கு அவள் வந்து விட்டாள்.

என்றும்போல அவர்கள் உள்ளம் மகிழ்ச்சியில் மிதந்திருக்க உலகம் மறுபடியும் இன்ப வீடாகி விட்டது. இரவில் வெகுநேரம் வரையில் குழந்தை களைப்போல என்னென்னவோ பேசிக் களித்தனர்.

இவ்வாறு அவர்கள் பலமுறை ரகசியமாகச் சந்தித்தார்கள். எத்தனை நாட்களுக்கு அது மற்றவர் களுக்குத் தெரியாமலிருக்க முடியும்? ஊருக்குத் தெரிந்து வீரப்பனுக்கும் வெளியாகிவிட்டது.

அவனுக்கு வந்த கோபத்திற்கு அளவே கிடையாது. ராமக்காளை அடியடி யென்று அடித்து நொறுக்கி விட்டான். இரண்டு நாட்கள் அவள் படுக்கையை விட்டு நகரவே முடியவில்லை. கவனிப்பதற்குக் கிழவி யில்லாதிருந்தால் அவள் உயிர் தப்பிப் பிழைத் திருக்கவே முடியாது. வீரப்பன் தன் கோபத்தை யெல்லாம் மனைவியிடமே காட்டுவான்; செல்லப்ப னிடம் அவனுக்கு உள்ளூற ஒரு பயமிருந்தது.

கொஞ்சம் நடமாட முடிந்ததும் ராமக்காள் செல்லப்பன் வீட்டிற்கு வந்தாள். அவள் நிலைமை கண்டு செல்லப்பன் கொதித்தெழுந்தான். வீரப்பனை ஒரே அடியில் உயிரை வாங்குவதாக உரக்கக் கூவினான். 'செல்லப்பா, உன்னிடம் ஒரு வாக்குறுதி பெற்றுப் போவதற்காகத்தான் நான் இவ்வளவு அவசரமாக வந்தேன்' என்று அவள் சொல்லி அவனுடைய கோபம் ஜொலிக்கும் முகத்தை ஏறிட்டு நோக்கினாள்.

'உனக்குக் கொடுக்காத வாக்குறுதி :உண்டா ? கேட்குமுன்னே கொடுத்தாய்விட்டது ; அது என்ன வாக்குறுதி ?' என்று வினவினான் அவன்.

'என் கணவனோடு ஒரு நாளும் நீ சண்டையிடக் கூடாது. அவர் என்ன சொன்னாலும் பேசாமல் நீ அந்த இடத்தை விட்டு விலகிவிட வேண்டும். இதற்குச் சரியென்று சத்தியம் செய்து கொடு' என்றாள் ராமக்காள்.

அவன் சத்தியம் செய்தான். ஆனால், அவளை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. 'எதற்காக என்னை இப்படி கேட்டாய் ? உன்னைக் கைதொட்டு அடித்தவனை நான் வஞ்சம் தீர்க்க வேண்டாமா ?' என்று அவன் தேம்பி அழுதான்.

'செல்லப்பா, அவர் என் கணவன். அவர் இல்லாவிட்டால் எனக்கு இந்தக் குங்குமப் பொட்

டில்லை ; தலையில் வைக்கப் பூவில்லை. இவையெல்லாம் இல்லாமல் என்னைப் பார்க்க உனக்குச் சகிக்காது' என்று அவள் மறுமொழி தந்தாள். அவன் மேலும் தேம்பித் தேம்பி அழுதான். அடுத்த கணத்திலே இருவரும் நடந்ததெல்லாவற்றையும் மறந்துவிட்டுக் குழந்தைகளைப்போல உரையாடலானார்கள்.

ராமக்காள் செல்லப்பனைப் பத்து நாட்களுக்கு ஒருதரமாவாது சந்திப்பதை நிறுத்தவே இல்லை. எத்தனை உதை, எத்தனை வசவு எல்லாவற்றையும் அவள் மௌனமாகப் பொறுத்துக்கொண்டாள். செல்லப்பனுக்கும் அதைப்பற்றித் தெரியாதவாறு நடந்தாள். அவள் உள்ளத்திற்கு அந்தத் திடம் இருந்தது. ஆனால், உடலுக்கு அவ்வளவு வன்மை இருக்கவில்லை. அது மெலிய ஆரம்பித்தது.

இருந்தாலும் அவளுடைய இயற்கை அழகு மறைந்து போய்விடவில்லை. நெடுநாளுக்குத் தான் உயிர் வாழ முடியாது என்பதை மட்டும் அவள் உணர்ந்திருந்தாள். இடது பக்கத்து விலா எலும்பிலே தீராத ஒரு வலி ஏற்பட்டது. ஒருநாள் வீரப்பன் அவள் மார்புக்கும் கீழே அல்லாப் புறத்தில் ஓங்கிக் குத்தியதிலிருந்து இந்த வலி அதிகரித்தது. அதைப் பற்றி அவள் யாரிடமும் குறிப்பிடவில்லை. உயிருக்குப் பயந்து செல்லப்பனைக் காணச் செல்லுவதையும் நிறுத்தவில்லை.

வீரப்பன் குடிகாரன் மட்டுமல்ல ; அவன் ஒரு மிருகம். அவனுக்கு அவனுடைய சுகந்தான் பெரிது. ராமக்காளைத் தனது ஆசைப் பொருளாக அவன் உபயோகித்து வந்தான். ராமக்காள் அவன் முன்னிலையிலே உயிரற்ற யந்திரமாகிவிடுவாள். யந்திரம் போல அவள் ஒருவிதத் தவறுமின்றி அவனைத் திருப்தி செய்து வந்தாள். அவ்வளவுதான்.

ஒருநாள் ராமக்காள் தன் கணவன் புதிதாக வாங்கிவந்த பட்டுப் புடவையை உடுத்திக்கொண்டாள். தலையிலே நிறைய மல்லிகைப் பூவை வைத்தாள்—நெற்றியிலே குங்குமப் பொட்டு வைத்தாள். நிலையின் மங்கிய ஒளியிலே அவள் தங்கப் பதுமையைப்போல அழகாக விளங்கினாள். அன்று அவள் ஏதோ ஒரு புதிய தீர்மானம் செய்துகொண்டிருக்கிறாள். எத்தனை நாட்கள் யோசனை செய்து அந்த முடிவுக்கு வந்தாளோ யாருக்கும் தெரியாது. கடைசியாக ஒரு உறுதியான முடிவிற்கு வந்ததனால் ஏற்பட்ட மலர்ச்சியும் தெளிவும் அவள் முகத்திலே பிரகாசித்தன.

அன்று வீரப்பன் ஊரிலில்லை. அந்த ஜில்லாவிலே மதுவிலக்கு அமலுக்கு வந்துவிட்டதால் அவன் இப்பொழுது அடிக்கடி திருட்டுச் சாராயம் காய்ச்சுகிறவர்களைத் தேடிப் போக வேண்டியதாயிற்று. அன்றைக்கும் சாராயம் வாங்கத்தான் போயிருக்க வேண்டுமென்று ராமக்காள் நினைத்தாள். அப்படியானால் அவன் இரவிலே திரும்பமாட்டான்.

இருள் பரவி ஊரடங்கியதும் அவள் செல்லப்பனுடைய குடிசைக்குச் சென்றாள்.

அவள் திரும்பி வந்தபோது குடிசைக்குள்ளே வீரப்பன் கோபாவேசத்தோடுஉட்கார்ந்திருப்பதைக் கண்டு சற்று திடுக்கிட்டாள். ஆனால், அவள் பயமடையவில்லை. எதிர்பாராது அவனைக் கண்டதால் உண்டான திகைப்பு ஒரு நொடியிலே மறைந்து விட்டது. அவளுடைய களங்கமற்ற பார்வையை வீரப்பனின் கோப வெறி மறைத்துவிட்டது. அவன் அவளிடம் ஒரு வார்த்தைகூடக் கேட்கவில்லை. பிறகுக் கட்டை ஒன்றை யெடுத்து அவள் தலையிலே ஓங்கி அடித்தான்.

மறு வினாடியில்தான் அவனுக்கு 'ஐயோ தவறு செய்து விட்டேன்' என்ற உணர்ச்சி உண்டாயிற்று. ராமக்காள் அப்படியே மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தாள். மண்டையிலிருந்து ரத்தம் பீறிட்டுப் பெருகியது.

அவள் ஒருவிதமான சத்தமும் செய்யாததால் குடிசைத் தின்னையிலே படுத்து உறங்கிக்கொண்டிருந்த கிழவிக்குக்கூட நடந்ததொன்றும் தெரியாது. வெகு நேரத்திற்குப் பிறகு ராமக்காள் கண்ணைத் திறந்தாள். கலவரத்தோடு தன்னைப் பார்த்துக் கொண்டு நின்ற வீரப்பனை ஒரு நிமிஷம் ஏறிட்டுப் பார்த்தாள். அவள் கண்களிலே அப்பொழுது கருணை ததும்பியது. 'நீங்கள் என்மேல் வீணாகச் சந்தேகங் கொண்டீர்கள். நான் குற்றமற்றவள். உங்களுடைய சந்தேகமும், அன்பில்லாத நடத்தையும் இன்று என்னை ஒரு காரியம் செய்யும்படி தூண்டின. செல்லப்பன் என்னுடைய உடம்பை என்றுமே விரும்பியதில்லை. அவன் என்னைத் தொட்டதுகூடக் கிடையாது. இருந்தாலும் ஊரார் பேச்சும் உங்கள் சந்தேகமும் எனக்குக் கலக்கத்தைக் கொடுத்தன; ஒருவேளை அவன் என் உடம்பை விரும்புகிறானே என்று சந்தேகப்படலானேன். என் உடம்போ நீண்ட நாளைக்கு நிற்க முடியாது. அதனால் அது இருக்கும்போதே அவன் விருப்பமும் நிறைவேறட்டும் என்று நான் தீர்மானித்தேன். அதன்படி அவனிடம் இன்று போனேன். அவன் என்னைத் தீண்டியிருந்தால் நான் மறுமுறை அவனைக் கண்ணெடுத்தும் பார்க்க மாட்டேன். ஒருநாளோடு அவன் உறவு சரியென்று வந்துவிட நான் தீர்மானித்திருந்தேன். ஆனால், அவன் என்னைத் தொட மறுத்துவிட்டான். என்னைக் கோபித்துக்கொண்டான். எனக்குப் பயித்தியம் பிடித்துவிட்டதா என்று கேட்டான். நான் உள்ளம்

பூரித்தேன். உங்களுக்குத் துரோகம் செய்யவில்லை என்ற களிப்போடு தெய்வத்தை வாழ்த்திக்கொண்டு திரும்பினேன். ஆனால், இனி நான் உங்களுக்குச் சொந்தமில்லை. நான் பிழைக்க முடியாது. என் உயிர் போகும் முன்பு நீங்கள் இந்த ஊரைவிட்டுப் போய் விடுங்கள்' என்று நிதானமாகப் பேசினாள்.

அதன் பிறகு அவள் பேசவே இல்லை. வீரப்பன் நெஞ்சம் முறிந்து எங்கேயோ ஓடிப் போய்விட்டான். அவனைத் தேடிய வண்ணம் செல்லப்பன் ஊர் ஊராய் அலைந்துகொண்டிருக்கிறான். அவன் நெஞ்சிலே என்ன எண்ணம் குமுறிக்கொண்டிருந்ததோ யாரும் அறியார்கள். பழி வாங்க நினைக்கிறானா அல்லது வேறு எண்ணத்தோடு தேடுகிறானா என்று ஒருவரும் அறிய முடியவில்லை."

இவ்வாறு நான் கூறிக் கதையை முடித்தேன். நண்பர்கள் இருவரும் சிலைகளைப் போல உணர்ச்சியால் கட்டுண்டு அமர்ந்திருந்தார்கள். காதலின் போக்கையோ அதன் விசித்திரங்களையோ மேற்கொண்டு பேச எனக்கும் விருப்பம் ஏற்படவில்லை. அவர்களும் பேசவில்லை.

மௌனம்

வேலாத்தாளுக்கு மேல் மூச்சு வாங்கிக் கொண்டிருக்கிறது. இனிமேல் அவள் பிழைப்பா ளென்று எண்ணுவதற்கு யாதொரு நம்பிக்கையு மில்லை இந்த நிமிஷமோ அடுத்த நிமிஷமோ உயிர் பிரிந்துவிடும் என்ற நிலைமை வந்துவிட்டது. அவள் இறப்பதைப் பலபேர் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த ஆவல் மனசுக்குள்ளேயே மறைமுகமாகத்தான் இருந்தது. வெளிப்படையாக இப்படிப்பட்ட ஆசையைக் காட்டிக்கொள்ளலாமா?

உண்மையைச் சொல்லப் போனால் வேலாத் தாளின் நல்லுயிர் போய் நாற்பது ஆண்டுகளா கின்றன. அதாவது அவள் கழுத்தில் என்றைக்கு ஒருவன் தாலி கட்டினானே அன்றைக்கே அவள் இறந்து விட்டாள். அவள் காதல் குலைந்து விட்டது. அத்துடன் அவள் வாழ்வும் மறைந்து விட்டது. ஆனால் ஊரிலுள்ள மக்கள்மட்டும் வேலாத்தாளை அதிர்ஷ்டக்காரியென்று கொண்டாடி னர்கள்; அவள் மேல் பொறுமையும் கொண்டார்கள். பெற்றோர்களுக்கோ தங்கள் மகளை ஒரு பெரிய தன வந்தனுக்குக் கல்யாணம் செய்துகொடுத்துவிட்டதில் பரம திருப்தி. முக்கியமாக வேலாத்தாளின் தாயார் பெருமை பேசிக் கொண்டதற்கும் அடைந்த கர்வத் திற்கும் அளவே இல்லை.

ராமப்பனுக்கு நன்செய் புன்செய் நிலங்கள் உண்டு. அதோடு ஆயநல்லூரிலும் அதைச் சுற்றி யுள்ள ஊர்களிலும் அவன் வைத்தது சட்டம். சிறு

வயதிலேயே அவனுக்கு அத்தனை செல்வாக்கு ஏற்பட்டிருந்தது. ஆதலால் வேலாத்தாளை அவனுக்கு மணம் செய்து கொடுப்பதில் தாய் தந்தையருக்குப் பெரிய மகிழ்ச்சி உண்டாவதில் ஆச்சரியமில்லை. வேலாத்தாளின் இஷ்டத்தை அவர்கள் கவனித்தார்களா என்றால் அது வேறு விஷயம். கல்யாணம் வேலாத்தாளின் விருப்பத்திற்கு முற்றிலும் மாறுகப் பெற்றோர்களின் வலுக்கட்டாயத்தினால் நடந்தேறியது.

ஐந்து ஆண்டுகள் வாழ்க்கைச் சகடம் எப்படியோ ஓடிற்று. மண்ணுக்கு உணர்ச்சி உண்டா? கல்லுக்கு உணர்ச்சி உண்டா? மண்ணைப் போலவும், கல்லைப் போலவும் வேலாத்தாள் வாழ்க்கை நடத்தினாள். ராமப்பன் அவளை மணந்துகொள்வதில் வெகு ஆசை கொண்டிருந்தான். ஆனால் அவனுக்கு வாழ்வில் இன்பங் கிடைத்ததா இல்லையா என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது. வேலாத்தாள் அவனுக்கு விரோதமாக ஒன்றும் செய்யவில்லை. அவனுடன் கோபித்துக் கொள்ளவுமில்லை. அவனுடைய விருப்பத்திற்கு மாறுக நடந்துகொள்ளவுமில்லை என்பது மெய்தான். அவன் கையிலே பச்சைக் களிமண்ணிருந்தால் அதை அவன் எப்படி எல்லாம் செய்துகொள்ளலாமோ அப்படி யெல்லாம் தன்னைச் செய்துகொள்ள விட்டு விட்டாள். ஆனால் அவள் உடம்புதான் பச்சைக் களிமண்; நினைத்தபடி எல்லாம்வளைந்துகொடுத்தது. உள்ளம் எங்கேயோ எட்டாத இடத்தில் நின்றிருந்தது. உயிரைப் பற்றியோ பேசவேண்டியதில்லை; அதுதான் குன்றிக் குலைந்துவிட்டதே.

மணமானது முதல் வேலாத்தாள் யாருடனும் சிரித்துப் பேசியது கிடையாது. கணவனிடமும் அப்படித்தான். தாய் தந்தையரிடம் முற்றிலும் பேசுவதையே நிறுத்திவிட்டாள். அந்தக் கல்யாணம் வேண்டாமென்று கெஞ்சிக் கெஞ்சி அழுதழுது

கேட்டுக் கொண்டதுதான் அவள் அவர்களுடன் பேசிய கடைசிப் பேச்சு. அதன்பின் தன் வாழ்நாளில் மறுபடியும் ஒரே தடவைதான் அவள் தன் தாயிடம் வாய் திறந்திருக்கிறாள்.

அந்த மௌனத்தைப் போக்கிவாழ்க்கையில் உற்சாகங் கொள்ளச் செய்ய வேண்டுமென்று ராமப்பன் முயற்சி செய்யாமலில்லை. அவனும் பல வகைகளில் யத்தனம் செய்தான். ஐந்து வருடங்கள் இவ்வாறு வாழ்க்கை நடந்துவந்தது. ராமப்பன் தனது முயற்சியில் வெற்றி பெறுமலேயே உலகத்தைவிட்டுப் பிரிய வேண்டியதாயிற்று. திடீரென ஊரில் தோன்றிய வாந்திபேதிக்கு அவன் பலியானான்.

புருஷன் இறந்த பிறகு அவனுடைய பூஸ்திதிக்கு வேலாத்தாளே எல்லா உரிமைகளையும் அடைந்தாள். வருஷம் முப்பதாயிரம் ரூபாய் வரும்படி உண்டு; அதை அவள் தன்னிஷ்டம்போல் என்ன வேண்டுமானாலும செய்யலாம். அவளைக் கட்டுப்படுத்த யாருக்கும் அதிகாரம் இல்லை.

இப்பொழுது எல்லோரும் வேலாத்தாளுக்கு ரொம்ப மரியாதை காட்ட ஆரம்பித்தார்கள். பணக்காரி அல்லவா? அவளுக்கில்லை யென்றாலும் அவள் பணத்திற்கு மரியாதை காட்டித் தீரவேண்டுமே? பந்துக்களும், மற்றவர்களும் அவளுடைய பிரியத்தைச் சம்பாதிப்பதற்காகப் போட்டி போட்டார்கள். அதற்காக என்ன காரியம் செய்யவும் அவர்கள் தயாரானார்கள். ஒருவர் மேல் ஒருவர் பொய்யும் புனைசுருட்டும் சொல்லி வேலாத்தாளுக்கு மற்றவர்களிடம் வெறுப்புண்டாக்கவும் சூழ்ச்சி செய்தார்கள்.

ஆனால் வேலாத்தாள் யாருடனாவது வாய்திறந்து பேசுகிறாளா? அவளுடைய பிரியத்தை யாரிடமாவது காட்டுகிறாளா? இல்லவே இல்லை. வீட்டிலே சமையல்

ங்களைக் கவனிக்க ஒருத்தி இருந்தாள்; அவ
ும் பண்ணையைக் கவனித்து வந்த முகனைக்கார
ும் ஒரு சில வார்த்தைகள் எண்ணி வைத்தது
எப்பொழுதாவது பேசுவாள். அவ்வளவு
வேறு யாருடனும் அவள் வாய் திறப்ப
ஒரே மௌனந்தான்.

வலாத்தாளின் தாயார் எவ்வளவோ முயற்சி
பார்த்தாள். அவளைத் தன்னிடம் பேசச்
மாத்திரம் முடியவில்லை. பிறந்து வளர்ந்த
வீட்டிற்குப் பல தடவை அழைத்தாள்.
த்தாள் பதில் ஒன்றும் கூறவேயில்லை.
ரத்தின் மூலமாகவே தான் வர விரும்பவில்லை
காட்டினாள். கல்யாணமாகிப் புருஷன் வீடு
முதல் அவள் பிறந்தகத்தில் அடி வைத்ததே
தலை தீபாவளிக்குக்கூடச் செல்லக் கிடை
அப்படியிருக்க இப்பொழுதா வரப்
றாள்?

வலாத்தாளின் தாயார் பேராசைக்காரி.
தகூட இல்லாமல் தன் மகள் விதவையானதில்
க்கு விசனந்தான். இருந்தாலும் அந்த விசனம்
ாள் நீடித்திருக்கவில்லை. உண்மை நிலையை
ந்து அதில் சாதிக்கவேண்டியவற்றைக் கவனிப்
அவள் எண்ணம் திரும்பிவிட்டது. 'வேலாத்
குடும்பம்தான் பெயர் சொல்லப் பிள்ளையில்
போய்விட்டது. அவளுடைய வரும்படியைக்
ாடு நம்ம குடும்பமாவது அதிக செல்வாக்
முன்னுக்கு வரட்டுமே; அந்த வரும்படியை
ம் இப்பொழுதே கைவசப்படுத்திக் கொள்ளா
ால் கடைசியில் பங்காளிகளுக்குத்தானே
க்கும்?— வேலாத்தாளுக்குப் பிறகு சொத்து
தும் பங்காளிகளுக்குப் போய்விடும்; அதை
தடுக்க முடியாது. ஆனால் அவள் உயிர்

இருக்கும் வரையில் கிடைக்கும் வரும்படியை நமக்குக் கொடுக்கலாமல்லவா? அவள் அத்தனை வரும்படியையும் என்ன செய்யப் போகிறாள்?' என்றிப்படித் தாயார் யோசிக்கலானாள்.

அவள் வேலாத்தாளுடைய வீட்டிலேயே பெரும் பாலும் இருக்கத் தலைப்பட்டாள்; யாராவது அங்கே வந்தால் அவர்களிடம், "என் மகள் தலைவிதி இப்படி ஆய்விட்டது. அவள் தனியாக இருந்துகொண்டு எப் பொழுதும் துக்கப்பட்டுக் கொண்டிருப்பாளே என்று நான் இங்கேயே இருக்கிறேன்" என்று இப்படிச் சொல்லிக்கொண்டு ஒரு அரை நாழிகை அழத் தொடங்குவாள்.

தாயார் அழுது கண்ணீர் வடிக்கும்போதெல் லாம் வேலாத்தாள் முகம் வெறுப்பால் இருளும். உதடுகள் உள்ளத்திலே குமுறும் உணர்ச்சிகளை வெளி யில் கொட்ட ஆத்திரப்படுவதுபோல் துடிக்கும். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் பழையபடி மரக் கட்டையைப்போல உயிரற்றதாக மாறிவிடும். தாயின் துக்கம் அவள் மனத்தை இளகச் செய்யவே இல்லை.

ராமப்பன் இறந்த சமீபத்தில் தினமும் யாரா வது சிலர் வேலாத்தாளுக்கு ஆறுதல் சொல்ல வரு வார்கள். வேலாத்தாள் வந்தவர்களை வரவேற்கும் பாவனையில் பாயை எடுத்து விரிப்பாள். அவர்கள் உட்கார்ந்ததும் தானும் சற்று தூரத்தில் உட்காரு வாள். வேலைக்காரி வெற்றிலை பாக்குக் கொண்டு வந்து வைத்துவிட்டுப் போய்விடுவாள். வந்தவர்கள் வெற்றிலையை மென்றுகொண்டே தங்களுக்குள் பேசிக்கொண்டால் உண்டு; அல்லது வேலாத்தாளின் தாயார் இருந்தால் அவளுடன் பேசலாம்; வேலாத் தாளைத் தங்களிடம் பேசவைப்பதுமட்டும் முடியாது.

அவள் மௌனமாகவே வந்தவர்கள் போகும்வரை அமர்ந்திருப்பாள்.

வேலாத்தாளுக்குக் கல்யாணம் ஆனதும் அவளைக் காதலித்த கந்தப்பன் ஊரைவிட்டு எங்கேயோ போய்விட்டான். யாருக்கும் அவன் போன இடம் தெரியாது. அவனுடன் பிறந்த சகோதரர்கள் இருவரும் கொஞ்சகாலம் அங்குமிங்கும் தேடிப் பார்த்தார்கள்; துப்பு விசாரித்தார்கள். ஒன்றும் பலன் கிடைக்கவில்லை. அதனால் 'அது அவன் தலைவிதி; ஊரைவிட்டு ஒரு காரணமுமில்லாமல் ஓடச்செய்தது' என்று கூறிக்கொண்டு இருந்துவிட்டார்கள். அவர்களுக்குக் கந்தப்பன் மறைந்ததின் ரகசியம் தெரியாது.

காலம் நழுவ நழுவ அனைவருள்ளத்திலும் அவனைப்பற்றிய நினைவு மங்கிவிட்டது.

ஆனால் வேலாத்தாளுடைய உள்ளம் எப்படி பிருந்ததென்று யாருக்கும் தெரியாது. அது மூடியே கிடந்தது. உள்ளே நுழைந்து பார்க்கும் உரிமை ஒருவருக்கும் கிடைக்கவில்லை. பேச்சிலிருந்து கண்டு கொள்ளலாமா என்றால் அவள் பேசுவதுதான் கிடைபாதே. கந்தப்பன் மனமுடைந்து எங்கேயோ சென்றுவிட்டான் என்பது அவளுக்குத் தெரியாமலிருக்காது. ஆனால் அதைக் குறித்துத் துக்கித்தாளா, உள்ளம் புழுங்கினாளா என்பதை அவள் தாய்கூட அறிய முடியவில்லை. அவள் உள்ளத்திற்கும் வேறு உறுப்புக்களுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை போலிருக்கிறது. இருந்தால் கொஞ்சமாவது உணர்ச்சி அலைகளின் அதிர்ச்சி வெளியே தென்பட வேண்டாமா? மண்ணில் செய்த உருவம்போல அவள் எப்பொழுதும் ஒரே மாதிரி தோன்றினாள்.

வேலாத்தாள் விதவையாகிப் பத்து வருஷங்களுக்குப் பிறகு ஆயநல்லூரிலே ஒரு வதந்தி கிளம்

பிற்று. அதாவது கந்தப்பன் எங்கேயோ ஒரு சந்யாசி மடத்தில் இருந்துகொண்டு அன்னக் காவடி எடுத்துக் காலம் தள்ளுவதாகவும், யாரோ ஒன் றிரண்டு பேர் நேரிலேயே அவனைப் பார்த்ததாகவும் பேச்சு வந்தது. ஒருநாள் வேலைக்காரியின் மூலமாக இது வேலாத்தாள் காதுக்கும் எட்டிற்று. ஊரிலே பரவுகின்ற செய்திகளை இப்படி அவள் அடிக்கடி சொல்லுவதுண்டு. வேலாத்தாள் அவற்றை மௌன மாகவே கேட்டுக்கொண்டிருப்பாள். ஊர்ச் செய்தி களைக் கேட்பதில் பிரியம் உண்டு, இல்லை என்று அவள் காட்டிக்கொண்டதில்லை. அதேபோல இந்த வதந்தி யையும் கேட்டுக்கொண்டாள்.

பிறகு ஒரு வருஷத்திற்குபின் ஒரு நாள் வேலாத் தாளின் மௌனம் கலைந்தது. கந்தப்பனைப்பற்றி அவள் தன் தாயிடம் பேச வாயெடுத்தாள். இதற்கு ஒருவருஷம் எண்ணி எண்ணி முடிவு செய்திருப்பாள் போலிருக்கிறது. கடைசியாக எப்படியோ பேசுவ தென்று துணிந்துவிட்டாள்.

"இந்தப் பூமிகளை யெல்லாம் மேற்பார்வை செய்ய நம்பிக்கையான ஒருவர் இல்லாமல் எத்தனையோ நஷ்டமாகிறது" என்றுள் அவள் பொதுவாக.

இப்படிப் பேச்சு வரவேண்டுமே என்று ஏங்கிக் கிடந்த கிழத்தாயார் ஆவலோடு, "நானும் இதை உன்னுடன் சொல்ல வேண்டுமென்றுதான் தினமும் நினைக்கிறேன். உன் தம்பி இருக்கிறானே, அவனையே பார்க்கச் சொன்னால் போகிறது. அவனைவிட நம்பிக் கையாக யார் நமக்குக் கிடைக்கப் போகிறார்கள்?" என்றாள்.

"தம்பி கூடாது. அவன்தானே உங்கள் பண்ணை யைக் கவனிக்கவேண்டும்? அதுவும் சிறியதல்லவே?"

"இரண்டையும் அவனே பார்க்கலாம். அது முடியாதா என்ன? அவன் இதைப்போல இன்னும் ஒரு பண்ணை இருந்தாலும் பார்த்துவிடுவானே?"

"தம்பியெல்லாம் சரிப்படாது. பங்கும் பங்காளிகளுக்கு வயிறு எரிய ஆரம்பித்துவிடும். வீண் கலவரங்களுக்கும் இடமாகும்; வேறு யாராவதுதான் வேண்டும்" என்று வேலாத்தாள் கண்டிப்பாகப் பேசினாள்.

தாய்க் கிழவி மேலே வற்புறுத்தவில்லை. மௌனத்தைக் கலைத்துப் பேசியதே போதுமென இருந்தது அந்த சமயத்திலே. பிறகு வெவ்வேறு ஆட்களைப்பற்றி ஆலோசனை நடந்தது. கடைசியாகக் கந்தப்பனைப்பற்றிப் பேசலானாள் வேலாத்தாள்.

"என்னமோ மடத்தில் இருப்பதாகச் சொல்லிக் கொள்கிறார்களாமே? அப்படி யாராவது இருந்தால் இந்தப் பண்ணையைக் கவனிக்க....."

கிழவியின் வயிற்றில் நெருப்பைக் கொட்டியது போலிருந்தது இந்த வார்த்தை. வேலாத்தாள் மனதில் என்ன முடிவை வைத்துக்கொண்டு மௌனத்தைத் கலைத்திருக்கிறாள் என்ற உண்மை அவளுக்குப் பளிச்சென்று விளங்கிவிட்டது. தனது ஆசைக்கு இடமில்லை என்று தெரிந்ததும் கிழவி வெடுக்கென்று பேச ஆரம்பித்தாள். "அவனு— அவன் ஆகவே ஆகாது. உனக்குக் கல்யாணம் ஆவதற்கு முன்னே ஊருக்குள்ளே பேசின பேச்சுப் போதாதா? அவன் இப்போ இங்கே வந்தால் உலகமே சிரிக்கும்."

வேலாத்தாள் உள்ளம் மறுபடியும் ஒரே பாறை போல் கெட்டியாக மூடிக்கொண்டது. என்ன கருத்தைக்கொண்டு அவள் இந்த யோசனை

சொல்லத் தன் மௌனத்தைக் கலைத்தாள் என் பதைக்கூடக் கண்டுகொள்ள முடியவில்லை.

மறுபடியும் பழைய மௌனம். கிழவி தனது கடுமையான வார்த்தைகளை மாற்றிக்கொண்டு பல முறை நயமாக வார்த்தை சொல்லிப் பார்த்தாள். கந்தப்பனைப்பற்றி அனுதாபமாகவும் பேசினாள். ஆனால், மூடிய உள்ளம் திறக்கவில்லை.

தன்னுள் அடங்கிய முத்தைப் பத்திரமாகக் காக்கும் சிப்பியைப்போல் அது மூடிக்கொண்டது.

வேலாத்தாள் தனது காலத்தை அனுதினமும் ஒரே மாதிரியாகக் கடத்திக்கொண்டு வந்தாள். சிரித்தாளா? கோபமாகப் பேசினாளா? ஒன்றுமே கிடையாது. அவளுடைய வருஷ வரும்படியெல்லாம் என்னவாகிறது என்று யாருக்குமே தெரியாது. காசியில் தர்ம சத்திரம் வைத்து நடத்துகிறாள் என்றார் ஒரு சிலர். இராமேசுவரத்தில் கோவில் திருப்பணி செய்கிறாள் என்றார் மற்றுஞ் சிலர். அவள் தனக்குக் கிடைத்தவற்றையெல்லாம் நோட்டாக மாற்றி வைத்திருந்து பேராசைக்காரியான அவள் தாயாரைத் தகனம் பண்ணும்போது அதில் போட்டு விட்டாள் என்று இன்னும் சிலர் பேசிக்கொண்டார்கள். ஆனால், யாருக்கும் நிச்சயமாக ஒன்றும் தெரியாது.

சொத்துக்கு வார்சுதாரர்களுக்கும், மற்ற உறவினர்களுக்கும் அதைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று மட்டற்ற ஆசைதான். ஆனால், ஒரு வருக்காவது வேலாத்தாளைக் கேட்க மனந்துணியவில்லை. அவளது மௌனத்திலே அச்சத்தை விளைவிக்கும் தன்மை கலந்திருந்தது. மரக்கட்டையைப் போலத் தோன்றிய அவள் முகத்தைப் பார்ப்பவர்

கடைசி ஓவியம்

ஒரே இருள். இருளுக்குப் போர்வையாக இருளையே அடுக்கடுக்காகப் போர்த்ததுபோல எங்கும் இருள் செறிந்து சூழ்ந்திருக்கிறது. கையிலே அள்ளி எடுத்துவிடலாம் என்று சொல்லும்படி அவ்வளவு காரிருள்.

அந்த இருளைப் பிளந்துகொண்டு 'வீர்' என்ற குரல் கேட்டது. பச்சிளங் குழந்தையின் அழுகைக் குரல் அது. கேட்டவர்கள் உள்ளத்திலே திகிலும் இரக்கமும் மேலோங்கி எழ அந்த அழுகைக் குரல் இருட்டிலே ஊடுருவி வந்தது. இரவு பதினொரு மணி இருக்கும்.

குழந்தை மேலும் 'வீர் வீர்' என்று பரிதாபமாக அழுதது. என்னால் அதைக் கேட்டுக்கொண்டு படுக்கையிலே படுத்திருக்க முடியவில்லை. எழுந்து உட்கார்ந்தேன். மறுபடியும் அதே ஏக்கக் குரல். அண்டையிலே இருந்த ஒரு எளிய வீட்டிலிருந்து தான் குழந்தை அழும் குரல் வந்தது. 'பாவம் அதற்கு என்ன பிணியோ; இப்படி அழுகிறதே' என்று நான் அந்த வீட்டை நோக்கி நடந்தேன்.

குழந்தையின்மேல் ஏற்பட்ட அநுதாபமா என்னைத் தூண்டியது? ஆமாம் அநுதாபம்தான். இல்லை இல்லை; என் உள்ளத்திலே எழுந்த பயந்தான் என்னை வெளியே கிளம்பும்படி உந்தியது. என்னுடைய அருமைக் குழந்தைக்கும் அப்படி ஏதாவது நோய் வந்துவிட்டால்? ஐயோ! அதை நினைக்கவும் பயமாக இருக்கிறது. என் குழந்தைக்கு நோய் கண்டால் அந்தச் சமயத்திலே மற்றவர்கள் எனக்கு உதவி செய்ய வேண்டாமா? அவர்கள் வராவிட்டால்

நான் மட்டும் என்ன செய்ய முடியும்? இந்த நினைப்பால் வந்த பயமே என்னை அங்கே இழுத்துச் சென்றது.

அண்டை வீட்டு வெளிவாயிலை அணுகினேன். குழந்தை 'வீர்' என்று மறுபடியும் கத்திற்று.

வாயிலின் அருகே அரசர் நின்றுகொண்டிருந்தார். நகரைச் சுற்றிப் பார்த்து வரும் அரசரை அழுகைக் குரல் அங்கே இழுத்திருக்கிறது. குழந்தையின்மேல் அவவளவு அன்பா அவருக்கு? ஆமாம், அன்புதான் போலிருக்கிறது.

அரசர் வார்த்தை சொன்னார்: "எனது நாட்டிலே இம்மாதிரி துயரக் குரலை நான் ஒருநாளும் கேட்டதில்லை. இன்றுமட்டும் இந்த விபரீதம் ஏன்?" —அவர் குரலிலே பரிவைவிடத் தமது ஆட்சியின் பெருமைக் குறிப்பே அதிகமாக ஒலித்தது. "அரசரே, தங்கள் ஊர்க்காவல் சிறந்திருக்கிறதென்று குடிகள் புகழ்ந்து போற்றுகிறார்கள்" என்றேன். அரசருக்குத் திருப்தி ஏற்பட்டது.

நாங்கள் பேசிக்கொண்டே வீட்டுக் கதவை நெருங்கிவிட்டோம். குழந்தையின் அவலக் குரல் மீண்டும் ஒருமுறை நெஞ்சைப் பிளந்தது.

கதவைத் திறக்க நான் முன்னால் விரைந்தேன். எனக்கு முன்னால் மற்றோர் உருவம் வேகமாக முந்தியது. உற்றுப் பார்க்கவே, அது யாரென்று தெரிந்தது. அருட்சோதி ஆசிரமத்துச் சாமியார் தாம் அவர்.

வீட்டின் கதவு சாத்தியிருந்தது. சாமியார் கதவைத் தட்டினார். பதில் இல்லை. குழந்தை 'வீர்' என்று அலறிற்று.

பயம் என்னை அங்கே கொண்டுவந்தது. குடிகளின் நன்மதிப்பு அரசரை அங்கே உந்தியது. இந்தச் சாமியார் ஏன் வந்தார்? அவர்தாம் பற்றற்றவராயிற்றே?

அன்பிலே உயர்ந்தது தாயன்பு. அதில்கூடத் தன் பிற்கால வாழ்க்கைச் சுகத்தின் ரேகை படர்ந் திருக்கிறது. குழந்தை பிற்காலத்திலே தன்னைப் பேணுவான் என்ற நம்பிக்கை அவள் உள்ளத்தின் ஆழத்திலே படிந்திருக்கிறது. எவ்விதப் பற்றும் இல்லாத துறவியின் அன்பிலே அதுவும் இல்லை. அது மிக உயர்ந்தது. அந்த அன்பினால் தூண்டப் பட்டு அவர் வந்திருக்கிறார். நான் அவருக்கு வழி விட்டு மரியாதையாக ஒதுங்கி நின்றேன். அரசரும் என்னைப் பின்பற்றினார்.

சாமியார் மறுபடியும் கதவைத் தட்டினார். பதிலில்லை.

அரசர் கதவை ஓங்கி இடித்தார். கதவு தானாகவே திறந்துகொண்டது.

உள்ளிருந்து விளக்கு வெளிச்சம் வெளியே பாய்ந்து எங்கள் உருவத்தைத் தெளிவாக காட் டிற்று. முதலில் சாமியார் வீட்டிற்குள் நுழைந்தார். அடுத்தபடியாக அரசர். அவருக்குப் பின்னால் நான் சென்றேன்.

ஓவியன் படம் தீட்டிக்கொண்டிருந்தான். குழந்தை தாயின்மீது சாய்ந்து பசியால் வாடி வீரிட்டு அழுதுகொண்டிருந்தது. தாய்....?

அவள் பிணமாகக் கிடந்தாள். அவள் வயிறு காய்ந்து முதுகோடு ஒட்டியிருந்தது. அவள் எலும்பும் தோலுமாகக் காட்சியளித்தாள்.

ஓவியன் எங்களைக் கவனிக்கவில்லை. தன் வேலையி லேயே முழுதும் ஈடுபட்டிருந்தான். ஓவியம் முடியும் தறுவாயில் இருந்தது. அதற்குக் கடைசி மெருகுகளை யெல்லாம் செய்துவிட்டுத்தான் அவன் எங்கள் பக்கம் திரும்பினான். எதிர்பாராத அந்தக் காட்சியிலே நாங்கள் அதுவரை பேச்சும் செயலும் இழந்து திகைத்து நின்றோம்.

அவன் ஏறிட்டுப் பார்த்தான். அந்தப் பார்வையிலே அவனுடைய உணர்வு இருக்கவில்லை. நாங்கள் அவன் கண்ணில் பட்டிருக்கலாம்; ஆனால், அவன் உள்ளத்தில் படவில்லை. ஆனால், எங்களையே அவன் பார்த்திருந்தான். பிறகு திடுக்கிட்டான். அப்பொழுதுதான் நாங்கள் அங்கு நிற்பது அவனுக்குப் புலனாகியிருக்கிறது. எதிர்பாராதவிதமாக எங்களை அங்கே கண்டதால் அவனுக்கு முதலில் ஒன்றும் விளங்கவில்லை.

அப்பொழுதும் நாங்கள் திகைத்து வாயற்று நின்றிருந்தோம். சற்று நேரத்தில் அவனுக்கு எங்கள் வருகையின் காரணம் விளங்கிவிட்டது. அமைதியாக அவன் சாமியாரைப் பார்த்துப் பேசினான். "சுவாமி, இந்தக் குழந்தையை நீங்கள்தாம் காப்பாற்ற வேண்டும். காப்பாற்றினால் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும். இறைவன் மனமகிழ்ந்து உங்களுக்கு நீங்கள் நாடும் நற்கதியைக் கொடுப்பார். நான் சற்று முன்னதாகவே என் மனைவியோடு சென்றிருக்க வேண்டும். ஆனால், உணவில்லாது வாடி உலர்ந்து போன அவளுடைய உயிரற்ற கோலமும், பசியால் அவளைப் பார்த்து உருகும் குழந்தையின் முகபாவமும் என்னைக் கவர்ந்துவிட்டன. காணக் கிடைக்காத இந்தக் காட்சியை எழுதி முடித்துவிட்டுப் போகவே தாமதித்தேன். அதுவும் நல்லதாயிற்று. குழந்தையை உங்களிடம் ஒப்படைக்கிறேன்." இவ்வாறு கூறிவிட்டு அவன் பக்கத்திலே இருந்த கிண்ணத்தை எடுத்து அதிலிருந்த திரவத்தை ஆவலோடு பருகினான்.

நாங்கள் தடுக்கவில்லை. அந்த எண்ணம் எங்களுக்குத் தோன்றுமுன் அவன் பருகிவிட்டான். பட்டினியால் உலர்ந்து போன அவன் முகம் ஒரு நிமிஷம் அற்புத ஒளியோடு பிரகாசித்தது.

அவன் எழுதிய உணர்ச்சி பொங்கும் ஓவியங்கள் வீடு முழுவதும் உயிர்பெற்று நின்றன.